
www.padippakam.com




படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# சதுரங்கக் குதிரை

1993-ஆம் ஆண்டின் சிறந்த நாவலுக்கான தமிழக அரசின் முதற் பரிசும்.

புதிய பார்வை - நீலமலைத் தமிழ்ச் சங்கம் பரிசும் பெற்றது.

நாஞ்சில் நாடன்

MC. LOGANADAN
RINGPARKEN 8.ST TH
7500 HOLSTEBRO

விஜயா பதிப்பகம்
20, ராஜ வீதி,
கோயமுத்தூர் - 641 001.
☎ 394 614.

படிப்பகம்

www.padippakam.com

முதற் பதிப்பு : ஆகஸ்டு, 1993
இரண்டாம் பதிப்பு : மார்ச், 1995

© நாஞ்சில் நாடன்

வெளியீடு :

விஜயா பதிப்பகம்
20, ராஜ வீதி,
கோயமுத்தூர் - 1.
☎ 394 614

பக்கம் : VIII + 220 = 228

விலை ரூ : 36-00

○
ஓவியம் : ஜீவா
○

புத்தகத் தயாரிப்பு :
ஸ்ரீதுர்க்கை பிரிண்டிங் பிரஸ்
21, மதுரைவீரன் கோயில் தெரு,
தி. நகர், சென்னை - 600 017.
☎ 434 68 49.

படிப்பகம்

www.padippakam.com

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து
எண்பத்தாறில் வெளியான 'மிதவை'க்குப்
பிறகு எழுதிய நாவல் இது.

நீண்டு போன இடைவெளியும்
கால அவகாசமும் எனது சில
கவலைகளைப் பொதிந்து கொண்டுள்ளன.

எனது அனுபவங்கள் எனது பலம்.
ஒரு விதச் சுதந்திர உணர்வுடன் இந்த
நாவலில் செயல்பட்டிருக்கிறேன்.

அது இந்த நாவலின் பலம்.

நட்புடன்
**நாஞ்சில் நாடன்**
கோவை - 641 009
7 - 8 - 1993

படிப்பகம்

www.padippakam.com

## நாஞ்சில் நாடனின் பிற நூல்கள்

### நாவல்கள்

தலைகீழ் விகிதங்கள் 1977, 1983

என்பிலதனை வெயில் காயும் 1979

மாமிசப் படைப்பு 1981

மிதவை 1986

### சிறுகதைகள்

தெய்வங்கள் ஓநாய்கள் ஆடுகள் 1981

வாக்குப் பொறுக்கிகள் 1985

உப்பு 1990

பேய்க் கொட்டு 1994

படிப்பகம்

www.padippakam.com

# நன்றி

தலைப்புக்காக ஞானபானுவுக்கு

ஓவியத்துக்காக ஜீவாவுக்கு

அமைப்புக்காக வேனிலுக்கு

அச்சுக்காக ஸ்ரீ துர்க்கை பிரிண்டிங் பிரஸ்ஸுக்கு.

வெளியீட்டுக்காக விஜயா பதிப்பக

திரு. வேலாயுதம் அவர்களுக்கு

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

நகுலனுக்கு...

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# ஒன்று

நாராயணன், மெஸ்ஸில் சாப்பிட்டு விட்டு மாட்டுங்கா சர்கிளுக்கு வந்தபோது, மணி எட்டரை ஆகியிருந்தது. ஆனந்த பவன் வாசலில் வழக்கமாக நிற்கும் சதாசிவ அய்யரைக் காணோம். வெற்றிலைச் சீவல் வாங்கிக் கொண்டு, வெற்றிலை பாக்குக் கடைக்காரனிடம் ஒரு டோஸ் ஓசிப் பொடியும் வாங்கிவிட்டுப் போயிருப்பார். நியூஸ் பேப்பர் கடை வாசலில் இரண்டொருவர் நின்று கொண்டிருந்தனர். அன்று காலையில் வந்த வாராந்தரியை ஒருவர் அவசர மேய்ச்சல் மேய்ந்து கொண்டிருந்தார். ஒரு புன்முறுவல், ஒரு தலையசைப்பு, 'சாப்டாச்சா' என்ற சம்பிரதாயமான கேள்வி... அதற்கு மேல் அவர்களிடம் உறவில்லை. காளியப்பனைக் காணோம். அவனிருந்தால் உதவாதகதைஏதாவது பேசிக்கொண்டிருப்பான். சாமி. பழனியப்பன் கூட முலண்ட் புறப்பட்டுப் போய்விட்டார் போலும். ஒருவரும் இல்லாது போனால் அவர் கவிதையைச் சகித்துக் கொள்ள லாம். மாயக்கூத்தன் ஊருக்குப் போனவர் திரும்ப இன்னும் பத்து நாட்கள் இருந்தன.

இனி இங்கு நின்று பயனில்லை. மெதுவாக ஸ்டேஷன் பக்கம் போகலாம் எனப் புறப் பட்டான் நாராயணன். சாலையில் சந்தடிகள் அடங்கி விட்டன. பிராம்மண சமாஜ வாசலில்



படிப்பகம்

www.padippakam.com

கடைசியாகத் தொழுது திரும்பும் மாமிகள். சாப்பிட்ட பின் நடைபழகும் ஐம்பதும் தொந்தியும் கொண்டவர்கள், தூர்தர்ஷனில் நேஷனல் புரோக்ராம் தொடங்குமுன் வீடெத்தும் அவசரத்தில் எட்டிப் போட்டனர் கால்களை.

தெலாங்ரோடு பிரியும் சாலைச் சதுக்கத்தில் கையில் பூண் கட்டிய பிரம்பும் மேலே ஸ்வெட்டரும் அரையில் மடித்துக் கட்டிய வேட்டியுமாக உலாத்திக் கொண்டு, ''ஓம் க்ரீம் ரீம்'' என்று சத்தமாகப் பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்தவரின் மண்டை மயிரெல்லாம் கொட்டிப் போயிருந்தது. இருபத்திரண்டு ஆண்டுகளுக்கு முன்பிருந்தே அவரைக் கவனித்து வந்திருக்கிறான். ஆரம்பத்தில் ஒன்றும் புரியவில்லை. சில சமயம் ஓடிப்போய் அடி வயிற்றுக்குக் கீழே ஒரு குத்து விடலாம் என்று தோன்றும். அவரிடம் அப்போதிருந்த எடுப்பும் மிடுக்கும் தொலைந்து போய்விட்டிருந்தன. குரலில் ஓங்காரம் க்ஷீணித்துக் கொண்டே வந்தது. வாயின் பற்கள் உதிர்ந்துவிட்ட குழிவு. திடீரெனக் குள்ளமாகி விட்டதைப் போல, முதுமை அடைந்து விட்டதைப் போலத் தெரிந்தது. ஆண்டுகள் கடந்ததில் அவர்மீது இருந்த எரிச்சலும் கோபமும் மாறி ஒரு அனுதாபம் பிறந்திருந்தது. தினமும் மாலையில் ஆறுமுதல் ஒன்பது வரை இந்த 'ஓம் க்ரீம் ரீம்' கேட்டுக் கொண்டிருந்தாலும், அவரைப் பற்றிய மற்ற எந்த விபரமும் தெரியாது. அவர் எங்காவது வேலை பார்க்கிறாரா ? குடும்பஸ்தரா அல்லது தனியனா ? பூணூல் மாற்றிக் கொள்கிறாரா ? விடாது மழை பொழியும் காலத்தில் எங்கிருந்து இந்த ஓங்காரம் செய்வார் ? இது பிரார்த்தனையா அல்லது நேர்ச்சையா ? ஆறு மணிக்கு மேல் மட்டும் ஏற்படும் அவஸ்தையா ? ஒன்றும் தெரியவில்லை.

ஸ்டேஷன் வாசலில் பேப்பர் கடை போட்டிருந்த கந்தசாமி ரொம்ப நாள் தெரிந்தவன். பம்பாய் வந்த



படிப்பகம்

www.padippakam.com

புதிதில் நாராயணன் தங்கியிருந்த ரூமில் பேப்பர் போட்டுக் கொண்டிருந்தான். அப்போது அவனுக்கு பதினைந்து வயது. இப்போது கந்தசாமிக்குப் பன்னிரண்டு வயதிலும் எட்டு வயதிலும் இரண்டு பெண்கள்.

எட்டு நாற்பத்தேழு கர்ஜத் ஃபாஸ்ட் மாட்டுங்காவில் நிற்கும். இறங்கி அவசர அவசரமாக ஓடும் மக்கள். இந்தக் கூட்டத்தில் அலுவலகப் பணியாளர்கள் மிகவும் குறைவாக இருந்தனர். பெரும்பாலும் குஜராத்திப் பனியாக்களும் மார்வாரிகளும். பெண்கள் கூட்டம் இல்லை. இறங்கியவரில் ஒன்றிரண்டு பேர்கள் வாராந்தரிகள், மாதாந்தரிகள் வாங்கிப் போயினர். ஒருவர் 'டைம்' வந்து விட்டதா என்று கேட்டார். ஒரு 'இல்லஸ்ட்ரேட்டட் வீக்லி'யினுள் மறைவாக ஒரு புத்தகத்தை வைத்துக் கந்தசாமி ஒருவரிடம் கொடுத்தான். தொந்தி சரிந்து தளர் நடை போடும் அவர் இன்னும் என்ன தேடலில் ஈடுபட்டிருக்கிறார் என்று தெரியவில்லை. வழக்கமாக முன்னிரவுகளில் மனைவியுடன் தென்படுகிறவர்தான். அந்த அம்மாவுக்கு அவரை விடவும் வயோதிகம் இருந்தது. முன்பெல்லாம் இது கண்டு சிரிப்பு வரும் அவனுக்கு.

''அண்ணாச்சி ஒரு பொஸ்தகம் கொண்டு போறேளா ?'' கந்தசாமி கேட்டான்.

''ஒண்ணும் சொகமில்லப்பா... எல்லாம் படிச்சுப் படிச்சுப் புளிச்சுப் போச்சு...''

''இது கொஞ்சம் புதுசா இருக்கு... கொண்டு போயிட்டு நாளைக்கு கொண்டுக்கிட்டு வாங்க... படமெல்லாம் கொள்ளாம்...''

ஒரு சாணித்தாள் கவரில் போட்டுக்கொடுத்தான். வழியில் யாரும், 'அது என்னது ?' என்று கேட்காமல் இருக்க



படிப்பகம்

www.padippakam.com

வேண்டும். கேட்டால்தான் என்ன? இன்று இரவு கழிய இது போதுமானதாக இருக்கும்.

ஸ்டேஷனில் இருந்து நடந்து, ரூபியா காலேஜ் தாண்டி ரூமுக்குப் போனான். அது 1951-ல் கட்டப் பட்ட கட்டடம். மாடிப் படிகள், கைப்பிடிச் சுவர்கள் எல்லாம் மூளிபட்டுக் கிடந்தது. சொசைட்டிக்காரர்கள் எல்லா நிலைகளிலும் பதின்மூன்று வாட் பல்ப் போட்டிருந்தார்கள். வெளிச்சுவர்கள் சுண்ணாம்பு கண்டு பதினேழு ஆண்டுகள் ஆகியிருந்தபடியால் மின் விளக்கின் ஒளியில் முக்கால் பாகத்தைச் சுவர்கள் உண்டு ஜீவித்திருந் தன. எலியொன்று மூன்றாம் மாடியில் யாரையோ சந்தித்துவிட்டுத் திரும்பிக் கொண்டிருந்தது அவசரமாக. நாராயணனைக் கண்டு சற்றுக் கூச்சப்பட்டு, விதவைகள் மரியாதையாக ஒதுங்கி நிற்பது போல, நின்று பின்பு ஓடியது.

நாராயணனின் ரூம் மூன்றாம் மாடியில். அது ஒரு இரண்டு ரூம் கிச்சன் ஃபிளாட். கிச்சன் என்றால் பெரிய கிச்சன். முதல் ஹாலும் சமையலறையும் வீட்டுக்காரருக்கு. ஒரு ரூமும் பால்கனியும் நாராயணனுக்கும் சந்திரனுக்கும். வீட்டுக்காரரும் மாமியும் வயதானவர்கள். இரண்டு மகன் களும் மகளும் பம்பாயிலேயே செம்பூரில், அந்தேரியில் அவர் தம் வீடுகளில் இருந்தனர். ஆச்சியும் ஐயரும் தனிக் குடித்தனம். இந்த ரூமுக்கு நாராயணன் வந்து மூன்று ஆண்டுகள் ஆகின்றன. வந்த பின் சந்திரன் சேர்ந்து கொண்டான். மாதம் தலைக்கு நானூறு ரூபாய் வாடகை கொடுத்தனர். தவிர தண்ணீர், கரண்ட் பில்லில் நாலில் ஒரு பங்கு.

அறையில் இரண்டு ஒற்றைக் கட்டில்கள். பொதுவாக ஒரு அலமாரி. ஒரு மேஜை. ஒரு ஸ்டூல். அவரவர் சூட்கேஸ் அவரவர் கட்டிலின் கீழே. சந்திரன் பண்டர்பூர் பக்கம் டூர் போயிருந்தான். முப்பத்திரண்டு வயதாகிறது.



படிப்பகம்

www.padippakam.com

வீட்டில் பெண் பார்த்துக் கொண்டிருந்தனர். கல்யாண மானால் கோலிவாடா பக்கம், சென்ட்ரல் கவர்ன்மென்ட் ஸ்டாஃப் குவார்ட்டர்ஸில் வீடு பார்த்துப் போய் விடுவ தாகச் சொல்லிக் கொண்டிருந்தான்.

வாசல் மணியை அடித்த போது, மாமிதான் வந்து கதவைத் திறந்தாள்.

''என்ன இவ்வளவு சீக்கிரம்?''

''சும்மா தான்...சாப்டாச்சா?''

''இனிமேத்தான்... மாமா மார்க்கெட் போயிட்டு வரல்லே இன்னும்...''

மாமா சந்தை ஒதுங்கும் நேரத்தில் காய்கறி வாங்கப் போவார், மலிந்ததைப் பிடித்துக் கொண்டு வர. அறைக்குப் பூட்டுக்கிடையாது. சும்மா சாத்திப்போடுவது தான். சட்டை, பேன்டைக் கழற்றி ஸ்டானடில் போட்டு விட்டு, கட்டிலின் நீளத்துக்கு மேல் கட்டியிருந்த தன் கொடியில் இருந்து சாரத்தை உருவிக் கட்டினான்.

கட்டிலில் படுத்துக் கொண்டு, காலையில் படித்து மிச்சம் வைத்திருந்த ''டைம்ஸ் ஆஃப் இன்டியா''வைப் படிக்க ஆரம்பித்தான். சாணித்தாள் கவரில் கந்தசாமி போட்டுத் தந்த புத்தகம் நெஞ்சில் குறுகுறுத்தது. 'இப்பம் வேண்டாம்... சாப்பாடானதும் சில சமயம் ஐயர் பேச வந்தாலும் வருவார்' என்று நினைத்து அடக்கிக் கொண்டான்.

சமையலறையில் ரசம் நுரைக்கும் வாசனை மூக்கைத் துளைத்தது.

வழக்கம் போலப் பால்காரப் பையாவின் மணியடிப்பில் முழிப்பு வந்து விட்டது மணி ஐந்தே கால் ஆகி விட்டதற் கான அரவங்கள். மாமி எழுந்து விட்டாள். சற்று நேரம் படுக்கையில் கிடந்தான். பின்பு எழுந்து போய்



படிப்பகம்

www.padippakam.com

வாசலில் கிடந்த பேப்பரை எடுத்து வந்தான். தலைப்புச் செய்திகள், பங்குச் சந்தை நிலவரம் எல்லாம் பார்த்து விட்டுப் பல் தேய்க்கப் போனான். காலையில் மட்டும் மாமி ஒரு சாய் தருவாள். இது ஒரு சலுகை. மாமியும் மாமாவும் ஸ்ட்ராங்காக பீபெரி காஃபி குடிப்பார்கள். காபிக்குப் பால் அதிகம் வேண்டும்.

இன்றும் அலுவலகம் போக வேண்டும். ஞாயிறு, பாங்க் விடுமுறை நாட்கள் தவிர, வெளியூர் டூர் போகும் நாட்கள் தவிர, என்றும் போக வேண்டும். எட்டு நாற்பது குர்லா லோகலில் அதிகம் கூட்டம் இருககாது. ஷேவ் செய்து குளித்து, நான்கு ஸ்லைஸ் பிரட் பட்டர் ஜாம் சாப்பிட்டு விட்டு, இறங்கி விடலாம்.

தனியார் கம்பெனி ஒன்றில் விற்பனைப் பிரிவில் இருந்தான், நாராயணன். பெரும்பாலும் ஒரே விதமான வேலை. வெளியூர் போனால் மட்டும் மாறிக் கிடைக்கும் சில சூழ்நிலைகள். இங்கு வேலைக்குச் சேர்ந்து பதின் மூன்று ஆண்டுகள் ஆகி விட்டன. அடிப்படைச் சம்பளம், பஞ்சப்படி, வீட்டு வாடகை அலவன்ஸ் எல்லாம் சேர்த்து நாலாயிரத்துப் பக்கம் சம்பளம் வரும். பிராவிடன்ட் ஃபண்ட், எல்.ஐ சி. கோஆபரேட்டிவ் சொசைட்டித் தவணை, வருமான வரி எல்லாம் போக மூவாயிரத்துநூறு கைக்கு வரும். ஒருத்தனுக்கு இது வெள்ளம். வெளியூர்ப் பயணம் மேற்கொண்டு திரும்பும்போது புறவெட்டுப் பலகை போல் சிறு நூறுகள் மிஞ்சும்.

அலுவலகம் போகும் நாட்களில் பத்து முதல் ஒன்றே கால் வரை, இரண்டு முதல் ஐந்தே கால் வரை வேலை நேரம். ஃபோர்ட் ஏரியாவில் இருக்கும் எல்லா ஓட்டலிலும் சாப்பிட்டுப் பார்த்தாயிற்று. சில நாட்களில் எந்தச் சாப்பாட்டுக் கடைக்கும் போகப் பிடிக்காமல், இரண்டு பச்சை வாழைப்பழங்களும் ஒரு கேரட் ஜூஸும் குடிப்பதோடு சரி. முற்பகலிலும் பிற்பகலிலும் இரண்டு



படிப்பகம்

www.padippakam.com

சாய் அலுவலகத்தில் தருவார்கள். மூன்றாவது சாய் என்றுமே பருகப் பிடிக்காது. குடித்தால் உடனே கக்கூஸ் போகத் தோன்றும்.

கம்பெனி சட்டப்படி ஆண்டுக்குப் பத்து தற்செயல் விடுப்பு, முப்பது நோய் விடுப்பு, முப்பது உரிமை விடுப்பு உண்டு. இவை தவிர, சனிக் கிழமைகள் அரை நாட்கள். மத்தியானம் ஒன்று நாற்பத்தைந்துக்கு அலுவலகம் முடிந்து விடும்.

பத்து மணிக்கு அலுவலகம் என்றாலும், ஒன்பது முப்பத்தைந்துக்கு இருக்கையில் இருப்பது வழக்கமாகி விட்டது. அவனுக்கு மூன்னால் சிப்பாய்களும் ஹவில் தாரும்— ஒன்பதரை மணி ட்யூட்டிக்காரர்கள் வந்து விடுவார்கள். கஸாராவில் இருந்து வரும் குப்தே ஒன்பதே காலுக்கே வந்து விடுவான். அந்தக் குறிப்பிட்ட வண்டியை அவன் பிடிக்காமல் போனால் அடுத்த வண்டி பிடித்து வரப் பத்தே கால் ஆகி விடும்.

நாராயணன் சீட்டில் உட்கார்ந்தவுடன், குப்தே பேச வந்து விடுவான், ஒரு சிகரெட்டைப் புகைத்தபடி ''கியா சாப்... கியா ஹால் சால் ஹை?''

தினமும், 'என்ன ஐயா, நடைமுறைகள் எப்படி உள்ளன?' என்ற கேள்வி கொண்ட இதே வாக்கியத்துடன் தான் உரையாடல் துவங்கும்.

என்ன உரையாடல் பெரிதாக! 'நாஸ்டா ஆகி விட்டதா? எந்த வண்டி பிடித்தாய்? இன்று வண்டியில் கூட்டம் இருந்தது அல்லது கூட்டம் இருக்கவில்லை... நேற்று மாலை வீடு திரும்பும்போது குர்லாவுக்கும் வித்யா விகாருக்கும் நடுவே வண்டியைப் பத்து நிமிடங்கள் போட்டு விட்டான்...' இது போல.

ஆபரேட்டர் ஜாய்ஸ் வந்து விட்டாள். கைப்பை யையும் கேரி பேக்கையும் டெலஃபோன் கூண்டுக்குள்



படிப்பகம்

www.padippakam.com

மாட்டி விட்டு, பாத்ரூம் போவாள். ஒன்றுக்குப் போவாளாக இருக்கும். அத்துடன் பவுடர் போட்டு, லிப்ஸ்டிக் டச்சப் செய்து, ஃபிராக்கைக் கீழ் நோக்கி நீவிவிட்டு, போலிப் புத்துணர்ச்சியுடன் இருக்கைக்குப் போவாள். போனதும் இன்டர்காம் பெல்லை முழக்கி. 'குட்மார்னிங் நாராயண்' சொல்வாள். ஐம்பத்தேழு வயதாகிறது அவளுக்கு. அவள் தளுக்கில் கேஷியர் பான்வாலாவுக்கு இன்னும் கிளர்ச்சி ஏற்பட்டுக் கொண்டிருந்தது. பான்வாலா கட்டி ஆளும் சேஷ் பாக்சையும் லெட்ஜரையும் விட்டு இன்னும் ஆறு மாதத்தில் முக்தி பெறுவான். ஒரு சனிக்கிழமை, ஸ்டெர்லிங் தியேட்டரில் 'என்டிட்டி' பார்க்கப் போயிருந்த போது இடைவேளையில் பான்வாலாவும் ஜாய்ஸும் உற்சாகமாகக் கிறுகிறுத்துக் கொண்டிருந்தனர் நாராயணன் எழுந்து அவர்கள் பக்கம் போனான்.

''இங்கே என்ன செய்றீங்க ரெண்டு பேரும்?''

ஜாய்ஸ் திரும்பிப் பார்த்து, ''கம்- பிளீஸ் ஸிட்!'' என்றாள். அவளுக்குத் தெரியும் நாராயணன் தொந்தரவு இல்லாத ஆசாமி என்று கொஞ்ச நாட்களாக அவனை சினிமாவுக்கும் பீருக்கும் கூப்பிட்டுக் கொண்டிருந்தாள். சினிமா என்றாலாவது பரவாயில்லை. எட்டுப் பத்து ரூபாயோடு போகும். ஜாய்ஸுக்கு பீர் வாங்கிக் கொடுக்க ஆரம்பித்தால், பத்து சினிமா பார்க்கும் காசு பறிபோய் விடும்.

தோள் பையை மாட்டிக் கொண்டு நரசிம்மன் வந்தான். நாராயணனைத் தவிர மற்றெல்லாரும் அவனைத் தயிர்சாதம் நரசிம்மன் என்றனர். இந்தப் பதின்மூன்று ஆண்டு சர்வீசில் அவன் தயிர் சாதம் கொண்டு வராத நாட்களை நினைவு படுத்திச் சொல்லி விடலாம். கமலா சாஸ்திரியும் மார்கரெட் டி சூசாவும் சேர்ந்து வந்தனர். வந்ததும் சேர்ந்தே பாத்ரூம் போனார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

குப்தே வழக்கம் போல எழுந்து பின்னால் போனான். அவனுக்கு இது தண்ணீர் தாகம் எடுக்கும் நேரம்.

ஃபேன்கள் காற்றை உலைக்கும் ஓசை. வெயிலில் காயும் தோட்டு உளுந்தின் மீது கட்டையை உருட்டும் போது ஏற்படுவது போன்று ஒன்பது டைப்ரைட்டர்களின் தொடர்ச்சியான ஓசை. மெல்லிய பேச்சொலிகள். தொலைபேசியில், இன்டர்காமில் உரையாடல்கள். தூரத்து கேபின் ஒலிக்கும் பஸ்ஸர். டேபிள் பெல்லைக் கோபத்துடன் யாரோ அடிக்கும் சத்தம். நாற்காலியைப் பின்னோக்கி நகர்த்தும் அரவம், பேப்பர் கத்தைகளின் சலசலப்பு...

அலுவலகம் இயங்கிக் கொண்டிருந்தது. மேல்மாடி கேன்டீனில் இருந்து சக்காராம் சாய் கோப்பைகள் அடங்கிய ட்ரேயைத் தாங்கிய வண்ணம் விநியோகம் நடந்து கொண்டிருந்தது. சர்க்கரை குறைவான நாராயணன் சாய் தனியாக வந்தது. குறைப்பதற்கான நோய்க் காரணங்கள் இல்லை. மராத்தியர் பாயசம் போல் இனிப்பு சேர்ப்பவர்கள். மேலும் நாற்பத்து ஐந்து வயதுக்கு மேல் கலோரிகளைக் குறைப்பது நல்லது. தொடர்ந்தஓட்டல், மெஸ் சாப்பாட்டுக்குத் தொந்தி விழக் காரணம் இல்லை. என்றாலும் இலேசாக முகடு கட்டத் துவங்கியிருக்கும் வயிறு. சட்டையை இன் செய்யும்போது சில சமயம் ஒரு உறுத்தல் உணர்வு. உடற்பயிற்சி இல்லை. காலையிலேயோ மாலையிலேயோ மூன்று நான்கு கிலோ மீட்டர் நடக்கலாம். என்ன நடந்து என்ன ஆகப் போகிறது என்ற சலிப்பு ஒவ்வொரு முறையும்.

சாய் பருகிக்கொண்டிருக்கையில் சாந்தாராம் இரண்டு கடிதங்களை மேஜை மீது வைத்து விட்டுப் போனான். ஒன்று உள்நாட்டுத் தபால். கையெழுத்து எதையும் காட்டவில்லை. இன்னொன்று ஷேர் விண்ணப்ப பாரங்கள். இன்லண்ட் கடிதத்தைப் பிரித்தான்.



படிப்பகம்

www.padippakam.com

'அன்புள்ள நாராயணனுக்கு, பெரிய மாமா எழுதிக் கொள்வது. இங்கு நான், அத்தை காமாட்சியின் குடும்பம், குமாரசாமி குடும்பம், சின்னப்பன் குடும்பம், கல்யாணி குடும்பம் எல்லோரும் சுகம். நீ அங்கு சுகமாக இருக்கிறாயா?

'உன் மகள் செல்லத்துக்குப் பங்குனி இருபத்து ரெண்டாம் தேதி கல்யாணம் நிச்சயம் செய்திருக்கிறது. மாப்பிள்ளைப் பையன் நாகர்கோயில் முனிசிபாலிடியில் பில் கிளார்க்காக இருக்கிறான். சொந்த ஊர் ராஜாக்கமங்கலம். நம்ம குமாரசாமிக்குப் பெண் சாதிக்கு அக்காளுக்கு மகன். அவன் வீதத்துக்கு ஒரு வீடும் முக்கால் கோட்டை விதைப்பாடும் வரும். அண்ணன்மார் எல்லோருக்கும் கல்யாணம் ஆகி விட்டது. இவன் கடைக் குட்டி. நாற்பத்தைந்து பவுன் உருப்படியும் முப்பதினாயிரம் ரொக்கமும் ஒரு கோட்டை விதைப்பாடும் எனப் பேசித் தீர்மானித்துள்ளோம். மற்றப்படி அடியந்திரச் செலவுகளுக்கு இருபதினாயிரம் ஆகும். கல்யாணச் செலவுதான் கொஞ்சம் கையைப் பிடிக்கும் என்று காமாட்சி சொன்னாள்

'நீ பத்து நாட்கள் முன்பே லீவு எடுத்துக் கொண்டு வந்து விட வேண்டியது. கல்யாணம், மறு வீடு எல்லாம் முடிந்து, சாவகாசமாகப் போனால் போதும். நீ ஊருக்கு வந்தும் மூணு வருஷம் ஆகிறது என்று அத்தை எழுதச் சொன்னாள். கல்யாண லெட்டர் பிறகு அனுப்புவேன். நீ புறப்படுவதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொள். காமாட்சி மாப்பிள்ளை உனக்குக்கடிதம்எழுதுவார். மற்ற விஷயங்களுக்கு எழுது.

இப்படிக்கு
அன்புடன்
ஈஸ்வரமூர்த்தி
மாங்குண்டு, 12-3-1989.



படிப்பகம்

www.padippakam.com

கடிதத்தை மூடி டிராயருக்குள் போட்டுவிட்டு, ஷேர் விண்ணப்ப பாரங்களைப் பிரித்துப் பார்த்து விட்டுப் குப்பைக் கூடைக்குள் போட்டான்.

முக்கியமானதோர் டெண்டர் தயார் செய்து கொண்டிருந்ததில், மணி ஒன்று கழிந்து விட்டது தெரியவில்லை. எழுந்துடாய்லெட்போய்க் கைமுகம் எல்லாம் கழுவிவிட்டு சீட்டுக்குவந்து ஃபைல்களைமூடிவைத்துவிட்டுச் சாப்பிடப் போகத் தயாரானான். நன்றாகப் பசிக்கவும் செய்தது. மாடர்ன் கபே போகலாம் ஸ்டெர்லிங் வரை நடக்க வேண்டும். நடக்கத் தயாரென்றால் சூடாக மங்களூர் பிராம்மணச் சாப்பாடு கிடைக்கும்.

குப்தே ஸ்பூனைக் கழுவி வந்தான்.

''ஆவ் கானா கானே கோ...''

இதுவும் தினமும் கேட்கும் சாப்பாட்டு அழைப்புத் தான். ஒரு நாள் முன்னால்போய் உட்கார்ந்து விட்டால், அடுத்த நாள் கூப்பிட மாட்டான். காமத் வேண்டாத த்தாள் ஒன்றை மேஜைமேல் விரித்து, பால் கவரில் இருந்து எட்டுப் பத்து சப்பாத்திகளை எடுத்து, ஒவ்வொன்றையும் நாலாகக் கிழித்தான். கிழித்து அடுக்கிய பின் எவர்சில்வர் டப்பாவைத் திறந்தான். காமத் கொங்கணி பிராம்மண். அவன் கொண்டு வரும் கறி கூட்டுகள் சுவையாக இருக்கும்.

விசேடமான கறி வகைகள் இருந்தால், சில சமயம் நாராயணன் சாப்பிடப் போகவில்லை என்றால், இரண்டு சப்பாத்தியும் கூட்டும் தருவான்.

தாருவாலா அன்று வேலைக்கு வரவில்லை. அவன் மனைவி பார்ஸிக்கார வயோதிகர் விடுதியில் நிர்வாகியாக இருந்தாள். மதிய உணவு அவனுக்கு அங்கிருந்து வரும். பீங்கான் பிளேட், கரண்டி, முள், உப்புத் தூள், ஊறுகாய் பாட்டில் டிராயரில் வைத்திருப்பான். சில



படிப்பகம்

www.padippakam.com

சமயம் சுவை பார்க்க, அறிந்திராத பார்ஸிப் பலகாரங்கள் தருவான்.

நான்காவது மாடியிலிருந்து இறங்கி வந்த குட்டினோ எட்டிப் பார்த்தான்.

''நாராயண்...சலோ...லெட் அஸ் கோ...''

எழுந்து வெளியே வந்து, லிஃப்ட்டைத் தவிர்த்து, 108 படிகள் இறங்கி, சாலைக்கு வந்ததும், நாரயணன் கேட்டான்—

''எங்கே போகலாம்?''

''வா... இன்று உனக்குப் புதுசா ஒரு இடம் காட்டுவேன்...''

''சைவமா ? அசைவமா ?''

''சோடோ யார்! கத்தரிக்காய் வாழைக்காய் எல்லாம் நீ மாட்டுங்காவில் சாப்பிட்டுக்கோ ...டு டே வி வில் ஹாவ் க்ராப்...''

''நண்டெல்லாம் சாப்பிடறதில்ல, குட்டினோ...''

''இன்று சாப்பிட்டுப் பார்...தென் யூ வில் கம் எவ்ரி டே...''

குட்டினோவுக்கு ஐம்பத்தொன்பது வயதாகிறது. அடுத்த சில மாதங்களில் ஓய்வு பெறுவான். முறுகிய மூங்கில் போல் உடம்பு, நல்ல உயரம். வெள்ளை நிறத்துக்கு அடர் நிறங்களில் பூப்பூவாய்ச் சட்டைகள் போடுவான். எப்போதும் டக் இன் செய்து நடையில் ஒரு மிடுக்கு இருக்கும். கட்டையான அடர்த்தியான முடி. சாயம் அடிப்பதால் கருகருவென இருக்கும். மீசை கிடையாது. நல்ல டான்ஸர். சுமாராகப் பாடுவான். கத்தோலிக்க சர்ச்சின் இசைக் குழுவில் உறுப்பினன்.



படிப்பகம்

www.padippakam.com

அவனுக்கும் திருமணமே ஆகவில்லை. தாணாவில் கோல்ஷெட் ரோட்டில் சொந்தமான வீடு இருந்தது. தம்பியின் குடும்பத்துடன் இருந்தான். கூடவே வயதான அம்மாவும். சில சமயம் வீட்டுக் கதைகள் பேசுவான். குட்டினோ மனம் விட்டுப் பேசும் நாட்களில் நாராயணனுக்கு இரவு தூக்கம் வராது. கெட்ட சொப்பனங்கள் வரும். பெரும்பாலும் பாம்புக் கூட்டங்கள். காதுக்குள்ளும் மூக்குத் துவாரங்களிலும் பாம்புகள் நுழைந்து கொள்வதைப் போல அல்லது மலை உச்சியில் இருந்து வேகமாக உருண்டுருண்டு விழுந்து கொண்டே இருப்பது போல... சமுத்திரத்தில் தண்ணீர் குடித்து வயிறு வீங்கி மூழ்கிக் கொண்டே இருப்பது போல...

நாராயணனுக்கு நண்டுக்கறி சாப்பிடப்பிரியமில்லை. ஜிங்கா என்ற இறால் சுவையாக இருந்தது. ஒரு நாள் வீட்டுக்கு வா, பீஃப் சாப்பிடலாம் என்றான் குட்டினோ. கொஞ்ச நாட்களாகச் சொல்லிக் கொண்டிருக்கிறான். குட்டினோவிடம் அலுவலகத்தில் எல்லோரும் தாராள மாக நடந்து கொண்டனர். அவன் எல்லோரிடமும் வெள்ளைக் கனவான்களிடம் பேசுவது போல் பாசாங்கு கள் செய்வான்.

என்றும் போல் அன்றும் ஐந்தே கால் ஆனது. அலுவலகம் வேகமாகக் காலியாகிக் கொண்டிருந்தது. மஸ்டரில் கையெழுத்துப் போடும் இடத்தில் சிறுவரிசை. வழக்கம் போலக் கமலாவும் மார்கரெட்டும் வரிசையில் முன்னால் சேர்ந்தே நின்றனர். காமத் அவனது உயரத்துக்குப் பொருத்தமில்லாத சிற்றடி வைத்துப் போனான். ஐந்து முப்பத்தொன்று, முப்பத்தாறு, நாற்பது வண்டிகள் என சர்ச்கேட், வி.டி. ஸ்டேஷன் களில் பிடிப்பவர்கள் அவரவர் வேகங்களுடன்...



படிப்பகம்

www.padippakam.com

பெண்களுக்கு அவசர அவசரமாக வீட்டுக்குப் போய், ஒரு காப்பியோ டீயோ போட்டுக் குடித்து விட்டு, காயரிந்து, அரிசியில் கல் பொறுக்கி, சமைக்க வேண்டிய திருக்கும். சப்பாத்தி போட வேண்டியதிருக்கும். நாளைக் காலை சமையலுக்குக் காயரிய வேண்டியதிருக்கும். சப்பாத்தி மாவு பிசைந்து பிரிஜ்ஜில் வைக்க வேண்டிய திருக்கும். ஆண்களுக்குக் காய்கறிகள் வாங்கிப் போக வேண்டியதிருக்கும். ட்யூஷன் போன பிள்ளைகளைக் கூட்டி வர வேண்டியதிருக்கும் தேய்க்கக் கொடுத்த துணி களை வாங்கி வர வேண்டியதிருக்கும். அப்னா பஜாரில் அல்லது சகக்காரி பண்டாரில் மல்லிப் பொடி, மிளகாய்ப் பொடி, காப்பித் தூள் வாங்க வேண்டியதிருக்கும். சாப்பாட்டுக் கடை ஒதுங்கி டி. வி. யில் சாயாகீத் அல்லது உடான் அல்லது ஏக் சூன்ய சூன்ய...

செய்ய எவ்வளவோ இருக்கிறது !

நாராயணன் இருக்கையில் இருந்து எழ ஐந்தே முக்காலோ ஆறோ ஆகும். ஓடிப் போய்ச் செய்ய என்ன இருக்கிறது ? ஆறேகால் குர்லா லோக்கல் பிடித்தால் கூட ஆறே முக்காலுக்கு அறையின் வாசல் சில நாட்களில் சினிமாவுக்குப் போவான். எப்போதாவது சாபில்தாஸில் நாடகம் இருக்கும். அறைக்குப் போய் உடம்பு கழுவி, உடைமாற்றி, மாட்டுங்கா சர்கிளில் காற்று வாங்குவதும் மெஸ்ஸில் சாப்பிட்டுப் படுப்பதும் தவிர, செய்ய வேறென்ன இருக்கிறது !

பனியன், ஜட்டி, கர்ச்சீப், சாக்ஸ் அன்றாடம் காலை யில் துவைத்துக் கொள்வது. லுங்கி, துண்டு துவைப்பது மூன்று நாட்களுக்கு ஒரு முறை. பேன்ட், ஷர்ட் துவைப் பது ஞாயிறுகளில் அல்லது விடுமுறைகளில்.

மூன்று செட் பனியன், ஜட்டி, கர்ச்சீப், சாக்ஸ், ஒரு லுங்கி, ஒரு துண்டு. விரிப்பு, போர்வை, தலையணை உறையுடன். பேன்டும் ஷர்ட்டும் ஆறேழு ஜோடிகள்



படிப்பகம்

www.padippakam.com

இருக்கும், மாற்றி மாற்றிப் போட்டுக் கொள்ள. எல்லாம் பாலியெஸ்டர் விவகாரங்கள். நான்கு ஆண்டுகள் முன்பு எடுத்ததுமுதல், போனமாதம்எடுத்தது வரை. பழையவை தையல் விடும். நிறம் மங்கி வெளிறும். கிழிவது கிடையாது. மிகவும் சலித்துப் போனால், யாருக்காவது கொடுத்து விடுவது. சேர்த்து வைக்க இடம் பற்றாது. உள்ளாடைகள் ஒன்று கிழிந்தால் மட்டுமே மாற்று வாங்குவது.

இவை தவிர ஆஸ்தி என்ன ?

பேனா, பைஃபோகல் கண்ணாடி, பெல்ட், ஒருஜோடி ஷூ, ஒருஜோடி தோல் செருப்பு, ஒரு ஜோடி மழைக்கால ரப்பர் சான்டக், மடக்குக் குடை, அட்ரஸ்-டெலஃபோன் எண்கள் கொண்ட டயரி, கல்விச் சான்றிதழ்கள், வேலை செய்யும் கம்பெனியின் நியமனக் கடிதம், வேலை செய்த நிறுவனங்களின் அனுபவச் சான்றிதழ்கள், ரேஷன் கார்டு, பாஸ் போர்ட், இந்தியன் வங்கியின் சேமிப்புக் கணக்குப் புத்தகம், கொஞ்சம்பங்குகள், யூனிட் ட்ரஸ்ட் பத்திரங்கள், எல் ஐ. சி. பாலிசி இரண்டு.

மூன்று மணி நேர முன்னறிவிப்பில் இடம் பெயர முடியும் எனும் தயார் நிலை வாழ்க்கை. எல்லைப் போர் வீரனைப்போல, கடிதங்களுக்குப் பதில் எழுதிப் போட்டதும் கிழித்துப்போட்டு விடுவது அலுவலக டிராயரில் எப்போதும் கொஞ்சம் இன்லண்ட் லெட்டர்கள். இப்போது கார்டுகள் வாங்கிக் கொள்ளலாமா என்று தோன்றிக் கொண்டிருக்கிறது. 'நலமாக இருக்கிறேன். எல்லோரும் சுகமாக இருக்கிறீர்களா ? உங்கள் கடிதம் கிடைத்தது,' என்பவற்றுக்கும் மேல் நான்காவது சொற்றொடருக்குப் போராட வேண்டியதிருந்தது. சில சமயம் தேதி போடாமல் அஞ்சலட்டைகள் அச்சிட்டு வைத்துக் கொள்ளலாமா என்று தோன்றும்.

ஒரு மாதம் சேரும் டைம்ஸ் மற்றும் தமிழ் வாராந்தரிகள் எல்லாம் மாதம் முடிந்தவுடன் கடையில் போட்டு



படிப்பகம்

www.padippakam.com

விடுவான். புத்தகங்கள் வாங்குவதுஅபூர்வம். வாங்கினால் கூடப் படித்த பின் யாருக்காவது கொடுத்து விடுவது. வேண்டுமானால் பாத்ரூம் பிளாஸ்டிக் பக்கெட், மக், ஜாம் பாட்டில், ஸ்பூன், சோப்புத் தூள், குளிக்கும் சோப், தலைக்குத் தேய்க்கும் தேங்காய் எண்ணெய், டூத் பிரஷ், பேஸ்ட், ஷேவிங் உபகரணங்களையும் ஆஸ்தியுடன் சேர்த்துக் கொள்ளலாம்.

சில நாட்களில் அலுவலகத்தில் இருந்து எழவே மனசிருக்காது. இரவுச் சாப்பாட்டுக்கும் உறக்கத்துக்கும் என மாட்டுங்கா போய் வர வேண்டும். என்றாலும் அலுவலகத்தில் படுத்துக் கொள்ள முடியாது.

எழுந்து புறப்பட எண்ணம் வந்தபோது, பெரிய மாமாவின் கடிதம் ஞாபகம் வந்தது. தன்னைத் தாண்டிய தலைமுறைக்குக் கல்யாணம். மூங்கில் கொத்து குருத்துக் கொண்டே இருக்கிறது கடிதத்தை மறுபடி படித்துப் பார்த்தான். அடுத்த வாரம் பதில் எழுதினால் போதும். அவசரம் ஒன்றுமில்லை. முதலில் போவதா வேண்டாமா என்பதைத் தீர்மானித்துக் கொள்ள வேண்டும். விடுமுறை இருக்கிறது மனம்போல. சட்டப்படி அறுபது நாட்கள் சேமிப்பில் வைத்துக் கொள்ளலாம். நிர்வாகத்தின் தயவால் நூற்றிருபது நாட்கள் சேர்ந்திருந்தன. மூன்று ஆண்டுகளாக விடுமுறையில் போகாததால் மொத்தமாக விடுப்புப் பயணச் சலுகை பெற்றுக் கொள்ளலாம். செலவுக்குப் போதுமானதாக இருக்கும்.

போக வர, பரிசுகள் வாங்க, சில்லறை அன்பளிப்புகள் செய்ய என்று நாலாயிரம் ரூபாய் ஆகலாம். கைப் பொறுப்புக் கிடையாது. கல்யாணச் செலவுகளுக்கு அவனை எதிர்பார்க்கும் நிலையில் எந்த உறவும் இல்லை. போவதும் வருவதும் இல்லை என்பதே குற்றச்சாட்டு. எதைச் சாக்கிட்டு என்று போவது ?



படிப்பகம்

www.padippakam.com

வீடொன்று கிடக்கிறது வீணாக. பொங்கல் தோறும் திறந்து, பெருக்கித் தூசும் மண்ணும் வாரி, வெள்ளை யடித்து, மறுபடி கழுவி விட்டுப் பூட்டி வைப்பார் பெரிய மாமா. கொஞ்சம் பழைய வெண்கல, பித்தளைப் பாத்தி ரங்கள் போட்டு வைத்திருக்கும் அரங்கைத் திறப்பார் களோ இல்லையோ தெரியாது.

ஆண்டு தோறும் போனால் கூட, அந்த வீட்டைத் திறந்து தங்குவது என்பது அலுப்பூட்டும் சங்கதி. சில சமயம் தோன்றும்- ஒரு கட்டில், மேஜை, நாற்காலி வாங்கிப் போட வேண்டும். கரண்ட் கனெக்ஷன் எடுக்க வேண்டும். ஒரு சீலிங் ஃபேன் வாங்கி மாட்டி விட வேண்டும். கக்கூஸ், குளிமுறி கட்ட வேண்டும்.

பழைய வீடானாலும் வசதியான வீடாகச் செய்து விடலாம்.

அந்த வீட்டின் ஞாபகத் தொடர் அறுந்து இருபது ஆண்டுகள் ஆகிவிட்டன.



படிப்பகம்

www.padippakam.com

# இரண்டு

அம்மாவின் முகமே கிழவியின் முகமாகத் தான் நினைவில் நின்றது. கைகளில் வளையல் கள் அற்று, காதில் கம்மல் அற்று, வெள்ளைப் புடவையும் வெள்ளை ரவிக்கையும் பங்கொண் டையும் பாறிப்போன முகமுமாக

அப்பா இறந்து போவதற்கு முன்பாக ஒரு நாள் பின்னிரவில் கொண்ட உடலுறவின் தற் செயல் விளைவு. அம்மாவின் மாதவிலக்கு நின்று போவதற்கான அறிகுறிகள் தோன்றியபோது கொண்ட சூல். அதுவரை வாய்க்காத மணிவயிறு ரிஷி வரம் போல் ஏன் வாய்த்தது என்று தெரிய வில்லை.

நாராயணனின் சொந்தக்காரர்கள் பலருக் கும் அவன் அப்பா யாரென்பதில் நெடுநாட்கள் தர்க்கம் இருந்திருக்கலாம். ஒருவேளை அவன் பிறந்த பின் அப்பா இறந்து போயிருந்தால் தர்க்கத்தின் வேர்கள் பட்டுப் போயிருக்கலாம்.

ஆனால் வறுமை இருந்திருக்கும். காலம் தப்பிப் பிறந்த மகனை வைத்துக்கொண்டு, நகை கள் விற்று, சில பெரிய பாத்திரங்கள் விற்று... காலம் நின்று நின்று நகர்ந்திருக்கும்.



படிப்பகம்

www.padippakam.com

இருந்த சிறு துண்டு நிலம். பெரிய மாமா பயிர் செய்து பூதோறும் நெல் தருவார். உழவுக்கூலிக்கு வைக்கோல். சோற்றுப் பஞ்சம் கடுமையாக இல்லைதான். என்றாலும் கல்லூரியில்சேர்ந்து படிக்க ஆரம்பித்த பிறகு, தாக்குப் பிடிக்க முடியவில்லை அம்மாவால். வயிற்றைச் சற்று இறுக்கியதில், இறுக்கம் அதிகப்பட்டுப் போய், முதுகில் கூன் விழுந்தது. எப்போதும் பெரிய மாமாவின் தயவு தேவையாக இருந்தது. அது தவிர, யார் வீட்டிலும் அம்மா 'தொண்ணாந்து' நின்றதும் இல்லை ; அவனை நிற்க விட்டதும் இல்லை. பெரிய மாமாவின் வீடு தெருவின் கோடியில்தான் என்றாலும், தேவை கருதிப் போவது மட்டும்தான். அதுவும் மாமா இருக்கும் நேரம் பார்த்து. அத்தை, "இரி...காப்பி குடிக்கியா ?" என்று கேட்பதில் உள்ளன்பு இருக்காது.

ஒருவேளை அப்பாவின் இறப்புக்குப் பிறகு, அம்மா பாத்திரம் தேய்த்துக் கொடுத்து, சாணி வாரி, சமையலில் கூடமாட ஒத்தாசை செய்து, "நீ புளிமுளம் வச்சா ஒரு தனி மணம்தான்!" எனப் பொய்யாய்ப் புகழ்ந்து, புழுக்க வேலையில் நகக்கண்களில் அழுக்கும் விரல்களில் கறையும் ஏற, அடங்கிக் கிடந்திருந்தால், சற்றுக் கனிவு இருந்திருக்கும்.

குமாரசாமியும் நாராயணனும் இரண்டு மாதங்கள் முன் பின்னால் பிறந்தவர்கள். பட்டப் படிப்பென்ற மலையுச்சியில் மரண பயம் ஏற்படுத்தும் பாறைப் பிளவில் நின்ற நெல்லி மரத்தின் கனியானது தன் மகனுக்குக் கிடைக்காமற் போய், நாராயணனுக்குக் கிடைத்தது ஒரு காரணமாக இருக்கலாம். யோசித்துப் பார்த்தால் வெறுப்புக்கான துல்லியமான காரணம் பிடிபடவில்லை. நெல்லிக் கனி தின்றவன் எல்லாம் ஜீரணமும் ஆகாமல் வாந்தியும் செய்ய முடியாமல் திணறுவது அத்தைக்கு அர்த்தமாகாது.

சிறு துண்டு நிலத்தை அம்மா பெரியண்ணன் ஈஸ்வர மூர்த்தியிடம் பயிர் செய்யக் கொடுத்ததனால்



படிப்பகம்

சின்னண்ணன் நல்ல சிவம் 'ஈண்டு' கேட்பதில்லை. வழி தவறிப் போவது போல் மேலத் தெருவில் இருக்கும் சின்ன மாமா வீட்டுக்குப் போனால், சின்னத்தை பேச்சில் குத்தல் குலவிக் கொண்டே இருக்கும். இது தற்செயலாகத் தன்னைக் கண்டவுடன் பீறிட்டுப் பாய்வதா அல்லது சேமிப்புக் கிடங்கில் ஆயுதங்கள் தயார் நிலையில் கிடந்து கைநீட்டக் கைநீட்ட வந்து கொண்டே இருக்குமா என்று நாராயணனுக்குத் தோன்றும்.

'அம்மையும் மகனும் கெடந்து கொளங் கொண்டாடு கதைப் பாத்தா காமாச்சியை இவுனுக்குத்தான் கெட்டிக் குடுத்திருவான்னு தோணுகு!' என்று யாரிடமோ இளக் காரமாகச் சொன்னதாக அம்மா ஒரு நாள் இரவில் சொல்லி அழுதது நினைவில் இருந்தது.

ஒரு வேளை அப்படி நடந்தால் 'கொள்ளாம்' என்றொரு மூக்குத்திப்பூ சிலசமயம் அம்மா மனதில் பூத்து வாடியிருக்கலாம். 'அம்பது பவுன் உருப்படியும் மாங்குண்டு மேலப்பத்திலே ஒரு கோட்டைவிதைப்பாடும்' அம்மா கனவில் வந்து வந்து போயிருக்கலாம். 'ஒத்தைக்கு ஒரு மகனைத் தன் காலத்துக்குப் பொறவு பாக்க நாலு ஆளு இருக்கும்' என்ற எதிர்பார்ப்பு இருந்திருக்கலாம். காமாட்சியும் பிள்ளைகளும் ஆளற்றுக் கிடக்கும் வீட்டை அரண்மனையாக்குவார்கள் என்றும், கடைசிக் காலத்தில் 'மனம் கொணமாத் தண்ணி குடிக்கலாம்' என்றும் நம்பி யிருந்திருக்கலாம். 'தன் மகனும் படிச்சுப் பட்டம் வாங்கீருக்கான்...வீடும் குடியும் இருக்கு... சோத்துப் பாட்டுக்கு நெல்லு வருகு... ஒரு வேலையும் கெடச் சிற்றுன்னா காமாச்சியைக் கெட்டிக் குடுக்க அண்ண னுக்கு வலிக்கவா செய்யி!' என்று மனப் பாயசம் குடித் திருக்கலாம்.

இருபத்து மூன்று ஆண்டுகளுக்கு முந்திய கதை.

படித்து முடித்துவிட்டு ரிசல்ட்டுக்காகக் காத்துக் கிடந்த சில மாதங்கள். வயல் வேலைகள் எதுவும் செய்து பழகி



படிப்பகம்

www.padippakam.com

யிருக்கவில்லை நாராயணன். ஒருவேளை நேரம் கிடைக்கும் போதெல்லாம் வயல் வேலை தோட்ட வேலை களத்து வேலை என்று பெரிய மாமாவின் சம்பள ஆட்களுடன் ஒத்தாசையாக இருந்திருந்தால் அவருக்குத் தன் மேல் ஒரு அபிப்பிராயம் விழுந்திருக்கும். குடும்பத்தினரோடு ஒரு ஒட்டுதல் ஏற்பட்டிருக்கலாம். அம்மா பொத்திப் பொத்தி வளர்த்ததும், குத்தல் மொழிகள் தன்னை எற்றி எற்றித் தள்ளியதும் ஒரு இணக்கமில்லாத மனிதனாகத் தன்னை உருவாக்கி விட்டதோ என்னவோ?

காமாட்சி அப்போது எந்தக் கிளர்ச்சியையும் நாராயணனுக்கு ஏற்படுத்தி யிருக்கவில்லை. வயதில் ஐந்தாண்டுகள் சின்னவள். அவன் படித்து முடித்து விட்டுத் திரிந்த நாட்களில் பள்ளிக்கூடம் போகும்போது, ஆற்றில் குளித்துவிட்டு வரும்போது, கோயில் வாசலில், குடும்பத்தோடு மாமா எங்காவது கல்யாணத்துக்குப் போகும்போது, வில் வண்டியின் கோசுப் பெட்டியில், என்றாவது மாமா வீட்டுக்குப் போகும்போது குறுக்க மறுக்க நடமாடுகையில், பார்த்திருக்கிறான், இல்லை என்று சொல்லாமல். அதுவும் அவள் சடங்காகிய பின் அபூர்வமாகி விட்டது.

காமாட்சியின் சடங்கை ஒரு கல்யாணம் போல நடத்தினார் மாமா. மூத்த மகளின் பூப்படைவு. அன்றே ஊரை உறவைக் கூட்டி, தலைக்குத் தண்ணி விட்டு, வெற்றிலை பாக்கு பழம் சீனி கொடுத்து... சடங்கு நடப்பதுவரை பெரிய பெரிய போணிகளில், தூக்கு வாளி களில், களி, மாவு, புட்டமுது...மொண்ண மொண்ண வாழைக் குலைகள். பாளையங் கோட்டன், ரசகதலி, சிங்கன், வெள்ளைத் துளுவன், ஏன்-செந்துளுவன் கூட...

அம்மா சொல்லி, பூப்பான அன்று நாராயணன் இரவல் சைக்கிள் வாங்கிப் போய்த் தரமான பாளையங் கோட்டன் பழக் குலையும், மூன்று கட்டு வெற்றிலை, சாயப் பாக்கு, ஒரு ராத்தல் சீனி, கஸ்தூரி மஞ்சள்,



படிப்பகம்

www.padippakam.com

குங்குமம், சந்தனம் எல்லாம் வாங்கிக் கொண்டு வந்து வைத்நான்.

இடையில் அம்மா நல்ல நாட்டுச் செக்கு நல்லெண்ணெய் ஊற்றிக் கிண்டிய உளுத்தங்களி கொண்டு கொடுத்தாள். வீட்டில் பெட்டைக் கோழிகள் விட்ட பத்து முட்டைகள் கொண்டு போய்க் கொடுத் தாள். சடங்குக்கு முன் தினம் நாகர்கோயில் போய்ப் பெரிய செம்பு நிலவாய் வாங்கி வந்தான் நாராயணன். இந்த முறை பணம் பெரியண்ணன் தவிர்த்த யாரிடம் புரட்டினாள் அம்மா என்று தெரியவில்லை. வரப் போகின்ற மருமகளுக்குத் தன் கணக்கில் போட எட்டுப் பவுன் கொச்சக் கயிறு செயின் இருந்தது அம்மாவிடம், அதைப் பணயம் வைத்திருப்பாள். நாராயணனுக்குக் கேட்கத் தோன்றவில்லை.

சடங்கு அன்று வந்து கூடிய சொந்தக்கார சனம். யாரோடும் நெருக்கமான பழக்கம் இல்லையென்றாலும், முகங்கள் துலங்குகையில் சம்பிரதாய விசாரிப்புக்கள். சிலர் கரிசனையோடு வந்து அவனை விசாரித்தனர். ஒருவர், ''என்னடே... பொண்ணு ரெடியாயாச்சு...'' என்று வேடிக்கையாகச் சொன்னபோது, உடம்பெல்லாம் கூசிப் போனது.

காமாட்சியின் சடங்குக்குப் பிறகு, பெரிய மாமாவின் குடும்பத்தின் உட்சுற்றுக்கு அம்மா நகர்ந்து விட்டது போலத் தோன்றியது நாராயணனுக்கு. அவர் குடும்பத் தோடு ஒரு முறை ஔவையாரம்மன் கோயில் பூசைக்கோ அல்லது முப்பந்தரத்தில் பொங்கலிடவோ வில் வண்டியில் போய் வந்ததாக ஒரு ஞாபகம்.

தேர்வு முடிவுகள் வந்து, ஒரு ஆறேழு மாதங்கள் சுற்றி விட்டு, பம்பாய் போய், வேலை தேடி, ஒன்றரை யாண்டுகள் சென்று நாராயணன் திரும்பியது அம்மா நோய்ப் படுக்கையில் இருந்தபோதுதான்.



படிப்பகம்

www.padippakam.com

அப்போது காமாட்சி பள்ளிப் படிப்பை முடித்து விட்டுக் கல்யாணத்துக்குக் காத்திருந்தாள். கிடையில் கிடந்த அம்மாவுக்கு ஏந்தல் மாந்தல் செய்தது அப்பா வழிச் சொந்தக்கார ஒரு பெரியம்மை.

பம்பாயில் இருந்து வரும்போது, தன் எதிர்கால மாமியாருக்குக் காமாட்சி பணிவிடைகள் செய்வாள் என்றோ, தன்னைப் பார்த்து நாணுவாள் என்றோ, அவள் மீது தனக்கு ஒரு பரிவு, பாசம் சுரக்கும் என்றோ, அவள் 'முலை முற்றும் போந்திராத' பருவம் மகிழதிர்வுகளை ஏற்படுத்தும் என்றோ, அம்மா கடைசி மூச்சைக் குடும்பத்தார் சூழ, நாராயணன் கையையும் காமாட்சியின் கையையும் சேர்த்து வைத்த பிறகு, பூரண சந்தோஷத்துடன் நீப்பாள் என்றோ, அவன் சோப்பனங்கள் கண்டு வரவில்லை.

வேலை கிடைத்து, மாசா மாசம் அம்மாவுக்கு ஐம்பது ரூபாய் அனுப்பிக் கொடுக்க ஆரம்பித்தாயிற்று. அம்மாவின் ஒரு வயிற்றுக்கு வயலில் இருந்து வரும் நெல்லே போதும். தான் அனுப்பும் பணத்தைக் கொண்டு, படிப்புக்கு அவ்வப்போது வாங்கிய கடன்களை அடைக்க லாம். அல்லது தன் சாவுக்குப் பிறகு, நாராயணன் கல்யாணத்துக்குப் பிறகு, அவன் அண்ணன் வீட்டில் ஒருத்தன் ஆகிவிடுவான். இதில் கொடுப்பதென்ன வாங்குவ தென்ன என்று நினைத்து, அவன் கல்யாணச் செலவுகளுக் காகப் பணத்தைச் சீட்டுப்போட்டுச் சேமித்து வைக்கலாம்.

நினைத்துப் பார்க்கும்போது இப்போது துக்கத்தின் சுரப்பி வறண்டு விட்டது தெரிந்தது, போய்ப் பார்த்து விட்டு வந்து ஏழெட்டு மாதங்கள் ஆன பின்பு, கோலிவாடாவில் ஹவுசிங் போர்டு வீடு ஒன்றில் ஐந்து திருமணமாகாதவர்கள் ஒரு ஒன் ரூம் கிச்சனில் ஆளுக்கு ஐம்பது ரூபாய் வாடகையில் அடைந்து கிடந்தபோது—

ஒரு புதன் கிழமை அதிகாலை நாலரை மணிக்குக் கதவு தட்டல், தாமோதரன் எழுந்து கதவைத் திறந்



படிப்பகம்

www.padippakam.com

தான். காக்கிச் சட்டையில் தந்திச் சேவகன். தாமோதரன் எழுப்பிச் சொன்ன போது, மனம் படபடத்தது. கையெழுத்துப் போட்ட தந்தியைப் பிரித்துப் பார்த்த போது, 'அம்மா இறந்து விட்டாள் உடனே புறப்படவும்—ஈஸ்வரமூர்த்தி, நாகர்கோயில்.'

அவசரத் தந்தி இரவு ஒன்பதரை மணிக்குக் கொடுக்கப் பட்டிருப்பதாகத் தாமோதரன் பார்த்துச் சொன்னான்.

கையில் நாற்பத்தாறு ரூபாயும் சில்லறைகளும் கிடந்தன. வங்கிக் கணக்கில் இருபது ரூபாய்க்கும் கீழே தான் இருக்கும். உடன் வாழும் எல்லோரும் தன்னைப் போல மாதச் சம்பளக்காரர்கள். அங்கும் இங்குமாக ஐந்து பத்து கைமாத்து வாங்குபவர்கள். எவரிடம் உடனடியாகப் புரட்ட முடியும்? நாராயணனது நண்பர் களிலேயே சற்று வயதானவரும் பணப் புழக்கம் உள்ள வரும் மாயக் கூத்தன் ஒருவர்தான். மாகிம் ஸ்டேஷன் பக்கம் ஷாஹூ நகரில் குடியிருந்தார். விடிந்தால் போய்க் கேட்க முடியும்

காலை பத்தரை மணிக்குப் பம்பாய்—திருவனந்தபுரம் விமானம் இருப்பதாகச் சொன்னான் ஜெகதீசன். தந்தி யைக் காட்டினால் டிக்கெட் கிடைக்குமாம். பன்னிரண்டரை மணிக்குப் போகும். அங்கிருந்து கார் ஏற்பாடு செய்து கொண்டு போனாலும் கிராமம் போய்ச் சேர இரண்டரை மணி ஆகிவிடும். தகவல் அனுப்ப முடியுமானால் அதுவரை பிரேதம் எடுக்காமல் போட் டிருப்பார்கள். விமானக் கட்டணம் நானூற்றைம்பது ரூபாய் என்றனர். கார் வாடகை நூறு ரூபாய். அறுநூறு ரூபாய் உடனடியாகக் கைவசம் வேண்டும். இருநூற்றைம்பது ரூபாய் பிடித்தம் போக வரும் சம்பளத்தில், மூன்று மாதம் சாப்பிடாமல் பட்டினி கிடந்தால், கடனடைக்க மூன்று மாதம் ஆகும். அரை வயிறு சாப்பிட்டுக் கிடந்தால் ஆறு மாதம் ஆகும்.



படிப்பகம்

www.padippakam.com

அது மாத்திரம்தானா செலவு? சாவு நாள் செலவு, காடாத்து, கிழமை முறைகள் செலவு, பதினாறு, கல் லெடுப்பு அடியந்திரச் செலவுகள். ரெண்டாயிரம்வரை ஆகிவிடும். எங்கிருந்து கொண்டு போவது?

தலைமாட்டில் குத்து விளக்கு ஏற்றி வைத்து, நிறை நாழி வைத்து, சாம்பிராணி கொளுத்தி வைத்து, நெற்றி யில் நனைத்துக் குழைத்த திருநீறு துலங்க, புதிய வெள்ளைச் சேலை உடுத்தி, அம்மா கோரப் பாயில் கண் மூடிக் கிடக்கும் காட்சி புலப்பட்டது.

நெஞ்சுடைந்து கண்ணீர் புறப்பட்டது.

நேரந்தவறிப் பெற்ற ஒரே மகன் கொள்ளி வைக்கக் கொடுத்து வைக்காத பிரேதம்...

யாரும் மறுபடியும் தூங்கவில்லை.

தாமோதரன் பல் தேய்த்துக் குளித்தான்.

ஜெகதீசன் டீ வாங்கி வரப் போனான்.

ஆறுமுகம் தாழ்ந்த குரலில் ஏதோ உரையாடினான்.

நாராயணன் வருவானா மாட்டானா என்ற எதிர் பார்ப்பில் காத்திருக்கும் சலிப்புற்ற உறவு முகங்கள். முன்னிரவுச் சாவு. அவசரத் தந்தி, விமானத்தில் வருவ தாகக் கொடுத்தால், பிற்பகல் நான்கு மணிவரை எதிர் பார்ப்பார்கள். ஏற்கனவே ஒரு மாதிரியாகப் பேசுபவர் கள், கொள்ளி வைக்கக் கூடப் போய்ச் சேராவிட்டால், மேலும் பொறணி பேசுவார்கள். பேசத்தான் செய்வார் கள். தப்பென்று சொல்ல முடியுமா?

இரயிலில் புறப்பட்டு வருவேன், ஆக வேண்டியதைப் பாருங்கள் என்று தாமோதரனை விட்டு அவசரத் தந்தி கொடுக்கச் சொல்லிவிட்டு, மாயக்கூத்தனைப் பார்க்கப் போனான் நாராயணன். மத்தியானம் இரண்டரை மணிக்குப் புறப்படும் தாதர்—மெட்ராஸ் எக்ஸ்பிரஸில்



படிப்பகம்

டிக்கெட் கிடைக்குமா என்று பார்க்கப் போனான் ஆறுமுகம்.

மாயக்கூத்தன் ஒரு காதை இழுத்துப் பிடித்துக் கொண்டு சவரம் செய்து கொண்டிருந்தார். கண்ணாடியில் ஆளரவம் பார்த்துத் திரும்பி, ''வாங்க!'' என்றார். நாராயணன் சுருக்கமாகச் சொன்னதைக் கேட்டார்.

''கேஷ் இருக்காது. சவுத் இண்டியன் கோ ஆபரேடிவ் பாங்க் எட்டரைக்குத் திறப்பான். நான் எடுத்துக்கிட்டு வாறேன்.''

அலுவலகம் போய், மூன்று வாரங்கள் விடுமுறை எழுதிக் கொடுத்து விட்டு, ஷ்யாம் சரண் சுக்லாவுக்குச் சம்பளம் பெற்றுக் கொள்ள அதாரிட்டி லெட்டர் கொடுத்து, சம்பளம் வாங்கி மணியார்டர் செய்ய முகவரி கொடுத்து—

அறைக்குப் போய்ப் பெட்டியைத் தூக்கிக் கொண்டு தாதர் ஸ்டேஷனுக்கு வரும்போது ஒன்றரை மணி. மாயக்கூத்தன் ஐந்நூறு ரூபாய் தந்தார். ஆறுமுகம் ரிசர்வேஷன் கிடைக்கவில்லை என்று சொல்லி, நாகர்கோயில் வரை கரன்ட் டிக்கெட் வாங்கி வைத்திருந்தான். தாமோதரன் ஒரு பாக்கெட் மாரி பிஸ்கட்டும் ஆறு பச்சை வாழைப் பழங்களும் வாங்கி வைத்திருந்தான்.

பிற்பகல் இரண்டரை மணிக்குப் புறப்படும் வண்டி மறுநாள் மாலை ஐந்தரைக்குச் சென்னை சென்ட்ரல் போகும். மாலை ஆறே முக்காலுக்கு எழும்பூரில் இருந்து நெல்லை எக்ஸ்பிரஸ். காலை ஒன்பது மணிக்குத் திருநெல்வேலி. அங்கிருந்து அவுட் ஏஜென்சி பஸ்களில் ஒன்றைப் பிடித்து நாகர்கோயில் இறங்கி, அங்கிருந்து டவுன் பஸ்ஸில் மாங்குண்டு போகப் பன்னிரண்டரை ஆகிவிடும்.

சாவின் துக்கம் ஒரு பக்கம் பிய்த்துக் கொண்டு வந்தது. போய்ச் சேர முடியாமல் காலைப் பிடித்து



படிப்பகம்

www.padippakam.com

இழுக்கும் பொருளாதாரம் ஏற்படுத்தும் அவமானம். இனி அவன் இறக்கும் வரை இந்த அவமானம் குணமாகாத படை போல அரித்திருக்கும். துக்கம் விசாரிக்கும் எல்லாத் தெரிந்த முகங்களும் இது பற்றியும் இரண்டு வார்த்தைகள் கேட்காமல் போகாது.

வண்டி புறப்பட்ட பின். காற்று சற்றுச் சூட்டை ஆற்றியது.

அம்மா வழி அப்பா வழி உறவினர்கள் எல்லோரும் வந்திருப்பார்கள். காலையில் இருந்து யாரும் சாப்பிட்டிருக்க மாட்டார்கள். அழுகுரல் ஆரவாரமில்லாமல் அடங்கிக் கேட்கும். அம்மன் கோயில் சாத்தாங் கோயில் நடை திறந்திருக்க மாட்டார்கள்

இதற்குள் தந்தி கிடைத்திருக்கலாம். கிடைக்கா விட்டாலும் கூட நாலு மணி வரை பார்த்து விட்டு, பிரேதம் எடுக்க ஏற்பாடு செய்திருப்பார்கள். வீட்டு முற்றத்தில் பச்சை ஓலை முடைந்து தட்டுக்காமணம் போட்டிருப்பார்கள்,

குழி துப்புரவாக்க ஆட்கள் போயிருக்கலாம். பிணத்துக்குப் போடக் கோடிச் சேலை, சந்தனம், களபம், கொள்ளிக் குடம், தீச்சட்டி... இரண்டு நெடிய மூங்கில், இரண்டு குறிய மூங்கில், பாடையின் குறுக்காக வைத்துக் கட்டக் கீறிய மூங்கில்கள், மணிக்கொச்சம்...

தேர்ப்பாடை கட்ட வேண்டிய வயதில்லை. அதற்கான வசதியும் இல்லை. கிட்டத்தட்ட அனாதைப் பிணம், பலரும் தன்னை இளக்காரம் பேசுவார்கள்.

''அவன் எங்க வந்து சேரப் போறான்?''

''பம்பாயிலேயோ எங்கயோல்லா இருக்கானாம்... தந்தி கெடச்சோ இல்லியோ? வீட்டிலே இருந்தானோ என்னமோ !''



படிப்பகம்

www.padippakam.com

''ஆமாமா... இனிமேப் பாத்துப் பிரயோசனம் இல்லே...ஈஸ்வரங்கிட்டே சொல்லி எடுக்கதுக்கு ஏற்பாடு செய்ய வேண்டியதுதான்...பிள்ளையளும் பொம்பளையளும் எவ்வளவு நேரம் பட்டினி கெடக்கும் ?''

''நான் காலம்பற பொறப்பிடச்சிலேயே நாலு தேங்காத் தோசை தின்னு காப்பி குடிச்சிக்கிட்டுத்தான் வந்தேன். எப்படியும் பொழுது சாஞ்சிரும்னு தெரியும்...''

''செலவெல்லாம் ஈஸ்வரந்தான் செய்யானோ ?''

''அவன்தான் செய்வானா இருக்கும்... வேற யாரு செய்வா ? தங்கம்மைக்குக் 'கொடுக்கல் வாங்கல் எல்லாம் அவன்கிட்ட தானே !''

''குடுக்கல் எங்க ? எல்லாம் வாங்கல் தாலா ?'

''அப்படி ஏன்டே சொல்லுகே... அவளுக்க வயலை ஈஸ்வரந்தானே பயிரேத்துகான்...''

''செய்யாம்ணா... அந்தப்பய நாராயணனுக்கு படித்த செலவுக்கெல்லாம் அவன்கிட்டேதான் கடன் வாங்கீருக்கா...என்ன கணக்கோ என்னமோ ? அந்தப் பயலுக்கு எவ்வளவு குடுக்கணும்னு தெரியுமோ என்னமோ ?''

''எல்லாம் ஈஸ்வரம் சொல்லுகது தான் கணக்கு... ஆனா அந்தப் பய வேலைக்குப் போனதுக்குப் பொறவு, தங்கம்மைக்குக் கொஞ்சம் தெளிச்சல்தான். மாசாமாசம் அம்பது ரூவா அனுப்புகாம்லா...''

''அதை ஈஸ்வரங்கிட்டே குடுத்து வச்சிருக்கானோ, இல்ல, வேற யாருகிட்டேயும் நிக்கோ? அவ்வோனா சொன்னாத்தான் உண்டும்... ஒரே அமுக்கா அமுக்கினா துப்பு உண்டுமா தொறவலு உண்டுமா ?''

''ஈஸ்வரத்தையும் சும்மா சொல்லப்பிடாது... அவளுக்கு எவ்வளவு ஏந்தல் செய்திருக்கான்...



படிப்பகம்

www.padippakam.com

இல்லேன்னா அந்தப் பய படிச்சு ஆளாயிருக்க முடியுமா ?''

''அதுக்கென்னா இப்பம் ? மூத்த மகளைக் கெட்டிக் குடுத்தா கணக்குத் தீந்துபோகும்... கொஞ்சம் தூரத்திலே இருக்காம்னாலும் பய படிச்சிருக்கான்... கம்பனியிலே நல்ல வேலையாம்... குடியிருக்க வீடு உண்டும்... சாப்பாட்டுக்கு நெல்லிருக்கு... இதை விடப் பெரிய சம்மந்தம்தான் ஈஸ்வரம் புடிச்சிருவானா ?''

''எனக்கென்னமோ காமாட்சியை நாராயணனுக்குக் குடுப்பாம்னு தோணல்லே... அவனுக்கு எண்ணம் இருந்தாலும் அந்தப் பய குமாரசாமி ஒரு சீமை... அம்மையும் மூத்த மகனுக்குத்தான் ஒத்துப் பாடுவா...''

''குடுக்கல்லேன்னா என்ன செய்ய முடியும் ? அப்பன் வழியிலேயும் அதிக ஆளு கெடையாது. அம்மை வழி ஆளுகதான் உண்டும்... நல்லசிவம் பெண்ணிருந்தா குடுப்பான்... ஆனா அவனுக்க மக ரொம்பப் பொடி சில்லா...''

''சவம் தங்கம்மைக்கு நிலைமையைப் பாரேன்... கொள்ளி வைக்கக்கூட பிள்ளை உதவ மாட்டாம் போலிருக்கு... பட்ட கஷ்டமெல்லாம் பட்டா... கடைசிக் காலத்திலே கொஞ்சம் நல்ல தண்ணி குடிக்கலாம்னா விதி இல்ல பாரேன்...''

வண்டி கர்ஜத் தாண்டி விட்டது. ஜெனரல் கோச் ஆனாலும், ஆறுமுகம் சாமர்த்தியமாக சன்னலோர இருக்கை பிடித்து வைத்திருந்தான். சூட்கேஸ் கால்களின் கீழே கிடந்தது. இரண்டு மாதங்களாகப் பெய்து கொண்டிருந்த பருவமழையில் மலைகள் நீராடித் தெளிந்திருந்தன. மேகக் கூட்டங்கள் மலை முகடுகளை நலம் விசாரித்து வண்ணம் இருந்தன. குற்றுச் செடிகள், புதர்கள், மூங்கில் புற்கள், தேக்கங் கன்றுகள், காட்டு இலந்தை மரங்கள் பச்சை குளித்து மினுங்கின...சிறு சிறு ஓடைகள், சிற்றருவி



படிப்பகம்

www.padippakam.com

கள், பள்ளத்தில் தெரிந்த சமநிலப் பரப்பில் நெளிந்த ரோடுகள்... குப்பங்களாய் வீடுகள்... செங்கல் அறுத்துக் காய வைத்தது போல் நீள் சதுரங்களாய் நெல் வயல் துண்டுகள்... கர்ஜத் குகைகளில் இருந்து கசிந்து வீழ்ந்த தண்ணீர் சன்னல் கம்பிகளில் சரங்கோத்திருந்தது.

வண்டியினுள்ளே நல்ல கூட்டம். கொஞ்சம் பேர் பூனாவில் இறங்குவார்கள். அதற்கு முன் லோனவாலா வில் சிலர் இறங்கினாலும், நிறையப்பேர் ஏறி இருந்தனர்.

நான்கு பேருக்கான இருக்கையில் ஆறு பேர் அமர்ந் திருந்தனர். தலைக்கு மேல் சாமான்கள் வைக்கும் தாங்கு பலகையில் சம்மணம் போட்டு அமர்ந்திருந்த இருவர் மராத்தியில் குடும்பச் சண்டை வளர்த்துக் கொண் டிருந்தனர்.

ஜெனரல் கோச்சுக்கு உரிய அழுக்குகளும் உடைபாடு களும். ஜெனரல் கோச் என்றால் ரயில்வே நிர்வாகத்துக்கு ஏகப்பட்ட மரியாதை. பலகையிலான இருக்கைகள், மூட முடியாத அல்லது மூடி இல்லாத சன்னல்கள், தண்ணீர் இல்லாத, மல மூத்திர நாற்றம் பெருக்கும் பாத்ரூம். யுகங்களாய்க் கூட்டாத குப்பைகள்... நாதியற்ற சனங்கள்– கேவலப் படுத்தலாம்தான்.

பூனாவில் சிலசமயம் வண்டியின் நெரிசல்தளர்வடைய லாம். அல்லது வாடியில். எப்படியும் இரவு, இருக்கையில் சாய்ந்தபடியேதான். படுத்தாலும் என்ன உறக்கம் வந்து விடப் போகிறது !

மணி, மாலை, நாலரையாகி விட்டது. தொண்டை வறண்டு கிடந்தது. ஒரு மடக்குத் தண்ணீர் அல்லது அரை கப் சாய் குடித்தால் நன்றாக இருக்கும்.

நடுத் தெருவில் இப்போது பாடை தயாராகஇருக்கும். நீர்மாலைக்குப் போய் வந்து பிரேதத்தைக் குளிப்பாட்டி இருப்பார்கள். பாடையின் தலைமாட்டில் மூங்கிலில்



படிப்பகம்

கட்டிய கவடி மேல் வைத்த தீச்சட்டி புகைந்து கொண்டிருக்கும். வீட்டினுள்ளே 'அம்மாடி, தாயாரை' கேட்கும். பிணத்தைத் தூக்கி வந்து, பாடையில் கிடத்தி, சேலையொன்றைக் கயிறுபோல் முறுக்கிக் கட்டி... பெரியமாமா தான் கொள்ளிபோடுவாராக இருக்கும். குளித்து, பூணூல் போட்டு, தலையில் புதுத் துண்டு தொங்கலாகக் கட்டி நிற்பார்.

பாடை தூக்கியதும், பெண்கள் தெருவில் விழுந்து மாரில் அடித்து அழுவார்கள்.

''என்னப் பெத்த அம்மா... என்னை விட்டுக்கிட்டுப் போறயே... இனி உன்னை என்னைக்குப் பார்ப்பேன்...''

''என்னப் பெத்த தாயாரே... உன் முகத்தைப் பாக்கக் குடுத்து வக்கல்லியே அந்தப் பாவிக்கு... கொள்ளி வக்கக் குடுத்து வக்கல்லியே...''

இமையில் கசிந்திருந்த கண்ணீரில் வானவில்லின் நிறங்கள் துலங்கின.

மண்குழியில் காய்ந்த கதம்பை அடுக்கி, ஒரு அடுக்கு விறகு அடுக்கி, பிணம் கிடத்தி, வாய்க்கரிசி போட்டு...

பெரியம்மா கொள்ளிக்குடம் தலையில் வைத்துச் சுற்றி வருவார். வெண்கலக் கெண்டியால் 'டங்' கெனத் தட்டி, பானையில் தமிர் போட்டு, இரண்டாவது தமிர், மூன்றாவது தமிர் போட்டு, கால் மாட்டில் குடம் உடைத்து, ஓட்டுத்துண்டில் தங்கிய தண்ணீரைப் பிணத்தின் வாயில் ஊற்றி...

மேலே மறுபடியும் விறகடுக்கி, கதம்பை அடுக்கி, வைக்கோல் போட்டுப் பொதிந்து, கால்மாட்டில் தீ வைத்து, ஈரக் களிமண் போட்டு மூடிப் பொதிந்து, புகை போகத் துளை போட்டு...

தொப்பூள் கொடியின் மறுபாதி... தங்கம்மாள் தீயில் கருக ஆரம்பித்திருப்பாள். உடுத்த துணி நனைத்து

www.padippakam.com

ஆற்றில் குளித்துப் பிழிந்து கொண்டிருப்பார்கள். வீட்டைக் கழுவி, மெழுகி, பசியாற ரவையோ அவலோ தாளித்துக் கொண்டிருப்பார்கள்.

சுடுகாட்டில் நாவிதன் பண்டாரம் பீடி புகைத்துக் கொண்டு, துணைக்கு இருப்பவனிடம் கதை பேசிக் கொண்டிருப்பான்.

வாழ்க்கை வான வில்லற்றுப் போய் விட்டது.

பழைய சில முகங்கள் இறங்கி, பூனாவில், புதிய சில முகங்கள் ஏறி அமர்ந்து கொண்டன. பிம்ப்ரியில் இருந்து வந்த ஒரு தமிழ்க் குடும்பம். முண்டிப் பிடித்து ஏறி, இடம் பிடித்துச் சாமான்களை அடைத்துக் கொண்டிருந்தனர். இறங்கிச் சாப்பிட்டு வர மனமில்லை. பின்னிரவில் பசித்தால் இரண்டு பச்சை வாழைப் பழங்கள் தின்று கொள்ள லாம். பக்கத்தில் அமர்ந்து ஆசுவாசம் கொள்ள ஆரம் பித்த தமிழ்க் குடும்பத்தின் தலைவரிடம் சொல்லிவிட்டு. ஒரு சாய் பருகி வந்தான். இனிமேல் குண்டக்கல் வரும் வரை சாய் இதே ருசியில்தான் இருக்கும்.

டோன்ட் வந்தபோது அவரவர் கட்டுச் சாதப் பொட்டலங்கள் பிரிபட்டன. துண்டு வாழை இலைகளில் எவர்சில்வர் வாளியில் இருந்து புளித்தண்ணிச் சோறு அள்ளி வைத்துத் தின்று கொண்டிருந்தனர் பிம்ப்ரித் தமிழர்கள். தமிழனுக்குப் பயணத்தில் புளித் தண்ணீர் சோறு மறக்க முடியாத அம்சம்.

''தம்பி மெட்ராசுக்கா ?''

''ஆமா.''

''சாப்பிட்டாச்சா ?''

''இல்லே... பசியில்லே...''

சாவுக் களைப்பில் வீடு உறங்க ஆரம்பித்திருக்கும். அம்மா கிடந்த அறையில் குத்துவிளக்கு மங்கலமாக எரிந்து



படிப்பகம்

www.padippakam.com

கொண்டிருக்கும். அநேகமாக எல்லோரும் அவரவர் வீடுகளுக்குப் போயிருப்பார்கள், அடுத்த நாள் காலையில் காடாத்துக்கு வந்தால் போதும் என்ற நினைப்பில். அப்பாவின் சித்தப்பா மகள், ஒரு அத்தை உண்டு. இனியோர் பெரியம்மாக் கிழவி உண்டு. அவர்கள் வெற்றிலை போட்டு முற்றத்து மூலையில் துப்பியவாறு நைந்து பொடியும் ஏடுகள் திருப்பிக்கொண்டிருப்பார்கள்.

அரை உறக்கமும் விழிப்புமாகக் குருத்வாடி போனது; சோலாப்பூர் நீங்கியது; குல்பர்கா தாண்டியது. சாய்ந்தாடிக் கொண்டிருந்தனர் சனங்கள். படுக்க வடக்கு தெற்கு கிடையாது; சாய யாருடைய தோள் அல்லது மடி என்று கிடையாது; இடம் கிடைத்த இடத்திலெல்லாம் சுருண்டு...

விடிந்து பெட்டி பரபரப்படையுமுன் கக்கூஸ் போய், பல் தேய்த்து, முகம் கழுவி, மறுபடி வந்து சாய்ந்து கொண்டான் நாராயணன்.

சிதை எரிந்து அடங்கி இருக்கும். மனம் தொடர்ந்து எரிந்து கொண்டிருந்தது. நாவிதன் பண்டாரம் நாலு மணிக்கெல்லாம் வீட்டுக்குப் போயிருப்பான். இனி அவன் எட்டு மணிபோல வந்தால் போதும். மறுபடி எல்லோரும் சுடுகாட்டுக்குப் போய் எலும்பு பொறுக்கிக் கரைத்து...

மாலை நாலரை மணிக்கு வண்டி சென்னை சென்ட்ரல் சேர்ந்தது. முன்தினம் காலையில் குளித்தது. உடலும் உடைகளும் அழுக்காகிக் கிடந்தன. குளித்து மாற நேரமில்லை. வெளியே வந்து பஸ் பிடித்து. எழும்பூருக்குப் போய், வண்டி பார்த்து, இடம் கிடைக்கும் பெட்டியில் ஏறி, இடம் பிடித்து அமர நேரம் சரியாக இருக்கும். மத்தியானம் கடப்பாவில் சாப்பாடு சூடாக இருந்தது. உறக்கமற்ற கண்கள் காந்தின. வாயில் ஒரு சுவையற்ற, காய்ச்சல் வந்து போன உணர்வு.



படிப்பகம்

www.padippakam.com

நெல்லை எக்ஸ்பிரசில் இரண்டடுக்குப் பெட்டியில் மற்றுமோர் தூக்கம் மறந்த இரவு. மணியாச்சியில் இருக்கை கிடைத்தது. அவ்வளவு நெரிசல் இல்லை. மற்று மோர் தூக்கம் மறந்த இரவு, மணியாச்சியில் வாழை இலைத் துண்டில் சிவந்த நிறச் சட்டினியுடன் சில இட்டலிகள் தின்றான். திருநெல்வேலி ரயில் நிலையத்தை விட்டு வெளியே வந்ததும், அவுட் ஏஜன்சி பஸ் பிடித்து, நாகர்கோயில் இறங்கி...

டவுன் பஸ் பிடித்துப் போனாலும் போதும். போய்ச் செய்ய வேண்டிய காரியம் எதுவும் இல்லை. ஆனால் பஸ்ஸில் தன்னூர் ஆட்கள் பத்துப் பேர் இருப்பார்கள். துக்கம் விசாரிப்பது அங்கிருந்தே கூடத் துவங்கி விடும். ஒரு ஆட்டோ பிடித்து ஊருக்குப் போனான்,நாராயணன்.

வீட்டிற்குள் நுழைந்ததும் அத்தையும் பெரியம்மையும் கட்டிப் பிடித்து அழுதனர். அழுகைச் சத்தம் கேட்டு அக்கம் பக்கத்தவர் எட்டிப் பார்த்தனர். பெரிய மாமா வந்து பார்த்து விட்டுப் போனார். நாலு மணி போலச் சின்ன மாமா வந்தார். உறவினர்கள் வந்து போயினர்.

பதினாறு முடியும்வரை வீட்டை விட்டு எங்கும் கிளம்ப முடியவில்லை. கிழமை முறைகள். கல்லெடுப்பு அடியந்திரம். சுடுகாட்டுக்குப் போய், முடியெடுத்து, முகம் வழித்துக் குளித்து, கல்லுக் குழிக்குப் பொங்கலிட்டு, பிண்டங்கள் வைத்து, பாறையாற்றில் குளித்து, பிண்டங் கரைத்து, திரும்பிப் பார்க்காமல் வீட்டுக்கு நடந்து...

முங்கிக் குளிக்கையில் அழுகை உடைந்தது. கண்கள் கசிந்து கொண்டே இருந்தன.

நன்மைக்கு இருத்தினார்கள். சொந்தக்காரர்கள் திருநீறு பூசி, வேட்டி முண்டு கொடுத்தனர். சட்டைத் துணி கொடுத்தனர். காசு கொடுத்தனர். விளக்குக்குப் படையல் போட்டு, எல்லோரும்சாப்பிட்டு, முடிந்த பின் புறப்பட்டுப் போயினர், சொல்லிக் கொண்டு போவது மரபல்ல என்பதால்.



படிப்பகம்

www.padippakam.com

வந்து சேர்ந்த நான்கு நாட்கள் கழிந்து, டெலகிராஃபிக் மணி ஆர்டரில் ஷ்யாம் சரண் சுக்லா அனுப்பி பணம் வந்தது. தாமோதரன் இருநூறு ரூபாய் அனுப்பிய இருந்தான். செலவுகள் எல்லாம் பெரிய மாமா செய்து கொண்டு வந்தார். எப்படிச் சொல்வது என்று தெரிய வில்லை. புறப்படும்போது கேட்டுக் கொள்ளலாம். அல்லது அவரே கூடச் சொல்வாராக இருக்கும்.

கல்லெடுப்பு முடிந்த பின் அவன் மட்டும் தனியாக இருந்தான். அடுக்களை சுத்தமாகக் காலி. மிச்சம் மீதியாகக் கிடந்த எல்லாவற்றையும் அத்தையும் பெரியம்மையும் கொண்டு போனார்கள். பாத்திர பண்டங்கள் என்று கண்டமானம் ஏதும் கிடையாது. ஒரு குத்து விளக்கு, ஒரு செம்பு நிலவாய், வென்னீர் போடும் செம்புப் பானை, தண்ணீர் பிடித்து வைக்கும் குட்டுவம், அரிசிப் பானை, சில்லறைப் பாத்திரங்கள் சில... புளிப் பானை உப்புப் பானை எல்லாம் காலியான பின் மற்ற மண் பானைகளுடன் வெளியே வீசியாயிற்று.

ஒரு தண்ணீர்ச் செம்பு, தம்ளர், தலையணை, பாய், சமுக்காளம் மட்டும் வெளியில் கிடந்தன.

எல்லாம் ஆன பின், அழுகையுடன் அம்மாவின் டிரங்குப் பெட்டியைக் குடைந்ததில் பழைய பட்டு ஒன்று, ஒரு முத்து மாலை, ஒரு வெள்ளிப் பால் சங்கு, அப்பா போட்டிருந்திருக்கக் கூடிய வெள்ளி அரைஞாண் கொடி, நூற்று எழுபத்திரண்டு ரூபாய், சில்லறை, செல்லாத திருவிதாங்கூர் செம்புச் சக்கர நாணயங்கள், ஓட்டைக் காலணா... அவற்றுடன் அம்மா கையில் போட்டிருந்த, தாலியை உருக்கிச் செய்த மோதிரத்தையும் சேர்த்து மறுபடி பெட்டியில் போட்டு மூடினான். ரூபாய் நோட்டுகளை மட்டும் வெளியில் எடுத்து வைத்துக் கொண்டான்.

அம்மா உடுப்பதற்கென வைத்துக் கொண்டிருந்த வெள்ளைச் சேலைகளை என்ன செய்வதென்று தெரிய



படிப்பகம்

www.padippakam.com

வில்லை. வெளுத்து வந்திருந்த ஒரு சேலையை மட்டும் தனது பெட்டியினுள் வைத்தான். இதென்ன பைத்தியக்காரன் தனம் என்று தோன்றியது. அம்மா போட்டிருந்த மோதிரத்தை வேண்டுமானால், தன் விரலுக்குச் சரியாக இருக்குமானால், போட்டுக் கொள்ளலாம். வேண்டாம். பார்ப்பவர்கள் சிரிப்பார்கள்.

இரண்டு நாட்களாகச் சாப்பாடு பெரிய மாமா வீட்டில்தான். நாகர் கோயில் போவதாக இருந்தால், ராத்திரி சாப்பிட வர மாட்டேன் என்று சொல்லிக்கொள்வான். சாப்பிடும் போது கூட ஒரு சுவாதீனமில்லை. குனிந்த தலை நிமிராமல் சாப்பிட்டு வருவது. ஏதாவது கேட்டால் மட்டும் பதில்சொல்வது, முறைச் சாப்பாட்டுக்காரன் போல.

விடுமுறை தீர்ந்து கொண்டிருந்தது. மேலும் ஏழு நாட்கள் நீட்டித்தாயிற்று. இனி இங்கிருந்து செய்ய வேண்டியது ஒன்றும் இல்லை. சொந்தக்காரர்களிடம் சொல்லிக் கொண்டு புறப்பட வேண்டியதுதான்.

''அம்ம செத்துப் போனாளேன்னு வராமப்போகாம இருந்திராதப்பா... நாங்கெல்லாம் இருக்கோம். மனசு விட்டிருப்பிடாது... வந்து போயி இருக்கணும். யாரும் இல்லேன்னு நெனைச்சிரப்பிடாது...''

வேறு வேறு விதங்களில் சொன்னார்கள் அம்மாவின் அருமை பெருமைகளைச் சொன்னார்கள். அவள் பட்ட கஷ்டங்களைச் சொன்னார்கள். சீக்கிரம் ஒரு பெண்ணைப் பார்த்துக் கல்யாணம் செய்து கொள்ளச் சொன்னார்கள். இந்தப் பக்கமே மாற்றம் வாங்கிக் கொண்டு வந்து விடச் சொன்னார்கள். ''பொண்ணு வெளீல என்னத்துக்குப் பாக்கணும்? உள்ளுக்குள்ளேயே இருக்கத்தாலா செய்யி!'' என்றார்கள்

நிறைய வேட்டி துண்டுகள் வந்திருந்தன. எல்லாம் பம்பாய்க்குக் கொண்டு போய் என்ன செய்ய ? வேண்டப்பட்டவர்களுக்குக் கொடுத்தான்.



படிப்பகம்

www.padippakam.com

முகத்திலும் மண்டையிலும் முடி கருமை பிடிக்கத் தொடங்கியிருந்தது. மீசைக்கு இடம் விட்டு முகம் வழித்தான்.

எல்லோர் வாழ்க்கையும் சகஜ நிலையில் இயங்கிக் கொண்டிருந்தது. துயரத்தின் பள்ளங்கள் தூர்ந்து கொண்டிருந்தாலும், நாராயணனுக்கு ஒரு வெறுமை... யாரு மற்றுப் போன அனாதை உணர்வு.

கனவுகள் கரிந்து போயின... ஸ்திரமான வேலை பார்த்துக் கொண்டு, வீடொன்று பார்த்து, அம்மாவையும் கூட்டிப் போக வேண்டும். கடைசிக் காலத்தில் அவள் நாட்கள் கரைச்சல் இல்லாமல் கழிய வேண்டும். காலா காலத்தில் கல்யாணம் செய்துகொள்ளவேண்டும். சொந்தக்காரர் வீட்டு விசேஷங்களை ஒட்டி மனைவி மக்களுடன் ஊருக்கு வந்து பத்துப் பதினைந்து நாட்கள் வீட்டில் தங்கிப் போக வேண்டும். அம்மாவைத் திருச்செந்தூர், பழனி என்று கூட்டிப் போக வேண்டும்...

தினமும் உறங்கப் போகுமுன் சின்னஞ்சிறு காட்சிகள். எல்லாம் அம்மா சம்பந்தப் பட்டவை. ஒரு நாள் கனவில் அம்மா தலைமாட்டில் உட்கார்ந்து அழுவதைப் போல். செத்துப் போனது தானா ? அம்மாவா ?

நினைவுக்கு ஒரு புகைப்படம் கூட இல்லை. முகம் நினைவு வைத்து வரைய அக்கம் பக்கத்தில் எவனும் ஓவியனும் இல்லை...

பம்பாய்க்குப் போக டிக்கெட் வாங்கிய விபரம் மாமாவுக்குத் தெரியும். முன் தினம் மாலை கையிலிருந்த பணத்தை எண்ணிப் பார்த்தான். சில்லறையாகச் செய்த செலவுகள்போக, டிக்கெட் வாங்கியது போக, தொள்ளாயிரத்துச் சில்லறை இருந்தது. எழுநூற்றைம்பது ரூபாயை மாற்றி வைத்தான்.

இரவுச் சாப்பாடு முடிந்ததும், மாமா உட்கார்ந்து வெற்றிலைச் செல்லத்தை முன்னால் வைத்துத் தாம்பூலம்



படிப்பகம்

www.padippakam.com

தரிக்கத் தயாரானபோது, நாராயணன் கிட்டே போய் நின்றான்.

மாமா என்ன என்பது போலப் பார்த்தார்.

''மாமா, இதுலே எளுநூத்தம்பது ரூவா இருக்கு... மாமாக்கு நெறையச் செலவாகி இருக்கும். நான்கொஞ்சம் கொஞ்சமாத் தந்திருவேன்...''

அத்தை யதேச்சையாக வந்ததைப் போல வந்து நின்றாள் குமாரசாமி வந்து தூணில் சாய்ந்தான். காமாட்சியும் மற்றப் பிள்ளைகளும் வந்து அமர்ந்தனர். எல்லாம் ஏற்கனவே திட்டமிடப்பட்ட நாடக அரங்கின் அசைவுகள் போல.

மாமா சற்று நேரம் மௌனமாக இருந்தார். வெற்றிலையை, எழுந்து போய்த், துப்பி விட்டு வந்தார். வாய் கொப்பளித்தார். ரூபாயை வாங்கி அத்தையிடம் கொடுத்தார்.

''ம்... அடியந்திரச் செலவு வரைக்கும் சன்னஞ் சன்னமா ஆயிரத்தி முன்னூறு ரூவா செலவாகியிருக்கும் அதும் சுருக்கமாச் செய்ததுனால... நீ தருவேன்னு எதிர்பார்த்து நான் செலவாக்கல்லே... அவளுக்குச் செய்ய நான் கடமைப் பட்டவன்தான்... பட்டினி கெடந்தாலும் வெளீல சொல்ல மாட்டா... உள்ள நெல்லை வச்சே சமாளிப்பா... நீ காலேஜுக்குப் போன பொறவுதான் எங்கிட்ட அப்பப்பம் அவ கடனா வாங்கினது. அதும் தீர முட்டினாத்தான் கேப்பா... அது எல்லாம் ஒரு ரெண்டாயிரத்தி நூறு ரூவா ஆச்சு. அதுலே நீ வேலைக்குப் போயிப் பணம் அனுப்ப ஆரம்பிச்ச பொறவு, அறுநூத்தம்பது ரூவா தந்து எறக்குனா. எல்லாம் களிச்சுப் பாத்தா, நீ இன்னும் ரெண்டாயிரம் ரூவா எனக்குத் தரணும். ஒண்ணும் அவசரமில்லே... கொஞ்சங் கொஞ்சமா அனுப்பினாலும் சரி... சேத்து வச்சுத் தந்தாலும் சரி... உனக்க வயிலுக்கு அசலுக்கு ஒப்பம்



படிப்பகம்

www.padippakam.com

பாட்டம் நான் தந்தா அஞ்சு கோட்ட நெல்லு பாட்டம் வரும். இன்னத்த வெலைக்கு, கோட்ட நூறு ரூவா விக்கி...நாலு பூ பாட்டத்திலே வகை வச்சாலும் சரி தான்...எனக்குப் பணம் தரணுமேன்னு நீ கஷ்டப்பட ணும்னு இல்லே...''

''சரி, மாமா...எனக்கும் கைமாத்தா வாங்கின ரூவா கொஞ்சம் அங்க குடுக்கணும்...அது தீர்ந்ததுக்குப் பொறவு முடிஞ்சதை அனுப்பித் தாறேன்...''

மற்றெல்லா முகங்களும் அவன் முகத்தை நகலெடுத் துக் கொண்டிருந்தன. வேறேதும் பேச்சை அவன் எடுப்பான் என எதிர்பார்த்து நின்றதைப் போலொரு தோற்றம்...

ஆனால் நினைத்தது போல் பணம் அனுப்ப முடிய வில்லை. இருநூற்றைம்பது ரூபாய் சம்பளத்தில் பி. எஃப், இ.எஸ்.ஐ.சி. பிடித்தம் போகக் கைக்கு வரும் இருநூற்றிருபத்திரண்டு ரூபாயில், எழுநூறு ரூபாய்க்கடன் தீர்க்கவே ஓராண்டுக்கு மேல் ஆகிவிட்டது. அதற்குள் இரண்டு பூக்கள் கழிந்து விட்டன. இனியென்ன அனுப்புவது? மேலும் இரண்டு பூ நெல்லில் வகை வைத்துக் கொள்ளட்டும் என்று இருந்து விட்டான்.

அதற்குள் அம்மா செத்த முதலாண்டுத் திவசம் வந்தது. போனஸ் வாங்கிய பணமும், சம்பள முன் பணமும், மேற்கொண்டு ஐந்நூறு ரூபாய் கடனுமாக ஓர் ஊர் வரவு. அந்த முறை மாமாவுக்குச் செலவு வைக்க வில்லை. முன் பேறாக மாமா கையில் பணம் கொடுத்து விட்டான். கணக்குக் கேட்கவும் சொல்லவும் என்ன இருக் கிறது? வயலுக்கும் வீட்டுக்கும் கரம் தீர்வை, வெள்ளை யடிப்பு, அம்மன் கோயில் கொடைக்கு வரி கொடுத்தது என்று நான்கு பூ நெல்லென்பது ஆறு பூ நெல்லாக நீண்டு விட்டது,

மூன்றாவது ஆண்டுக் கொடைக்கு ஊருக்குப் போன போது சின்ன மாமா லேசாகக் கேட்டார்.



படிப்பகம்

www.padippakam.com

''வயிலுக்குப் பாட்ட நெல்லுக்கு ரூவா என்னமாத் தாராளாலே, நாராயணா?''

''இல்ல மாமா...அம்மை வாங்கின கடமும், செத்த வீட்டுச் செலவும் கொஞ்சம் உண்டும். அதுக்கு வகை வச்சுக்கிட்டிருக்கா...''

''அது இன்னுமா தீராமக் கெடக்கு? என்ன கணக்குத் தானோ எளவு கணக்கு... ம்...அவன்தானே நல்லவன் கடைசியிலே...''

ஒழுகினசேரி பெரியம்மையைப் பார்க்கப் போன போது கேட்டாள்—

''மக்கா...மாமன் கல்யாண காரியம் என்னமாஞ் சொன்னானா டே...''

''யாருக்கக் கல்யாண காரியம் பெரீம்மா?''

''உனக்குத்தான்...வேற யாருக்கு? காமாச்சியைத் தருவான்னு நெனைச்சேன். ஒரு நாள் பாட்டு வாக்கிலே கேக்கவும் செய்தேன்...ஒனக்க அத்தக்காரி இருக்காளே, கள்ளியங்காட்டு நீலி, அறுத்த கைக்கு உப்பு வக்க மாட்டா...அவ சொல்லுகா...'காமாச்சிக்கு வெளிலதான் பாக்கணும். அவ்வளவு தூரத்துக்கு அனுப்ப முடியுமா? ஒரு மண்டையிடி காச்சல்னா கூடப் போயிப் பாக்க முடியாது. நீங்களே பாத்தேள்ளா மயினியோ? பெத்த அம்ம செத்ததுக்கே வர முடிஞ்சா? பின்ன போட்டுப் பேசுகேளே'ன்னு நீட்டுகா...நான் என்ன மக்கா சொல்ல முடியும்?''

பெரியம்மைக்கு, சொல்லும் போதே, அழுகை வந்து விட்டது.

காமாட்சி பதினொன்று படித்து விட்டு வீட்டில் இருந்தாள். பெரிய கூடு. வாட்ட சாட்டமாக இருந்தாள். நாஞ்சில் நாட்டுப் புதுநிறம். லேசாக மஞ்சள் மினுங்கல். காலையில் பார்த்தால், குளித்து மாறி ஒரு வகைத் தளர்



படிப்பகம்

www.padippakam.com

பின்னல். முன்னிரவில் மலர்ந்து வாடல் கொள்ளத் துவங்கும் பிச்சிப்பூ. பாவாடை தாவணியில் மிகையின்றித் தெரிந்தாள். சாரி கட்டினால் வளர்ந்த பெண்மை வாய்த்திருப்பது தெரியும்.

நாராயணன் பெரிய மாமா வீட்டுக்குப் போன போதெல்லாம் குறுக்கமறுக்கத் தென்பட்டுக் கொண்டிருந் தாள் காமாட்சி. இவன் தன் கணவன் ஸ்தானம் பெறப் போகிறவன் இல்லை என்பதால் மிரட்சி கழன்ற சுபாவம். அவனுக்குக் காமாட்சி என்றும் கிளர்ச்சிக்குக் காரணமாக இருந்ததில்லை. ஒரு வேளை எட்டாப் பழம் புளிக்கும் என்ற தத்துவ ஊறலாக இருந்திருக்கக் கூடும்.

மறு ஆண்டில் காமாட்சியின் கல்யாணத்தில் கலந்து கொள்வது வேதனையாக இருந்தது. மாப்பிள்ளை உள்ளூர்க்காரன். ஒன்றாக நொண்டங்காய் பொறுக்கித் தின்றவன். வேதனையாக இருக்கும் என்று தெரிந்தும் விடுபட முடியவில்லை. எதிர்பார்த்து இருந்திராததால் ஏமாற்றம் இல்லை. ஆனால் எரிச்சல் இருந்தது.

காலம் கன வேகமாகக் கழன்று கொண்டு வருகிறது

இன்று காமாட்சியின் மகளுக்குக் கல்யாணம். பத்தொன்பது வயதிருக்கும். அவள் சடங்குக்கு அவன் போகவில்லை. கல்யாணத்துக்கும் போகாமல் இருந்தால் நன்றாக இருக்காது.

ஆரம்பத்தில் இருந்த சங்கடங்கள், கூச்சங்கள் எல்லாம் மாறி விட்டன. கேள்விகளின் தீவிரங்கள் குறைந்து விட்டன. கேள்விகளே கூடக் குறைந்து விட்டன. அவ்வப்போது அங்கலாய்த்துக் கொண்டிருந்த பெரியம்மையை வைத்த குழியில் நட்ட தென்னங்கன்று இப்போது பிள்ளையாகிக் காய்க்கவும் ஆரம்பித்து விட்டது. மாமாவுக்கே எண்பத்து மூன்று வயதாகிறது. சின்ன மாமாவும் இல்லை; அத்தையும் இல்லை. மூத்த தலைமுறையின் கடைசிக் கண்ணியும்கூட அறுந்து விடக் கூடும், திடீரென...



படிப்பகம்

www.padippakam.com

ஏதோ பழைய பாசத்தில் மாமா எழுதி இருக்கிறார், நடுங்கும் கரத்தால். இந்த அரவணைப்பில் கால்வாசி கூடக் குமாரசாமி வகையறாக்களிடம் எதிர்பார்க்க முடியாது. தன்னால் அவர்களுக்கு ஆக வேண்டியதில்லை எதுவும். மாமா காலத்துக்குப் பிறகு, போக்குவரத்தின் இடைவெளி இன்னும் நீண்டு விடக் கூடும். போகாமலேயேகூட ஆகிவிடக் கூடும். இப்போதே ஒவ்வொரு வீட்டுக்கும் போய் எட்டிப் பார்ப்பது என்பது ஒரு சடங்கு போலத்தான். போனால் ஒருவேளை சாப்பாடு போடு கிறார்கள்.

எதற்குத்தான் பிறகு இந்த அலைச்சல் என்று தோன்றியது. ஒரு வேளை, மாமா அடுத்த தன் வரவுக்காகக் காத்திருக்க மாட்டாராக இருக்கும்.

வீட்டையும் வயலையும் என்ன செய்வது என்று தெரியவில்லை. சற்றுத் தாராள மனத்துடன் பெரிய மாமா குடும்பத்துக்கு வயலையும், சின்ன மாமா குடும்பத் துக்கு வீட்டையும் கொடுத்து விடலாம். இன்றைய விலைவாசிக்கு இரண்டுமாக அறுபதினாயிரம் கிடைக்கு மாக இருக்கலாம்.

அல்லது வீட்டை நொறுக்கிவிட்டுப் புதியதாகக் கட்ட வேண்டும். இன்னும் பதினைந்து ஆண்டுகளில் ஓய்வு பெற்றுப் போகும் போது தலைக்கு மேலே ஒரு கூரை இருக்கும்.

ஒன்றும் தீர்மானிக்க முடியவில்லை.



படிப்பகம்

www.padippakam.com

# மூன்று

மறுவாரம் அக்கோலா போகவேண்டியது இருந்தது. மார்ச் மாதத்தின் நாற்பத்தோரு டிகிரி கொளுத்தல், நாக்பூருக்குச் சளைத்ததாக இல்லை. இரவிலும் அனல் வீசியது. ஊரெல் லாம் சுற்றி விட்டு வந்து, மறுபடியும் குளித்து முடித்தபோது, மணி ஆறரைக்குமேல் ஆகிவிடும். முதற் காட்சி சினிமா போக முடியாது. இரண்டாவது காட்சி பத்து மணிக்கு. அதுவரை விழித்திருப்பது கடினம் மேலும் இரவு இரண்டு மணிக்கு மேல் வந்து படுத்து, அதிகாலையில் எழுந்து புறப்பட முடியாது.

மராத்திய மாநிலத்தின் உட்பகுதி அது. காலை, முதல் சுற்றுப் பஸ்களில் ஒன்றைப் பிடித் தால் மட்டுமே, நாற்பது கிலோ மீட்டர் தாண்டி இருக்கும் மில் வாசலில் ஒன்பது மணி வாக்கில் நிற்க முடியும். முதல் சுற்றுப் பஸ்களைத் தவற விட்டால், இரண்டாம் சுற்றுப் பஸ்கள் பத்தரை மணிக்கு மேல்தான் கிடைக்கும்.

மில்கள் அங்கு பம்பாய் போல் அவ்வளவு நெருக்கமாக இல்லை. ஒரு நாளில் சராசரி இரண்டு விசிட்தான் சாத்தியம். மூன்றாவது பார்க்க முடிந்தால் பெரும் பேறு. பெரும்பாலும் மில் அதிகாரிகள் காலை ஏழு மணி வாக்கில் உள்ளே நுழைந்தார்களானால், பன்னிரண்டு மணிக்குச் சாப்பிடப் போவார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

பிறகு மூன்று மணிக்கு மேல்தான் வருவார்கள். எனவே, அதிகாலையில் எழுந்து, தயாராகி. பஸ் பிடித்து, பயணம் செய்து, ஒரு விசிட்டைப் பன்னிரண்டு மணிக்குள் முடித்து விட வேண்டும், பெரும்பாலும் முன் தினம் இரவே பஸ் நேரங்களைப் பார்த்து வைத்துக் கொள்வது.

முதல் விசிட் திட்டமிட்டபடி முடிந்து விட்டால், இடைப்பட்ட நேரத்தில் சாப்பாடும் அடுத்த பயணமும். பெரும்பாலும் நூற்பாலைகள் பஸ் நிலையத்தை விட்டு நாலைந்து கிலோ மீட்டர் வெளியே தள்ளி இருந்தன. ஆட்டோ இருக்காது. ஜீப் அல்லது லாரி, வாய்ப்பாக வரும் டவுன் பஸ், சைக்கிளின் பின்னால் தொற்றல், சில சமயம் நடையாக...

பஸ் நிலையத்தில் இறங்கியதும், தூரம், பஸ் நேரம் போன்றவற்றைக் கேட்டுத் தெரிந்து கொள்வது. மத்தியானம் திட்டமாகச் சாப்பிடும்படியான ஓட்டல்கள் காண்பது அரிது. பெரும்பாலும் கடலை மாப் பணியாரங்கள். கரும்புச் சர்க்கரை போட்ட கொழுப்பான சாய், குறுகுறுவென்று. தோதுப் போல, சுத்தமாகத் தென்படும் காப்பிக் கடையில் சொல்லி வைத்து விட்டுப் போவான் —மத்தியானம் பன்னிரண்டு மணி போல வரும்போது, சாப்பாடு செய்து வைத்திருக்க வேண்டும் என்று.

தலைப்பாகை கட்டிய அல்லது காந்திக் குல்லாய் வைத்த மராட்டியர் பொதுவாக நல்லவர்கள். முதல் சுற்று வேலையை முடித்து விட்டு, வேர்க்க விறுவிறுக்க வந்து சேரும்போது, சுடச் சுடச் சோள ரொட்டியும் வெந்தயக் கீரை அல்லது வெங்காயக் கீரைத் துவரனும் உருளைக் கிழங்கும் முளைப் பயறும் போட்டுச் செய்த குழம்பும் வெள்ளை வெங்காயமும் இருக்கும். தயிர் கிடைப்பது அபூர்வம். தோராயமாகக் கொடுப்பதை வாங்கிக் கொள்வார்கள்.

அபூர்வமாகச் சில சமயம் மில் கேன்டீனில் ஏதாவது கிடைக்கும். பழக்கமுள்ள டெக்னீஷியன்கள் மோட்டார்



படிப்பகம்

www.padippakam.com

பைக்கின் பின்புறம் உட்கார வைத்து, பஸ் நிலையத்தில் கொண்டு விடுவதும் உண்டு.

கூட்டுறவு நூற்பாலைகளின் தலைவராக எம்.எல்.ஏ. அல்லது எம். பி. ஒருத்தர் இருப்பார். மெஷின்கள் ஆர்டர் செய்யும் போது கொடுக்கல் வாங்கல் உண்டு. ஆனால் அவர்கள் அடிப்படையில் மனிதர்களாக இருந்தனர் பந்தாக்கள் இல்லாமல் இருந்தனர். சிபாரிசு இன்றி யாரையும் பார்த்து விட முடியும். சந்திக்க நேர்கையில், ''சாப்பிட்டாச்சா? இங்கு என்ன சாப்பாடு கிடைக்கும்?'' என்றனர். ''தரியாப்பூர் போக வேண்டுமானால் பன்னிரண்டே கால் பஸ் பிடிக்க வேண்டுமே! அதை விட்டால் நாலரை மணிக்குத்தானே அடுத்த பஸ்!'' என்று ஜீப்பில் பஸ் நிலையத்தில் கொண்டு விடச் சொன்னார்கள்.

காலையில் பயணம் இனிதாக இருக்கும். சாலையோரம் மந்திகள் வெயில் காயும். பெயர் தெரியாத பறவைகள் அழகழகாய்ப் பறக்கும். கரும்புத் தோட்டங்கள், வெங்காய வயல்கள், கடலைக் காடுகள், சூரிய காந்திப் பரப்புகள்.

பதினோரு மணிக்கு மேல் மில்லை விட்டு வெளியே வரும்போது, வாழ்க்கை வெறுத்துப் போவது போல் வெயிலடிக்கும். திறந்த வெளிக் காற்று அனல் ஆவியை அள்ளிக் கொண்டு போய், அனல் ஆவியை அள்ளிக் கொண்டு வரும்.

கரும்பு வண்டியின் மேலமர்ந்து, கரும்பைக் கடித்துத் துப்பிக் கொண்டே போன பதினான்கு வயதுப் பெண், கால் முட்டில் வைத்து ஒடித்த மறுபாதிக் கரும்பை அவனை நோக்கி வீசி எறிந்த கணம் வாழ்க்கையை சுவாரசியமுள்ளதாக்கி விட்டுப் போனது.

இரண்டரை அல்லது மூன்று மணிக்கு இரண்டாவது மில்லினுள் நுழைந்து ஐந்தரை மணிக்கு மேல் வெளியே



படிப்பகம்

www.padippakam.com

வரும்போது, வெயில் மந்தகாசம் புரியும். சாரி சாரியாய்ப் பஞ்சு மூட்டைகள் சுமந்த ஒற்றைக் காளை வண்டிகள் எதிர் வரும். முழுவன் சேலையையும் தலைப்பாகையாகச் சுற்றிய தோல் சுருங்கிய முகங்கள்...நாட்டுப் புகையிலைச் சுருட்டின் காரம் கலந்த காற்று...

மாலையில் அறைக்குப் போய்க் குளித்த பிறகு, முதல் வேலை, ஏதாவது ஒரு பாரில் போய் பீர் குடிப்பது. கொண்டைக் கடலைச் சுண்டல் அல்லது சுட்ட பப்படம், அல்லது உப்புத் தூவிய தக்காளித் துண்டங்கள், எலுமிச்சம் பழம் பிழிந்து உப்புத் தூவிய வெள்ளைக் கார வெங்காயம்...

சாப்பிட நடக்கும்போது எட்டு மணி ஆகும். எல்லா ஊரிலும் எளிமையான சாப்பாடு மெஸ்கள் இருந்தன. மார்வாரி மெஸ் அல்லது குஜராத்தி மெஸ். சோறென்பது அரை வேக்காட்டு அரிசி, தவிர்த்தால் வயிற்று வலி வராது. கட்டித் தயிரில் இரண்டு கரண்டி சீனி போட்டுத் தருவார்கள் சுடச் சுட வரும் ஒற்றைச் சுக்கா ரொட்டி அல்லது பாக்ரி அல்லது ஃபுல்கா. கூடிய வரை வெளியூரில் மாமிசம் தவிர்ப்பது நல்லது. சாப்பிட்டுக் காலார நடந்து களைத்துப் படுக்கையில் விழலாம். வேறு விசாரங்கள் வராதபடி நாட்கள் அலைச்சலில் கழியும். பம்பாய்க்குத் திரும்பி மறுபடியும் நுகத்தடியில் நுழைவது தான் பெரிய சித்ரவதை.

குட்டினோ சொல்வான் : "உனக்கிப்போது நாற்பத்தி ஐந்துதானே ஆகிறது. இன்னும் சில ஆண்டுகள் ஆகட்டும். சித்ரவதை மேலும் கம்பீரமாக இருக்கும்!" என்று.

குடும்பத்தின் எல்லா விசேடங்களுக்கும் குட்டினோவுக்குச் சம்பிரதாயமான அழைப்பு வரும். பிறந்த நாள், கல்யாணம், இன்ன பிற. போனால் ஒரு மாதிரியாகப் பார்க்கிறார்கள் என்றும், இப்போது எதற்கும் போவதில்லை என்றும் சொன்னான். நாராயணனுக்கு அந்தத்



படிப்பகம்

www.padippakam.com

தொந்தரவுகள் இல்லை, வெளியூரில் இருப்பதால். ஊர் போய் நிரந்தரமாகத் தங்க நேர்ந்தால், அது போல் தனக்கும் தோன்றக் கூடும். குட்டினோ மீது சொந்தக் காரர்களின் முக்கியமான குற்றச்சாட்டு, பேய் போலப் பாய்ந்து பாய்ந்து பெண்களைப் பார்க்கிறான் என்பதும், அவர்களை நாட்டியமாட அழைத்துத் தொந்தரவு செய்கிறான் என்பதும். ஆனால் குட்டினோ அந்த மாதிரி ஆளில்லை என்பதை நாராயணன் அறிவான். அதை எங்கு போய் நிறுவ முடியும்? வேலைக்காரி ஆனவள் வேசியும் ஆவாள் என்பது போல இது.

வேலைகள் முடிந்து, ஆறு நாட்கள் அலைச்சலுக்குப் பிறகு, சனிக் கிழமை மாலை கையில் ஃப்ரீஃப் கேசும் தோளில் ஏர்-பேக்குமாக அக்கோலா ஸ்டேஷனில் நின்ற போது புரிந்தது. இம்முறை பம்பாய் போய்ச் சேருவது மிகவும் சிக்கலான விஷயம் என்பது.

வழக்கமாக மாலை நாலரை மணிக்கு வரும் கல்கத்தா மெயில்தான் பிடிப்பது. காலை ஐந்து மணிக்குத் தாதரில் இறங்கி விடலாம். திரும்புகால் பயணத்தில் இருக்கை பதிவு செய்து கொள்வதெல்லாம் சாத்தியமில்லை. நடப்புப் பயணச் சீட்டு வாங்கி, பரிசோதகருடன் ஒரு ஒத்து தீர்ப்பு செய்து பயணம் செய்வதுதான். அவனைப் போன்ற ஒற்றைப் பயணிகள் அவர்களுக்கும் சாதகமானவர்கள். பணத்தையும் பொருட்படுத்துவதில்லை. அப்படியும் இருக்கை வாய்க்கா விட்டால் இரண்டு மணி நேரம் நின்று கொண்டாவது புசாவல் ஜங்ஷன் வந்து வடக்கே டில்லிப் பக்கம் இருந்து வரும் வண்டிகளில் ஒன்றில் நுழைந்து கொள்வலாம்.

அன்று வழக்கமில்லாமல் கல்கத்தா மெயில் இரண்டரை மணி நேரம் தாமதமாக வந்தது. வண்டியினுள் எந்த வகுப்பிலும் நுழைய முடியாதபடி கூட்டம். வண்டிக்கு மேலேயும் இடையிலும் கதவிலும் கூரையிலும் கால் வைக்க முடிந்த இடங்களிலெல்லாம் சனங்கள்.



படிப்பகம்

www.padippakam.com

போபால் போல, நாக்பூரிலும் விஷ வாயு ஒழுக ஆரம்பித்து ஊரே காலியாகி வருகிறதோ எனும் படியாக...

முறையான முன்பதிவு உடையவர்களே வண்டிக்குள் நுழைய முடியவில்லை. முதல் வகுப்பு, குளிர்பதன வகுப்பு என்று எந்த பேதமும் இல்லை. பிளாட்பாரத்தில் பேசிக் கொண்டனர்—நாக்பூரில் அம்பேத்கர் ஜாத்ரா முடிந்து திரும்பும் சனங்கள் என்று.

டி. டி.யார் சொன்னார்- அன்று மாலையில் அக்கோலாவிலும் ஜாத்ரா நடக்கும் என்றும், இன்னும் இரண்டு நாட்களுக்குப் பம்பாய் போய்ச் சேர முடியாது என்றும், எப்படியாவது புசாவல் போய் விடு என்றும்.

பின்னால் நாக்பூர் — கோலாப்பூர் மகாராஷ்ட்ரா எக்ஸ்பிரஸ் வந்தது, மூன்று மணி நேரம் தாமதமாக. அதுவும் 'அவன் தம்பி அங்கதன்' கதையாக. இது என்ன காட்டுத்தனமான கூட்டம் என்று வெறுப்பாக இருந்தது.

அவசரமாய் ஓடிப்போய் பம்பாயில் செய்ய ஏதும் இல்லை. எந்தக் குடும்பமும் காத்துக் கொண்டும் இல்லை. அதற்காக அக்கோலா ஸ்டேஷனிலேயே நின்று கொண் டிருக்கவும் முடியாது. இங்கிருந்து கழன்று போவது நல்லது.

பிளாட்பாரத்தில் ஒரு வடாபாவ் தின்று சாய் குடித்தான். கான்கிரீட் சாய்வு பெஞ்சொன்றில் உட்கார இடம் பிடித்தான். ஹௌரா மெயில் ஆறு மணி நேரம் தாமதம் என்றனர். முன்னிரவில் வரும் போலும். இன்னும் இரண்டரை மணி நேரம் இருந்தது.

பக்கத்தில் ஒரு மராத்திக்காரனும் அவன் ஐந்து வயது மகனும். ஒரு குட்டிச் சாக்கு, சோளமாக இருக்கும்-துணிகள் திணிபட்ட அழுக்குச் சமுக்காளப் பை. துண்டில் முடிந்த ரொட்டிப் பொட்டலம். பெண்டாட்டி ஊருக்கோ, தங்கை அல்லது தமக்கை ஊருக்கோ வந்து



படிப்பகம்

www.padippakam.com

திரும்புகிறான் போலும். இட்டார்ஸி வரை போக வேண்டும் என்றான். எட்டு மணி நேரப் பயணம். இந்தப் பையனுடனும் மூட்டையுடனும் என்ன செய்வானோ ?

பையன் பொறுமை இழந்து சிணுங்க ஆரம்பித்தான். மராத்திக்காரனும் பொறுமை இழக்க ஆரம்பித்த அடையாளம். சமாதானத் தொனி கோபமாக மாறிக் கொண்டிருந்தது. தொந்தரவு தாங்காமல் எரிச்சலுடன் சொன்னான்—

''நீ இப்படி செறைப்படுத்தினா இங்கயே விட்டுட்டுப் போயிருவேன்.''

பையனுக்கு ஆங்காரம் வந்து விட்டது.

கையால் தகப்பனை ஓங்கியோங்கிக் குத்த ஆரம்பித்தான். குத்திக் கொண்டும், அழுது கொண்டும்—

''விட்டுட்டுப் போயிருவியா... விட்டுட்டுப் போயிருவியா நீ... என்னை விட்டுட்டுப் போயிருவியா?'' என்று கதற ஆரம்பித்தான்.

அந்தப் பையனின் ஆவேசம் நாராயணனுக்குத் திகைப்பாக இருந்தது.

இருபத்தேழு வயதில் கல்யாணமாகி இருந்தால், இன்று தனக்குப் பதினேழுவயதில் பையனோ பெண்ணோ இருக்கும் என்று நினைத்துக் கொண்டான்.

ஒரு வேளை வாழ்க்கை இத்தனை 'ஆத்தலாக' இருக்காதுதான். பிடுங்கல்கள் இருக்கும். போதாமைகள் இருக்கும். முதுமை சற்று விரைவில் ஓடி வருமாக இருக்கும். காசு சேர்க்கும் பறத்தம் அதிகமாக இருக்கும். வீடு வாங்கும், டி.வி. வாங்கும், ஃபிரிஜ் வாங்கும் ஆவேசங்கள் இருக்கும். சொந்தக்காரர்களிடம் தனக்கோர் கூடுதல் மரியாதை இருக்கும்.



படிப்பகம்

www.padippakam.com

ஆனால் இந்தச் சுதந்திரம் இருக்குமா ?

இது சுதந்திரமா அல்லது தனக்குத் தான் சொல்லிக் கொள்ளும் சாக்குப் போக்கா ?

பத்து நாட்களுக்குப் பிறகு, மாமா எழுதிய கடிதம் மீண்டும் நினைவுக்கு வந்தது. பம்பாய் போனதும் ஊருக்குப் போக டிக்கெட் வாங்கி விட வேண்டும் என்று நினைத்துக் கொண்டான். ஒரு மாதம் லீவும் விண்ணப் பித்துக் கொள்ள வேண்டும்.

ஒன்பதே முக்காலுக்கு ஹௌரா மெயில் வந்தது. மீண்டும் அலை மோதும் கூட்டம். நாராயணன் ஒரு முடிவுக்கு வந்தவன் போல முதல் வகுப்புப் பெட்டியினுள் இடித்துக் கொண்டு நுழைந்தான். அந்தப் பெட்டியில் இரண்டு ஹவில்தார்கள் முதல்வகுப்பு டிக்கெட் இல்லாதவர் களை நெம்பி நெம்பி வெளியே தள்ளினர். நாராயணன் தலைக்குப் பத்து ரூபாய் கொடுத்தான். பரிசோதகருக்கு இருபது ரூபாய். புசாவல் வரை நின்று கொண்டு வருவ தற்கு. புசாவலில் இறங்கிப் பின்னால் வரும் டில்லி வண்டி பிடித்தால், அதில் கூட்டமிருக்க வாய்ப்பில்லை என்றார். மல்காப்பூரில் மறுபடியும் ஒரு தள்ளல்.

பன்னிரண்டே காலுக்குப் புசாவலில் இறங்கினான். பின்னால் வந்த வண்டியில் செகன்ட் ஏ.சி. கோச்சில் ஜல்காவ்விலிருந்து இடம் தருவதாகச் சொன்னார். ஏறி நின்றுகொண்டான். டிக்கெட்டும்,கட்டணவித்தியாசமும், அதிகப்படியும் கையில் கொடுத்தான். மாற்று டிக்கெட் தரவில்லை. ஜல்காவ்வில் படுக்கையைக் காட்டினார். ''டிக்கெட்,'' என்றான். ''நிம்மதியாகப் படுத்துத் தூங்கு. நான் வண்டியில்தானே வருகிறேன்!'' என்றார். ஏ.சி. சொகுசிலும் சரியாகத் தூக்கம் வரவில்லை. டிக்கெட் இல்லாத பயணம் போல மனம் திடுக்கிட்டுக் கொண்டே இருந்தது. இது ஒரு கோழைத்தனமான அவஸ்தை. கோடிக் கணக்கில் புரட்டுகள் செய்கிறவன் அன்றலர்ந்த செந்தாமரை போல் களங்கமற்றுப் பிரகாசிக்கிறான்.



படிப்பகம்

www.padippakam.com

விடிந்த பின் மறுமுறை பார்த்தபோது, பரிசோதகர் சிரித்தாரே தவிர, வேறு செயலொன்றும் இல்லை. ஆவது ஆகட்டும் என்று தினசரி யொன்று வாங்கிப் படிக்க ஆரம்பித்தான்.

கல்யாண் தாண்டித் தாதர் நெருங்கிக் கொண்டிருந்த போது வந்தார். தாதரில் இறங்கவா என்றார். ஆமென்ற போது பாக்கெட்டில் கைவிட்டு டிக்கெட் எடுத்துத்தந்தார். அதே அக்கோலா-பம்பாய் இரண்டாம் வகுப்பு நடைப்புப் பயணச் சீட்டு. ஐம்பது ரூபாய் திரும்பத் தந்தார், சலுகை போல. இது ஒரு தொழில் நாணயம் என்று நினைத்துக் கொண்டபோது சிரிப்பு வந்தது.



படிப்பகம்

www.padippakam.com

# நான்கு

வழக்கமான ஒரு வார நாள். ஸ்ட்ராண்ட் தியேட்டரில் 'நைட் ஓவர் சிலி' போட்டிருந்தார்கள். குட்டினோ சொன்னான், இரண்டு நாட்களில் தூக்கி விடுவார்கள் என்று. பார்ப்பதானால் பார்த்து விடு என்றான். அவனைக் கூப்பிட்டதற்கு அவன் ஏற்கனவே பார்த்தாயிற்று என்றான்.

ஐந்தரைக்கு அலுவலகத்தில் இருந்து இறங்கி, ஃப்ளோரா ஃபவுண்டன் வந்து, மியூசியம் நடந்து, ரீகல் எதிர்ப்புறம் இருந்த ஈரானி ஓட்டலில் ஒரு பன்பாவும் டீயும் சாப்பிட்டு விட்டு, மறுபடியும் நடந்து, ஸ்ட்ராண்ட் போய்ச் சேர்ந்தபோது, நேரம் சரியாக இருந்தது. அதிகக் கூட்டமில்லை. அது எதிர்பார்த்ததுதான்.

பாப்லோ நெருடா என்ற கவிஞனின் மரணம் சிறையில் ஏற்படுத்திய பரபரப்பில் மனம் அதிர்ந்து போனது.

படம் முடிந்து மறுபடியும் நடந்தான் நாராயணன்.

அதே ஈரானி ஓட்டலில் ஒரு இரட்டை ஆம்லெட், நான்கு பாவ், ஒரு டால் ஃப்ரை சாப்பிட்டு விட்டு, மெதுவாக ஃபவுண்டன் நோக்கி நடக்க ஆரம்பித்தான். ஏப்ரல் மாதத்தின் காற்று குளிர் மாறி வீசியது.



படிப்பகம்

www.padippakam.com

வியாபார வண்டிகளின் கீழே அடுப்பு மூட்டி ரொட்டி சுட ஆரம்பித்திருந்த பையாக்கள். எட்டரை மணிதான் ஆகியிருந்தது. அலுவலகங்கள் நிரம்பிய பகுதியாதலால், சாலைகள் வெறிச்சோடிக் கிடந்தன. கட்டடங்களில் அங்கொன்றும் இங்கொன்றுமாய் விளக்குகள். காலா கோடாவில் வெளிச்சம் சிதறிக் கிடந்தது. கைபர் ரெஸ்ட்டாரண்ட் வாசலில் நின்ற தர்வான் ரோமானியப் போர்வீரப் பதுமை போலத் தெரிந்தான்.

இதமான காற்றை நீளமாக மூச்சிழுத்து விட்டான் இதே கதியில் விக்டோரியா டெர்மினஸ்வரை நடந்து போய், லோகல் ட்ரெய்ன் பிடிக்கலாம். அல்லது ஃப்ளோரா ஃபவுன்டனில் நின்று எட்டாம் நம்பர் பஸ் பிடிக்கலாம். மின் வண்டியானால் சற்று சீக்கிரமாக அறை போய்ச் சேரலாம்.

பின்னால் சற்று வேகமான, குதிகாலுயர்ந்த செருப்பின் ஓசை. அவனுக்குச் சமமாக வந்ததும், நிதானப்பட்ட நடை. பக்கவாட்டில் திரும்பிப் பார்த்தான். அலுவலகத்தில் ஓவர் டைம் செய்துவிட்டுத் தாமதமாக வீட்டுக்குப் போகிறவளாக இருக்கும். இவளுக்கும் வீட்டில் கணவன் குழந்தைகள் காத்துக் கொண்டிருக்கும். மற்றும் ஒருமுறை திரும்பி முகத்தைப் பார்த்தான். வழக்கமாகத் தென்படும் பல முகங்களில் ஒன்று. முகம் ரப்பரால் செய்தது போன்ற சிவப்பான, வசீகரம் அற்ற, உணர்ச்சி வெளித் தெரியாத பொம்மை முகங்கள்...

சற்று செருமியவாறு, ''எக்ஸ்க்யூஸ் மி!'' என்றாள்.

வழி கேட்பவளாகத் தெரியவில்லை. இந்தச் சமயத்தில் பஸ்ஸுக்குச் சில்லறையோ அல்லது துல்லியமான நேரமோ கேட்க நியாயமில்லை.

''எஸ்,'' என்று சொல்லித் திரும்பினான்.

''டு யூ வான்ட் எ கம்பனி ஃபார் த ஈவினிங்?''



படிப்பகம்

www.padippakam.com

ஆங்கிலம் சுத்தமாக இருந்தது. குரலில் எந்த உணர்ச்சியும் வெளித் தெரியவில்லை. டெலஃபோனில் கேட்கும், ''கேன் ஐ டாக் டு யுவர் சேல்ஸ் மேனேஜர் பிளீஸ்?'' என்பது போல...'பிஸினஸ் லைக்' ஆக.

''நோ பிளீஸ்...ஐ ஆம் சாரி...''

''இட்ஸ் நாட் வெரி எக்ஸ்பென்ஸிவ் ஆஸ் யூ திங்க்...''

இது ஒரு விதமான மாதக் கடைசியின் தள்ளுபடி விற்பனை. அல்லது அப்படிப் பணம் வாரி வீசி விடாத மதராஸி கிராக்கிக்கான சலுகை.

''நோ... தேட்ஸ் ஓ கே... பட் ஐ ஆம் நாட் இன்டெரெஸ்டட்...''

''சாரி...''

அவள் நடை தளர்ந்து பின் வாங்கியது.

அலுத்துப் போயிற்று எல்லாம். ஒன்றும் சுவாரசியம் இல்லாமல் ஆகிவிட்டது. எல்லா சரோஜாதேவி புத்த கங்களும் ஒன்றே என ஆகி விட்டதைப் போல.

பத்துப் புன்னிரண்டு ஆண்டுகள் இருக்கும். அப் போது வாழ்க்கை பற்றிய சில நம்பிக்கைகள் மீதம் இருந்தன. என்றாலும் சாதனைப் பட்டியலில் இன்னு மொரு சேர்க்கையாகத் தோன்றின இவையெல்லாம்.

ஒரு சனிக் கிழமை மாலை. டி ஏ.பில் பாசாகி வந்த காசு இருந்தது கையில். சலாவுதீன் அறையில் இருந்தார். அவருக்கும் மாலையில் செய்ய வேறு வேலைகள் இருக்க வில்லை. கை கால் முகம் கழுவி இரண்டு பேருமாக இறங்கினார்கள். கிரான்ட் ரோடு பார் ஒன்றில் தலைக்கு இரண்டு பாட்டில் லண்டன் பில்ஸ்னர் குடித்து விட்டு, டெல்லி தர்பாரில் தந்தூரி சிக்கனும் ரொட்டியும் சாப்பிட் டனர். மணி ஒன்பதே முக்கால் ஆகியிருந்தது. பார்ஸி பேக்கரிக்குப் பின்புறம் இருந்த சந்தில் ஒரு நான்கு மாடிக்



படிப்பகம்

www.padippakam.com

கட்டடம். முதல் தளத்தில் இருந்த அலுவலகங்கள் எல்லாம் மூடிக் கிடந்தன. முதல் மாடியில் இருந்து எல்லா அறைகளிலும் பெண்கள். கலர் கலரான சாட்டின் பாவாடையும் ஜம்பரும் மாத்திரம் போட்டுக் கொண்டு, வெறும் பாடி மாத்திரம் போட்டுக் கொண்டு, பாவாடையை முட்டுவரை திரைத்துக் கொண்டு, வெற்றிலை குதப்பிய நாக்கைக் கிளர்ச்சியூட்ட நீட்டி அசைத்துக் கொண்டு...

நிறையப் பூவும் மலிவு ரக செண்டும் அணிந்த பெண் ஓடி வந்து ஒரு கன்னத்தில் முத்தமிட்டுப் போனாள்... கண்ணாடிக் குப்பிகள் நொறுங்குவது போன்ற சிரிப்பொலி...

சலாவுதீன் குரலுக்கென்று ஒரு மரியாதை இருந்தது. நான்கு மாடிகளிலும் ஏறி நுழைந்து...

நெடுந்தூரம் நடந்தனர். நைட் சர்வீஸ் பஸ் ஒன்றாம் நம்பரில் ஏறித் தாதரில் இறங்கினர். மறுபடியும் பீர் குடிக்கலாம் என்றார் சலாவுதீன்.

அவருடன் இருப்பது மிகுந்த பாதுகாப்புத் தன்மை கொண்டதாக இருக்கும். பம்பாய்க்கென்று இரவுக்குத் தனி அழகுகள் இருக்கின்றன என்பார். உல்லாசமான உருதுக் கவிதைகள் சொல்வார். மென்மையும் கடுமையும் சேர்ந்த மனிதர்.

குடும்பத்தை ஊரில் விட்டு வைத்திருந்தார். வெளிநாட்டின் தோல் இறக்குமதிக் கம்பனிக்கு அவர் இந்திய ஏஜன்டாக இருந்தார். அவருக்குத் தாராவி மெஸ்ஸில் இருந்து வரும் இரவுச் சாப்பாட்டைப் பலமுறைபகிர்ந்து சாப்பிட்டு இருக்கிறான். அந்த மெஸ்ஸில் இருந்து வரும் ரம்ஸான் நோன்புக் கஞ்சி நன்றாக இருக்கும்.

நிறையப் பணம் இருக்கும்போதும் அவரிடம் போகலாம். பை சுத்தமாகக் காலியாகி இருக்கும் போதும் போகலாம். உற்சாகத்தில் மிதந்து கொண்டு இருக்கும்



படிப்பகம்

www.padippakam.com

போதும் போகலாம். தற்கொலை செய்யும் கணத்துக்கு முந்திய கணத்திலும் போகலாம்.

அவரிடமுள்ள எந்தப் பொருளையும், ‘இது நன்றாக இருக்கிறது!’ என்று சொல்லி விடக் கூடாது. ‘எடுத்துக் கொண்டு போ!’ என்பார். அது உபசாரத்துக்குச் சொல்வதல்ல.

மேலும் இரண்டு பாட்டில் பீர் குடித்துவிட்டு, அவர் தங்கியிருந்த அறைக்குப்போனபோது, தூக்கம் முற்றிலும் கலைந்து விட்டது பால்கனியில் பாய் போட்டுப் படுத்துக் கிடந்தபோது, நிலா முகத்துக்கு நேரே இருந்தது. விண் மீன்கள் மெல்லிசை போல் அதிர்ந்தன. அன்று நெடு நேரம் தூக்க மற்றுக் கிடந்தபோது, வாழ்க்கை இப்படி இலக்கற்றுப் போவதற்கான தடயங்கள் துலக்கம் கொண்டிருக்கவில்லை.

இன்று சலாவுதீனும் இல்லை. அவர் சென்னைக்கு வியாபாரத் தளத்தை மாற்றிக் கொண்டு போயாயிற்று.

யாருக்காகவும் எதுவும் காத்துக்கொண்டிருப்பதில்லை என்று தோன்றியது, நாராயணனுக்கு.

எல்லாமே தற்காலிகமான விஷயங்கள்தான்.

நேற்றை இன்றால் எப்படியும் ஜெயங்கொண்டு கைப் பற்ற முடியாது.

இப்படியே ஒரு நாள் எல்லாம் நேற்றாகிப் போகும். ஆகிக் கொண்டிருக்கிறது.

குட்டினோ சொல்வான்— “இன்னும் சில மாதங்கள் இருக்கின்றன ஓய்வு பெறுவதற்கு. அம்மா இந்த ஆண்டிலோ அடுத்த ஆண்டிலோ இறந்து விடலாம். தம்பி பெண்ணுக்கு இனியும் எத்தனை நாட்கள் பாடம் சொல்லித் தர முடியும்? அவள் பாடங்கள் எனக்குத் தெரியாதவையாக ஆகிவிடும். நான் தேவை யில்லாமல் தலையிடுவதாக இருக்கும்...அவளுக்கும் வேலை கிடைக்கும்...



படிப்பகம்

www.padippakam.com

பாய் ஃப்ரண்ட் கிடைப்பான்... கல்யாணம் செய்து கொண்டு போவாள்... புட்டா குட்டினோ மட்டும் தனிமை மென்று, முதுமை தின்று... பயமாக இருக்கிறது நாராயண்...'' இப்போது எல்லாம் பொருளற்றுப் போயாச்சு என்பான். ஊழியம் கூடச் சந்தேகிக்கப் படுகிறது. இன்னும் சின்னாட்களில் எங்கும் அவன் வேண்டாமற் போய் விடுவான் என்பான்.

மாட்டுங்காவில் மைசூர் மெஸ்ஸில் இரவுச் சாப் பாட்டுக்குச் சில கிழவர்கள் வருவார்கள். எட்டரை மணிக் கும் மேலே. அரையில் ஒரு ஒற்றை வேட்டியும் மேலே போர்த்தினாற் போன்று சுட்டிக்கரைத் துண்டுமாக.

''சாம்பார் ?''

''வேண்டாம் !''

''வத்தக்குழம்பு ?''

''வேண்டாம் !''

ரசம், பப்படம், மோர், ஊறுகாய்.

தினமும் மாலையில், கிங் சர்கிள் கார்டனில் சில நாற் காலிகளை ஆக்கிரமித்துக் கொண்டு காணக் கிடைப் பார்கள்.

ஒரு கிழவரைப் பிடித்து, உரையாடல் லயத்துக்கு இழுத்தபோது சொன்னார்—

''பையன் கிரீவ்ஸ் காட்டன்லே ஜோலியா இருக்கான். தாமசம் அந்தேரி வெஸ்ட்டிலே... ஒரே பொண்ணு முலண்டிலே இருக்கா... மாமி போய்ச் சேர்ந்தாச்சு... பென்ஷன் வருது... பாவுதாஜி ரோட்டிலே ஃபிளாட் இருக்கு... மூணு பிராம்மணப் பசங்க பேயிங் கெஸ்டா இருக்கா... போயிண்டிருக்கு...''

கிட்டத்தட்ட எல்லாக் கிழவர்களிடமும் இதே போல் ஒரு கதை இருந்தது.



படிப்பகம்

www.padippakam.com

இது ஒரு காத்திருப்பு. என்று வரும் என்று தெரியாத வண்டிக்காக...யாருமில்லாத ஸ்டேஷனில் காத்திருப்பு... பக்த சமாஜம், ராம நவமிக் கொண்டாட்டம், புராணப் பிரசங்கங்கள் எல்லாம் சாவுக்காகக் காத்திருப்பவர்களுக் காகவா ?

இதென்ன அர்த்தமற்ற வாழ்க்கை ?

கூட்டத்தோடு போனாலும் சரி, தனியாகப் போனாலும் சரி, எப்படியும் வாழ்க்கை அர்த்தமற்றது தானா ?

மனம் கலைந்து கொண்டே இருந்தது.

நடந்ததில் விக்டோரியா டெர்மினஸ் வந்து சேர்ந்தது கூட ஞாபகம் இல்லை.

தாணா லோகலில் கூட்டமில்லை. காற்று வரும் திசையை நோக்கியபடி, சன்னலோர இருக்கையில் அமர்ந்து, இடது கையை சன்னலில் ஊன்றி, முகத்துக்கு முட்டுக் கொடுத்து, வெளியே வேடிக்கை பார்க்க ஆரம்பித்தான்

அலுவலகச் சனங்கள் கூடடைந்து, ஆங்கிலச் செய்திக் குப் பின்,டி வி.யைச்சபித்தபடி உட்கார்ந்து இருப்பார்கள். மஜீத் பந்தர், கல்பா தேவி வியாபாரக் கூட்டம் வீடு போய்ச் சேர்ந்து சாப்பாட்டுத் தட்டத்தின் முன்னால் உட்கார்ந்திருப்பார்கள். விடுபட்டுப் போன அங்கொன் றும் இங்கொன்றுமான உதிரிகள்தான் இனிமேல் பயணம் செய்வது.

அதிரடியாக மூன்று பேர் வந்து உட்கார்ந்து சளசளக்க ஆரம்பித்தனர் இரண்டு பேர் பையன்கள். பதினெட்டு இருபது வயதுப் பிராயம். ஒருவர் மட்டும் முப்பத்திரண்டு வயதிருக்கும். மூவரும் அரைக்கால் சட்டை அணிந்து, முழுக்கைச் சட்டையை முட்டுக்கு மேல் சுருட்டி விட்டிருந்தனர். சயானில்இறங்கித் தாராவி



படிப்பகம்

www.padippakam.com

போவார்களாக இருக்கும். ஒருத்தன் கையில் சுருட்டிய வாக்கில் தினத்தந்தி பேப்பர் இருந்தது. வாங்கினானோ, இல்லை, யாரும் விட்டுப் போனதோ ?

"தம்பி, கொஞ்சம் பேப்பர் கொண்டா... பாத்துக்கிட்டுத் தாறேன்..." என்றான் நாராயணன்.

"அண்ணாச்சி திருநவேலியா ? பேச்சில தெரியி... இன்னாருங்கோ..."

"தம்பி திருநவேலியா?"

"திருநவேலிக்குப் பக்கத்திலேதான். நாங்குநேரி... வந்திருக்கேளா ?"

"நான் நாகர்கோயிலு...நாங்குநேரி தாண்டித்தான் போகணும் ."

"இங்க கம்பனியிலே வேலை பாக்கேளா ?"

"ஆமா... சேல்ஸ் மேனா இருக்கேன்..."

"எனக்கு ஒரு வேலை இருந்தாச் சொல்லுங்களேன்... பத்தாங் கிளாஸ் பாசாகி இருக்கேன். இங்க வந்து எட்டு மாசம் இருக்கும். அந்த அண்ணாச்சிதான் கூட்டியாந் தாரு...ரயில்வே கேன்டீன்லே கிளீனர் பாயா இருக்கேன்... முன்னூறு ரூவா சம்பளம். வாரம் ஒரு நாள் லீவு உண்டும்... ஊருக்கு ஓடீரலாம்னு இருக்கு..."

"ஊரிலே போயி என்ன செய்வே ?"

"அங்க போனா ஆடுதான் மேய்க்கணும். ஒரு வீம்புலதான் இங்க கெடக்கேன்..."

"சாப்பாடு எல்லாம் ஃப்ரீதானே ?"

"என்னத்தைச் சொல்லுகியோ நீங்க... கோளியும் எறச்சியுமா தாறான்? சுக்கா ரொட்டி, டால், எதாம் ஒரு சப்ஜி... எத்தனை நாளைக்குத் திங்க முடியும் ?



படிப்பகம்

www.padippakam.com

ஊரிலே காணத் துவையலும் கீரைத்தண்டுப் புளிக்கறியும் கெடச்சாக்கூடப் போரும்...''

''ராத்திரி சாப்பாடு ஆயாச்சா ?''

''ராத்திரி சாப்பாடு தர மாட்டான்... நாலு சப்பாத்தி பொதிஞ்சு வச்சிருக்கேன்.'' நிக்கர் பாக்கெட்டைத் தொட்டுக் காட்டினான்—

''பொங்காட்டுக்குப் போன பொறவு கடையிலே எட்டணாவுக்குச் சால்னாவோ மீன் கொளம்போ வாங்கினாப் போரும். சுள்ளுன்னு இருக்கும்...''

''ஊருக்கு எப்பம் போவே ?''

''பங்குனி மாசம் சித்தூரு கொடைக்குப் போணும்... ரூவா சேக்கணும்... லீவு தாறானோ என்னவோ ? அண்ணாச்சி போனாத்தான் போக முடியும்... ஊரிலே, கம்பனியிலே வேலைன்னாக்கும் சொல்லி வச்சிருக்காரு. ஒட்டல்லே மேசை தொடைக்காம்னா கொறைச்சல்லா ? அண்ணாச்சி! எங்கயாம் வேலை இருந்தா சொல்லுங் களேன். ப்யூன், அட்டெண்டர் வேலையா இருந்தாக் கூடப் போரும்...இந்த எச்சித் தட்டு களுவும் உத்தியோகம் வேண்டாம்...செறுக்கி விள்ளைய சமயத்திலே வாய்க்கு வந்ததைப் பேசுகானுவோ... மாஸ்டர் ஒரு நா அடிச்சுப் பிட்டான் பாத்துக்கிடும்... பின்னே அண்ணாச்சிக்கு மொகத்தைப் பாத்துப் பல்லைக் கடிச்சிக்கிட்டேன். இல்லேன்னா... விள்ளைக்கு விதைக் கொட்டையிலே ஒரு சவுண்டு வச்சுக் குடுத்திருப்பேன்...''

''ஓம் பேரென்ன டே ?''

''முருகேசன்... கோனாப்பிள்ளையோ பாத்துக் கிடுங்கோ...''

''சரி ! எதாம் இருந்தாச் சொல்லுகேன்...''

''பொங்காட்டு அட்ரஸ் தரட்டா ?''



படிப்பகம்

www.padippakam.com

''வேண்டாம். ரெயில்வே கேன்டீன்தானே! ரெண்டாம் மாடியிலே... ஏதாம் உண்டும்னா நானே வந்து சொல்லுகேன்.''

கணேஷிடம் சொல்லலாம். ஆனால் அதுவும் ஓட்டல் மாதிரிதான். வங்கி யொன்றின் தலைமை அலுவலகச் சாப்பாட்டுக் கூடம். நல்ல சாப்பாட்டுக்குக் குறைவிருக்காது.

கணேஷ் ஒரு பொதுத் தொண்டு போல, அதைச் செய்தார். ஊரில் இருந்து தெரிந்த பையன்கள் யார் வந்தாலும், ஒன்றிரண்டு மாதங்கள் மெஸ்ஸில் வேலை பார்த்துக் கொள்ளலாம். அங்கேயே சாப்பிட்டு விட்டுப் படுத்தும் கொள்ளலாம். தினம் ஏழு ரூபாய்ச் சம்பளம் கிடைக்கும் கைச் செலவுக்கு. இரண்டு மாதத்தில் வேறு வேலை பார்த்துப் போய்விட வேண்டும். ஆனால் கிட்டத்தட்ட கணேஷுக்கு உளவாளி போலவும் இருக்க வேண்டும். பிசகிப் போனால் போட்டு மிதித்து விடுவான்கள் எல்லோரும்.

இராமநாத ஐயர் செம்பூரில் தென்னிந்தியப் பள்ளிக்குத் தாளாளராக இருந்தார். அவரிடம் சொல்லிப் பார்க்கலாம். ப்யூன், மாலி என ஏதாவது வேலை காலியாக இருக்கலாம். ஆனால் பள்ளி வேலை போகவும், தாளாளர் வீட்டில் சில்லறை வேலைகள் செய்ய வேண்டியது இருக்கும். ரேஷன் வாங்க, பால் வாங்க, கோதுமை மாவு பொடிக்க, வீட்டை வலை அடித்துப் பெருக்கித் துப்புரவு செய்ய என...வயிற்றுக்கு வஞ்சனை செய்ய மாட்டார்கள். அவரிடம் கேட்டுப் பார்க்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டான்.

மாட்டுங்கா வந்து விட்டது.

முருகேசனிடம் சொல்லி விட்டு இறங்கிப் போனான். காற்று காதலுடன் கொஞ்சியது.



படிப்பகம்

www.padippakam.com

மாமாவும் மாமியும் உறங்க, குறைந்தது பதினோரு மணி ஆகும். அது ஒரு வசதி. சில வீடுகளில் டி. வி.யில் ஆங்கிலச் செய்தி முடிந்ததும் விளக்கணைத்து விடுவார்கள். அதற்குள் அறைக்குள் நுழைந்தாக வேண்டும் என்ற நேரக் கெடுபிடிகள் உண்டு. சற்று ஏறக்குறைய வீட்டுக்கு வந்தாலும், மாமி பொருட்படுத்துவது இல்லை.

பம்பாய், நிறைய மனிதர்களின் மனதைச் சற்று விரிவுபடுத்தியுள்ளது. இல்லாவிட்டால் பிராம்மணன் அல்லாதவருக்கு அறை அத்தனை லேசில் தந்துவிட மாட்டார்கள்.

அறைக்குப் போய் உடை மாற்றி, டைம்ஸ் ஆஃப் இந்தியாவை எடுத்துக் கொண்டு, கட்டிலில் சாய்ந்தான்.



படிப்பகம்

www.padippakam.com

# ஐந்து

நாலா நீர்ச் சாப்பாடு முடிய இரவு எட்டரை மணி ஆயிற்று. பந்தல் அலங்கோலமாகக் கிடந்தது. மூன்று கிடார அடுப்புகளில் இன்னும் இரண்டு அடுப்புக்களில் கங்குகள் கனன்றன, கொல்லன் உலை போல. காலியான அண்டா குண்டா, நிலவாய், செம்பு, வார்ப்பு, உருளி போணி எல்லாம் ஒரு மூலையில் தாறுமாறாகக் கிடந்தன.

கல்யாணச் சாப்பாடும் நாலா நீர்ச் சாப்பாடும் முடிந்து, ஊசிப் போகும் நிலையில் இருந்த அவியல், துவட்டல், பருப்பு, சாம்பார், எரிசேரி, புளிசேரி எல்லாம் சேர்த்துப் பெரிய ஈயம் பூசிய அண்டாவில் போட்டுக் கிடார அடுப்பின் அனப்பில் கனன்று கொண்டிருந்தது. நாளை ஏழா நீர்ச் சாப்பாட்டுக்கு உபயோகமாகும் என்றுள்ள மாங்காய் உப்பிலிடு, நாரத்தங்காய்ப் பச்சடி, மிளகாய்ப்பச்சடி, தயிர்க் கிச்சடி, என சின்னவாளிகளில் நிறைத்து, ஓலைப் பாய் போட்டு மூடி, காற்று பறத்தி விடாமல் இரண்டு மூன்று விறகுக் கட்டைகளைப் பாரமாக நீள வாக்கில் வைத்து, ஆக்குப் பெரையின் மூலையில் இருந்தன.

கலியாணத்துக்குத் தலைக்கா நாள் இரவில் வெட்டி மீந்து போன இளவன், சேனை, வெள்ளரி, அண்ணங்காய், சிங்கன்காய், கத்தரிக்காய் என ஒரு ஓலைப் பாயின் மீது குவியலாக.



படிப்பகம்

www.padippakam.com

அங்கும் இங்குமாய்ப் பாளையங்கோட்டன் பழத் தொலிகள், கிழிந்த வாழை இலைகள், பந்திப் பாய்கள், சமுக்காளங்கள், காலியாகிக் கழுவி அடுக்கப்பட்ட சில பாத்திரங்கள், கப்புகள், மூக்கன் வாளி, குழைச்சட்டுவம், இரும்புச் சட்டுவம், இரு பெரும் வார்ப்புகள், செம்பு, அகப்பைகள்...

ஒரு ஓரத்தில் விளம்பத் தோதாகக் கறிகள் பகிர்ந்து தூக்கி வைத்த இரண்டு பெஞ்சுகள் கழுவாமல் கறிகள் சிந்திய கலவை மணத்தில். ஒரு பெரிய, காது வைத்த, ஈயம் பூசிய போணியில் மீந்து போன வாசறு மிண்டான் புழுங்கலரிசிச் சோறு தண்ணீர் ஊற்றி வைக்கப்பட்டிருந் தது. நாளை காலை இந்தப் பழையதும் பழங்கறியும் சில பச்சடி கிச்சடிகளும் நிறைய மீதமிருந்த சம்பாரமும் செலவாகிப் போகும்.

பந்தலில் வேறொரு குருவியும் இல்லை.

நாராயணன், மேஜை அலங்காரத்துக்குப் பக்கத்தில், பெண்ணும் மாப்பிள்ளையும் உட்காரப் போட்டிருந்த செட்டியை நீக்கிப் போட்டு, அதில் சம்மணம் போட்டு உட்கார்ந்திருந்தான். ஸ்பீக்கர் செட்டுக்காரன் கழற்றா மல் விட்டுப் போன மூன்று ட்யூப் லைட்டுகளில் ஒனறு எரியவில்லை. உரக்குண்டில் குவிக்கப் பட்டிருந்த எச்சில் இலை அம்பாரங்களில் நாய்கள் முனகும் ஓசை. குத்தா லம் வீட்டுக்குப் போய்விட்டு வருவதாகச் சொல்லிப் போனவன் வருவானோ இல்லையோ?

இரண்டு நாட்களாகக் கண் விழித்த அசதி நாராயண னுக்கு. அதுவும் நேற்று இரவு தூங்கவே இல்லை. அங்கு மிங்குமாக நடந்து பந்தி விளம்பி, இடுப்பும் முதுகும் வலித்தது. உடம்பு மென்மைப் பட்டுப் போனதன் அடையாளங்கள்.

பெரிய மாமா இருந்து நடத்திய மூன்றாம் தலை முறையின் முதல் கல்யாணம். எட்டுச் செம்பு அரிசி



படிப்பகம்

www.padippakam.com

போயிருந்தது. காமாட்சியை உள்ளூரிலேயே கட்டிக் கொடுத்திருந்ததால், மாமாவுக்குக் கல்யாணத்தைத்தனது வீட்டிலேயே நடத்த வசதியாக இருந்தது. மாமா சிக்கன மின்றிச் செலவு செய்ததைக் குமாரசாமி அவ்வப்போது புறுபுறுத்துக் காட்டினான்.

மேலெல்லாம் கசகச வென்றிருந்தது. ஆற்றில் போய்க் குளித்து விட்டு வந்தால், விடியும் வரை தூங்கலாம். இனி மேல் காலையில் பொங்கலிட்டு, காப்பு அறுத்து, நிதான மாக ஏழாநீர்ச் சாப்பாடு தயார் செய்யலாம். அதற்கும் ஒரு செம்பு அரிசி ஆகும். சாத்தாங்கோயில் படிப்புரையில் படுக்கப் போயிருந்த வைப்புக்கார ஐயர் பார்த்துக் கொள்வார்.

பந்தல் போட்டிருந்த களம் வீட்டை அடுத்தே இருந் தாலும், இரவு யாராவது ஆள் வேண்டும். பாத்திர பண்டங்கள் நிறையக் கிடந்தன. பால்ராஜ் வருவான். சொல்லி விட்டுப் போகலாம் ஆற்றுக்கு என்றிருந்தபோது மாமா வந்தார்.

''நாராயணா, இஞ்சயா இருக்க? எங்க காணல்லி யேன்னு பாத்தேன். ராத்திரி இஞ்ச யாராம் படுக்கணும் டே... தங்கப்பனைக் கூட வரச் சொல்லுகேன்...''

''குத்தாலம் வாறேன்னுட்டுப் போனான்...''

''அவன் வந்தாலும் என்ன பிரயோஜனம்? தண்ணியைப் போட்டுக்கிட்டு பிரேதம் போல உறங்கு வான்... சவம்...''

''மாமா, கொஞ்ச நேரம் இருக்கேளா? நான் போயி, மேலு கழுவிட்டு, வீட்டுக்குப் போயி, துணி மாத்திக்கிட்டு வந்திருகேன்...''

''சரி... வீட்ல போய் பேட்ரி லைட் வேணும்னா எடுத்துக்கோ...''





படிப்பகம்

www.padippakam.com

தென்னங்குழி மடைக்குப் போய், கால் கழுவி, மேல் கழுவி, வீட்டுக்குப் போகும்போது, விருந்தாளிகள் திண்ணையிலும் படிப்புரையிலும் படுத்து நித்திரை பயில ஆரம்பித்திருந்தனர். கொடியில் காய்ந்து மொறமொறத் துக் கிடந்த சாரத்தை உருவிக் கட்டி, துண்டொன்றைத் தோளில் போட்டு, மறுபடியும் பந்தலுக்கு வந்தான். பெரிய மாமா குத்தாலத்துடன் உரையாடலில் இருந்தார்.

''மாமா, வீட்டுக்குப் போங்கோ... நான் இங்கதான் படுக்கப் போறேன்...'' என்றான்.

''காலம்பற கொஞ்சம் வெறையலு இருக்கும். மூட்டுக்கு பொதப்பு என்னமாம் எடுத்துக்கோ...''

''சரி மாமா... நீங்க வீட்டுக்குப் போங்கோ...''

காமணத்தை ஒதுங்க வைத்துப் பால்ராஜ் தூத்துப் போட்டிருந்தான். ஒருசமுக்காளத்தைத் தலைக்குவைக்கும் தோதில் மடித்து, ஒரு பந்திப் பாயை இரண்டாக வீதி காணும் விதத்தில் மடித்து, துண்டை அதன் மேல் விரித் துப் படுத்தான். வீட்டுக்குப் போய் ஒரு பெட்ஷீட் எடுத்து வந்தாலும் நல்லதுதான். அல்லது யாராவது வந்தால் சொல்லி அனுப்பலாம். குத்தாலம் செட்டியில் காலாட்டிக் கொண்டு உட்கார்ந்து பீடி பற்ற வைத்து இழுத்தான்.

குத்தாலத்தின் பதினைந்து நாள் வறட்டுத் தாடியைப் பார்த்தவுடன், தானும் தாடி வைத்துக் கொள்ளலாம் என்று நினைத்தான், நாராயணன். அடர்த்தியான கரு கருவென்ற குறுந்தாடியின் ஊடே சில வெள்ளைமயிர்கள். அலுவலக உடை தவிர மற்ற சமயங்களில் ஒரு காவி வேட்டியும் காவித் துண்டும்... நான் உங்களுடன் சம்பந்தம் உடையவன் அல்ல எனும் விலகல் உணர்த்த. ஒரு வேளை தனக்குக் கல்யாணம் ஆகாமற் போனதற்கு அது ஒரு அர்த்தத்தையும், அத்துடன் மலிவானதோர் கம்பீரத்தையும் தரலாம்.



படிப்பகம்

www.padippakam.com

காலத்தில் கல்யாணம் ஆகியிருந்தால், செல்வத்தின் வயதில் ஒரு மகள் இருப்பாள். எந்த விதக் கூச்சமும் இன்றி, முதலிரவுக்கான ஏற்பாடுகள் நடக்கும் போது மங்களாவில் அமர்ந்து தினமணி படிக்கலாம். இப்போது அதைச் செய்ய முடியாது. சூழ்நிலைக்கு ஒட்டாத, நீட்டிக் கொண்டிருக்கும் கல்லாக, மற்றவர்க்கு நூதனத்தை ஏற்படுத்தும் தனது இருப்பு. தாடி, காவி, சைவ சித்தாந்தச் சாறு பூசிய பேச்சு... இந்தத் துன்புறுத்தும் நூதனப் பார்வைகளைத் தவிர்க்கக் கூடும்.

சிரிப்பு வந்தது நாராயணனுக்கு. இன்னும் ஒரு ஏழெட்டு ஆண்டுகள் இது போலத் தோன்றக் கூடும். தனக்கு வர வேண்டிய ஒரு சம்பத்து போய் விட்டது போன்ற ஏங்கல்... பிறகு தானும் ஒரு மேஜை நாற்காலி போல, எந்த வித எதிர் வினையும் காட்டாத ஜடமாகப் புலப்பட ஆரம்பித்து விடக் கூடும்.

எட்டு ஆண்டுகளுக்கு முன்பு, ராமலிங்கத்தின் தங்கை கல்யாணத்துக்காக, ஐந்து நாட்கள் முன்பு வேலூருக்குப் போய், அவனுடனே தங்கி இருந்தது நினைவுக்கு வந்தது.

கல்யாணம் எல்லாம் முடிந்து, பிற்பகல் பள்ளி கொண்டாவின் பக்கம் இருந்த வேறொரு நண்பன் வீட்டுக்குப் போய் வர நினைத்தான். அன்றிரவு அங்கேயே தங்கச் சொன்னார்கள். ராமலிங்கம் தேடுவான் என்று இரவே திரும்பிக் கொண்டிருந்தான். பஸ் கூண்டுக்குப் போகிறதென்று, பஸ்நிலையத்துக்கு அரை கிலோ மீட்டர் முன்பே இருட்டில் இறக்கி விட்டு விட்டான்.

இறங்கி ராமலிங்கம் வீட்டுக்கு நடந்த போது, ஒரு பெண் குரல்.

''சார்... கொஞ்சம் நில்லுங்கோ...''

திரும்பிப் பார்த்தான். வெளிச்சத்தில் புலப்பட்ட இருபத்தெட்டு அல்லது முப்பது வயதுப் பெண் முகம்.



படிப்பகம்

www.padippakam.com

''பாலம் தாண்டறது வரை நானும் கூட வரேன்...''

''ஏன் ? இந்த ஏரியா மோசமானதா ?''

''பயம் ஒண்ணும் இல்லே... சில சமயம் காலிப் பசங்க ஏதாவது சொல்லுவானுங்க...''

''அப்புறம் என்னத்துக்கு ஒன்பதரை மணிக்கு மேல தனியா...?''

''கூட வேல பாக்குற ஃபிரண்டு மாரேஜ் ரிசப்ஷன்... போகாமலும் முடியாது... லேட்டாயிடுச்சு...''

''துணைக்கு யாரையாம் கூட்டிக்கிட்டுப் போயிருக்கலாமில்லே...''

''துணைக்கு இனிமேத்தாங்க ஆள் வரணும்...'' என்று சொல்லி விட்டுச் சிரித்தாள்.

மறுபடியும் விளக்கு வெளிச்சத்தில் அந்த முகத்தைத் திரும்பிப் பார்த்தான். இளமையின் பொலிவுகள் பூப்பது நின்று போய் விட்டது. சொல்லில் துளிர்த்த கைப்பின் ரேகை இனி நாளாக ஆக இறுகி இறுகிக் காய்ப்பாகக் குறுக்கே ஓடும்.

இந்தப் பெண், பால் அனுபவம் ஏற்கனவே அடைந்திருக்கக் கூடும். அல்லது அடையாமலும் இருக்கலாம். இனிமேல் எய்தக் கூடும். எய்தாமலேயே நரைத்து மூப்பெய்தி இறந்தும் போகலாம்.

ஆணுக்குண்டான சில சின்ன விடுதலைகள் கூட இல்லாத பெண் பிறப்பு.

மனம் நிலை கொள்ளாமல் தத்தளிக்க ஆரம்பித்தது. வழியில் அவள் வீடு வந்தது.

வாசலில் நின்றது தாய்க் கோழியாக இருக்கும். ஊருக்குப் புறப்படு முன் வீட்டுக்கு வரச் சொன்னாள்.

மாப்பிள்ளைப் பையன் குளித்து, உடை மாற்றி, கழுத்தில் மாலை அணிந்து நின்று கொண்டிருந்தான்.



படிப்பகம்

www.padippakam.com

தலை நிறையப் பூச்சூடி, பாலியெஸ்டர் சாரி உடுத்து, கழுத்தில் உறுத்திய மாலையின் முடிச்சைச் சரி செய்து கொண்டு, மணப் பெண்ணும் வந்து நின்றாள்.

மறுபடியும் ஒரு கால் தொட்டு வணங்கல்...

அப்போது கூடப் புகைப்படங்கள் எடுத்துக் கொண்டிருந்தனர். கலைசலாகச் சில நெருங்கிய உறவினர்கள் மட்டும்— எப்போது விழுந்து தூங்குவோம் என்ற நிலையில். ராமலிங்கத்தைக் காணவில்லை.

எங்கு நிற்பது, எங்கு அமருவது என்று தோன்றாமல், நாராயணன் அலைக்கழிந்து நின்றான். பள்ளி கொண்டாவில் இராத் தங்கி விட்டுக் காலையில் வந்திருக்கலாம் என்று தோன்றியது. கூட நடந்து வந்த அந்தப் பெண் தூங்க ஆரம்பித்திருப்பாளா என்று தெரியவில்லை.

விரிக்க ஒரு பெட்ஷீட்டும், தலையணையும், மூட ஒரு போர்வையும் எடுத்துக் கொண்டு, மொட்டை மாடிக்குப் போனான். அன்று அங்கு படுக்க யாருமே இல்லை.

ஈரம் வறண்ட மெல்லிய காற்று. வளர்பிறையின் கவர்ச்சியற்ற வடிவம். கொத்திப் பறித்த வயல் போல் மேகப் பாத்திகள். தூர இடைவெளிகளில் அக்கறையற்று மினுங்கிய மீன்கள்.

மனதின் லயம் பிறழ்ந்து விட்டது போல்... நிலை கொள்ளாமற் போகும் வாழ்க்கைக்கு ஏற்கனவே அச்சாரம் கொடுத்து விட்டது போல்... உடலில் நிறைய அசதி இருந்தாலும், உறக்கம் வரவில்லை.

நீண்ட நாட்கள் அலைக்கழித்த அவசம்.

''என்னா, ஒரே யோசனையா இருக்கு?''

பீடியை அணைத்துச் சுண்டி விட்டுக் குத்தாலம் கேட்டான்.

''ஒண்ணுமில்லே... பழைய நெனப்புத்தான்...''



படிப்பகம்

www.padippakam.com

''என்னத்தைப் பழைய நெனப்பு? நீயுந் திரிவே சன்னியாசி மாரி... காலா காலத்திலே கல்யாணம் செய்யதை விட்டுப் போட்டு...''

''ஏன் ? இப்பம் என்ன கொறஞ்சு போச்சு ?''

''ஒண்ணுங் கொறையல்லே... என்னத்துக்குடே பூசி மொளுகுகே... ஒனக்க மாமா ரொம்பக் கரிசனத்தோட பேசுகாரு... ஒரு பொண்ணைப் பார்த்துக் கெட்டி வைக்கத் துப்பில்லே...''

''இனி அதெல்லாம் அவசியம்னு நினைக்கையா ?''

''ஏன் ? என்ன உலகத்திலே இல்லாத சங்கதியா ? முதப் பொண்டாட்டி செத்துப் போனா, நாப்பத்தஞ்சு வயசிலே ரெண்டாந் தரம் கெட்டுகதில்லையா ?''

''இனிமே அளிச்சாம் புளிச்சாம் விளையாட்டு விளையாடச் சொல்லுகே.''

''இப்பம் ஒண்ணும் கெட்டுப் போயிரல்லே... நம்ம பண்டாரத்தை ஓர்மை இருக்கா ஒனக்கு ?''

''யாரு ? தாட்டக் கொரங்கு பண்டாரத்தையா சொல்லுகே ?''

''அவந்தான். எட்டாங் கிளாசிலே மூணு வருசம் கெடந்து, பொறவு ஒம்பதிலே நம்ம கூடப் படிச்சானே, அவந்தான் ... அவனுக்கு ஒரு பொண்ணு இருக்கு பாத்துக்கோ...''

''சும்ம வாய வச்சுக்கிட்டு கெடப்பா...''

''சொல்லுகது முழுசும் கேளு நீ... அவனுக்க ஆத்தா சாவக் கெடந்தான்னு பயலுக்கு இருவத்தோரு வயசிலே கலியாணம் களிச்சு வச்சிட்டாள்ளா ? அடுத்த வருசம் பொம்பளைப் பிள்ளையும் பெத்தாச்சு... ரெண்டு வருசத்துக்கு மிந்தி மகளை மாத்தால்லே கெட்டிக் குடுத்தான். மருமகனுக்கு கலக்டர் ஆபீஸ்லே வேலை. ஒரு ரெண்டு மாசம் கூட இருந்திருக்கும்... குட்டி ஓடியாந்திட்டு...''



படிப்பகம்

www.padippakam.com

''ஏன் ? மாமியாக்காரி பொல்லாதவளா ?''

''அதெல்லாம் ஒண்ணும் இல்லப்பா... பயலுக்கு கல்யாணப் பண்டம் இல்லே...''

''என்னது ?''

''என்னதா ? மாடு கடிச்சிற்று... குட்டி பொறுத்துப் பாத்து. சொல்லாமப் பறையாம, நாகரம்மன் கோயிலுக்குப் போயி பாலூத்திக்கிட்டு வாறன்னுட்டு வீட்டுக்கு வந்திட்டு...''

''டாக்டர் கிட்ட காட்ட வேண்டியதுதானே!''

''எல்லாம் காட்டிப் பாத்தாச்சு... மத்தபடி பயலுக் கிட்டே ஒரு கொறவும் கிடையாதாம்... பாத்தா பட்டாளத்துக்காரன் மாதிரி இருப்பான்... ஒத்தைக்கு ஒரு மகன்... பெரிய வீடு... சாப்பாட்டுக்கு நெல்லும் தேங்காயும் உண்டும். சர்க்கார் சோலி... மாமியாக்காரி வந்து கண்ணீர் விட்டுக் கெரவுனாளாம்... 'வா மக்கா நீ... வீட்டுக்கு வா... அவுனுக்குத் திருநாறு போட்டு லெச்சை எளுதிக் கெட்டுனா சரியாகும்னு மூளகு மூட்டிலே ராதாகிருஷ்ண குறுப்புன்னு... ஒரு மந்திரவாதி, அவுரு சொல்லுகாரு... நீ வீட்டுக்கு வா மக்கா!'ன்னு... குட்டி நிமிந்திட்டு, 'நா இனி அவுருக்குப் பொண்டாட்டி இல்லே, அவுரு எனக்கு மாப்பிள்ளை இல்லே!'ன்னு...''

''பொறவு ?''

''பொறவு என்னா பொறவு... எல்லாம் ஒதுக்கி, ஔிப்பிச்சு விட்டாச்சு... ரெண்டு வருசமாச்சு... பண்டாரந்தான் எங்கிட்டே சொன்னாம் பாத்துக்கோ... நம்ம நாராயணன் கிட்டே வசமாக் கேட்டுப் பாருன்னு.''

''.........''

''என்ன யோசிக்கே ? பிள்ளை கட்டு முட்டுன்னு பாக்க நல்லாருக்கும். வயசும் இருவத்தி மூணோ



படிப்பகம்

www.padippakam.com

இருவத்தி நாலோதான் இருக்கும்... அம்புடு உருப்பிடியும் அப்பிடியேதான் இருக்கு... ஆத்தாளுக்கு வயலு முக்காக் கோட்டை விதைப்பாடு அதுக்குப் பேரிலே உண்டும்... பத்தாங் கிளாஸ் வரை படிச்சிருக்கு... பம்பாயோ டில்லியோ எந்த ஊருன்னாலும் கூட வரும்... குடும் பத்துக்கு தோதான சுவாபம்...''

''... ... ...''

''நீ பொண்ணைப்பார்க்கணும்னா சொல்லு. யாரோ சொன்னாளாம் - நாகரு குத்தம் இருக்கு... பதினோரு நாயித்துக் கௌமை நாகரம்மன் கோயில்லே நாகருக்குப் பாலு ஊத்தணும்னு— நாளைக் களிச்சு காலம்பற கோயிலுக்குப் போவும்... மூணாம் பேருக்குத் தெரியாம பொண்ணைப் பாத்திருவோம்...''

''எல்லாம் வெவரமா யோசிச்சு வச்சிருக்கே...''

''இந்தப் பரியாசக் கிடுவிடி எல்லாம் வேண்டாம். பார்க்கலாம்னா சொல்லு...பொண்ணு புடிச்சிற்றுன்னா மாமா கிட்டே நான் பேசுகேன்...''

''அப்பம் பொண்ணு புடிச்சிற்றுன்னா சட்டுப் புட்டுன்னு கலியாணத்தைக் களிச்சு கையோட கூட்டீட்டுப் போயிரலாம்னு சொல்லுகே...''

''ஆமா... அதுக்கு மேல என்ன ஆலோசனை? சிம்பிளா முடிச்சிருவோம்.''

''குத்தாலம், நமக்கு நாப்பத்தஞ்சு வயசாகு. பழைய காலம் போல எம்பதும் தொண்ணூறும் வயசு யாரும் இருக்கப் போறதில்லே. கூடிப்போனா இன்னும் பத்துப் பன்னிரண்டு வருசம். என்னத்துக்கு இந்தச் சள்ளை... உம் மகளுக்குப் பதினேழு வயசு இருக்குமா? பயலுக்குப் பதினஞ்சு இருக்கும். நாலஞ்சு வருசத்திலே நீயும் தாத்தா ஆயிருவே. பொறுப்புத் தீந்திரும்... நான் இனிமே கலியாணம் களிச்சு பிள்ளை பெறணும். என்னத்துக் குப்பா இந்த உவத்திரவம்? யாரு அளுகா இப்பம் கலியாணமும் காடாத்தும் இல்லேன்னுட்டு...''



படிப்பகம்

www.padippakam.com

"ஆமா... இப்பிடியே அங்கின இங்கின மேஞ்சுக்கிட்டு காலத்தை ஓட்டிரலாம்னு பாக்கே...உங்கிட்டே போயி இவ்வளவு நேரம் ஆவியை விட்டேன் பாரு..."

குத்தாலம் இன்னுமொரு பீடியைப் பற்ற வைத்துக் கொண்டான்.

"சரி, அதை விடு... ஒரு நாளைக்கு சந்தவிளைக்குப் போயி மாலைப்பயினி குடிக்கணும். கூட்டீட்டுப் போ..."

"ஒரு மண்ணாங்கட்டி பயினியும் நீ குடிக்காண்டாம். பொறப்பிட்டு பம்பாய்க்குப் போய்ச் சேரு..."

நாராயணனுக்குச் சிரிப்பு வந்தது.

குத்தாலம் ஒரு சமுக்காளத்தைத் தலைக்கு மடித்து வைத்து, பந்திப் பாயை விரித்து, துண்டால் உதறிப் படுத்துக் கொண்டான். சற்றுநேரத்தில் ரைஸ்மில் ஓடுவது போல் குறட்டைச் சத்தம் கேட்க ஆரம்பித்தது.

அதிகாலை நாலரை மணிக்கெல்லாம் முழிப்பு வந்து விட்டது. குத்தாலம் கால்களுக்கு இடையில் கைகளை ஆப்புப் போலச் செருகி நல்ல உறக்கத்தில் இருந்தான். தங்கப்பன் எப்போது வந்து படுத்தான் என்றே தெரியவில்லை. உடுத்த முண்டை உரிந்து காலோடு தலைவரை மூடிச்சாக்கினுள் கட்டியபெரும்பன்றி போலக் கிடந்தான்.

உறக்க க்ஷீணம் மாறி விட்டது. மனம் சற்றுத் தெளிந்தாற் போலிருந்தது. ஐந்து மணிக்கு நூல் நிலையத்தில் பாட்டுப் போட்டார்கள். சீர்காழியின் "விநாயகனே வினை தீர்ப்பவனே..."

எழுந்து, துவர்த்தைப் போர்த்துக் கொண்டு, வெளியே நடந்தான். தெருக் கோடியில் கண்ணப்பன் வீட்டு வாசல் தெளிக்கும் ஓசையும் கண்ணப்பன் வீட்டுக்காரியின் சாயை உருவமும்.

வானம் சற்று வெளிவாங்கியிருந்தது. விடிவெள்ளியின் முனைப்பான பிரகாசம். லேசாகக் குளிர்ந்தது.



படிப்பகம்

www.padippakam.com

ஆற்றை நோக்கி நடக்க ஆரம்பித்தான். ஊரைக் கவிந்ததுபோல் தென்னை மரங்கள். எல்லாம் ஏழெட்டு ஆண்டுகள் முன்பு வைத்த மரங்கள். இளங்காற்றில் சலசலத்த ஓலைகள்.

ஆறு அவசரமில்லாமல் ஓடிக் கொண்டிருந்தது. கால் கழுவிவிட்டு, வேப்பங்குச்சி ஒன்றை ஒடித்துப் பல் துலக்கினான். சாவகாசமாகத் தென்னை ஈர்க்கு வகுந்து நாக்கு வழித்தான். வேப்பங் குச்சியின் நைந்த கசப்பு தொண்டையில் தெரிந்தது.

ரோட்டின் விலக்கு வரை நடந்தால் ஒரு டீ குடித்து விட்டுத் திரும்பலாம். சில்லறை எடுத்துக் கொள்ள வில்லை. தெரிந்த காப்பிக் கடைக்காரன் என்றாலும், தரை வெளுக்கு முன் போய் நின்று கடன் சொல்ல முடியாது.

திரும்பி நடந்து களத்துக்குப் போய், காமணத்தினுள் நுழைந்தபோது, குத்தாலம் இன்னும் தூங்கிக் கொண்டிருந்தான். தங்கப்பனைக் காணோம். எழுந்து வீட்டுக்குப் போய்விட்டான் போலும். மணி ஆறே கால் ஆகியிருந்தது. டீ குடிக்க வேண்டுமானால், மாமா வீட்டுக்குப் போக வேண்டும். எழுந்திருந்திருப்பார்கள் பெண்டுகள் இந்நேரம். என்றாலும் நேரம் விடியுமுன்னே போய் நிற்க வேண்டும். காமணத்தை ஒரு முறை சுற்றி வந்தான். கிடாரஅடுப்பில் கனன்று கொண்டிருந்த பழங்கறியைச் சிரட்டைத் தவியால் கிண்டிக்கொடுத்தான். தொழுவத்துக்கு வந்து மாடுகளைப் பார்த்தான். சில பொருட்படுத்தாமல் கிடந்தன. ஒரு கிடாவு காதுகளை நிமிர்த்திக் கொண்டு முகஞ் சுளித்து மூச்சு விட்டது. வண்டிக் காளை ஒன்று நட்பற்ற பாவத்தில் முறைத்தது.

தொழுவத்தை விட்டு வெளியே வந்து செட்டியில் அமர்ந்து யோசனையில் இருந்தபோது குமாரசாமி வந்தான்.



படிப்பகம்

www.padippakam.com

''ராத்திரி நீ இங்கயா படுத்திருந்தே? நான் காணல்லியேன்னு பாத்தேன்...''

எப்போதும் போல பாலியெஸ்டர் அன்பு வழியும் பேச்சு. இன்னும் முப்பதாண்டுகள் ஆனாலும் இப்படியே தான் இருப்பான் போலும்.

''குத்தாலம், எந்தி...நேரமாச்சுல்லா...''

குத்தாலம் அசைந்து கொண்டே சொன்னான்—

''விடிஞ்சால உம் மூஞ்சில முளிச்சா வெளங்குனாப்பிலேதான்...நீ போ எந்திரிக்கேன்...''

''பின்னே யாரு முகத்திலே முளிப்பே? சொல்லு, கூட்டீட்டு வாறேன்.''

''நீ போடே இங்கேருந்து... காலம்பற சொர்ணா வாத...''

''நீ எந்தி...இல்லாட்டா உருட்டித் தள்ளுவேன்...''

குத்தாலம் விட்டில் போலத் துள்ளி எழுந்து, மூலையைப் பார்த்து நின்று சாரத்தை உதறிக் கட்டினான். இரண்டு கைகளையும் விரித்துப் பார்த்து விட்டு, கிழக்கு நோக்கிக் கும்பிட்டு விட்டு, விரித்து உறங்கியவற்றை மடிக்க ஆரம்பித்தான்.

''நீ என்னா காலம்பறயே முளிச்சாச்சா...'' என்று நாராயணனைப் பார்த்துக் கேட்டான்.

''அஞ்சு மணிக்கே எந்திரிச்சாச்சு...ஆத்துக்குப் போயி, பல்லு தேச்சு, ரோட்டு வெலக்கு வரை நடந்துக்கிட்டு வந்து இருக்கேன்...''

''தேயிலை குடிச்சியா?''

''சில்லறை கொண்டு போல்ல...காலம்பற கடன் சொல்லாண்டாம்னு பேசாம வந்திட்டேன்...''



படிப்பகம்

www.padippakam.com

''நீ இன்னும தேயிலை குடிக்கல்லியா? அம்மா அப்பதயே கேட்டா? நாராயணன் முளிக்கல்லியான்னு?''—குமாரசாமி.

''சரி! நான் வீட்டுக்குப் போயிட்டு பொறவு வாறேன்.''

குத்தாலத்துடன் நாராயணனும் நடந்தான்.

வாசலில் பெரிய கோலம் போடப் பட்டிருந்தது. பெரிய கோலங்களைப் பொறுமையாகக் கல்யாணிதான் போடுவாள். காமாட்சிக்கு நேரே இளையவள். தாமரைக் குண்டில் கட்டிக் கொடுத்திருந்தது. கொஞ்சம் சுபாவமான பெண். வீட்டினுள் நுழைந்த போது மாமா ஈஸிசேரில் உட்கார்ந்து வெற்றிலை போட்டுக் கொண்டு இருந்தார். விடிந்த பின் மூன்றாம் தரத்து வெற்றிலையாக இருக்கும். கல்யாணி எதிர்ப்பட்டாள்.

''அத்தான், இப்பத்தான் வாறையா? தேயிலை குடிச்சிருக்க மாட்டயே!''

''இல்லம்மா...நீ நம்மள எங்க கெவினிக்கே?''

''இரி...கொண்டுட்டு வாறன்...''

கல்யாணிக்கு முப்பத்தைந்து வயது ஆகியிருக்கும். மூன்று பிள்ளைகள் பெற்றிருந்தாலும் இன்னும் செப்புப் போல இருந்தாள். தனக்கெனத் தனியாகப் பூத்தது போல் எப்போதும் ஒரு மலர்ச்சி. மூத்த மகள் சமையும் பிராயத்தில் இருந்தாள்.

தம்ளரை நீட்டியபடியே, ''ராத்திரி களத்திலேயா படுத்திருந்தே?''

''ஆமா...''

''காலம்பற வாசத் தொளிக்க சாணாங்கி எடுக்க தொளுத்துக்கு வந்தேன். காணல்ல...!''

''சும்ம, அப்பிடியே நடந்துக்கிட்டு வந்தேன்...''



படிப்பகம்

www.padippakam.com

''உறக்கம் வரல்லியாக்கும்?''

''அதெல்லாம் ஒண்ணுமில்லே!''

''குத்தாலண்ணன் கூட இருந்தா விடிய விடியப் பேசிட்டுத்தான இருந்திருப்பியோ...''

சிரித்துக் கொண்டு டீயை உறிஞ்ச ஆரம்பித்தான். பாயசம் போலப் பஞ்சாரை போட்டிருந்தாள். பெரிய டம்ளர் வேறு.

இனி என்ன செய்யலாம்? குளிக்கப் போகலாம். குளித்து விட்டு வந்து, நேற்று மீந்து போய்த் தண்ணீர் விட்டு வைத்திருந்த சோறோ அல்லது நேற்றுக் காலை அவித்துச் செலவாகாத இட்லி பிருத்து தாளித்ததையோ அல்லது பெரிய சைஸ் கோதுமை ரவை கிண்டியதையோ தின்னலாம்.

எட்டரை மணிக்குத்தான் தினமலர் வரும். வேறு படிக்கும்படியான புத்தகங்கள் இல்லை. நுங்குக் கூந்தல் போல் அட்டை கிழிந்த வார, மாத நாவல்கள். அட்டை இருந்தவற்றிலெல்லாம் பெண்களுக்கு யாரோ மீசை வரைந்து வைத்திருந்தார்கள்.

''என்னம்மா, புதுப் பொண்ணு! இப்பத்தான் முளிச்சியாக்கும்?'' என்ற கேலிக் குரல் கேட்டு, முற்றத்தைத் திரும்பிப் பார்த்தான். செல்லம் கூச்சத்தில் சிரித்தபடி நின்றாள். இரவின் அலங்காரங்கள் குலைந்து, பிச்சிப் பூக்கட்டுச் சிவந்து...

''சரி...போயி பல்லு தேச்சுக்கிட்டு, காப்பி குடி... மாப்பிள்ளை இன்னும் முளிக்கல்லியாக்கும்?''

சற்று நேரத்தில், மாப்பிள்ளைப் பையன் எழுந்து வந்தான். சட்டை மாட்டி இருந்தான். தோளில் புதிய டர்க்கித் துண்டொன்று கிடந்தது. கையில் பிரஷ்ஷும் பிதுக்கிய நீல நிற பேஸ்ட்டும்....



படிப்பகம்

www.padippakam.com

உறவுக்காரப் பெண்ணொருத்தி, வீட்டை ஒதுங்க வைத்துத் தூக்க ஆரம்பித்தாள். செல்லத்தின் தம்பி எங்கிருந்தோ முளைத்தவன் போலத் தோன்றினான். கல்யாணியின் கடைக்குட்டி மகன் அம்மாவைத் தேடி அலைந்தான்,

''ஆத்துக்குப் போயி குளிச்சுக்கிட்டு வந்து காலம்பற காப்பி மேளத்துக்கு வழியைப் பாருங்கோ...'' என்று அத்தை யாரிடமோ சொல்லிக் கொண்டிருந்தாள்.

மாப்பிள்ளையும் பெண்ணும் பெண்டுகளும் பொடிசுகளும் ஆற்றுக்குப் போய்க் குளித்து வந்து பொங்கலிட்ட பின்புதான் காப்பு அறுக்க வேண்டும். மதியச் சாப்பாட்டுடன் ஏழா நீர்ச் சாப்பாடு முடியும். மறுநாள் மாப்பிள்ளை வீட்டில் மறுவீடு வைத்திருந்தனர். ஒன்பதுக்கு மேல் பத்தரைக்ககம்.

பல் தேய்த்து முகம் கழுவி விட்டு வந்து நாற்காலியில் அமர்ந்த மாப்பிள்ளையிடம் ஒரு உரையாடலைத் துவங்கும் பொறுப்பு நாராயணனுக்கு இருந்தது.

''எத்தனை நாள் லீவு போட்டிருக்கியோ?''

''முந்தா நாள்லே இருந்து ஏழு நாள்... வாற செவ்வாக் கிழமை போகணும்...''

''ஏன் லீவு இல்லியா?''

''லீவு இருக்கு...சூப்பனண்டு இதுக்கே மூக்கால அழுகாரு...வேலையும் நிறைய இருக்கு...''

''சர்க்காரு ஜோலி என்னைக்காவது செய்து முடிக்க முடியுமா? கூடப் பத்து நாள் லீவு போட்டுக்கிட்டு ஊட்டி கொடைக்கானல்னு போயிட்டு வராண்டாமா?''

மாமா லேசாகச் சிரித்தார்.

எதற்கோ வந்த காமாட்சி புது மருமகன் இருப்பதைப் பார்த்து ஒரு தவளைத் துள்ளல் துள்ளி மறு பக்கம் போனாள்.



படிப்பகம்

www.padippakam.com

காமாட்சியைப் பார்க்கப் பாவமாக இருந்தது. சொந்த உருவம் குலைந்து சவண்டு போன செம்புக் குடம் போல. இதற்குள் மாமியார் ஸ்தானம் வேறு. ஒன்றிரண்டு ஆண்டுகளில் ஆத்தாவும் ஆகி விடுவாள். இவளைக் கல்யாணம் செய்யாமல் இருந்தது நல்லது என்று தோன்றியது நாராயணனுக்கு.

முற்றத்தில் நின்று காமாட்சி நாராயணனுக்குச் சைகை காட்டினாள். என்னவோ ஏதோ என்று இறங்கிப் போனான்.

''அத்தான், செல்லத்துக்கு மாப்பிள்ளைகிட்ட முட்டையும் பாலும் குடிப்பாளான்னு கேளுங்கோ...''

மருமகன் இழந்த சக்தியை ஈடுகட்ட நினைக்கிறாள் போலும் என்றெண்ணச் சிரிப்பு வந்தது.

''சிரிக்காம சீக்கிரம் கேட்டுச் சொல்லு...'' என்றாள்.

நாராயணனுக்குச் செல்லம் மகள் முறையாதலால், மாப்பிள்ளைக்காரன் மருமகன். என்றாலும் திடீரென மருமகனே என்று ஆரம்பிக்கக் கூச்சமாக இருந்தது.

''தம்பி...காலம்பற முட்டையும் பாலும் குடிப் பேள்ளா?'' என்று ஒன்றுமறியாதது போலக் கேட்டான்.

முற்றத்தில் நின்ற காமாட்சியைப் பார்த்துத் தலை யசைத்தான்.

அதற்காகவே காத்திருந்தவள் போல, செல்லம் நீண்ட தம்ளரை, சற்று நேரத்தில், மாப்பிள்ளை கையில் கொடுத்து விட்டுப் போனாள். அதற்குள் தலை ஒதுக்கி, பொட்டு வைத்து, லேசாகப் பவுடரும் பூசியிருந்தாள்.



படிப்பகம்

www.padippakam.com

# ஆறு

**பஸ்** பிடித்துத் தாமரைக் குண்டு போய்ச் சேரப் பதினொன்றரை மணி ஆகி விட்டது. கொஞ்ச தூரம் நடக்க வேண்டும். நாகர் கோயிலில் வாங்கிய ஒரு சீப்பு செந்துளுவன் பழம் கையில் வசமின்றி இருந்தது.

வீட்டில் கல்யாணி மாப்பிள்ளை பரமசிவம் இருந்தான். பிள்ளைகள் பள்ளிக்கூடம் போயி ருந்தனர். எட்டிப் பார்த்த கல்யாணியிடம் பழத்தைக் கொடுத்தான் நாராயணன்.

''ஏன் இவ்வளவு நேரம் ஆயிட்டு? நேரத் தையே பொறப்பட்டிருக்கப் படாதா?'' என்றாள்.

வெறுமனே சிரித்தான்.

''தோசை சுடட்டா?''

''இல்லை...காலம்பற காப்பி குடிச்சாச்சு...''

''அப்பம் இரி...வெறுங் காப்பி மட்டும் போட்டுக்கிட்டு வாறன்...''

பரமசிவம் நல்ல பாட்டாளி. சொந்தமான வயல்களையும் கொஞ்சம் பாட்ட வயல்களை யும் சேர்த்துக் கட்டி அடித்தான். பால் மாடு கள் வேறு.

மறுவீடு கழிந்து புறப்படும்போது இரண்டு பேரும் மாற்றி மாற்றிக் கூப்பிட்டனர். போன முறை ஊருக்கு வந்தபோது அவர்கள் வீட்டுக்குப் போகவில்லை என்று சிறு குற்றப் பத்திரிகை தாக்கல் வேறு.



படிப்பகம்

www.padippakam.com

இனி ராத்திரி ஆனாலும் புறப்பட விட மாட்டாள். மழை, வெயில், பயிர்களின் நிலைமை, உர விலை என்று பேசிக் கொண்டிருந்தபோது கருப்புக் கட்டி காப்பியில் பாலூற்றி ஆற்றி ஆளுக்கு ஒரு பெரிய தம்ளர் வந்தது.

காப்பி குடித்து முடித்தபோது ஒரு சாரமும் துவர்த்தும் கொண்டு வந்து தந்தாள். சட்டை பேன்டைக் கழற்றி ஆணியில் மாட்டி விட்டு மறுபடியும் வந்து உட்கார்ந்தான்.

சுற்றுக்கட்டு வீடு. மூன்று பக்கமும் படிப்புரையும் நடுவில் முற்றமும். சம்சாரி வீட்டு மங்களங்களான நெல்லுச் சாக்குகள். தொலிக்காத தேங்காய் நெற்றுகள். உத்தரத்தில் அடுக்கிய தொழிமரம். மூலையில் எலி கடிக்காமல் தூங்கக் கட்டிய தொடைக் கயிறு. ஆட்டு உரல். பனை நாரில் பின்னிய கட்டில்...

நீரூற்றும், கவிந்த மரங்களும் கொண்ட காட்டுச் சோலையினுள் அமர்ந்திருப்பது போல் மனது குளிர்ச்சியாக இருந்தது நாராயணனுக்கு. இதைக் கல்யாணியின் வீட்டில் மட்டுமே உணர முடிந்தது. குமாரசாமி சமீபத்தில் இருந்தாலேயே மசுக்குட்டி அடர்ந்த முருங்கை மூட்டின் பக்கம் நிற்பது போல உடம்பெல்லாம் அரிக்கும் உணர்வு. காமாட்சியின் குடும்பத்தோடு எப்போதுமே ஒரு ஒட்டுதல் ஏற்படவில்லை.

படிப்புரையில் சமீபத்தில் அமர்ந்து கல்யாணி தேங்காய் துருவிக் கொண்டிருந்தாள். சேம்பிலையில் பொதிந்த பொட்டலம் ஒன்றை வலது கையில் பிடித்தபடி கிழவி ஒருத்தி வாசலில் நுழைந்தாள்.

எழுந்து பொட்டலத்தை வாங்கியபடி கல்யாணி கேட்டாள்.

"என்ன மீனு அத்தே?"

"நெம்மீன் துண்டம். நல்ல கல்லு கெணக்க இருக்கு..."

எப்படி அதற்குள் ஏற்பாடு செய்தாள் என்று தெரிய வில்லை.

''எத்தே ! தோட்டத்திலிருந்து கொஞ்சம் முருங்கைக் கீரை பறிச்சு உருவித் தருவேளா ?''

''விருந்தாளிக்குக் கீரைக் கறியா வச்சுக் குடுக்கப் போற?''

''வேற யாருமா ? அத்தானுக்கு முருங்கைக் கீரைத் துவரன் ரொம்பப் பிடிக்கும்...''

''சரி... நீ மீனைக் களுவு...''

பரமசிவம் குளிக்கப் போக எண்ணெய் தேய்த்த போது அம்மியில்தேங்காய் நசுக்கும் கடகடப்புக் கேட்டது. பரமசிவத்துடன் குளத்துக்கு அவனும் போனான். நடக்கும் போது நாராயணன் மெதுவாகக் கேட்டான்—

''குமாரசாமி ஏன் ஒரு உசாருல்லாமத் திரியான்...?''

''அவுனுக்கென்னா? மொதல் செலவாயிரப் பிடாது. தகப்பனாரு சம்பாதிக்க தெல்லாம் பொம்பிளைப் பிள்ளையோ கொண்டு போயிருமேன்னு பாக்கான்... கலியாணம் இங்க மாமா வீட்டிலே வச்சு நடத்துகதிலே அவனுக்கு இஸ்டம் இல்லே. பின்னே மாமாட்ட சாட்டம் பறியல்லே...''

''மாமாவுக்கு காலத்துக்குப் பொறவு அண்ட விட மாட்டான்.''

''எந்த நாயி போயி நிக்கப் போகு ? ஏதோ, விட்டுக் குடுக்கப் பிடாதேன்னு அணைச்சுக்கிட்டுப் போறோம்... தனக்குக் காரியம் ஆகணும்னா சுத்திச் சுத்தி வருவான்... போன பூவிலே பொன்னி நாத்து தட்டுப்பாடு வந்திட்டுன்னு எங்க அண்ணனுக்கு நாத்தாங்கால்லே இருந்து ஒரு வண்டி நாத்து பறிச்சு அனுப்பினேன். இன்னும் பணங் குடுக்கல்லே பாத்துக்கோ... எனக்க நாத்துன்

www.padippakam.com

னாலும் சாரமில்லே... அண்ணனுக்கு ரூவா குடுக்காண்டாமா ? கேட்டா மறந்தே போச்சும்பான்... பணந் தர மாட்டான்...''

சுற்றி மரம் வளர்ந்த தணுத்த தாமரைப் பொய்கை. நகரம் ஆபாசப் படுத்தாத குளத்தங் கரை. முட்டளவு ஆழத்தில் இறங்கி நின்றான். தாமரை மணத்தது. குளிர்ச்சி உடம்பைச் சுகமா என விசாரித்தது. குளிக்கலாம் என்று தோன்றியது. துவர்த்தை உடுத்தி, சாரத்தை உருவிச் சுருட்டிக் கரையில் எறிந்து விட்டு, நெஞ்சளவு ஆழத்தில் இறங்கினான். சற்றுத் தூரம் நீந்தலாம் என்று தோன்றியது.

''ரெம்ப உள்ளுக்குப் போகாத... தாமரைக் கொடி காலைச் சுத்தீரும்...''

தாமரைக் கொடி பெரும்பாலும் கன்னிப் பெண்களையே காவு கொள்ளும்.

விரைவின்றி மிதந்து, அசைந்து, கொஞ்ச தூரம் போனான். மூச்சடக்கி உள்ளே இறங்கியபோது படிப் படியாகக் குளிர்ச்சி கூடிக் கொண்டே போனதை மனது உணர்ந்தது. சுற்றிலும் சிலேபியாக் கெண்டைகள் மினுங்கின. காற்று மட்டத்துக்கு வந்து தலையைச் சிலுப்பினான். சற்று நேரம் அசைவின்றி மல்லாந்து கிடந்தான். கால்களை உதைத்துக் கரைக்கு நீந்த ஆரம்பித்தான்.

பரமசிவம் தலை துவட்டிக் கொண்டிருந்தான், இடுப்பளவு ஆழத்தில் நின்று.

''சோப்பு தேக்கல்லியா ?''

''காலம்பற ஒருக்கக் குளிச்சாச்சில்லா ?''

ஈரத் துண்டைத் தலையையும் தோளையும் பொதிந்தவாறு மூடியபடி நடந்தது வெயிலுக்கு இதமாக இருந்தது. வீட்டுக்கு வரும்போது முக்கால் ஈரம் உலர்ந்து விட்டது.


படிப்பகம்

www.padippakam.com

கல்யாணி புளிமுளம் கூட்டிப் போட்டு விட்டாள் போலி ருக்கிறது. கொதிக்கும் வாசனை. அம்மா மீன் புளிமுளம் வைத்தால் இப்படித்தான் மணக்கும்.

''நீயும் குளிச்சியாக்கும். குளத்துத் தண்ணி, தடுமப் புடிச்சிராம...''

''ஒண்ணும் புடிக்காது...கொளம்பு நல்ல மணக்கே...''

''மாங்கா கெடைக்கல்லே... ஒரு மாங்கா கூடப் போட்டிருந்தா நல்ல மணமாட்டு இருக்கும்... அந்த அத்தை கிட்டே இலையும் பப்படமும் வேங்கிக்கிட்டு வரச் சொன்னேன்... இன்னும் காணல்லே...''

''பிள்ளையோ மத்தியானம் சாப்பிட வருமா?''

''வராது. இந்த வெயில்லே என்னத்துக்கு கெடந்து அலையணும்... இட்டிலி கொண்டுக்கிட்டுப் போயிருக்கு... சாயங்காலம் வந்து சாப்பிடும்... நீ பம்பாய்க்குப் போறதுக்கு புதங்கிளமையா டிக்கெட் வாங்கிருக்கே?''

''ஆமா... இன்னும் நாலு நாள் இருக்கு...''

''மூணு வருசம் களிச்சு வந்திருக்கே! கூடப் பத்து நாள் இருக்கப்பிடாதா?''

''இருந்து என்ன செய்யப் போறேன்?''

''அங்க போயி என்ன செய்யப் போறே!''

''அங்கயும் செய்யதுக்கு ஒண்ணுமில்லே...''

''இப்பம் செல்லத்துக்கு கலியாணம் இருந்ததினாலே வந்திருக்கே...''

''அடுத்தது உன் மக கல்யாணத்துக்கு வருவேன்...''

''அது இன்னும் ஆறேளு வருசம் களிச்சில்லா... அது சமஞ்ச உடனே எளுத்துப் போடுகேன். சடங்குக்கு வா...''

''உன் மக இன்னும் மூணு மாசத்திலே சமைவா... போன உடனே வர முடியுமா?'' —பரமசிவம்.



படிப்பகம்

www.padippakam.com

''ஆமா ! இல்லாட்டாலும் அவன் வந்து சாடீரு வான்...அதுக்கு மேலே நீங்கோ...''

''சரி, பாப்போம்...வசதிப்பட்டா வாறேன்...''

''செல்லத்துக்கு நீ கலியாணத்துக்கு வாங்கிக் குடுத்த நெளிவு முக்காப் பவுனு இருக்குமா ?''

''ஆமா...ஏன் ?''

''காமாச்சி அக்காளுக்கு ரெம்ப சந்தோசம்...ஆனா மயினி சொல்லுகா... 'ஆமா ! வாங்கிக் குடுக்கட்டேன். அவனுக்கு வேற என்ன செலவு'ன்னு. நான் சொன்னேன், 'செலவு இல்லேன்னா செய்யணும்னு இருக்கா... அதுக்கு ஒரு மனசு வேணும். மாறிக் கேட்டா அவன் இன்னும் வந்து போயி இருக்கதே பெரிசு...இன்னொருத்தன்னா திரும்பியே பார்க்க மாட்டான்...அவுனுக்கு நாம என்ன செய்திட்டோம் இதுவரை'ன்னு. அப்பாவும் கேட்டுக்கிட்டுத்தான் இருந்தா...''

இலையில் விழுந்த சோற்றின் ஆவி முகத்தில் படர்ந்தது. நல்ல காரசாரமான குழம்பு. மூக்கின் விளிம்பு வரை படர்ந்த நீரைத் துடைத்தபடி சாப்பிட்டு எழுந்த போது நன்கு வியர்த்து விட்டிருந்தது. கை கழுவி விட்டு வந்து அமர்ந்த போது பரமசிவம் வெற்றிலைத் தட்டை எடுத்து வைத்தான். அவன் யாழ்ப்பாணப் புகையிலை கடைவாயில் ஒதுக்கும் ஆசாமி. நாராயணன் வெறும் வெற்றிலை பாக்கு மட்டும் போட்டுக் கொண்டு, சற்று நேரத்தில் துப்பி, வாய் கொப்பளித்து, தண்ணீர் குடித்தான்.

''கொஞ்சம் படுத்து எந்திரிங்கோ...நான் தோட்டம் வரைக்கும் போயிட்டு வந்திருகேன்,'' என்றான் பரமசிவம்.

''நான் சாயங்காலம் போயிருவேன்.''

''எல்லாம் பைய போலாம்...''



படிப்பகம்

www.padippakam.com

சற்றுத் தொய்வான நார்க் கட்டிலில் கால் நீட்டிப் படுத்தது தெரியும். முழித்துப் பார்த்தது மூன்றரை மணிக்கு. வீட்டில் அனக்கமே இல்லை. முன் வாசல் கதவு வெறுமனே மூடிக் கிடந்தது. கல்யாணி வெளியில் போயிருக்கிறாள் போலும்.

படிப்புரையில் மூலையில் இருந்த செம்புக் குட்டுவத்தில் இருந்து தண்ணீர் கோரி முகத்தைக் கழுவித் துடைத்துப் படிப்புரைத் தூணில் சாய்ந்துஉட்கார்ந்தான். போன வாரத்து வாராந்தரி ஒன்று தூரத்தில் கிடந்ததை எடுத்துப் புரட்ட ஆரம்பித்தான்.

குளித்த கோலத்தில் தோளில் சுமந்த துணிகளும் இடுப்பில் குடமுமாகக் கதவைத் திறந்து கொண்டு கல்யாணி வந்தாள்.

''அதுக்குள்ளே எந்திரிச்சிட்டியா? தேயிலை போடட்டா?''

''கொஞ்சம் களியட்டும்...நீ இன்னும் சாப்பிடல்லியா?''

''அப்பதயே சாப்பிட்டாச்சு... குளிதான் இன்னைக்கு கொஞ்சம் தாயமாடீட்டு...''

தண்ணீர்க் குடத்தை இறக்கி வைத்து விட்டு வந்து, தோளில் கிடந்த துணிகளை முற்றத்தில் கிடந்த கொடியில் காயப் போட ஆரம்பித்தாள். நனைந்த சாரியை நெஞ்சுக் கட்டி, அதன் மேல் இடுப்பில் இன்னொரு சுற்று உடுத்து, மீதியைத் தோள் மீது போட்டிருந்தாள். எப்போதும் துணியினுள் மறைந்திருந்த தேகத்தின் வெளுப்பு வெயிலில் பட்டுத் தெறித்தது. இரண்டு கைகளையும் உயர்த்தித் துணிகள் காயப் போட்ட அவளைக் காண நாராயணனுக்கு மனதும் உடம்பும் கிளர்ந்தது.

''என்ன அப்பிடிப் பாக்கே?'' என்று கேட்டவாறு கல்யாணி உள்ளே போனாள்.



படிப்பகம்

www.padippakam.com

ஈரத்துணி கிடந்த தணுப்பும், இலேசான முதல் வியர்வையும், மிருதுவும், மெல்லிய வாசமும், குழைவும் கொண்டதாக இருக்கும் இந்தப் பெண்ணுடம்பு.

முற்றத்து வெளியில் தெரிந்த சதுர வானத்தில் அடைபட மறுத்து நகர்ந்த மேகத் துண்டுகள்...

சற்று நேரம் பொறுத்துத் தேயிலைத் தம்ளருடன் கல்யாணி வந்தாள், உடை மாற்றி இருந்தாள். முகத்தில் லேசாகப் பூசியிருந்த பௌடரும் நெற்றியில் துலக்கமாக இட்டிருந்த குங்குமமும்...

மெதுவாக உறிஞ்ச ஆரம்பித்தான் டீயை. படிப்புரையில் வந்து அமர்ந்து கொண்டு பூக்கட்ட ஆரம்பித்தாள். முன்னால் ஒரு கிண்ணத்தில் தண்ணீரும், நனைத்த வாழை நாரும், தட்டத்தில் பிச்சி அரும்புகளும்...

பள்ளிக்கூடம் விட்டுப் பிள்ளைகள் வந்தன.

வீடு புரண்டு மறிந்தது.

மாலைக் காற்று இதமாக வீச ஆரம்பித்தது.

சற்றுக் காலாற நடந்துவிட்டு வரலாம்.

வேறு செய்ய ஏதும் இல்லை.

தாமரைக் குண்டைச் சுற்றிய வயற்காடுகள், தென்னந் தோப்புகள், வாழைத் தோட்டங்கள், வெள்ளை மணல் அரித்து ஓடும் புல் சிலம்பும் வாய்க்கால்கள். மறுமுறை வாழ்வில் இங்கு வர வாய்ப்புக் கிடைக்குமோ என்னவோ ?

கல்யாணியிடம், ''கொஞ்சம் வெளீல போயிட்டு வாறேன்,'' என்றான்.

''கொஞ்சம் இரி, போலாம்,'' என்றாள்.

தலை சீவி முடித்து, விரலில் சுற்றிய முடியை வெளியே எறிந்துவிட்டு, தலையில் செருகியிருந்த சீப்பை எடுத்துவிட்டுக் கல்யாணி உள்ளே வந்தாள்.



படிப்பகம்

www.padippakam.com

சற்று நேரத்தில், ''அக்கா! வரச் சொன்னேளா ?'' என்று கேட்டவாறு ஒரு பெண் முற்றத்தில் பிரவேசித்தாள்.

நாராயணன் இருப்பதைக் கண்டு சற்றுத் தயங்கினாள்.

''வா, விஜயா— இது எங்க அத்தான்தான். பம்பாயிலே இருக்காம்னு சொன்னம்லா... உங்க பெரியப்பாவுக்கு மகன் பம்பாயிலே இருக்காம்னு சொன்னயில்லா...அதுக்குத்தான் வரச் சொன்னேன்!''

''பம்பாயிலே எங்க இருக்கா ?''—நாராயணன்.

''டோம்பிவிலியிலே எங்கேயோ இருக்கான்... கம்பனியிலே வேலை...''

''என்னமாம் சொல்லணுமா ? சாமான் ஏதாங் கொண்டு குடுக்கணுமா ?''

''அதெல்லாம் ஒண்ணும் வேண்டாம்...நம்ம ஆளுகளா இருந்தா தெரிஞ்சு வச்சுக்கிடணும்லா...''

விஜயாவுக்கு முப்பதுக்குள் வயதிருக்கும். துலக்கப் பட்டிருக்காத அழகு தொனித்தது. முகத்தில் வாட்டத்தின் வரிகள்.

''விஜயா, நீ உன் மகன் கிட்டே அட்ரஸ் எழுதிக் குடுத்து விடு, என்னா ?'' என்றாள் கல்யாணி.

''இப்பம் போயிருவாளா ?''

''இல்ல. நாளைக்குத்தான் போவான்.''

''சரிக்கா. நான் பொறவு வாறேன்.''

மாடு மிரண்டாற் போலத் தெருவில் பிள்ளைகளின் கூச்சல். கல்யாணி சொன்னாள்—

''ரெண்டு வீடு தள்ளி இருக்கா. மெட்ராசிலே கெட்டிக் குடுத்திருந்து. மாப்பிள்ளை ஆக்சிடென்டிலே



படிப்பகம்

www.padippakam.com

திடீர்னு செத்துப் போனான். பாவம். மூப்பத்தாறு வயசு தான் ஆயிருக்கும். விதியைப் பாரேன். பிள்ளை, பாவமே பாவம் பாத்துக்கோ. ஆறு வயசிலே ஒரு பய இருக்கான். எப்பவும் இங்கதான் கெடப்பான், பிள்ளையோ கூட வெளையாடீட்டு...''

''அவுளுக்குப் பெரியப்பா மகனைப் போயிப் பாக்கணுமா இப்பம்? வேற வேலையில்லே ஒனக்கு.''

''நான் அதுக்காச் சுட்டி வரச் சொல்லல்லே... உனக்கு அவளைப் புடிச்சிருக்கா?''

''நீ என்ன பேசுகே?''

''விஜயாளுக்க அம்மை ஒரு நாளைக்கு பாட்டு வாக்கிலே சொன்னா...எனக்கு ஒன் ஓர்மைதான் வந்து.''

''அதான் சிம்பிளா பொண்ணு பாக்க ஏற்பாடு செய்தியாக்கும்? அவுளுக்குத் தெரியுமா ?''

''இன்னுஞ் சொல்லல்லே...''

''நல்ல வேளை.''

''ஏன்? உனக்குப் பிடிக்கல்லியா? தாலி அறுத்தவ வேண்டாம்னு பாக்கியா? இப்பிடி நல்ல அம்சு அடக்கமா ஒரு பொண்ணு கெடைக்க நீ குடுத்து வச்சிருக்கணும்...''

''அதுல்லே பிரச்னை. எனக்கு இனிமே இதெல்லாம் வேண்டாம்னுதான்...''

''பின்னே எதெல்லாம் வேணும்?''

''... ... ...''

''நீ அவுளுக்க மகனைப் பத்தியொண்ணும் கவலைப் படாண்டாம். வேணும்னா கூட்டீட்டுப் போ... இல்லன்னா அப்பனைப் பெத்த ஆத்தா கிட்டயோ அம்மையைப் பெத்த ஆத்தா கிட்டயோ நின்னுக் கிடுவான்... அப்பம் பேருல உள்ள சொத்தெல்லாமும் பயலுக்குத்தான்...''



படிப்பகம்

www.padippakam.com

''நான் அதைப் பத்தி கவலைப் படல்லே...''

''பின்னே எதைப் பத்தி யோசிக்கே... அவுளுக்க அவ்வளவு உருப்படியும் ஆசரு அளியாம அப்படியேதான் இருக்கு. தகப்பனாரு சொத்திலே சரி பாதி அவளுக்கும் உண்டும்.''

''நீ என்னை இருவது வருசம் மிந்தியுள்ள நாராயணனா நினைச்சிக்கிட்டுப் பேசுகே... காசு பணத் துக்கு நான் இப்பம் அலஞ்சுக்கிட்டுத் திரியல்லே... இருக் கதை ஆளுக்குக் கொஞ்சம் குடுத்திட்டு எங்கயாம் ஓடிரலா மான்னு நான் யோசிச்சுக்கிட்டு இருக்கேன்...''

''ஆமா ! சாமியாராப் போனா நல்லதுதான். கெட்டினா காமாச்சியைத்தான் கெட்டுவேன்னு இன்னும் நெனைச்சுக்கிட்டிருக்கயாக்கும்!?''

''வேண்டாத்தனம் பேசாத, கல்யாணி. எனக்குக் காமாச்சி மேல அன்னைக்கே அபிப்பிராயம் கெடை யாது.''

''பின்னே...''

''சொன்னா கோவப்பட மாட்டயே?''

''இல்ல. சொல்லு...''

''உன்னைத் தந்திருந்தா கெட்டியிருப்பேன்.''

கல்யாணி, சிவந்த முகத்தை ஒரு வெட்டு வெட்டி விட்டு, உள்ளே போனாள்.

இதுவும் ஒரு நூதனமான பெண் பார்ப்புத்தான். இன்னும் பார்த்துத் தீரவில்லை. இருபத்தேழு வயதி லிருந்து, காமாட்சிக்குக் கல்யாணம் ஆன பிறகு, பார்க்க ஆரம்பித்தது. மாமாவுக்கு நினைப்பே இருந்ததில்லை என்று சொல்லி விட முடியாது. ஒரு வேளை, மூத்த மகளைக் கெட்டிக் கொடுக்காத பாவம், வேறொரு பெண் பார்த்துக் கல்யாணம் செய்து வைத்தால்தான் தீரும் என்று நினைத்திருப்பார்.



படிப்பகம்

www.padippakam.com

முதலில் மாமாவிடம் இருந்து ஒரு கடிதம் வந்தது. திருநெல்வேலியில் இருந்து ஒரு பெண் தரம் வந்துள்ளது. பெண்ணின் அப்பா அகில இந்திய வானொலியில் தயாரிப்பாளராக இருக்கிறார். அண்ணன் சமயச் சொற்பொழிவுகள் செய்பவர். உன்னை அங்கு பார்க்க வருவார்கள் என்று.

திடீரென்று ஒரு நாள் அலுவலகத்துக்கு ஃபோன் வந்தது, பெண்ணின் அக்காள் புருஷனிடம் இருந்து. அறைக்கு வரச் சொல்லும் ரீதியில் அறை இல்லை. அலுவலகத்துக்கு வேண்டுமானால் வரச் சொல்லலாம். அதைவிடப் பம்பாய்த் தமிழ்ச்சங்கத்துக்கு மாலை ஆறரை மணிக்கு வரச் சொல்வது எளிதாக இருந்தது.

எல்லாம் விஸ்தாரமாகக் கேட்டார். சம்பளம் எவ்வளவு, என்ன வேலை, நிரந்தரமானதுதானா, கூடப் பிறந்தது எத்தனை, அப்பா என்ன செய்கிறார். கடைசியாக, ''அசைவம் சாப்பிடுவேளா?'' என்றார். ஆமென்றான். ''வீட்டிலேயும் வைப்பேளா?'' ஆமென்றான். அத்துடன் போயிற்று அது.

அடுத்த முறை ஊருக்குப் போனபோது எல்லோருமாகச் சேர்ந்து பெண் பார்க்கக் கூட்டிக் கொண்டு போனார்கள். முதன் முதலாகப் பங்கு கொண்ட சடங்கு. பெண் பிடித்திருந்தது. அம்மா கிடையாது. இரண்டாம் தாரத்துக்கும் கல்யாண வயதில் குமருகள் இருந்ததால் முதலில் இதைத் தள்ளிவிடப் பிரயாசைப் பட்டனர். நிச்சய தாம்பூலம் நடத்தலாம் என்ற நிலை வரும்போது, பம்பாய்க்கு அனுப்ப விருப்பமில்லை என்ற தகவல் வந்தது. கேட்டுப் பார்த்ததில், பெண்ணின் அம்மையைப் பெற்ற தாத்தா நாக்கைப் பிடுங்கிக் கொள்கிற மாதிரி இரண்டாம் தரத்துக்காரியைக் கேட்டாராம்—

''தாயில்லாப் பிள்ளை. அதுனால பம்பாய்க்குக் கொண்டு தள்ளீரலாம்னு பாக்கேளா? உம் மகளை அனுப்புவியா?'' என்று.



படிப்பகம்

www.padippakam.com

அத்துடன் அதுவும் போயிற்று.

ராமலிங்கமும் அவனும் சேர்ந்து ஒரே ரூமில் தங்கியிருந்த போது, ஒரு பொங்கலுக்கு, ராமலிங்கத்தை உறவினர் வீடொன்றில் சாப்பிடக் கூப்பிட்டிருந்தனர். அவன் நாராயணனையும் கூப்பிட்டான்.

''அது நல்லாருக்காதுப்பா... நீ போயிட்டு வா.''

''அதெல்லாம் ஒண்ணுமில்லே. நீயும் வாறே. நான் ஏற்கனவே சொல்லியாச்சு. கூட்டிட்டு வரச் சொல்லிருக்கா...''

''வேண்டாம்பா...''

''நீ வரல்லேன்னா நானும் போகப் போறதில்லே.''

ரொம்பக் கூச்சமாக இருந்தது.

அறைக்கு வந்த பிறகு ராமலிங்கம் கேட்டான்.

''அங்கு ஒரு பொண்ணு நடமாடிக்கிட்டு இருந்திச்சில்லா...''

''ரெண்டு மூணு பொண்ணுக நடமாடிச்சு. எந்தப் பொண்ணைக் கேக்கே?''

''எல்லாத்துக்கும் பெரிசு. கண்ணாடி போட்டுக்கிட்டு...''

''ஆமா! அதுக்கு என்னா?''

''பாக்க நல்லாருக்கா?''

''நல்லாத்தான் இருக்கு...ஏன், கெட்டிக்கிடலாம்னா?''

''எனக்கில்லப்பா...எனக்கு ஊர்லே அக்கா பொண்ணு ரெடியா இருக்கு. உனக்குத்தான்...''

''அப்ப மூன்னேற்பாடாத்தான் என்னைக் கூட்டிட்டுப் போனியா?''



படிப்பகம்

www.padippakam.com

''போகச்சிலே அந்த எண்ணமில்லே. பொறவு அந்த அக்கா கேட்டுச்சு...''

''வேண்டாம்பா...''

''ஏன் ? வேற சாதீன்னு பாக்கியா ? நாங்க முதலியாருதான்.''

''தெரியும்... நீ முதலியாருன்னும் கறி சாப்பிடுவேன்னும்.''

''பின்னே என்ன ? யாரைக் கேக்கணும் ?''

''யாரையும் கேக்காண்டாம். அப்பா இல்ல... அம்ம போயாச்சு... கூடப் பொறந்ததுகோ ஒண்ணும் கெடையாது. ஆனா கல்யாணம் செய்யதா இருந்தா ஊரிலே பொண்ணு பாத்துத்தான் செய்யணும். இல்லேன்னா ஊரோடுள்ள தொடர்பு சுத்தமா அறுந்து போகும்...''

இப்போது, வேர் இன்னும் அறுந்து விடவில்லை. ஆனால் கொஞ்சங்கொஞ்சமாகப் பட்டுக் கொண்டிருக்கிறது என்று தோன்றியது நாராயணனுக்கு.

அதன் பிறகும் இரண்டு மூன்று முறை ஊர் வந்து, நாலைந்து தரங்கள் பார்த்து, எல்லாம் தட்டிப் போயின.

''வீடு வாசல் இருக்கு. சாப்பாட்டுக்கு நெல் உண்டும். மாமனார் மாமியார் மயினி சம்மந்தி வாடை கிடையாது. நல்ல வேலை உண்டும். பையன் பார்க்க விர்த்தியா இருப்பான். ஆனா பம்பாயிலேல்லா இருக்கானாம்.'' என்று உரையாடல்கள் முடிந்தன.

வேறு சில பெண் வீட்டார். ''அதை விட நாராயணனுக்குக் கொடுக்கலாமே!'' என்று மற்ற மாப்பிள்ளைத் தரம் பிடிக்காமற் போனபோது சொன்னார்கள்.

''ஏன் ? அப்பிடி உள்ளவரு தனக்கு மக்கமாரு ஒருத்தியைக் கெட்டி வைக்க வேண்டியதுதானே ! அதை விடச் சீமையிலே உள்ள மாப்பிள்ளையைத்தான் புடிச்



படிப்பகம்

www.padippakam.com

சிற்றாரா? இப்பம் நம்மளைப் போட்டு நெருக்குகாரு...'' என்று மாமாவுக்கு எதிராகக்குற்றப்பத்திரிகை படித்தனர்.

எல்லாமுமாக அவனுக்கு உற்சாகம் குறைந்து போயிற்று. எல்லோருக்குமே உற்சாகம் குறைந்து போயிற்று. ஊர் வருகையின் இடைவெளிகள் நீண்டு போயின.

மாமாவிடம் துணிந்து, நேருக்கு நேராக, கல்யாணியைக் கேட்டிருக்க வேண்டும் என்று தோன்றியது. தான் சற்று மூர்க்கமாக நின்று உறவினர்களிடம் ஒரு கலகம் ஏற்படுத்தி இருந்தால் நடந்திருக்கக் கூடும் என்று தோன்றியது. தனது இந்தப் பின் வாங்கல், கூச்சம் எல்லாமுமாகச் சேர்ந்து வாழ்க்கையைத் தன்னிடம் இருந்து பறித்து விட்டது என்று தோன்றியது.

அல்லது அப்போதே யாரையாவது காதலித்திருக்க வேண்டும்.

யாரைக் காதலித்திருக்க முடியும்?

இப்படிக் கூம்பிப் போனதொரு மனசைப் பிறவியிலேயே வைத்துக் கொண்டு. அம்மா இருந்த போதும் இல்லாத போதும் துரத்திக் கொண்டு வரும் ஒரு அநாதை உணர்வு. பிரவாகங்களுக்கு இடையிலான தனியன்.

இதற்குத் தான் மட்டுமே பொறுப்பு என்றும் தோன்றியது. செலவாகிப் போன நாற்பத்தைந்து ஆண்டுகளை இனித் திரும்பச் சேமிக்க முடியாது. இப்படிப் பழைய நியூஸ் ரீல்களைத் திரும்பப் போட்டுப் பார்ப்பதன் அர்த்தமென்ன?

ஆனால் நினைவுகள் துக்கமானவை. ஆனாலும் நூதனமான சுகம் தருகின்றன.



படிப்பகம்

www.padippakam.com

# ஏழு

எல்லோரிடமும் விடை பெற்றுக்கொண்டு, சாமான்களைக் கட்டி வைத்து, படுக்கப் போன போது, இரவு பதினொன்று ஆகி விட்டது. கொண்டு வந்த உடைகள் தவிர, வேறு என்ன சாமான்கள் ?

கன்னியாகுமரியில் இருந்து பம்பாய்க்கு நேரடியாக வண்டி இருந்தது. நாகர்கோயிலில் ஏறினால் சரியாக நாற்பத்து ஆறு மணி நேரம். வெள்ளிக் கிழமை காலை ஐந்தரைக்கு வண்டியேறினால், ஞாயிறு காலை மூன்றரைக்கு இறங்கலாம்.

ஐந்தரைக்கு வண்டி பிடிக்க வேண்டுமானால். ஐந்து மணிக்கு ஸ்டேஷனில் இருக்க வேண்டும், அந்த நேரத்துக்கு டவுன் பஸ் கிடையாது. ஆட்டோக்காரனை வரச் சொன்னால் அறுபது ருபாய் கேட்பான். உறங்கி விட்டான் என்றால் பிரயாணம் அவ்வளவுதான்.

பால்ராஜிடம் சொல்லி, வண்டி கட்ட ஏற்பாடு செய்திருந்தார் மாமா. குத்தாலம்கூட வருவதாகச் சொல்லியிருந்தான். நான்கு மணிக்குப் புறப்பட்டால் சரியாக இருக்கும். பல் துலக்கி, குளித்து, உடை மாற்றிப் புறப்பட, அரை மணி நேரம் அவகாசம் வேண்டும்.

இரயிலில் வைத்துத் தின்ன ஒரு பொட்டலம் இட்டிலியும் ஒரு பொட்டலம் புளித் தண்ணிச் சோறும் முந்திய நாள் இரவே கட்டி வைத்தாயிற்று.

காலைக் காற்று இலேசாகக் குளிர்ந்தது. காளைகள் அஞ்ச லோட்டத்தில் ஓடின.



படிப்பகம்

www.padippakam.com

புறப்படுவதாகத் தெரிந்த போது எல்லோரும் கேட்ட ஒரே கேள்வி, ''இனிமே எப்பம் வருவே?'' என்று. ஒன்றும் சொல்லத் தோன்றவில்லை. எப்போது வேண்டு மானாலும் வரலாம். இரண்டாண்டுகள், ஐந்தாண்டுகள், எட்டாண்டுகள் கழித்து வேண்டுமானாலும்.

ஒவ்வொரு முறை ஊர் வரும்போதும், சில பழைய முகங்கள் உதிர்ந்து விட்டிருந்தன. எனில் வரிசையில் முன்னோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறோம் என்று பொருள்.

புறப்பட்டு இறங்குகையில் மாமாவுக்கு லேசாகக் கண்கள் கலங்கின. நைந்து இற்றுக் கொண்டிருந்த கண்ணி. ஒருவேளை இதுவே கடைசிச் சந்திப்பாக இருக் கும் என்று மாமா நினைத்துப் பார்த்திருக்கலாம். ஏன், தானும் கூட மாமாவைப் பார்ப்பது கடைசியாக இருக்கக் கூடும்.

''போயி லெட்டர் போடு என்னா?'' என்றார் மாமா, குரல் கம்ம. நாராயணனுக்கு அம்மா ஞாபகம் வந்தது. மாமாவுக்கும் பழைய காட்சிகள் அலையலை யாகப் புரளுமாக இருக்கும்.

வீமநேரி விலக்குத் தாண்டி, திருப்பதி சாரம் தெப்பக் குளம் தாண்டி, வண்டி போய்க்கொண்டிருந்தது. ஆற்றின் கரையோரம் ரோடு. ஆளரவம் இல்லை. எதிர் வண்டி கள் இல்லை.

தென்னை மடல் குலுக்கும் சன்னமான காற்று. ஆற்றின் கரையோரம் அடர்ந்திருந்த கோரைப் புற்கள் பூத்துப் புரண்டன. பூத்த புன்னையின் பொங்கும் வாசம்.

தேரேகால்புதூர் விலக்கில் திரும்பி, மேற்கு நோக்கி மெயின் ரோட்டில் ஓடியது வண்டி. முதல் பஸ் ஒன்று தூரத்தில் தலை விளக்கு வீசி வந்தது. பீடி பற்ற வைத்துக் கொண்ட குத்தாலம் பீடிக் கட்டையும் தீப்பெட்டியையும் பால்ராஜிடம் நீட்டினான். ரோட்டோரக் குளத்தில்



படிப்பகம்

www.padippakam.com

அல்லியும் ஆம்பலும் ஏராளமாகப் பூத்திருந்தன. தாமரை யானால் விட்டு வைத்திருக்க மாட்டார்கள். இலைக்கும் பூவுக்கும் நல்ல விலையுண்டு. பெரியாழ்வார் சொன்ன ஆண்டாள் நீங்கிய வீடு ஞாபகம் வந்தது.

முதன் முறையாகக் குத்தாலம் சொன்னான்—

"நான் சொன்ன காரியம் ஓர்மையிலே இருக்கட்டும்... ஒருக்கக்கூட யோசிச்சுப் பாரு... போயி நல்லபடியா லெட்டர் போடு..."

"என்ன காரியம் ?" பால்ராஜ் கேட்டான்.

"வேற என்ன காரியம்? சவத்துப் பய கிட்டே ஒரு கலியாணம் செய்துக்கிடச் சொல்லுகேன். சொன்னாக் கேக்க மாட்டங்கான்..."

"கேட்டுக்கிட்டே இருந்தா எப்பிடி? நாளைத் தீர் மானிச்சு நடத்திப் போட வேண்டியதுதானே! மாட் டம்னா சொல்லுவாரு..."

ஆற்றுப் பாலம் தாண்டி, ஒழுகினசேரி முக்குத் திரும்பி, நேராக ஓடி, மீனாட்சிபுரம் கடந்து, கோட்டாறு கழுதைச் சந்தை மேட்டில் ஏறிக்கொண்டிருந்தது வண்டி. இறக்கத்தில் காப்பிக் கடையொன்று திறந்திருந்தது. வெளிச்சத்தில் மணி பார்த்தான். நாலே முக்கால்தான் ஆகியிருந்தது.

"பால்ராஜ்! ஓரமா வண்டியை நிப்பாட்டு... ஒரு தேயிலை குடிச்சிற்றுப் போவோம்..."

புதுப்பாவில் முதல் டிகாக்ஷனின் வாசனை. குளிருக்கு இதமாக இருந்தது. மறுபடியும் பிடி பற்ற வைத்துக் கொண்டனர். வண்டியில் இருந்து ஸ்டேஷன் வாசலில் இறங்கியதும், நாராயணன் சொன்னான்—

"நீங்க நிக்கணும்னு இல்லே... நான் ரயில் வந்ததும் ஏறிப் போயிக்கிடுவேன்."



படிப்பகம்

www.padippakam.com

''இல்ல... இருந்து ஏத்திக்கிட்டுப் போறோம். இன்னும் அரை மணிக்கூர் தானே...''

பயணச் சீட்டுப் பதிவு எஸ்—1 கோச்சில் பன்னிரண்டாவது இருக்கையும் படுக்கையும். நல்ல வேளையாக அறுவர் கேபினுக்கு வெளியே. இல்லாவிட்டால் மூச்சு முட்டிச் செத்துப் போக வேண்டியதிருக்கும்.

முழு வண்டியும் காலியாக இருந்தது. ஏர்-பேக்கையும் சூட்கேசையும் கால்களுக்கு அடியில் தள்ளி விட்டு, தண்ணீர் பாட்டிலையும் சோற்றுப் பையையும் சாயாமல் வைத்து விட்டு, சன்னலோர இருக்கையில் அமர்ந்தான். வண்டி நகர, குத்தாலத்துக்கும் பால்ராஜுக்கும் கை காட்டி விட்டு வெளியே பார்க்க ஆரம்பித்தான்.

இனி வழி நெடுகத், திருவனந்தபுரம்,கொல்லம், காயங்குளம், கோட்டயம், எர்ணாகுளம் என்று வண்டி நிறைந்து நிறைந்து, பாலக்காட்டில் பொங்கி வழியும். இரண்டு பகல்களை ரயில் பிரயாணத்தில் தாட்டுவது என்பது லேசான காரியமில்லை. குடும்பத்தோடு வருபவருக்கு அவரவர் காரியம் இருக்கும். குழுக்களாக வருபவர் சீட்டுக் களிப்பார்கள். மறைவாக விஸ்கி, பிராந்தி குடித்துக் கும்மாளம் செய்வார்கள். சாயாக்காரனை, சாத்துக்குடி வியாபாரியை எத்திப் புளகம் அடைவர்.

கையில் இர்விங் வாலஸ் புத்தகம் ஒன்று துணைக்கு இருந்தது.

ஊர் மனிதர்களை எல்லாம் மிரட்டும் நடையுடை பாவனைகளுடன், கருநாகப்பள்ளியில் ஒரு தம்பதி கைக் குழந்தையுடன் ஏறி, எதிர் இருக்கைகளில் அமர்ந்தனர். நவீன பயணச் சாதனங்கள் எல்லாம் இருந்தன. அதற்காகவே பெருந் தொகை செலவு செய்திருப்பார்கள் போலும். கணவன் வ்ராங்க்லர் ஜீன்ஸ், டீ ஷர்ட், நார்த் ஸ்டார் ஷூ சகிதம் இருந்தான். மனைவி சுடிதாருக்குள் குலுங்கும் கொங்கைகளுடன். மராத்தியப் பாசிமணி மாலையில் மலையாளத் தாலிப் பொட்டு தரித்திருந்தாள்.



படிப்பகம்

www.padippakam.com

பாப் தலை மயிர், உதட்டுச் சாயம், ஐந்து லிட்டர் மில்டன் வாட்டர் ஜக். வெளிநாட்டு மெட்டல் ஃப்ளாஸ்க். உருட்டிக் கொண்டு போகும் சூட்கேஸ். சுருக்கவும் விரிக்கவும் தோதாகச் சக்கரங்கள் கொழுவிய ஏர்-பேக், உணவைச் சூடாக வைத்திருக்கும் ஹாட்பேக் கேரியர்...

கைக்குழந்தை முகம் மட்டும் தெரியப் பொதியப்பட்டிருந்தது. நான்கு அல்லது ஐந்து மாதங்கள் இருக்கும். தாய்ப் பால் புகட்டும் தோதில் அவள் உடை தரித்திருக்கவில்லை. அதற்குள் பால் மறக்கச் செய்திருப்பார்களோ? அவர்கள் சாமான்களே பெட்டியை அடைத்துக்கொள்ளும் விதத்தில் இருந்தன.

ரயில் நகர ஆரம்பித்ததும்,வெளிநாட்டுச் சிகரெட்டை வெளிநாட்டு லைட்டரால் பற்ற வைத்துப் புகைக்க ஆரம்பித்தான். குழநதை உறங்கிக் கொண்டிருந்தது. வாக்மேனைக் காதில் பொருத்திக் கொண்டு, காலால் தாளம் போட ஆரம்பித்தாள் பெண்ணரசி. மொஸார்ட் அல்லது பீத்தோவனின் நூற்று முப்பத்தேழாவது சம்ஃபனியாக இருக்கக் கூடும்.

பன்னிரண்டு மணி சுமாருக்கு வண்டி கோட்டயத்தில் நின்றது. வெயில் மூர்க்கம் கொள்ள ஆரம்பித்திருந்தது. ஒரு சாய் வாங்கிக் குடித்தான், நாராயணன். கருநாகப் பள்ளிக் கணவன் வெளியில் இறங்கி இன்டியா டுடே, வீக் எனச் சிலவற்றை அள்ளிக் கொண்டு வந்து அவளிடம் கேட்டான்.

''யு வில் ஹாவ் சம் டீ!''

''நை சாகியே!'' என்று அருவருத்து முகம் சுளித்தாள். அவன் சாயா கிளாசோடு வந்து அமர்ந்தான். குழந்தை முழித்துச் சிணுங்கியது.

''எந்தா குட்டா? எந்தா குட்டா?'' என்று ஆங்கில மழலையில் கொஞ்ச ஆரம்பித்தாள்.

''யேய்...குட்டன் மூத்திரம் ஒழிச்சு காணுல்லே...யூ சேஞ்ச் த நாப்கின்ஸ்,'' என்றான்.



படிப்பகம்

www.padippakam.com

குறைந்தது மூன்று மணி நேரமாவது பிளாஸ்டிக் உறையினுள் மூத்திரம் ஊறிக் கிடந்த நாப்கினை அவள் மாற்ற ஆரம்பித்தாள். புது நாப்கின் அணிவித்து உறை மாற்றிவிட்டு சோப்புப் போட்டுக் கை கழுவி வந்தாள். அவன் ப்ளாஸ்க்கின் சுடு நீரையும் லேக்டோடெக்ஸையும் கலந்து ஆற்ற ஆரம்பித்தான்.

பேசாமல் விமானத்தில் போயிருக்கலாம். ஒருவேளை விமானங்கள் துபாய் போகிறவர்களால் நிறைந்து வழிய, இவர்களுக்கு இடமில்லாமல் ஆகியிருக்கும். வழி நெடுகக் குழந்தைக்காக நிறைய அவஸ்தைப் பட்டார்கள்.

பால் குடித்து முடிந்ததும், தனியொரு கூடையில் இருந்து எடுத்த சிரப்புகள் அளவுகள் பார்த்து, கணக்குகள் சரி பார்த்துச், சிந்தாமல் சிதறாமல் கொடுத்தனர்.

குழந்தை பெற்றுக் கொண்டு, பம்பாய்க்கு எடுத்துக் கொண்டு போவதனால், இத்தனை ஏற்பாடுகள் வேண்டும் போலிருக்கிறது. அல்லது ஒரு ஆம்புலன்ஸில் பயணம் செய்ய வேண்டும்.

திருநெல்வேலியில் இருந்து ரயிலேறி, சென்ட்ரலில் வண்டி மாறிப் பம்பாய்க்குப் போகும் தாராவிக்காரி இத்தனை ஏற்பாடுகளுக்கு எங்கே போவாள் என்று தெரியவில்லை. அவள் பயணம் தன் சொந்தப் பாலூற்றை நம்பித்தான் இருக்க முடியும்.

கோலாப்பூரில் இருந்து திரும்பியபோது என்று நினைவு. தலையில் தூக்கிய சோள மூட்டையும், வலக் கையில் அணைத்துப் பிடித்த எட்டு மாதக் குழந்தையும், விரலில் தூக்கிய துணிப் பையுமாக ஏறிய மராத்திப்பெண். டிக்கெட் வாங்கியிருந்தும், ரயிலின் தரையில் அமர்ந்து பயணம் செய்து, சாய் வாங்கி சாசரில் ஊற்றிக் குழந்தைக்கு உறிஞ்சக் கொடுத்து...

பாதி வாழ்க்கை பயணங்களில் கழிந்து கொண்டிருந்தது.

வசதி வர வரப் பயணங்கள் எவ்வளவு சிக்கலாகிக் கொண்டு வருகின்றன!



படிப்பகம்

www.padippakam.com

படுக்கை, காற்றுத் தலையணை, உல்லன் போர்வை, லுங்கி, டி ஷர்ட், துண்டு, பிரஷ், பேஸ்ட், சீப்பு, கண்ணாடி, பவுடர், ஷேவிங் செட் இன்னும் முதலுதவிப் பெட்டிக்கான அனாசின் மாத்திரைகள், விக்ஸ், போரோலின், டைகர் பாம், டைரேட்-எம், தண்ணீர் பாட்டில், சாப்பாடு, பழங்கள். சிலருக்கு விஸ்கி பாட்டில், சிலருக்குச் சர்க்கரை, எலுமிச்சம் பழம், டிகாக்ஷன், டேப் ரிகார்டர், டிரான்சிஸ்டர், சீட்டுக் கட்டு, செஸ் போர்டு, புத்தகங்கள், சூட்கேஸைப் பிணைக்கும் சங்கிலி, பாத்ரூம் போக மக், சப்பல்ஸ், பிஸ்கட்டுகள், மிக்சர், சிகரெட், தீப்பெட்டி... இவை தவிரச் சொந்த உடைகள், செருப்பு, ஷூ, வாங்கிப் போகும் உடைகள், பரிசுப் பொருட்கள்...

இவ்வளவும் சுமந்து கொண்டு மனிதன் மேற்கொள்வதன் பெயர் பிரயாணம். எங்கோ படித்தது நினைவுக்கு வந்தது நாராயணனுக்கு, உடுத்த உடையுடன் ஒரு டூத் பிரஷ் மட்டும் எடுத்துக் கொண்டு பயணம் மேற்கொள்ள வேண்டும் என்று.

வண்டி பாலக்காடு ஜங்ஷன் வந்தபோது, ஐந்தரை மணி. சரியான நேரத்தில் ஓடிக் கொண்டு இருக்கிறது என்றார்கள்.

கோயமுத்தூரில் இரவுச் சாப்பாட்டுக்கான பொட்டலங்கள் வாங்கிக் கொள்ளலாம். பழங்கள் கிடைக்கும்.

வாழ்க்கைப் பயணம் எளிமையாகவே இருக்கிறது. மராத்தியப் பெண்ணின் பயணம் போல. எதற்கு மேலும் சிக்கலாக்கிக் கொள்ள வேண்டும்? இதென்ன உலகமகாப் பிரச்னையா? தானென்ன டோடோப் பறவையின் கடைசிப் பெடையா? இந்த வம்சாவளி உலக மகா அபூர்வங்களில் ஒன்றா, எப்பாடு பட்டேனும் காப்பாற்றித் தீருவதற்கு?

ஊருக்கு வந்து திரும்பியதன் போதை முற்றும் இறங்கி விட்டாற் போல் இருந்தது, நாராயணனுக்கு.



படிப்பகம்

www.padippakam.com

# எட்டு

தூரத்துக்குப் போய் விட்டுத் திரும்பிய மறு நாள், நாராயணன் மேஜை மீது நீல நிறமுள்ள வெளிநாட்டுக் கவர் ஒன்று இருந்தது. திருப்பி, அனுப்பியவர் முகவரியைப் பார்த்தான். பூதலிங்கம், டெஹ்ரான் என்று இருந்தது. ஊருக்கு வருகிறான் போலும். திறந்து பார்த் தான். அதுவேதான். சனிக் கிழமை இரவு. அதா வது ஞாயிறு அதிகாலை இரண்டரை மணிக்கு குவைத் ஏர் லைன்ஸில் பம்பாய் வருவதாகவும் ஏர்-போர்ட்டில் சந்திக்கும்படியும்.

வேறு வேலை இல்லை. அலுத்துப் போய் விட்டது. நள்ளிரவில் கண் விழித்துக் காவல் கிடக்க வேண்டும். விமானம் சரியான நேரத்துக்கு வந்தால், சுங்கச் சோதனைகள் முடிந்து வெளியே வர அதிகாலை நாலரை அல்லது ஐந்து மணி ஆகிவிடும். பிறகு ஓட்டலில் கொண்டு விடும்போது பலபலா விடியும். பல் தேய்த்துக் காப்பி குடிக்க வேண்டியது. அன்றே திருவனந்தபுரம் ஃப்ளைட்டில் போவான் என்றால் சல்லியம் தீரும் அடுத்த நாள் காலை என்றால், அதற்கும் துணை போக வேண்டும். எப்படியும் ஞாயிற்றுக் கிழமை ஒன்று பாழ்.

பூதலிங்கம் குமாரசாமியின் கொழுந்தியைக் கட்டியிருந்தான். சென்னையில் தனியார் கம்பனி



படிப்பகம்

www.padippakam.com

யொன்றில் பராமரிப்புத்துறையில் இருந்தான். திடீரெனப் பணம் வாவாவென இருகரம் நீட்டி அழைத்தது. இருபதி னாயிரம் ரூபாய் கொடுத்து விசா வாங்கி அவன் சவூதி அரேபியா போய் ஆறாண்டுகள் இருக்கும்.

முதலில் குமாரசாமியிடம் இருந்து தந்தி வந்தபோது, ஏதோ தன்னாலான உதவி என்று, சற்று மகிழ்ச்சியுட னேயே ஏர்-போர்ட் போனான். ஊரில் இருந்து இந்தியன் ஏர்லைன்ஸ் விமானத்தில் வந்து இறங்கியவனை அறைக்கு அழைத்துப் போய்ச் சாப்பாடு வாங்கிக் கொடுத்து, மறு படியும் ஏர்-இந்தியா ஃப்ளைட்டுக்கு மறுநாள் கூட்டிப் போனபோது — சான்ஸ் டிக்கெட் இடம் கிடைக்க வில்லை.

இருபத்தேழாம் தேதிதான் உறுதியாக சீட் கிடைக்கும் என்றனர். இருபத்தேழாம் தேதிக்கு இன்னும் ஒன்பது நாட்கள் இருந்தன. அதுவரை பம்பாயில் இருந்தால் காசு செலவாவது இருக்கட்டும், எட்டு நாட்கள் சம்பளம் மூவாயிரம் ரூபாய் இழப்பாகி விடும். நாளை மறுநாள் முதல் வகுப்பில் இடம் இருக்கிறது என்றனர். ஆயிரத்து முன்னூறு ரூபாய் அதிகமாகக்கட்ட வேண்டும். அதுதான் லாபகரமானது. ஆனால் கையில் பணம் இல்லை. அங்கு இங்கு என அலைந்து திரட்டிப் பூதலிங்கத்தை வழி அனுப்பி வைத்தபோது அப்பாடா என்றிருந்தது. போய்ச் சேர்ந்ததும் கடிதம் போட்டான்—இந்த உதவியை வாழ் நாள் உள்ளவரை மறக்க மாட்டேன் என்று. எட்டு மாதங்கள் கழித்து ஆயிரத்து முன்னூறு ரூபாய்க்கு டிராஃப்ட் வந்தது. அதோடு விட்டால் சனியன் தொலைந்தது எனலாம். முன்னூற்றுச் சில்வான ரூபாய் கள் போக்கு வரத்திலும் சோறு வாங்கிப் போட்டதிலும் செலவானது வசூல் ஆகாவிட்டாலும் பரவாயில்லை.

ஓராண்டு கழித்து ஒரு லெட்டர் வந்தது. இதே போல, சனிக்கிழமை இரவு அதாவது ஞாயிறு அதிகாலை, கல்ஃப் ஏரில் வருவதாக.



படிப்பகம்

www.padippakam.com

இரண்டு நாட்கள் பொறுத்து நல்ல சிவம் என்று ஒரு பையன் தேடி வந்தான். பூதலிங்கத்தின் மைத்துனன் என்றும், அத்தான் நாராயணனை வந்து பார்க்கச் சொல்லி எழுதி இருந்ததாகவும் சொன்னான்.

''சரிப்பா... ரெண்டு பேரு என்னத்துக்குப் போயி கண்ணு முழிச்சுக் கெடக்கணும். நீ ஏர்-போர்ட்டுக்குப் போ... எனக்கு ஞாயிற்றுக் கிழமை கொஞ்சம் வேலை இருக்கு...''

''இல்ல, அண்ணாச்சி... அத்தான் உங்களையும் கூட்டீட்டு வரச் சொல்லீருக்கா ...நீங்க வரல்லேன்னா எங்கிட்ட கோவப் படுவா... வேறயும் ஒரு காரியம்... உங்களுக்கு ஏர்-போர்ட்டிலே யாரையாம் தெரியுமா ?''

''இல்லப்பா ... என்ன விசயம் ?''

''இல்லே... அத்தான் எழுதியிருந்தா ! கஸ்டம்ஸிலே தெரிஞ்ச ஆளு யாரையாம் பாத்துச் சொல்லி வக்கணும்னு... கஸ்டம்ஸ் டூட்டி கொறவாப் போடு வாள்ளா !''

''உங்க அத்தான் என்னடே கப்பலா கொண்டுகிட்டு வரப் போறான்? என்னவாம் ஆறு சாரி, ரெண்டு வாச்சு, கொஞ்சம் செவனோ கிளாக் பிளேடு, பவுடர் டப்பா இருக்கும். இதுக்குப் போயி யாரைத் தேடிப்பிடிக்க...''

''என்கூட வேலை பாக்கக் கூடிய பவாருக்கு அத்தான் போலீஸ்லே எஸ்.ஐ. ஏர்போர்ட்டிலேதான் டூட்டி... கேட்டுப் பாக்கவா ?''

''அது என்னவாம் செய்துக்கோ ! நம்மளை இளுக்காத...''

பையன் சில முன்னேற்பாடுகளுடன்தான் வந்திருக்கிறான். என்னவோ போகட்டும். ஏர்-போர்ட்டுக்கு வருவதாகச் சொன்னான்.

சனிக்கிழமை இரவு பல் தேய்த்துக் குளித்து, உடை மாற்றி,சாப்பிட்டு விட்டுப் பத்து மணி போல மாட்டுங்கா



படிப்பகம்

www.padippakam.com

ரோடில் இருந்து ரயில் பிடித்தான். புதிய சர்வ தேசிய விமான நிலையம். அந்தேரியில் இறங்கினால் மூன்று கிலோ மீட்டர். ஆட்டோக்காரன் பத்து ரூபாய்க்குச் சம்மதித்தான். ஏர்-போர்ட்டை அடையும் போது மணி பத்தே முக்கால்தான் ஆகியிருந்தது. இனி இரண்டரை மணிவரை பொழுது போக்க வேண்டும்.

தோதாக உட்கார இடம் கிடைத்தால், சற்று நேரம் கண் அயரலாம். வெளிநாடுகளில் இருந்து வரும் விமானங்கள் எல்லாம் இரவு பத்தரை மணிக்கு மேல் அதிகாலை ஐந்தரை மணிவரை வந்தன. மஞ்சள் போர்த்த வாடகைக் கார்களின் நீளம், வளைவுகளை, சுருக்கங்களை, நீவிக் கணக்கெடுத்தால் மூன்று கிலோ மீட்டர் இருக்கும்.

சற்று நேரம் வேடிக்கை பார்த்தான். துபாய் ஃப்ளைட் ஒன்று வந்து இறங்கியிருக்க வேண்டும். வரவேற்க வந்து நின்றவர்கள் முக்கால்வாசிப் பேர் சேர நாட்டுக்காரர்கள். கண்ணாடிச் சுவருக்கு இப்பால் நின்று எட்டி எட்டிப் பார்த்தனர். கை அசைத்தனர். தடுப்பை மறந்து பெயர் சொல்லி அழைத்தனர்.

பகல்போல் விளக்குகள் எரிந்தன. கார்களின் வரத்தும் போக்கும். தூரத்துச் சாயாக் கடை சூழ்ந்த கூட்டம்.

நல்லசிவம் எங்கிருந்தோ வந்தான்.

''அண்ணாச்சி, அப்பதே வந்திட்டேளா?''

''ஆமா! நீ இப்பத்தான் வாறையா?''

''ஆமா! நேரமாயித்தான் பொறப்பிட்டேன். சாயா குடிக்கேளா?''

''இப்பம் வேண்டாம். கொஞ்சம் களியட்டும்...''

''பவாருக்கு அத்தான் மூணாவது ஷிப்ட்லே இருக்கானாம். ரெண்டு மணிக்கு டாக்சி புக்கிங் கவுண்டர் கிட்டே வருவான்...''



படிப்பகம்

www.padippakam.com

"சரி. நல்ல ஏற்பாடுதான்."

மணி ஒன்றிருக்கும். ஏதோ இரண்டு விமானங்கள் வந்து இறங்கி இருக்கும் போலும். பிராங்க்ஃபர்ட் அல்லது சிட்னி ஃப்ளைட்டாக இருக்கக் கூடும். பயணிகள் சரசரவென்று வெளியே வந்து கொண்டிருந்தனர். அவர்களின் முகங்களில், நடையுடை பாவனைகளில் வளைகுடாப் பயணிகளிடம் இருந்து நுட்பமான வேறுபாடுகள் தெரிந்தன.

நல்ல உறக்கம் கிறக்கிக் கொண்டு வந்தது. ஒன்றே முக்கால் மணி வாக்கில் நல்லசிவம் லேசாகத் தோளைத் தட்டினான் முகம் கழுவி, ஒரு சாய் பருகி, டாக்சி புக்கிங் கவுண்டர் அருகே போனார்கள். சரியாக இரண்டு பத்துக்கு சுபாஷ் மானே எஸ்.ஐ. வந்தான். ஃப்ளைட் நேரத்தில் வருகிற தென்றும் கொஞ்சம் பொறுத்து வருவதாகவும், அங்கேயே நிற்கும்படியும் சொல்லிப் போனான்.

இரண்டே காலுக்கு மறுபடியும் வந்தான். இரண்டு பேரில் பாசஞ்சரை யாருக்குத் தெரியும் என்று கேட்டான். இருவருக்கும் தெரியும். சற்று ஏற இறங்கப் பார்த்து விட்டு, நாராயணனைக் கூடவே வரச் சொன்னான்.

பயணிகள் வந்திறங்கும் லவுஞ்சுக்குள் நுழைந்து செக்யூரிட்டி கேட்டைத் தாண்டி விமானங்கள் வந்திறங்கும் டார்மேக் விளம்பில் காலியாகக் கிடந்த இரும்பு நாற்காலி ஒன்றில் அமரச் செய்து விட்டுப் போனான். தோளில் பட்டைகளும் நட்சத்திரங்களும் வைத்த நிறைய போலீஸ் அதிகாரிகள் நடமாடினர். எவர் கேட்டாலும் சொல்லத் தோதான பதில்கள் இல்லை. சிக்கலில் மாட்டிக் கொண்டது போலத் தோன்றியது. எழுந்து விர்ரென்று வெளியே நடந்து விடலாமா என்று யோசித்துக் கொண்டிருக்கையில் மானே வந்தான்.

"ஃப்ளைட் ஆகயா! சலோ!" என்றான்.

கஸ்டம்ஸ் வளைவுகளைத் தாண்டி, எஸ்கலேட்டர் பக்கம் போய் நின்று கொண்டனர். பூதலிங்கம்



படிப்பகம்

www.padippakam.com

இறங்கும் போது அடையாளம் தெரிந்து கொண்டு கையசைத்தான்.

''இனிமேல் நீ வெளியே நிற்கலாம்,'' என்று கையைப் பிடித்து அழைத்து வெளியே விட்டு விட்டுப் போனான்.

நல்லசிவம் ஒருவகை அனுபூதியுடன், ''அத்தான் வந்தாச்சா?'' என்றான்.

நிறையப் பேர் வெளியே வந்து கொண்டிருந்தனர். ராஜ்கபூர் போன்று கோட்டுப் போட்டவர்கள்; தேவானந்த் போல் மப்ளர் சுற்றியவர்கள்; கையில் ரோத்மான்ஸ்ஸூம் லைட்டரும் பிடித்தவர்கள்; கையில் மடித்துப் போட்ட ஓவர் கோட் போட்டவர்கள்; சின்ன லெதர் பவுச் வைத்திருந்தவர்கள்; எக்கோலக் ப்ரீஃப் கேஸ் வைத்திருந்தவர்கள். நூதனமான சென்ட்களின் கலவை வாசனைகள்...''

சிலர் அவசரமாக வெளியே வந்து சுருக்கமான உரையாடலில் ஈடுபட்டனர்.

''எத்தற வேணம்?''

''ஏழாயிரம் ருப்யா!''

''பின்ன வேற கொழப்பம் ஒண்ணும் இல்லல்லோ...''

''இல்லா... பின்னப் பறையாம்...''

பூதலிங்கம் சக்கர வண்டியைத் தள்ளிக் கொண்டு வெளியே வந்தபோது மணி நாலே முக்கால். மடக்கினால் ஒரு பிணம் அடைத்து விடும் சைசில், கறுப்பு — சிவப்பு குறுக்குக் கோடு போட்ட சூட்கேஸ். தவில் வாத்தியம் சைசில் நீள் உருட்டும் புடைப்பும் கொண்ட ஏர்—பேக். ஐந்து கிலோ தூக்கும் அளவிலான கேரி பேக். அதன் உள்ளே இருந்து உருட்டி விழிக்கும் பொம்மையின் தலையொன்று எட்டிப் பார்த்தது.

பூதலிங்கம் எல்லோருடனும் கை குலுக்கினான். கையுறைகள் அணிந்திருக்கவில்லை. ஓராண்டுக்கு முன்பு



படிப்பகம்

www.padippakam.com

பார்த்ததை விடச் சற்று வெளுப்பும் மினுங்கலும் தெரிந்தது.

நாராயணன் தோளை யாரோ தட்டுவது போல் இருந்தது. சுபாஷ் மானே.

''ஜல்தி செட்டில் கர்னேகோ போலோ பாய்...''

நாராயணன் நல்லசிவத்தைப் பார்த்தான். நல்ல சிவம் கிட்டே வந்து, ''என்ன அண்ணாச்சி?'' என்றான்.

''அவுருக்கு என்னப்பா பேசியிருக்கே? தொடுத்து அனுப்பு...''

''நான் ஒண்ணும் பேசல்லே, அண்ணாச்சி!''

''அதை அவருகிட்டே சொல்லு.''

நல்லசிவம், மானேயை ஓரமாகத் தள்ளிக் கொண்டு போனான். சற்று நேரம் கடுகடுத்த பேச்சு நடந்தது. பிறரைக் கண்காணிப்பது போன்ற பாவனையில் மானே நகர்ந்து நோட்டமிட ஆரம்பித்தான்.

''என்னப்பா, என்ன விசயம்?'' பூதலிங்கம்.

''எஸ்.ஐ. மூணாயிரம் கேக்காரு...'' நல்லசிவம்.

''ஏன்? என்னத்துக்கு?''

''அதான்... கொஞ்சம் கஸ்டம்ஸ்லே உதவி செஞ்சாருல்லா... அதுக்குத்தான்.''

''என்ன உதவி செய்தாரு? நாலாயிரம் ரூவா டூட்டி கெட்டியில்லா வெளியில வந்தேன்! என்ன மிஸ்டர் நாராயணன் இது?''

''எனக்குத் தெரியாதுப்பா... நல்லசிவம் ஏற்பாடு தான்...''

''ஒரு பைசா குடுக்க முடியாது. என்ன செய்திருவான் அவன்?''



படிப்பகம்

www.padippakam.com

சுபாஷ் மானே மறுபடியும் அருகில் வந்து—

''க்யா பிராப்ளம் ஹை ?'' என்றான்.

நல்லசிவம் அவசரம் அவசரமாகச் சொன்னான்.

''குச்நை... குச்நை... அத்தான், எதாவது குடுத்து அனுப்புங்க...''

''நான் எதுக்குப்பா குடுக்கணும் ?''

மானேக்குத் தமிழ் புரியா விட்டாலும் விஷயம் புரிந்தது.

''லுக் மிஸ்டர்... டோன்ட் ட்ரை டு பி ஃபன்னி... எகெய்ன் ஐ கேன் மேக் யூ அண்டர் கோ அனதர் கஸ்டம்ஸ் செக்... வாட் டு யூ திங்க்...ம் ?'' என்று அதட்டினான்.

அதிகாரம் மெல்ல இரட்டை நாக்கை நீட்டித் துழாவியது.

நாராயணனுக்கு வியர்த்தது. பூதலிங்கம் முகம் வெளிற, ''ச்சே...'' என்று பல்லைக் கடித்தான். நாராயணன், மானேயைத் தனியே தள்ளிக் கொண்டு போய், இந்த ஏற்பாடு தான் அறியாததென்றும், நல்லசிவம் பவாரின் கூட வேலை செய்பவன் என்றும், நாளை பேசித் தீர்த்துக் கொள்ளக் கூடாதா என்றும் கேட்டான்.

''நீ என்ன பேசுகிறாய், அப்பா? நான் உள்ளே கஸ்டம்ஸ்காரன்களுக்கு என்ன பதில் சொல்ல முடியும் ? ஸாலா அவனுக்குப் புத்தியே கிடையாதா ?''

''கொஞ்சம் பொறு... நான் பேசிப் பார்க்கிறேன்.''

''டீக் ஹை... நான் இப்ப வருவேன்... எதாம் சிக்கல் செய்தா நான் விடமாட்டேன்...''

நாராயணன் பூதலிங்கத்திடம் வந்தான்.



படிப்பகம்

www.padippakam.com

''என்ன சொல்லுகான்... பையன் ?''

''எல்லாம் உம் மச்சினன் செய்து வச்ச கோளாறப்பா- எல்லாம் தெளிவாப் பேசிராண்டாமா ?''

''சரி ! இப்பம் என்ன செய்யணும்ங்கே ?''

''ஒரு ரெண்டாயிரம் ரூவா எடு.''

தூரத்தில் நின்று கண்காணித்துக் கொண்டிருந்த மானே பக்கம் போனான். சுருட்டிய நோட்டுகளைக் கையில் வைத்து அழுத்தினான்.

''கித்னா ஹை பாய் ?''

''தோ...''

''ரொம்பக் குறைவப்பா...''

''தப்பாயிடுச்சு பாய்... போதும்... விட்டுரு...''

''சலோ. பிறகென்ன செய்யது ? சாய் குடிப்போமா ?''

''இப்ப வேண்டா... நேரமாயிட்டுது... ஸீ யூ... பை...''

பூதலிங்கம் ஒரு சிகரெட் பற்ற வைத்தான்.

''எவ்வளவு திமிரு பாரு... இந்தியாவுக்கே ஏன் வந்தோம்னு இருக்குப்பா... வந்த மூடே போச்சு...''

பலபலா விடிந்து கொண்டிருந்தது. புள்ளோசை கேட்க முடியாத நகர அமைதி. பூதலிங்கம் போய் ஏர்-லைன்ஸ் ஏற்பாடு செய்திருந்த ஓட்டல் கூப்பன்களை வாங்கப் போனான். ஓட்டல் ஸீகல்லுக்குப் போய் அறைக்குள் நுழைந்தபோது களைப்பாக இருந்தது, நாராயணனுக்கு.

பன்னிரண்டு மணிக்குத் திருவனந்தபுரம் ஃப்ளைட். பத்தரை மணிக்கு ட்ரான்ஸ்போர்ட் வரும் என்றார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

ஏர்லைன்ஸ் அனுமதித்திருந்த ப்ரேக் ஃபாஸ்ட் தொகை நூற்றிருபதுக்குள் என்னென்ன ஆர்டர் செய்வது என்று கார்டை வைத்துக் கொண்டு, கணக்குப் பார்த்துக் கொண்டிருந்தான் பூதலிங்கம். நல்லசிவம் வேலைக்குப் போக வேண்டும் என்று புறப்பட்டுப் போய் விட்டிருந்தான். பாவம், அவன் முகத்தில் சுரத்தில்லை.

எட்டரை மணிக்கு மேல் ஏழெட்டுப் பேர் அறைக் கதவைத் தட்டி டாலர் இருக்கிறதா, பிஸ்கட் இருக்கிறதா, விஸ்கி இருக்கிறதா, சாரிகள் இருக்கின்றனவா என்று கேட்ட வண்ணம் இருந்தனர். சௌபாத்தி பீச்சின் மாலீஷ்வாலா பையாக்கள் கூட இவ்வளவு மோசமில்லை.

''டாலருக்கு எவ்வளவு கிடைக்கும்?'' என்றான் பூதலிங்கம்.

''எக்சேஞ்ச் ரேட்டை விட இரண்டு மூணு ரூவா கூடுதல் தருவான்.''

''தெரியாமப் போச்சு... ஒரு ஆயிரம் டாலர் கொண்டாந்திருக்கலாம்... போட்டும்... அடுத்த முறை பார்ப்போம்...''

ஓட்டலிலேயே குளித்து,மறுபடி அதே உடை அணிந்து கொண்டு, சிற்றுண்டியாக வந்த பிரட், பட்டர், ஜாம், உருளைக் கிழங்கு ஃபிங்கர் சிப்ஸ், ஆம்லட், காஃபி சாப்பிட்டு...

டைம்ஸ் ஆஃப் இந்தியாவை மேய்ந்து கொண்டிருந்த போது சவூதியின் பிரதாபங்களை அளந்து கொண்டிருந்தான் பூதலிங்கம். மலையாள சினிமா ஒன்றில் அடூர் பாஸியின் அளப்பு ஞாபகம் வந்தது-வளைகுடா நாடுகளில் ஒரு காரும் சிரட்டையும் இருந்தால் போதும்; கையால் மணலைக் குழித்து, சிரட்டையில் பெட்ரோலைக் கோரிக்கோரி காரின் டாங்கில் நிறைத்து விடலாம் என்று.

திடீரென நினைவுக்கு வந்தவன் போல, பூதலிங்கம் பெட்டியைத் திறந்து, ஒரு பால் பாயின்ட் பேனா,



படிப்பகம்

www.padippakam.com

செவன்-ஓ-க்ளாக் பிளேடு பாக்கெட் ஒன்று, ஒரு கேமி சோப் இவற்றை வெளியில் எடுத்து வைத்தான்.

''இத வச்சுக்கோ... விஸ்கி பாட்டில் அப்பாவுக்குக் கொண்டு போறேன்... இல்லேன்னா தந்திருப்பேன்...''

''அதுக்கென்னா ? இதெல்லாம் எனக்கு எதுக்குப்பா? ஊருலே யாருக்காவது குடுக்கலாம்லா ?''

''பரவாயில்லே... இருக்கட்டும்...''

அவையெல்லாம் இந்திய சமத்தில் விலை போட்டுப் பார்த்தால் பதின்மூன்று ரூபாய் பெறும். அப்படி நினைப்பது அற்பத்தனமாகப் பட்டது நாராயணனுக்கு. மறுத்து விட்டுப் போனால் பூதலிங்கம் தப்பாக எடுத்துக் கொள்ளக் கூடும்.

ஊருக்குப் போய்த் திரும்பி மறுபடி பூதலிங்கம் சவூதிக்குப் போனபோது அவ்வளவு பிரச்னைகள் இருக்கவில்லை. அடுத்த முறை வரும்போது, பம்பாயில் இருந்து திருவனந்தபுரத்துக்குத்தொடர்விமானம் கிடைக்கவில்லை. ஓணம் பண்டிகை நாட்கள். எல்லா விமானங்களும் மலையாளிகளால் வழிந்தன.

நல்லசிவம் அப்போது விடுமுறையில் ஊருக்குப் போயிருந்தான். அவன் தங்கை கல்யாணம். அதை ஒட்டித்தான் வரவும். இரண்டு நாட்கள் பொறுத்துத்தான் அவனுக்கு டிக்கெட் கிடைத்தது. இரண்டு நாட்கள் ஓட்டலில் தங்கினால் ஆயிரம் ரூபாய் பறந்து விடும். நாராயணனின் அறைவாசி வெளியூர் போயிருந்ததனால், கூடவே தங்க வைத்துக் கொண்டான்.

பூதலிங்கம் அப்போது மாசம் பன்னிரண்டாயிரம் சம்பாதித்துக் கொண்டிருந்தான். ஊரில் ஒரு தென்னந்தோப்பும் நாகர்கோயிலில் நேசமணி நகரில் ஒரு வீடும் வாங்கி இருந்தான். மனைவிக்குத் தெரியாமல் ஒரு வங்கிக் கணக்கு வைத்திருந்ததாகச் சொன்னான். போனமுறையே முயங்கி முடிந்த பின் பேங்கில் எவ்வளவு இருக்கிறது என்று மனைவி கேட்டாள் என்று சொன்னான். சட்டைப்



படிப்பகம்

www.padippakam.com

பொத்தானைத் திறந்து கழுத்தில் கிடந்த நாற்பது கிராம் சங்கிலியைக் காட்டினான். முழுக்கைச் சட்டை மூடிய மணிக்கட்டில் கட்டியிருந்த மூன்று கைக்கடிகாரங்களில் ஒன்று கொழுந்தியாளுக்குத் திருமணப் பரிசென்று சொன்னான்.

மூன்று நாட்களும் சாப்பாட்டுச் செலவெல்லாம் நாராயணன் வகையாக இருந்தது. இல்லையென்று சொல்லாமல் ஒரு நாள் மாலை லவ்குரோவில் லண்டன் பில்ஸ்னரும் சில்லி சிக்கனும் வாங்கித் தந்தான்.

எட்டரை மணிதான் ஆகியிருந்தது. நான்காவது பாட்டில் பீரின் கடைசித் தம்ளர். கண்களில் இலேசாகச் சாயம் ஏறி இருந்தது. அங்குமிங்கும் பார்த்துக் கொண்டு பூதலிங்கம் கேட்டான்.

''நாராயணன்... ஒரு விசயம். தப்பா நினைக்கப் பிடாது.''

''ம்... சொல்லு...''

''எனக்கு ஃப்ரெண்டு ஒருத்தன்...சவூதியிலே... சொந்த ஊரு குறிஞ்சிப்பாடி. பம்பாயிலே ஒரு நாள் தங்கி, நல்ல அனுபவிச்சுக்கிட்டுத்தான் ஊருக்குப் போவாரு...''

பூதலிங்கம் என்ன சொல்ல வருகிறான் என்று ஒரு வாறாகப் புரிந்தது. மேலும் சொன்னான்—

''செலவைப் பத்தி நீங்க யோசிக்காண்டாம். சரக்கு நல்லாருக்கணும்...உனக்குத் தெரியாமலா இருக்கும் ?''

சப்பென்றிருந்தது நாராயணனுக்கு. இந்த மனிதன் கிட்டத்தட்ட ஓராண்டுக்குப் பிறகு மனைவியைப்பார்க்கப் போகிறான். இவனைப் போல அவளும்தானே காய்ந்து கிடப்பாள் ? அதெப்படி இவனுக்குத் தோன்றாமற் போயிற்று என்று யோசித்தான். மிக அற்புதமான தாம்பத்ய வாழ்க்கை என்றெண்ணச் சிரிப்பு வந்தது.


படிப்பகம்

www.padippakam.com

அப்போதே தொடர்பைத் துண்டித்து விடலாம் என்று தோன்றியது. குமாரசாமி ஏதும் நினைத்துக் கொள்வான்.

ஊருக்குப் புறப்படும்போது பூதலிங்கம் கேட்டான்.

''நீ மெட்ராஸ் பக்கம் போவியா ?''

''உடனடியாப் போக மாட்டேன். ரெண்டு மாசத்திலே எப்படியும் போவேன்.''

''ஒரு உதவி செய்ய முடியுமா? ஒரு அட்ரஸ் தாறேன். எங்கூட முன்னால வேலை பாத்தவன். ஒரு சின்னப் பார்சல். குடுத்திர முடியுமா ?''

''சரி ! குடுத்திருகேன்...''

பற்பசை பாக்கெட் போல ஒன்றை எடுத்தான். அட்டையைப் படித்தபோது கிட்டத்தட்டப் புரிந்தது.

''இது ஒரு ஸ்ப்ரேயாக்கும். இதை அடிச்சுக்கிட்டா ரெம்ப நேரம் அனுபவிக்கலாம். நீ வேணும்னா ஒருக்கா யூஸ் பண்ணிக்கோ...''

''இதையெல்லாம் எங்கிட்டத் தந்து விடுகியே ?''

''நீ ஒண்ணும் தெரிஞ்சுக்கிட்ட மாதிரி காணிக்காண்டாம். ஒரு கவர்லே போட்டு எடுத்துக்கோ... நான் தந்து விட்டேன்னு மாத்திரம் சொன்னாப் போரும்.''

பழவந்தாங்கலின் சந்துகளில் உட்புகுந்து, தேடி, வீட்டைக் கண்டு, வாசல் கேட்டைத் தட்டியபோது, ஒரு அம்மாள் வந்து என்ன என்று கேட்டாள்.

''நீலகண்டன் வீடு இதானே !'

''ஆமா ... அவரு வெளீல போயிருக்காரு...''

''நீங்க ?''

''நான் அவுரு வீட்டுக்காரி...''



படிப்பகம்

www.padippakam.com

''ஒ லூதியிலே இருக்கான்லா பூதலிங்கம், இதைக் கொடுக்கச் சொன்னான்...''

''என்னது ?''

''தெரியல்லே... குடுத்திருங்க...''

பார்சலைக் கொடுத்துவிட்டு நடக்கும்போது, வெறுப்பாக இருந்தது. சோகை பிடித்துப் போய் வெளிறிக் கன்னச் சதைகள் ஒட்டி, மெலிந்து... பாவி மனிதன், இந்த அம்மாள் மீதா இதைப் பிரயோகம் செய்யப்போகிறான் என்று எண்ணச் சங்கடமாக இருந்தது.

அதன் பிறகு மூன்று வரவுகளை நாராயணன் கண்டு கொள்ளவில்லை. இரண்டு மூன்று முறை இந்திய உள்நாட்டுக் கடிதங்களில் எழுதிய தகவல்கள் வந்தன. ஒவ்வொரு முறையும் ஊர் வரும்போது சில நூறு உள்நாட்டு அஞ்சலுறைகளும் அட்டைகளும் வாங்கிப் போவான் பூதலிங்கம். கடிதங்கள் எழுதி ஊருக்கு வரும் இந்தியர்கள் வசம் கொடுத்துப் பம்பாயிலேயோ, சென்னையிலேயோ அஞ்சலில் சேர்த்து விடுவது. அறுபது இந்தியக் காசுகள் கொடுத்து அவன் எழுதும் கடிதத்துக்குப் பதில் எழுத ஐந்து இந்திய ரூபாய் கொடுத்து வெளி நாட்டுத் தபாலுறை வாங்க வேண்டியதிருந்தது. மனிதர்கள் எவ்வளவு புத்திசாலியாக இருக்கின்றார்கள் என்று யோசித்த போது பதில் போடுவதை நிறுத்தி விட்டான் நாராயணன்.

இன்று வந்த கடிதத்தைப் படித்த பின் எல்லாம் தொடராக ஞாபகம் வந்தன. மறந்து விடக் கூடாதென்றும் முக்கியமான சில விஷயங்கள் பேச வேண்டும் என்றும் பூதலிங்கம் எழுதிய கடிதத்தின் விசேட வரிகள். ஒருவேளை மாறுதல் பெற்று நல்லசிவம் ஊருக்குப் போய் விட்டதும் கூடக் காரணமாக இருக்கும். மூன்று ஆண்டுகள் பூதலிங்கத்திடம் என்ன மாறுதல் ஏற்படுத்தியுள்ளது என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டுமானால் போகலாம் என்று நினைத்தான் நாராயணன்.

www.padippakam.com

மீண்டும் ஓர் விமானத்தளக் காவல் கிடை. ஒவ்வொரு முறையும் எதற்கோ டெக்னிகல் ரிஹர்சல் பார்ப்பது போல், சூழ்நிலையில் எந்த மாற்றமும் இல்லை. முகங்களுக்குச் சில நிலையான தன்மைகள் பொருந்திப் போவதைப் போல...

மறுபடியும் பூதலிங்கம். இந்த முறை மணிக்கட்டு வரை நீட்டப்பட்டிருந்த சட்டையினுள் எத்தனை கைக் கடிகாரங்கள் கட்டி இருக்கிறானோ? வழக்கம் போல ஓட்டல் அறைக்குப் போய், பல் தேய்த்துக் குளித்து, சற்றுப் படுத்து ஓய்வெடுத்து, சிற்றுண்டித் தொகை கணக்குப் பார்த்து...

சற்றுப் பீடிகையுடன் ஆரம்பித்தான்—

''என் ஆர் ஐ அலாட்மென்ட்லே கொஞ்சம் ஷேர் வாங்கியிருக்கேன்... பாக்கியா?''

''எடு பாப்பம்!''

ஒரு பெரிய ஃபோல்டர் நிறைய, நூறு போல, பங்குப் பாத்திரங்களை எடுத்து முன்னால் வைத்தான். ஒவ்வொன்றாகப் புரட்டிக் கொண்டிருந்த போதே, தற்போது நல்ல மதிப்பு உள்ளவற்றையும், எதிர்காலத்தில் நல்ல மதிப்புப் பெறும் என்று தோன்றியவற்றையும், ஒரு புறமும், உபயோக மில்லாததை மறுபுறமும் அடுக்க ஆரம்பித்தான் நாராயணன்.

''எவ்வளவு ரூவா போட்டிருப்பே?''

''இதுவரை ஒரு ஒண்ணரை லெச்சம் முடக்கி இருப்பேன்...''

''இந்தப் பக்கம் உள்ளதெல்லாம் இன்னைக்கு உள்ள வெலைக்கு வித்தா போட்ட பணத்திலே முக்கா வாசி எடுத்திரலாம்... மற்றதுக எல்லாம் கெடச்ச விலைக்குத் தள்ளீரு...''

''அது ஒரு அறுவது எளுவது இருக்குமே!''



படிப்பகம்

www.padippakam.com

''இருக்கும். என்ன செய்ய முடியும்? இதெல்லாம் தெரிஞ்சவங்ககிட்டே கேட்டுச் செய்யணும்... கெடச்சுப் போச்சுன்னு ஏறிச் சாடீரப்பிடாது...''

''எப்படி அவ்வளவு நிச்சயமா சொல்லுகே?''

''ஏதோ, எனக்குத் தெரிஞ்சது. நீ வேற யாராம் புரோக்கர் கிட்டே வேணும்னா கேட்டுக்கோ...''

பூதலிங்கம் முகம் சோர்ந்து விட்டதில் ஒரு குரூரமான சந்தோஷம் இருந்தது நாராயணனுக்கு. இருநூறு ரூபாய்க்கு உள்நாட்டுத் தபாலுறைகள் வாங்கிப் போகிறவன்...

''நீ ஒரு உதவி செய்வியா? நல்ல இஷ்யூ வரச்சிலே ஒரு லெட்டர் போடுவியா?''

''போடலாம்பா... ஆனா நீ எனக்கு அறுபது பைசா செலவிலே லெட்டர் போடுவே ... நான் உனக்குப் பதில் போடணும்னா எனக்கு அஞ்சு ரூபா ஆகு... அஞ்சு ரூவான்னா எனக்கு ஒரு நேரத்துச் சாப்பாடு...''

''வேணும்னா கொஞ்சம் ஸ்டாம்பு வாங்கித் தந்துக் கிட்டுப் போறேன்...''

''அதெல்லாம் நடைமுறையிலே சரியாகாதுப்பா...'

''சரி. பின்னே போட்டும். நான் வேற ஒரு விசயம் பேசவாக்கும் வரச் சொன்னேன்...''

''... ... ...''

''சவூதியிலே நான் இப்பம் பணம் அனுப்புகம்லா, அதுக்கு ஒரு டாலருக்கு கவர்ன்மென்ட் ரேட்டு ஒண்ணு இருக்கு. அங்க வேற சில பார்ட்டி இருக்கு. ஆயிரம் டாலர் அங்க குடுத்தம்னா, கவர்ன்மென்ட் எக்சேஞ்ச் ரேட்டை விட மூணு ரூவா டாலருக்கு அதிகமா இங்க தந்திருவான் நமக்கு இதுலே மூணாயிரம் ரூவா லாபம் இருக்கு. இந்த ரூவாயை நான் செரமடத்திலே குடுக்கச்



படிப்பகம்

www.padippakam.com

சொல்ல முடியாது ... குடுத்தாலும் அவ கண்டமானம் செலவளிச்சுப் போடுவா ! மச்சினம்மாரும் கள்ளத் ... ...யோ பாத்துக்கோ. நல்ல தீவாளிப் புள்ளியோ... பம்பாயின்னா உபத்திரவம் இல்லே. காரியமும் ஈசி யாட்டு நடக்கும். எனக்கு உன் ஓர்மைதான் வந்து பாத் துக்கோ ... நீ வேற ஒண்ணுமே செய்யாண்டாம். இங்க நான் உனக்கு ஆபீஸ் பக்கத்திலே ஒரு பாங்கிலே அக்கவுன்டு தொடங்கீருகேன். பாஸ் புக் உங்கிட்டயே இருக்கட்டும். அதுல நீ பணத்தைப் போட்டுட்டாப் போரும். விசயம் வேற யாருக்கும் தெரியாண்டாம்... குமாரசாமிகிட்ட சொல்லீரவே செய்யாத. நான் என் வீட்டுக்காரி கிட்டே கூடச் சொல்லல்லே ... இந்தப் பணம் தனியாக் கெடக்கட்டும்.''

''இதெல்லாம் ரொம்ப ரிஸ்க்குப்பா...''

''என்ன ரிஸ்க்கு? எனக்கு உம் பேர்ல நல்ல நம்பிக்கை இருக்கு ... அடுத்தவன் பணம் உனக்கு என்னத்துக்கு ?''

''நான் அதச் சொல்லல்லே ... எனக்கு ரிஸ்க்கில் லாப்பா ? எதாம் செக்கிங் நடந்து, ஃபாலோ பண்ணுனா நானுல்லா மாட்டுவேன்...''

''ஒண்ணும் ஆகாது ... நீ பயப்படாதே...''

''ஆகாதுன்னு நீ சொல்லுகே ... சரி, புடிபட்டா நானில்லா அவஸ்தைப் படணும் ?''

''அப்பிடியெல்லாம் ஒண்ணும் ஆகாது. ஆனாத்தான் என்னா ? உனக்குப் பொண்டாட்டியா பிள்ளையா ?''

நாராயணனுக்கு விர்ரென்று ரத்தம் தலைக்கு ஏறியது.

''பிள்ளை குட்டி இல்லேன்னா, உனக்கு லாவம் உண்டாக்கத்துக்கு நான் ஜெயிலுக்குப் போகணுமாடே? நீ மனசிலே என்னைப் பத்தி என்னவாக்கும் நெனச்சு வச்சிருக்கே...பைத்தியாரக் ... மவம்னா ?''

பூதலிங்கம் முகம் ஒரு தினுசாகக் கோணியது.



படிப்பகம்

www.padippakam.com

''வேண்டாம்னா விடுப்பா... அனாவசியம் பேசாதே!''

''எனக்கு ஒரு மண்ணாங்கட்டியும் அனாவசியம் பேசாண்டாம்... தேவிடியாக்குடிக்கு கூட்டீட்டுப் போகச் சொன்னியே, அன்னைக்கே உன்னைக் கட் பண்ணீருக்க ணும்... வேலை மெனக்கட்டு வந்தம் பாரு... என்னைச் சொல்லணும்!''

''கூட்டீட்டுப் போகச் சொன்னா என்ன குடி முளுகீற்றா? நீ போனதில்லையா? நாப்பத்தஞ்சு வயசுவரை கற்புக் கெடாமத்தான் இருக்கியா நீ?''

''நான் போனேன் போகல்லே...அது வேற காரியம். நீ ஒரு வருசம் களிச்சு பொண்டாட்டியைப் பார்க்கப் போறவன் இன்னைக்கு அப்பிடி நினைக்கையில்லா? ஒன் பொண்டாட்டி அப்பிடி நெனைச்சா விடுவியாடா நீ?''

''நீ... நீ... தேவையில்லாம என் பொண்டாட்டியை எல்லாம் இளுக்காத பாத்துக்கோ... பொறவு என் சுபாவம் மாறிப் போகும்...''

''சுபாவம் மாறீட்டுன்னா ...ப் புடுங்கிருவியா? பொறக்கித் ... நீ கோடி ரூவா சம்பாதிச்சு என்னத் துக்குடா? திரியான், திரிச்சீலையும் கொளுத்தீற்று...''

பூதலிங்கத்தைக் கடைசியாக ஒரு முறை முறைத்துப் பார்த்துவிட்டு நாராயணன் வேகமாக இறங்கி நடந்தான்.

காலை பத்தரை மணிக்கே வெயில் காய்ச்சியது. படபடப்பில் மேலும் வியர்த்தது. ஜுஹு பஸ் நிறுத் தத்தை நோக்கி நடக்க ஆரம்பித்தான்.

தான் ஏன் இப்படி நடந்து கொண்டோம் என்று எண்ண ஆரம்பித்தான். மனத்தில் ஏதோ ஓர் மூலையில் ஊறிக் கிடந்த கசப்பு நுரைத்துப் பொங்கிப் பாய்ந்தது போல்... கசப்பா அல்லது பொறாமையின் வேறொரு வடிவமா? அப்படிக் கூட இருக்க முடியும் என்று தோன்றியது.



படிப்பகம்

www.padippakam.com

# ஒன்பது

ஜல்காவ் ஜாமோட் எனும் ஊரில் ஒரு புதிய கூட்டுறவு நூற்பாலை திட்டமிடப்பட்டு வந்தது. நாராயணனின் மேனேஜர் சொன்னார் ஒரு முதல் கட்டச் சுற்றுப் பயணம் போய் வர. சசித்ர மேனோன், வயதாகிக்கொண்டிருப்பதால், சுற்றுப் பயணங்கள் போக ஆசைப் படுவதில்லை. ஞாயிற்றுக் கிழமை இரவில் கல்கத்தா மெயில் பிடித்து காலையில் அக்கோலாவில் இறங்கினான். ஆகஸ்ட் மாதத்தின் முற்பகுதி. பம்பாயில் கொட்டும் மழையில் இருந்து ஒரு வார காலம் தப்பித்து விட்டதாக நினைத்தவனுக்கு ஏமாற்ற மாக இருந்தது. அக்கோலாவிலும் நல்ல மழை பெய்த அடையாளங்கள் இருந்தன.

வியர்க்க வியர்க்க வெயில் காலங்களில் அலைவது சிரமம். குளிர் காலப் பகல்கள் மிகுந்த தெம்பூட்டுவதாக இருக்கும். திடீர் திடீரென வரும் மழை, திட்டங்களைக் குலைத்து விடும். மழையில் தெப்பமாக நனைந்து கொண்டு முக்கிய மானவர்களைக் காணப் போக முடியாது.

இரயில்வே ஸ்டேஷனில் இருந்து, அக்கோலா பஸ் ஸ்டான்டுக்குப் போய், அதன் பின்புறம் இருந்த, வழக்கமாகத் தங்கும் விடுதியில் நுழைந்து, குளித்து, உடைமாற்றி, ப்ரீஃப் கேசை எடுத்துக் கொண்டு புறப்பட்டான். நகரினுள்



படிப்பகம்

மூன்று நூற்பாலைகள் இருந்தன. முதல் நாளில் முடித்து விட்டு, அடுத்த நாள் காலை ஜல்காவ் ஜாமோட் போக முயற்சி செய்யலாம்.

இரவில் சாப்பிட்டு விட்டு, பஸ் நிலையம் போய், ஜல்காவ்—ஜாமோட் பஸ் நேரம் விசாரித்தான். மழை இலேசாகச் சளசளத்துக் கொண்டிருந்தது. மழைக் காலத்தில் எந்த பஸ் நிலையமும் மனிதன் நிற்க லாயக் கற்றதாக மாறிவிடும்.

காலை ஆறே காலுக்கு ஒரு வண்டி இருந்தது. நாற்பத்தைந்து கிலோ மீட்டருக்கு ஒன்றரை மணி நேரம் எடுத்துக் கொண்டாலும், ஏழேமுக்காலுக்குப் போய்ச் சேர்ந்து விடும். அது அநாவசியம். ஏழே முக்கால் பஸ் பிடித்தால் போதும்.

காலையில் எழுந்து காபி, டீ சாப்பிடுவது ஒரு துன்பம். நாட்டுச் சர்க்கரைக் கூழாக இருக்கும். காலையுணவுக்கு நேரமாகி இருக்கவில்லை. பஸ் நிலையத்தில் நாக்பூர் டைம்ஸ் கிடைத்தது. டைம்ஸ் ஆஃப் இந்தியா மறுநாள்தான் கிடைக்குமாம். ட்ரெடிலில் அச்சடித்த சினிமா நோட்டீஸ் போல இருந்தது பத்திரிகை. பஸ் ஏறித் தோதான சீட்டில் உட்கார்ந்து கொண்டான். அழுக்கான சன்னல் சீலைகள். இருப்புக்கும் இல்லாததற்கும் இடையிலான மெத்தை இருக்கைகள். வண்டியினுள் கடலைத் தோலும் காகிதங்களுமாக ஏகப்பட்ட குப்பை. மேற்கூரை ஒழுகியதற்கான அடையாளங்கள். சன்னல் கம்பிகள் சில காணாமல் இருந்தன. சில கயிறுகளால் கட்டப் பட்டிருந்தன. வழியில் மழையும் பெய்யுமானால் சீராக இருக்கும்.

அதிகக் கூட்டமில்லை. மராத்திய மாநில அரசாங்க வண்டிகளுக்குண்டான மேள தாளத்துடன் வண்டி புறப் பட்டது. நகரின் அழுக்குகளைத் தாண்டியதும் சாலையும் சுற்றுப் புறங்களும் புதியதாய்த் துளிர்த்தது போலிருந்தது.

www.padippakam.com

காற்று மிதமான குளிர்ச்சியில் எதிர்ப்பட்டது. சூரிய காந்தி மஞ்சள் படுகையாய்ப் பூத்திருந்தது. முதல் மழைக்கு மண்ணைக் கறுப்பாய் மறித்துப் போட்டிருந் தார்கள். கூட்டமாய்ச் சில குரங்குகள் ரோட்டோரம் குந்தி இருந்து, வாலடித்து, காலை உணவுக்கு என்ன செய்வது என்பதை யோசித்துக் கொண்டிருந்தன.

காட்டோடைகள் பெருகிப் பாய்ந்து கொண்டிருந்தன. சற்று நேரத்துக்கு முன்னால் மழை வெறித்திருக்க வேண் டும். முக்கால் பாகம் வழி தொலைந்ததும் பூர்ணா நதி குறுக்கிட்டது. கருஞ்சிவப்பில் காட்டு வெள்ளம் கொந் தளித்துப் பாய்ந்தது. பூர்ணாவின் குறுக்கே இருந்த ரோட்டுப் பாலம், சாலை மட்டத்தில் இருந்து கீழிறங்கி வளைந்து தண்ணீரைத் தொட்டுக் கொண்டிருந்தது. பாலத்தினுள் நிறைந்து புகுந்த தண்ணீர் அலை அடிக் கும் போது ரோட்டை நனைத்தது.

மிகுந்த எச்சரிக்கையுடன் நகர்ந்தது பஸ். இன்னும் ஒரு மணி நேரம் மழை பெய்தால் தண்ணீர்ப் பாய்ச்சல் பாலத்துக்கு மேலேயும் இருக்கும் என்றும் சாலைப்போக்கு வரத்து நின்று போகும் என்றும் மராத்தியில் பேசிக் கொண்டார்கள். மனது திகிலடைந்தது. அப்படி யெல் லாம் நேர்ந்து விடாது என்று சமாதானம் செய்து கொண்டான்.

ஊருக்கு மூன்று கிலோ மீட்டர் முன்னாலேயே மில் கட்டுமானம் நடந்து கொண்டிருந்தது. இந்த நிலையில் இவ்வளவு சீக்கிரம் பொறுப்பான எவரும் வந்திருக்க மாட்டார்கள் என்றாலும், தகவல் சேகரித்துக் கொள்ள லாம் என்று கண்டக்டரிடம் சொல்லி இறங்கினான். ஒன்பதே கால் மணிதான் ஆகியிருந்தது. குடிசை போல் ரோட்டோரம் ஒரு சாயாக் கடை இருந்தது. சூடாக உருளைக் கிழங்கு வடை கடலை எண்ணெயில் பொரியும் வாசனை காற்றில். கட்டட வேலை ஆரம்பித்திருந்தது. உள்ளே ஒரு ஜீப் நின்றிருந்தது. உள்ளூர் எம். எல். ஏ.



படிப்பகம்

www.padippakam.com

தான் மில்லின் சேர்மேன் என்றும் ஊரில் அவர் வீடு இருக்கிறது என்றும் வீட்டில் இருப்பார் என்றும் அவரைக் கட்டி விட்டால் காரியம் கை கூடும் என்றும் கட்டடப் பொறியாளர் சொன்னார். மறுபடியும் சாலையில் வந்து நின்றபோது, விரைந்து வந்த வேன் ஒன்றை நிறுத்தி, ஜல்காவ்—ஜாமோட் பஸ் நிறுத்தத்தில் இறங்கிக் கொண்டான் நாராயணன்.

சில சிற்றுண்டிக் கடைகள் இருந்தன. தெரிந்தவற்றில் சுத்தமானது போலத் தென்பட்ட கடையில் நுழைந்த போது மழை பிடித்துக் கொண்டது. வேக வைத்த உருளைக் கிழங்கை உதிர்த்து, வெங்காயத்தை வதக்கி, நனைத்த அவலுடன் சேர்த்துக் கிளறித்தாளித்து, கொத்துமல்லிக் கீரை தூவி, உப்புமா போலிருந்ததைச் சாப்பிட்டான். இரண்டு உருளைக் கிழங்கு வடைகள் தின்றான். சாய் வேண்டாம் என்று மறுத்துவிட்டு, எம்.எல்.ஏ. வீட்டுக்கு வழி கேட்டான்.

மெல்லிய தூறலைப் பொருட்படுத்தாமல் ஐந்து நிமிடங்கள் நடந்து எம்.எல்.ஏ. வீட்டை அடைந்த போது பதினோரு மணி ஆகிவிட்டிருந்தது. வாசலில் ஜீப் நின்றது. இரண்டு பசுக்கள் பக்கவாட்டுத் தொழுவத்தில் தெரிந்தன. டிராக்டரும் உழவாரப் படைகளும் கிடந்தன. நாயொன்று சங்கிலிப் பிணைப்பில் கிடந்தது.

வராந்தாவில் உட்காரச் சொன்னார்கள். ஐந்து நிமிடங்கள் பொறுத்து உள்ளே போகச் சொன்னார்கள்.

எம்.எல்.ஏ. சோபாவில் சம்மணம் போட்டு உட்கார்ந்து மகாராஷ்ட்ரா டைம்ஸ் படித்துக் கொண்டிருந்தார். கணுக்கால் வரை வரும் பைஜாமா போன்ற தொளதொளத்த லேங்கா கட்டியிருந்தார். மேலே லாங்கிளாத்தில் பநியன் போன்று தைத்த, பாக்கெட்



படிப்பகம்

www.padippakam.com

வைத்த, சட்டை போன்ற ஒன்றை அணிந்திருந்தார். ஐம்பத்தைந்து வயதினுள் இருக்கும். ஒரு விவசாயிக் குண்டான அங்க லட்சணங்கள் இருந்தன.

''பஸா... குட்டுண் ஆலா தும்?''

விசிட்டிங் கார்டை நீட்டினான்.

''காய் டீலிங் கர்த்தாத்?''

சுருக்கமாகத் தனது கம்பனி தயாரிக்கும் மெஷின்களைப் பற்றிச் சொன்னான்.

''சாய் கேணார் கா?''

சரியென்று தலையசைத்தான். பேசிக் கொண்டிருந்த போது தேநீர் வந்தது. கட்டட வேலை முடிய இன்னும் ஓராண்டு ஆகும் என்றும் ஆறு மாதம் பொறுத்து மெஷினரி ஆர்டர்கள் தீர்மானிக்கப் படுமென்றும் கூட்டுறவு நூற்பாலைகளின் ஒன்றியம் சிபாரிசு செய்யும் மெஷின்களையே வாங்குவோம் என்றும் அவர்களைச் சந்தித்து விட்டு மூன்று மாதங்கள் பொறுத்து மறுபடியும் வரும்படியும் சொன்னார்.

மழை மறுபடியும் உற்சாகமாகப் பெய்து கொண்டிருந்தது. இந்த ரீதியில் மழை பெய்தால் பூர்ணா நதி சாலைப் போக்குவரத்தை நிறுத்தி விடும் என்றும் பிறகு வெள்ளம் வடிவது வரைக்கும் இங்கிருந்து நகர முடியாது என்றும் அக்கோலா போய்ச் சேருவதற்குப் பூர்ணாவைக் கடக்காமல் வேறு வழி கிடையாது என்றும், விரைவில் பஸ் ஏறிப் புறப்பட்டு விடும்படியும் சொன்னார்.

மழை வெறிப்பில் விரைவாக நடந்து பஸ் நிலையத்துக்குப் போனபோது பதினொன்றே முக்கால் ஆகியிருந்தது. விசாரித்த போது பன்னிரண்டே காலுக்கு ஒரு வண்டி அக்கோலாவில் இருந்து வந்து திரும்பும் என்றனர்.

மழைத் தூவானம் விழாத உலர்ந்த சிமெண்ட் பெஞ்சில் உட்கார்ந்து சூழலை வேடிக்கை பார்க்க ஆரம்



படிப்பகம்

www.padippakam.com

பித்தான். மழையின் காரணமாக அதிகப் பயணிகள் இல்லை. மேக மூட்டம் மாலை ஆறு மணி போன்ற இருப்பைக் காட்டியது. வேறு, பக்கத்து ஊருக்குப் போகின்ற வண்டிகளுக்காகச் சிலர் நின்றனர். ஐந்து கத்தரிக்காய் மூடைகள் கிடந்தன. மூன்று தையல் இலைக் கட்டுகள் கிடந்தன.

பன்னிரண்டே முக்கால் ஆகியும் வண்டியைக் காணோம். மறுபடியும் டைம் கீப்பரை விசாரிக்கப் போனான்.

''வண்டி இதற்குள் வந்திருக்க வேண்டும். ஒருவேளை ஆற்றில் வெள்ளம் பெருகி இருந்தால் தாமதமாகும். வராமலும் போகும். வெள்ளம் வடிந்த பிறகுதான் சர்வீஸ் ஆரம்பமாகும். சில சமயம் இரண்டு மூன்று நாட்கள் கூட சர்வீஸ் இருக்காது.''

மாற்றுப் பாதைகள் பற்றி விசாரித்தான். ''எந்தப் பாதையில் போனாலும் பூர்ணா குறுக்கிடும். இது ஒன்று தான் பிரதான ரஸ்தா. பாதுகாப்பானது. மற்றத் தடங்களில் பஸ் போக்கு வரத்துக் கிடையாது.''

காத்திருப்பது தவிர வேறு வழியில்லை. இன்று அக்கோலா போய்ச் சேர முடியும் என்ற நம்பிக்கை குறையலாயிற்று.

லாட்ஜ்கள் வைத்துக் கொள்வதற்கான தேவை அந்தஊருக்கு இருக்கவில்லை. இரண்டு மணி ஆகியபோது ஏதாவது சாப்பிட வேண்டும் என்று தோன்றியது. காலையில் சிற்றுண்டி சாப்பிட்ட கடைக்கு மறுபடியும் போனான்.

சோளமும் அரிசியும் தோல் உளுந்தும் கலந்து திரித்த மாவில் வென்னீர் விட்டுப் பிசைந்து சுடுகல்லில் தட்டிச் சுட்ட பாக்ரி சூடாக இருந்தது. பூண்டும் வெல்லமும் சுட்ட மிளகாய் வத்தலும் வெங்காயமும் சேர்த்து



படிப்பகம்

www.padippakam.com

அரைத்த சட்னி, உருளைக் கிழங்குக் கறி, வெங்காயம், பருப்பு...

கடையில் அதிகக் கூட்டமில்லை. கடைக்காரனுடன் ஒரு உரையாடலில் ஈடுபட்டான்.

''குட்டே ஜா யாச்சே துமாலா ?''

''அக்கோலா ...''

''காடி நை கா ?''

''நை.''

சாயங்காலம் ஆகியும் அக்கோலாவில் இருந்து ஒரு பஸ் கூட வரவில்லை. லாரி, ஜீப். வேன் என்று எந்தப் போக்குவரத்தும் இல்லை. இரயில்வே லைன அந்தப் பகுதியைத் தொட்டுக் கொண்டு போகவில்லை.

ஆறுமணிக்கெல்லாம் இருள் கவிந்து விட்டது. அடித்துப் பெய்த மழை பாளம் பாளமாகத் தண்ணீரைத் தள்ளியது. இந்தக் கணக்கில் பெய்தால் இரண்டு நாட்கள் கூட இங்கிருந்து நகர முடியாது. இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை இது போல் சிலநாட்கள் தடைப் பட்டுப் போவது ஒன்றும் புதியதல்ல என்றனர்.

கையில் இருந்த பெட்டியில் ஒன்றரை யடிக்கு இரண்டரையடி சவுக்கத்தில் ஒரு டர்க்கித் துண்டு மாத்திரம் இருந்தது. மற்ற உடைகள் எல்லாம் அக்கோலா லாட்ஜில் கிடந்தன. பாதுகாப்புக் கருதி ஓட்டல் ரிசப்ஷனில் கொடுத்து வைத்திருந்த ஐந்நூறு ரூபாய் தவிர முன்னூற்றுச் சில்லறை பர்சிலும் பெட்டியிலுமாக இருந்தது.

எங்கு தங்குவது என்று தெரியவில்லை. பஸ் சர்வீஸ் எட்டு மணிக்கெல்லாம் முடிந்துவிடக் கூடும். எட்டரை மணிக்கே இந்த மழைக்கு ஊர் அடங்கி விடும். சாயாக் கடைகளை அப்போது சாத்தத் துவங்கி விடலாம்.



படிப்பகம்

www.padippakam.com

குப்பை கூளங்கள் ஒதுங்கி, தெருவில் ஆறு போல் தண்ணீர் செம்மண் அரித்துப் பாய்ந்து கொண்டிருந்தது. விளக்குப் பொருத்தி விட்டனர் எங்கும்.

எம். எல். ஏ. காலையில் அறிமுகமானவர். வேண்டு மானால் போய் நிலைமையைச் சொல்லலாம். ஆனால் அங்கு போய் இடம் கேட்பது தனது நிறுவனத்துக்குப் பெருமையல்ல. இரண்டு வேளை சாப்பிட்ட கடைக் காரருக்கு, தான் எம்.எல்.ஏ.யைக் காணவந்தவன் என்பது தெரியும். பெட்டியை அந்தக் கடையில் கொடுத்து விட்டுக் கடை வராந்தாக்களில் ஒன்றில் தூங்க முடியுமா என்று பார்க்க வேண்டும். மழை அதற்கு அனுமதிக்குமா என்று தெரியவில்லை. பஸ் நிலையப் பெஞ்சில் முட்டுக்கட்டி உட்கார்ந்து கோழி போலத் தூங்கலாம். சற்று வெறித்த மழையில் ஒதுங்கி ஒதுங்கி நடந்து தெருக் கோடியில் இருந்த ஜவுளிக் கடையில் ஒரு லுங்கி, ஒரு துண்டு, ஒரு பெட்ஷீட் வாங்கினான்.

காப்பிக் கடைக்குப் போய் ராத்திரிக்குச் சாப்பிட ஏதாவது வேண்டும் என்று சொன்னான். சுக்கா ரொட்டி யும் பட்டாணி உசலும் செய்து தருவதாகச் சொன்னார். அடுப்பின் கணப்புக்கு அருகில் இருந்தது குளிருக்கு வெது வெதுப்பாக இருந்தது. மெதுவாக, பெட்டியை வைத்துக் கொள்ள முடியுமா என்று கேட்டான்.

''எங்கே தங்குவாய் ?''

''பஸ் ஸ்டான்ட் பெஞ்சில்தான் !''

''மழைக்கும் குளிருக்கும் அது சாத்தியமில்லை,'' என்றார். பாத்திரங்களைக் கழுவி ஒழுங்கு படுத்த ஆரம்பித்திருந்தவள் மராத்தியில் கணவரிடம் சொன்னது அவனுக்கும் புரிந்தது. இரவில் கடையின் உள்ளே படுத் துக் கொள்ளச் சொன்னார். எலிகள் நிறைய நடமாடும், வேறு பயப்பட ஒன்றுமில்லை என்றும் சொன்னார்.



படிப்பகம்

ஓட்டலின் பின்னால் நிறையக் காலி மனைகள் கிடந்தன. செலவாதிகளுக்குச் சிரமமில்லை. காலை ஐந்து மணிக்கெல்லாம் வந்து விடுவார்களாக இருக்கும். பகல் பூரா வெறுமனே உட்கார்ந்திருந்தது மிகவும் களைப்பாக இருந்தது.

''கன்ட்ரிகேணார் கா தும்?'' என்றார் ஓட்டல்காரர். சரியென்று தலையசைத்தான்.

கண்ணாடித் தம்ளரில் கொண்டு வந்து வைத்த நாட்டுச் சாராயததின் வீர்யம் மூக்கில் தாக்கியது. உள்ளே வேறு யாரும் இல்லை. தையல் இலைத் துண்டில் கொஞ்சம் சேவு வைத்துவிட்டு, அவரும் உட்கார்ந்தார், ஒரு கண்ணாடித் தம்ளருடன். சற்று நேரத்தில் விஷம் போல் விர்ரென்று ஏறிய போதையை உணர முடிந்தது.

தார் பாய்ச்சி சேலை உடுத்தி, முந்தானையைத் தலைக்கு மேல் போட்டு, மராத்திக்காரி கொண்டு வந்த சுக்கா ரொட்டியும் உசலும் சூடாக இருந்தது. உபரியாக ஒரு ஆம்லட் போட்டுத் தந்தாள். வயிறு நிறைந்து ஏப்பம் வந்தபோது நாசியில் ஏறிய நாடன் சாராய நெடி.

பின்வாசல் கதவைக் கொண்டி போட்டு, முன் வாசல் பலகை சாத்தி, கதவை உள்ளே தாழிட்டுக் கொள்ளச் செய்துவிட்டு, அவர்கள் புறப்பட்டபோது, எட்டரைமணி இருக்கும்.

ஒற்றை மங்கல் பல்ப் மாத்திரம் எரிந்தது. உடைகளைக் கழற்றிப் பக்கத்து பெஞ்சில் போட்டு, சாரம் உடுத்து, பெட்டியைத் தலைக்கு என நகர்த்தி, அதன் மீது துவர்த்து விரித்து, வாகாகப் போர்த்துக் கொண்டு, பெஞ்சில் படுத்தான் நாராயணன்.

கூரை மீது மழை அறைந்து பெய்யும் ஓசையும் காற்றின் இரைச்சலும். கடைசி பஸ் ஒன்று வந்து நின்று ஒதுங்கும் ஓசை. உரத்துக் கேட்ட மராத்தி வசவு. மங்கிக் கொண்டு போன உரையாடல்கள். நடமாட்டம்

www.padippakam.com

குறைந்து கொண்டிருந்தது. சாதாரணமாகக் குரைக்கும் நாய்கள் கூட வராந்தா மூலைகளில் சுருண்டு விட்டன போலும். உறக்கம் கவிந்து கவிந்து மூடியது.

மலையேறும் களைப்புத் தெரியாமல் முரசொலி இழுத்துக் கொண்டு போயிற்று. ஒருவர் பின் ஒருவராய்ச் சிரமப்பட்டு ஏற வேண்டியதிருந்தது. கையில் ஊன்றிப் பிடிக்க இருந்த அழிசங்கம்பு ஒரு ஆசுவாசம். மூட்டுத் தெறிக்க ஏறும் பாறைகள். தெரிந்த முகம் ஒன்று கூடத் தென்படவில்லை.

பாதி மலையில் அந்தக் கோயில் இருந்தது. ஒரு நான்கு ஏக்கர் பரப்பிலான சமவெளி. சுற்றிலும் சுவர்கள் போலக் கல்லடுக்கி இருந்தனர். கூரையும் காவலும் அற்று, சச்சதுரமான பீடத்தின் மேல் அம்மன் சிலை மட்டும். மஞ்சணை சாத்தி, காட்டரளிப் பூக்கள் சூட்டி, அம்மனை ஆவேசப்படுத்தி இருந்தனர். சத்தமின்றி ஒழுகும் சுனை நீர் பிடித்துப் பொங்கலிட்டுக் கொண்டிருந்தனர், பெண்டிர்.

முரசின் முடுக்கம் காற்றையும் காதையும் துளைத்தது. ஆங்காங்கே நாட்டியிருந்த தீப்பந்தங்களின் சிவப்பு அச்சமூட்டியது. அம்மனுக்குப் பலி கொடுக்கக் கட்டியிருந்த துள்ளு மறிகளின் விளியோசை. கருநீல வானப் பின்னணியில் பூரணச் சந்திரன். மழைக் காலம் அல்ல. மலைகள் கடந்து வந்த காற்று சிலுப்பிக் கொண்டு போயிற்று.

பொங்கற் பானைகளில் பால் பொங்கி, பெண்டிரின் குரவையொலி. கோயில் தளம் செதுக்கப்பட்டும் நிரப்பப் பட்டும் செடி கொடிகள் பிடுங்கப்பட்டும் இருந்தாலும் இன்னும் மேடும் பள்ளங்களும்...சரிவில் ஒரு முரட்டுப் பாறையின் முதுகில் போய் அமர்ந்தான். பெரணிச் செடிகள் காற்றில் அசைந்து முதுகை வருடின. தூரத்து மரங்களும் இலைகளும் கறுப்புக் கொத்துக்களாய்... மின்னட்டாம் பூச்சிகள் அலையும் நட்சத்திரக் குணுக்கு களாய்...



படிப்பகம்

www.padippakam.com

பூஜையின் முடுக்கம் கூடிக் கொண்டிருந்தது. சாமி கொண்டாடியின் ஓங்காரப் பிளிறல் கேட்டது. மூச் சடைத்த நிசப்தம். பலி கொடுப்பதற்கு முன்பான சாக் காட்டு அமைதி. விடைத்த கழுத்தில் அரிவாள் ஓடி இறங்கும் ஓசை.

தொடர்ந்து பிடரி சிலிர்த்தெழுந்த முரசு. கண் விழித்தபோது யுகாந்திரமாய் உறங்கிக்கிடந்தது போன்ற சடைவு. நிலவு இன்னும் கசிந்து கொண்டிருந்தது. பாறை மேல் கிடந்ததில் உடம்பெங்கும் வலித்தது. சுற்றிலும் வேறெந்த உயிரசைவும் இல்லை. பந்தங்கள் சில கருகிக் கனன்றன, எண்ணெய் இல்லாமல். சில இன்னும் புகைந்து எரிந்து கொண்டிருந்தன.

சுற்றிலும் பிரித்த அடுப்புகளின் தீக்காந்தல். பிய்ந்த மலர் மாலைகள். வாழை இலைகள். பீடத்தில் இன்னும் அம்மன் நின்று கொண்டிருந்தாள். மஞ்சணையும் காட் டரளியும் கமுகம் பூக் கொத்தும், சேலை போல் சுற்றிய சிவந்த துணியும், சந்தனத்தில் எழுதிய வாயும், நாசியும், கண் மலர்களும்...

சிரிக்கிறாளா? சினக்கிறாளா? தெரிந்து கொள்ள முடியவில்லை. இல்லை, இன்னும் நீ இங்கு என்ன செய்து கொண்டிருக்கிறாய் என்று கேட்கிறாளா?

நேரம் என்ன ஆகியிருக்கும் என்று சொல்லக்கூட வில்லை. எதிர்ப்படும் திசை கிழக்காக இருந்தால் தெறிக் கும் வெள்ளி விடிவதற்கான ஆயத்தமாக இருக்கும்.

இது எந்த இடம்? எதற்கிங்கு வந்தோம்? எங்கே போக வேண்டும்? எந்தப் புலப்பாடும் இல்லை அச்சம் பிடரியில் ஏறிப் படர்ந்தது. ஓடத் துவங்கினால் நீண்ட கரமொன்று முதுகில் அறையலாம். விடியும்வரை கண்



படிப்பகம்

www.padippakam.com

மூடி உறங்க முடியாது. விழிப்பின் தகிப்பு வெருட்டியது. எழுந்து அம்மன் முகத்தைப் பார்த்தான், ஏதோ கட்டளை எதிர்பார்த்தவன் போல. பார்வையைப் பெயர்க்க முடிய வில்லை. தொடர்ந்து பார்க்கவும் முடியவில்லை.பக்கத்தில் கிடந்த அழிசங்கம்பைக் கையில்எடுத்துக்கொண்டு இறங்க ஆரம்பித்தான். இறங்க இறங்க லேசான குளிர் மாறிச் சற்றே வியர்க்க ஆரம்பித்தது. பாறைக்குப் பாறை குதிக்கையில் கால்கள் வெடவெடத்தன. நடக்க நடக்கத் தொலையாத தடம். மலையின் சரிவு சற்று நிமிர்ந்ததும் ஓட ஆரம்பித்தான். மூச்சிரைக்க. கூழாங்கற்கள் பாதம் பட்டுத் தெறிக்க...

மத்தியானம் மறிந்த பிற்பகல். ஓடியோடிக் களைத்துக் கல்யாணியின் வீட்டு முற்றத்தில் நின்று கொண்டு இருந் தான். குளித்து விட்டு வந்தவள் கைகளை உயர்த்தி ஈரத் துணிகளை உலர்த்திக் கொண்டிருந்தாள். உலர்ந்து போயிருந்த உதடுகளில் ஈரம் படர்ந்தது ஈரத் துணி மாற்ற உள்ளே போனாள். ஆம்பல் தண்டு போல் பெண் உடம்பின் குளிர்ச்சி. தழுவலின் குழைவு. சந்தனச் சோப்பும் மஞ்சள் பொடியும் மூக்கில் ஏற்றிய வாசனையின் போதை. பேறுகளின்வெள்வரியோடிய அடிவயிறு. கருமை பரந்திருந்த காம்புகள். மூதல் அடுக்குச் சதை மடியும் இடுப்பு. கல்யாணியின் செல்லச் சிணுங்கல்...

தடதடவெனக் கதவு தட்டல். பரமசிவம்தான் வந்து விட்டான் போலும். தொலைந்து விட்டது எல்லாம்...

படபடத்து எழுந்தபோது கதவு இன்னும் தட்டப் பட்டுக் கொண்டிருந்தது. என்ன வென்று புரியவில்லை கொஞ்ச நேரம், நாராயணனுக்கு. மூளை சற்றே தெளிந் தது. ஜல்காவ்—ஜாமோட், மழை, காப்பிக்கடை...

கதவைத் திறந்தபின் சற்று நேரம் உட்கார்ந்து இருந் தான். மழை நின்று விட்டது போலும். அல்லது சற்று வெளிவாங்கி இருக்கலாம். கைக்கடிகாரத்தில் மணி


படிப்பகம்

www.padippakam.com

ஐந்தரை ஆகி விட்டிருந்தது. கரிப் பொடியும் பித்தளைச் செம்பும் எடுத்துக் கொண்டு, வெளியில் இறங்கி, ரோட்டைக் கடந்து பஸ் நிலையத்தினுள் போனான்.

நல்ல வேளையாகக் குழாயில் தண்ணீர் இருந்தது. பல் தேய்த்தான். செம்பில் தண்ணீர் எடுத்துக் கொண்டு, சிறிது தூரம் நடந்து புதரடியில் உட்கார்ந்து கால் கழுவினான் மீண்டும் பஸ் நிலையம் வந்துதுவர்த்தை மாத்திரம் உடுத்திக் கொண்டு குளித்தான்.

கழுதைகள் இரண்டு, பஸ் நிலையத்தில் கிடந்தவை எழுந்து, என்ன ஓர்மையிலேயோ நடந்தன. மூன்று நாய்களுக்கும் இன்னும் முழிப்பு வரவில்லை. ஆள் நடமாட்டம் இன்னும் ஆரம்பித்து இருக்கவில்லை. இருள் பிரியாக் காலையும், குளிரும், தூறலுமாய், சோம்பலாகத் துயில் கலைத்தது ஊர். சுவர்ப் பக்கம் திரும்பி நின்று கொண்டு, துண்டை உரித்து, பிழிந்து, தலையையும் உடம்பையும் துடைத்துக் கொண்டு சாரத்தை உடுத்தான்.

குளிர் இதமாக இருந்தது. காப்பிக் கடையில் பால் காய்ந்து கொண்டிருந்தது. ஊதுபத்தி மணத்தது. தத்தாத்ரேயா, பண்டரிநாத், அம்பா பாயி, கண்பதி பாபா படங்களின் முன்பு விளக்கு ஏற்றப்பட்டிருந்தது.

முதல் தேயிலை டிகாக்ஷன் இறக்கி, பால் சர்க்கரை கலந்து ஆற்றி, ஒரு தம்ளரில் எடுத்து, தண்ணீர் தம்ளரை மறுகையில் எடுத்து, வாசலுக்கு வந்து, சற்று வான் நோக்கித் தொழுது, தண்ணீரையும் தேநீரையும் மண்ணுக்கு வார்த்து விட்டு வந்தார் கடைக்காரர்.

முதல் டிகாக்ஷனில், புதுப் பாலில், அளவான சர்க்கரையிட்டு வந்த சாய் சுவையானதாக இருந்தது. போணி செய்யும் சம்பிரதாயமாக ஒற்றை ரூபாய் நாணயம் எடுத்துக் கொடுத்தான். கண்களில் ஒற்றிக்கொண்டு பெட்டியில் போட்டார்.



படிப்பகம்

www.padippakam.com

ஈரமாயிருந்த துண்டை மாத்திரம் தவிர்த்து, மற்றெல்லாவற்றையும் மடித்துப் பெட்டியில் வைத்தான். உடை மாற்றினான்.

''இவ்வளவு அதிகாலையில் எங்கே போகிறாய்?'' என்றார் கடைக்காரர். சற்றுக் காலார நடந்து விட்டு வருவதாகச் சொல்லிப் புறப்பட்டான்.

ஊரின் எல்லை வரை போய்த் திரும்பியபோது மணி ஏழுதான் ஆகியிருந்தது.முதல் சுற்றுப்பஸ்கள் புறப்பட்டுக் கொண்டிருந்தன.

டைம் கீப்பரிடம் என்ன நிலைமை என்று விசாரித்தான். எந்த நல்ல தகவலும் இல்லை என்றும், இன்று மழை பெய்தால் இன்னும் இரண்டு தினங்களுக்கு ஒன்றும் செய்ய முடியாதென்றும் சொன்னார்.

வேறொரு யோசனை சொன்னார். தினமும் காலை ஒன்பதே காலுக்கு, ஜல்காவ்—ஜாமோட்டில் இருந்து அக்கோட் வரை செல்லும் ஒரு பஸ் இருக்கிறது என்றும், நாற்பத்தெட்டுக் கிலோ மீட்டர்தான் என்றும், ஒரு சிறு கிளையாறு மட்டுமே குறுக்கிடும் என்றும், அங்கு போனால், அங்கிருந்து தரியாப்பூருக்கு அடிக்கடி பஸ் உண்டு என்றும், தரியாப்பூர் போய்விட்டால், இரவு தரியாப்பூரில் இருந்து அக்கோலாவுக்கு அஜ்மீரில் இருந்து வரும் நேரோ கேஜ் ட்ரெயின் கிடைக்கும் என்றும், ரயில்வே பாலம் உயரமாதலால், ரயில் போக்குவரத்து தடங்கல் இருக்காது என்றும்...

இரண்டு நாட்கள் வரை இங்கு கிடந்து என்ன செய்வது என்று எண்ணி, அக்கோட் போவதாகத் தீர்மானித்தான். காலையில் அக்கோலா போவதற்காகப் பஸ் நிலையம் வந்த பயணிகள் வெள்ளம் பற்றிய கலந்துரையாடல்களில் இருந்தனர். யாருக்கும் அக்கோட் தரியாப்பூர் சுற்றி அக்கோலா போக வேண்டிய



படிப்பகம்

www.padippakam.com

நிர்ப்பந்தம் இல்லை. மழை மறுபடியும் பெய்ய ஆரம் பித்தது.

காப்பிக் கடைக்குப் போய்ச் சிற்றுண்டி தின்றான். கடைக்காரரிடம் சொல்லிக் கொண்டு புறப்பட்டான். இராத் தங்கியதற்கு இருபது ரூபாய் கொடுத்தபோது, அவர் வாங்கிக் கொள்ளவில்லை. சாராயத்துக்கும் காசு வாங்கிக் கொள்ளவில்லை.

அக்கோட் பஸ் அரை மணி நேரம் தாமதமாக வந்தது. வந்ததும், டிரைவரும் கண்டக்டரும் சிற்றுண்டி செய்ய, அதே கடைக்குப் போனார்கள். கடைக்காரர் நாராயணனைக் காட்டி ஏதோ சொல்லிக் கொண் டிருந்தார்.

பஸ் புறப்பட்ட போது, கண்டக்டரிடம் வெள்ளம் எப்படி இருக்கிறதென்று கேட்டான். வரும்போது பாலத் தின் மேல் அலையடித்துக் கொண்டிருந்தது என்றும் கூடி இருக்கா விட்டால் போய் விடலாம் என்றும் கூடியிருந் தால் திரும்ப வேண்டியதிருக்கும் என்றும் சொன்னார். பூர்ணா செய்த இடைஞ்சலைக் கிளையாறு செய்ய வேண்டும் என்று நிர்ப்பந்தம் இல்லை.

மழை சற்று வெறித்த மாதிரி இருந்தது, மறுபடியும் கொட்ட ஆரம்பித்தது. பஸ் கூரை நிறைய இடங்களில் ஒழுகியது. அதிகக் கூட்டமில்லை யாதலால், ஒழுகாத இடம் பார்த்து உட்கார்ந்தான். சாலையின் பள்ளங்களில் சக்கரம் இறங்கி ஏறிய போது இடுக்குகள் வழியாகச் சேற்று நீர் உள்ளேயும் பீய்ச்சியது.

முடிந்த வேகத்தில் பஸ் ஓடிக்கொண்டிருந்தது. தலைப் பாகை கட்டியிருந்த இரண்டு பயணிகள் ஓடும் பஸ்ஸின் உள்ளே இருந்து சுருட்டுப் பிடித்தனர். நாடன் புகை யிலையின் காரச் சுருட்டு இருமலைத் தூண்டியது.

பூர்ணாவைக் கடந்து விட வேண்டும் என்ற பதைப்பு இருந்தது உள் மனத்தில் — ஏதோ பெரிய லெஹரியாக்



படிப்பகம்

www.padippakam.com

கண்டம் கடப்பது போல. திடீரென வளைவில் இருந்து எதிர்ப்பட்டது பாலம். கிளையாறு பெரியதல்ல. பழையாற்றின் அளவு கூட இருக்காது. நீந்திக்கூடக் கடந்துவிடலாம். ஆனால் பஸ் நீச்சல் அறியாதது.

கரை புரண்டு ஓடும் எந்த ஆறும் அழகுதான். பாலத்தின் மீது அலை மறிந்தும் மறியாததுமாய். தண்ணீர் மட்டம் பாலத்துக்கு மேல் சில அங்குலங்கள் இன்னும் ஏறினாலும் பஸ்சைத் திருப்பிவிடுவார்கள்.வண்டியை நிறுத்தி கியர் மாற்றி, கவனமாகப் பாலத்தின் மீது உருட்டிப் போனார் டிரைவர். மறுகரை சேர்ந்த பின், சற்று நிம்மதி ஆயிற்று—அக்கோலா சேர்ந்து விட்டது போல...

மனது சூழ்நிலையை ரசிக்க ஆரம்பித்தது. இருபுறமும் வயல்களில் எந்த வேலையும் இல்லை. உழவு சால்களில் தண்ணீர் பாத்தி கட்டிக் கிடந்தது. கூட்டங்கூட்டமாகக் கிளிகள் பறந்தன. மழையைப் பொருட்படுத்தாமல் ஆரோக்கியமான கருப்பு வெள்ளை முகமும் நீண்ட வால்களும் கொண்ட தாட்டைக் குரங்குகள் விளையாடின. வேலா மரங்கள் பொலிந்து சிரித்தன.

அக்கோட் போய் இறங்கிய போது பதினொன்றரை தாண்டி விட்டது. அதுவும் ஜல்காவ்—ஜாமோட் போல இன்னொரு ஊர். எல்லா பஸ் நிலையங்களும் ஒரே மாதிரி இருந்தன. அரை மணி நேரத்தில் தரியாப்பூருக்குப் பஸ் கிடைத்தது. பயணிகளும் பச்சை மிளகாய் மூட்டைகளுமாய் முப்பத்தைந்து கிலோ மீட்டர் கடக்க ஒன்றே கால் மணிக்கூர் ஆகியது.

வழிநெடுக இரவில் கண்ட கனவு பற்றிய சிந்தனை. அந்தக் கோயிலை எங்கு கண்டோம் என்ற உணர்வில்லை. மலை மீதேறி எந்த அம்மனையும் அவன் தரிசித்ததில்லை. காட்டுப் பிரதேசங்களின் ஊடே பயணம் செய்ததும் இல்லை.



படிப்பகம்

ஒரு முறை சோலாப்பூர் போனபோது, அங்கிருந்து இருபத்து நான்கு கிலோ மீட்டர் தொலைவில் தமல்வாடி என்ற ஊரில் ஒரு கோ-ஆபரேடிவ் மில் இருந்தது. வேலை முடிந்து வெளியே வரப் புறப்பட்ட போது ஸ்பின்னிங் மாஸ்டர் சொன்னார் — மேலும் இருபது கிலோ மீட்டர் போனால், சிவாஜிக்கு வீரவாள் வழங்கிய துல்ஜாப்பூர் பவானி கோயில் இருக்கிறது, பார்ப்பது விசேடம் என்று. நவராத்திரி உற்சவ நாட்கள். சாலையில் நிறையத் தனியார் பஸ்கள், ஜீப்புகள், வேன்கள், கார்கள்...

வேன் ஒன்றைக் கை காட்டியதில் நின்றது. உட்கார இடம் கிடைத்தது. மூன்று ரூபாய் முழுக் கட்டணம் வாங்கிக் கொண்டனர். ஏழெட்டுக் கிலோ மீட்டர் போன போது, சாலைப் போக்குவரத்து அதிகாரிகளின் திடீர்ச் சோதனை. பெயரும் முகவரியும் எழுதி, கையெழுத்துக் கேட்டனர். பின்பு கேஸ், வாய்தா என்று யார் அலைவது? சதிதர மேனோன் அங்கு என்னத்துக்குப் போனாய், காரணமில்லாமல் என்பார். அலுவலகத்திலும் கெட்ட பெயர். எனவே நீலகண்டன் என்று பெயர் சொல்லி, ஸ்மிதா பாட்டீலின் முகவரியும் கொடுத்தான்.

பயண முடிவில், திடீரெனக் குன்றின் மேல் ஏற ஆரம்பித்தது வேன். சத்ரபதி சிவாஜியின் கோட்டை இருந்ததற்கான அடையாளங்கள் இருந்தன. ஏறித் திரும்பிய பள்ளத்தில் கோயில் இருந்தது. படை ஒளிந்து கொள்வதற்குத் தோதான குன்றுகளின் நடுவில் அமைந்த பள்ளம். ஔரங்கசீப்பின் படைகளை மலை எலி தூங்க விடாமற் செய்யத் தோதான இடம்தான்.

அளவில் சிறியதான பழைமையான கோயில். மூன்று புறமும் பாறைகள் அடைத்திருந்தன. ஒரு மூலையில் சமவெளியை நோக்கிய சிறு திறப்பு. கூட்டங் கூட்டமாக ஆதி வாசிகள் போன்ற மக்கள் கூட்டம். பிராகாரம் நெடுகிலும் அரையடி விட்டத்தில் நீளமான தீப்பந்தங்கள். அது ஒரு நேர்ச்சை போலும். பக்தர்கள் வேண்டுதல்

www.padippakam.com

போல் தீப்பந்தங்களில் எண்ணெய் ஊற்றிக் கொண்டு போனார்கள். தரிசனத்துக்கு நீண்ட வரிசை. வரிசையில் நகரத்தின் வாசனை சற்றே இருந்ததன்றி, சூழல் காட்டு வாசனை கொண்டதாக இருந்தது. சிறுசிறு குழுக்களாக அமர்ந்து, 'ஜெய் அம்பே' பஜனை செய்து கொண்டிருந்தனர். வீட்டில் விரதம் இருந்து சமைத்த பிரசாதத்தைத் துணி போட்டு மூடிக் கையில் வைத்து நின்றனர். தேங்காய், பழம், சூடம், வெற்றிலை பாக்கு, ஊதுபத்தி, பட்டுத் துண்டு வைத்து நின்றவர்; வெறும் சூடமும் ஊதுபத்தியும் மாத்திரம் வைத்து நின்றவர்... குறுக்கு வழியில் தரிசனம் காட்டத் தொந்தரவு செய்து கொண்டிருந்த பூசாரிகளின் பார்வைகள் அச்சம் ஊட்டும் விதத்தில் சிவந்திருந்தன. சாராயச் சிவப்பாக இருக்கும். வரிசையில் யாரோ சொல்லிக் கொண்டு வந்தனர்- ஒரு காலத்தில் நள்ளிரவுப் பூசையில் பூப்பெய்தும் பருவத்துச் சிறுமிகளின் பலி கூட நடந்து வந்ததாக...

உக்கிரமான காளி என்றனர்.

வீர சிவாஜியின் அறுபட்ட விரலில் இருந்து கொட்டிய ரத்தத் துளிகள்...

தீப்பந்தங்களின் புகையும், மங்கலான ஒளியும், புரிபடாத கிராமீய மராத்திய வட்டார மொழியும், மரங்களில் அடைந்திருந்த வௌவால்களின் புழுக்கை வீச்சமும்...

கடையில் வைத்து விட்டு வந்த ப்ரீஃப் கேசும், மொக்காசின் ஷுக்களும் இருக்குமா என்ற சிந்தனை ஒரு புறம்...பேய் பிடித்த பெண்கள் சிலர் ஒரு மூலையில் தலை சுற்றி ஆடிக் கொண்டிருந்ததைக் கண்ட சங்கடம் மறு புறம்...விரி கூந்தல், நெற்றியில் அப்பிய குங்குமம், பொருளற்ற ஒலி வடிவத்தில் ஓடிய வேதனை...

பேசாமல் வரிசையில் இருந்து விலகி, சோலாப்பூர் போகும் பஸ் பிடித்து விடலாமா என்று தோன்றியதற்குக்



படிப்பகம்

www.padippakam.com

காரணம் அச்சமாகவே இருக்க வேண்டும். என்றாலும் வாழ்க்கையில் இன்னுமோர் வாய்ப்பு இது போல் வராமற் போகலாம் என்ற நினைப்பு.

கோயிலின் கற்சுவரில் நாலடி உயரத்தில் இருந்த திறப்பினுள் நுழைந்து நகர்ந்து அம்பாபாயி முன்னால் நின்ற போது—கற்சிலையில் பதித்த செப்பு முகமும், வெள்ளிக் கண்களும், செம்பருத்தி மாலையும், அசலான காட்டுத் தேவதை போல் இருந்தாள்.

அன்றடைந்த அச்சத்தின் மிச்சம்தான் கனவில் நேர்ந்ததாக இருக்க வேண்டும்.

ஆனால் தொடர்ந்த ஓட்டம், கல்யாணியின் வீட்டு முற்றம், காமம்...

இழந்து போன எதுவும் திரும்பக் கிட்டாது.

இனித் தன்னால் கல்யாணியைத் திருமணம் செய்து கொள்ள முடியாது. பதினாறு பதினேழு வயதில் இன்று குழந்தைகளை அடைய முடியாது. என்ன சிரமப் பட்டா லும், எப்படியொரு நேவி கேப்டனாக ஆக முடியாதோ, அது போல.

வாழ்க்கை வழுக்கிக் கொண்டே போகிறது.

கண் முன்னால் செத்துச் செத்து உதிர்கின்ற பிளேக் நோய் கண்ட எலிகள்...

தரியாப்பூரில் இரண்டரை மணிக்குச் சாப்பிட்டான். அங்கிருந்தும் அக்கோலாவுக்குப் பஸ் இல்லை.ரயில் ஒன்று தான் தடைப்படாத மார்க்கம். இரவு ஒன்பதே காலுக்கு அஜ்மீரில் இருந்து வரும் பாசஞ்சர் பெரும்பாலும் சமயத் தில் வரும் என்றனர்.

மழை ஓங்கி யோங்கி அறைந்து கொண்டிருந்தது. பஸ் நிலையத்தில் இருந்து ரயில்வே ஸ்டேஷன் ஒன்றரை



படிப்பகம்

www.padippakam.com

கிலோ மீட்டர் தூரத்தில் இருந்தது. ஊரில் இருந்து சண்டை போட்டுக் கத்திக் கொண்டு போனது போல்...

மழை வெறித்தால், கண் வெளிச்சத்தில் ஸ்டேஷனில் போய் உட்காரலாம். அங்கும் தனியான சிமென்ட் பெஞ்சுகள் கிடக்கும்.

ஒரு விதமான சலிப்பு கவிந்து கொண்டிருந்தது. இந்த வேலையில் இருந்து கூடக் கழன்று கொண்டு விட லாம். மிச்ச காலத்துக்குச் சாப்பாட்டுக்குப் போதுமான சேமிப்பு இருந்தது. ஒரு துறவி போலப் புறப்பட்டுப் போய் விடலாம் என்று தோன்றியது. அணிந்த ஒரு சோடி ஆடை, மாற்றிக் கொள்ள ஒரு சோடி. ஒரு துவர்த்து, ஒரு போர்வை, கொஞ்சம் பணம்...ஊர் ஊராகச் சுற்றி வர வேண்டும். பஸ் நிலையங்களில், ரயில்வே ஸ்டேஷன்களில் இரவுகளைக் கழித்து—

ஒன்பதே காலுக்கு வரப்போகும் ரயிலுக்கு இப்போதே யாரும் காத்திருக்கவில்லை. உள்ளூர்க் காரர்கள் ஒன்பது மணி போல வருவார்கள். ஸ்டேஷனைத் தொட்டு அமைந்திருந்த குடியிருப்புகளில் அனக்கங்கள் இல்லை. என்ன பதவி என்று சொல்ல முடி யாத ஒரு சிப்பந்தி மட்டும் இருந்தார். இரண்டு நாய்கள் முடங்கிக் கிடந்தன.

ஈரம் இல்லாத, சுத்தமாகத் தென்பட்ட சிமென்ட் பெஞ்சைத் துவர்த்தால் தட்டி, பெட்டியைத் தலைக்கு வைத்துப் படுத்தான். வானத்துக் கறுப்பில் இளக்கம் இல்லை. நாள் பூரா சூரியன் தென்படவில்லை. இரவில் மீன்கள் கூடத் தெரியாது. சிப்பந்தி அருகில் வந்தபோது எழுந்து உட்கார்ந்தான்.

அக்கோலா போக வேண்டுமா என்று கேட்டார். வண்டி ஒன்பதே காலுக்குத்தான் வரும், பயப்பட ஒன்று மில்லை, காத்திருக்க வேண்டும் என்றார்.



படிப்பகம்

www.padippakam.com

பெட்டியினுள் ஒரு பாக்கெட் மாரி பிஸ்கட் கிடந்தது. சுற்றுப் பயணங்களில் பெட்டியுள் இது எப்போதும் இருக்கும். ஒரு தற்காப்பு முன்னேற்பாடு. ஸ்டேஷன் சுத்தமாக இருந்தது. கட்டடம் இருந்த பகுதி தவிர, மண்ணாலேயே பிளாட்பாரம். நிறைய மரங்கள் இருந்தன. மழை இல்லா விட்டால் கோடிவரை நடந்து வரலாம்.

கேன்டீன், ரயில் வருமுன் திறந்து, வந்த பின் அடைத்து விடுவார்கள் போலும். காலையில் அஜ்மீருக்குப் போகும் வண்டி. இரவில் அக்கோலாவுக்குத் திரும்பும் வண்டி.

சிப்பந்தியைக் காணோம். சாப்பிட வீட்டுக்குப் போயிருப்பார். இரண்டு மூன்று விளக்குகள் எரிந்தன.

இந்த நாய்கள் இங்கு இரவு உணவுக்கு என்ன செய்யும்?

அடிப்படையில் அவற்றுக்கும் தனக்கும் எந்த வேறு பாடும் இருப்பதாகத் தோன்றவில்லை என்று நினைத் தான், நாராயணன்.



படிப்பகம்

www.padippakam.com

# பத்து

அக்கோலாவில் இருந்து திரும்பி ஆபீசுக்குப் போனபோது ஒரு இன்லண்ட் இருந்தது. தமிழ்ச் சங்கத்தின் பட்டி மன்ற அழைப்பிதழ் ஒன்றும் கிடந்தது. கடிதம் பரமசிவத்திடம் இருந்து. கல்யாணிசொன்ன பெண்தரத்தைப் பற்றி என்ன தீர்மானம் எடுத்தீர்கள்? விரைவில் தெரியப் படுத்தவும். பேசி உறைப்பித்து விடலாம் என்று. பின்னால் கல்யாணியின் கையெழுத்தில் நான்கு வரிகள் - விஜயாளிடம் தான் நேரடியாகக் கேட்டதாகவும், அவளுக்கும் சம்மதம் இருப்ப தாகவும், அத்தான் நல்ல முடிவெடுத்துக் கடிதம் எழுதும்படியாகவும்.

ஊருக்குப் போய் வந்து மூன்று மாதங்கள் ஆகிவிட்டன... சிரிப்பார்கள் யாரும் கேட்டால். இனிமேல் வாடகைக்கு ஃப்ளாட் பார்த்து, நாற் காலிகள் கட்டில் வாங்கி, சுளவு வாரியல் வாங்கி, பல வெஞ்சணச் சாமான்கள் வாங்கி—

கற்பனையில் தன்னை முன்னிறுத்திப் பார்த் தான்.

சற்று முன் தள்ளிய வயிறு.

மீசையில், முன்நெற்றியில் தென்பட்ட நரைகள்.

காணாமற் போன இரண்டு கடைவாய்ப் பற்கள்.

வழித்து வழித்துத் தார் ரோடு போன்ற கன்னம்.



படிப்பகம்

இந்த லட்சணத்தில் சந்தனக் கலர் முழுக்கைச் சட்டையும் கையில் கட்டிய காப்பும் கழுத்தில் பிச்சி ஆரமும் நெற்றியில் பூசிய திருநீறும்... நிரம்ப அலங்காரமாக இருக்கும்.

குட்டினோ வந்தான். மணி ஐந்தே கால் ஆகியிருந்தது.

''க்யா நாராயண்? கொஞ்ச நாளா சத்தமே இல்லே!''

என்ன சொல்வது அவனிடம்? வெறுமனே சிரித்தான்.

''சலோ... ரெண்டு பாட்டில் பீர் அடிக்கலாம்... ரொம்ப நாளாச்சு...''

எல்லாம் மூடி வைத்துவிட்டு எழுந்தான்.

ஹார்னிமன் சர்கிள் தாண்டி, ஷேர் மார்க்கெட் கட்டடம் கடந்து. ஃப்ரீ பிரஸ் ஜர்னல் ஆபீசுக்கு எதிரே இருந்த பீர் பாரில் நுழைந்தனர். மூலையில் ஒரு மேஜை காலியாக இருந்தது.

சக்காராம் இரண்டு பாட்டில் லண்டன் பில்ஸ்னரும் ஒரு தட்டில் கடலைச் சுண்டலும் இரண்டு ஸ்பூன்களும் வைத்து விட்டுப் போனான். கிளாசை சற்றுச் சாய்த்து, பீரை வடித்தான் குட்டினோ. நல்ல நுரை வளம். குளிர், வாயில் நிரம்பித் தொண்டையில் இறங்கிக் குடலில் விழுந்தது,

''இன்னும் ஒரு மாசம், ரிட்டயர் ஆவதற்கு...'' என்றான் குட்டினோ.

நாட்கள் வேகமாகப் போய்க் கொண்டிருந்தன.

''ரிட்டயர் ஆன பிறகு என்ன செய்வாய்?''

''கோவா போய்விடுவேன்... மட்காவ் பக்கம் கிராமத்தில் வீடொன்று கிடக்கிறது. ரொம்பப் பழசு. அதை மராமத்து செய்து அங்கேயே தங்கி விடுவேன்...''

www.padippakam.com

''பொழுது எப்படிப் போகும்?''

''அங்கு நிறைய சர்ச்சுகள் உண்டு. மியூசிக் பேண்ட் உண்டு. தென்னை மரங்கள் நிறைய... கடலைகளும் மணல் வெளிகளும் உண்டு... பொரித்துத் தின்னப் பாங் கடா, சுர்மா மீன்கள் உண்டு... மலிவாக மது வகைகள் உண்டு...

''இங்க, தம்பி குடும்பம் ஒத்துக் கொள்வார்களா?''

''அரே சோடா யார்... நம்மை யாருக்கு வேண்டும்! கிழவனாயாச்சுல்லா?''

''யுவர் ஓல்ட் லவ்... இன்னும் அங்கே இருக்காளா?''

''யா... ஷி இஸ் எ கிரான்ட் மதர் நௌ. முன் தள்ளிய வயிறும், தொய்ந்த முலைகளும், முன் நீண்ட பற்களுமாக... பிச்...''

''நீ அவளுக்காக உன்னைப் பாழடித்திருக்கக் கூடாது!''

''இப்ப சொல்லி என்ன பிரயோஜனம்? எல்லாம் முடிஞ்சுக்கிட்டிருக்கு...லாஸ்ட் சம்மர் வி ஹேட் எ டான்ஸ் அன்ட் ட்ரிங்க் டுகெதர்...''

''கடந்த காலத்தின் புல்வெளிகளில் மேய்ந்து, மூச்சுத் தள்ளாடி, புண்களைக் காகம் கொத்தக் கொடுத்து, இறந்து போகலாம், இனி—''

''ஃபிர் கியா கரேங்கா... சக்காராம்... அவுர் தோ பீர்...''

சக்காராம் பேலும் இரண்டு பாட்டில் பீரும் இரண்டு இரட்டை ஆம்லெட்களும் நாடன் பிரட்டும் கொண்டு வைத்தான்.

ஒரு வாய் பீரை உறிஞ்சிவிட்டுக் குட்டினோ சொன்னான்—



படிப்பகம்

www.padippakam.com

''என் கணக்குத் தீர்ந்து விட்டது. சுவாரசியமற்ற இறுதிக் காட்சி... பிறகு திரை... நீ என்ன செய்யப் போகிறாய்?''

''ஒன்றும் செய்வதாக இல்லை. நீயும் போய் விட்டா யானால் கஷ்டமாக இருக்கும். ஆனால், நாம் எதை நிறுத்த முடியும்? உன்னை விட்டால் சொல்லத் தகுதியான நட்பென்று ஒன்றுகூட இல்லை.

''இன்னும் ஒன்றும் கெட்டுப் போய் விடவில்லை. யூ ஆர் ஸ்டில் யங்... மேரி எ நைஸ் கர்ல் அன்ட் என்ஜாய் லைஃப்...''

''அதை நீ செய்திருக்கலாமல்லவா?''

''அதனால்தான் சொல்கிறேன்... வாழ்க்கை யாருக் காவது உபயோகமானதாக இருக்க வேண்டும்...மண்ணில் கவிழ்த்த கள்ளுப் பானையாக இருக்கக் கூடாது.''

நல்ல உவமானமாகச் சொல்கிறான் குட்டினோ. எங்கோ படித்ததன் சாரம்... கலத்திலும் விழாமல் கன்றுக்கும் ஆகாமல் நிலத்தில் வீழ்ந்த பால் போல, எனக்கும் உதவாமல் என்னுடையவனுக்கும் பயனல் லாமல் அல்குல் பசலை பாய்ந்தவாறுள்ளது...

மணி ஏழே கால் ஆகியிருந்தது. புத்தியில் மிதமான போதை உறைத்தது.

''அவுர் தோ பீர்?''

''நை... ஆஜ் பஸ் ஹோ கயா...''

''சக்காராம்... பில் லாவ்...''

நாராயணன் பில் கொடுக்கக் குட்டினோ விடவில்லை. தட்டில் இரண்டு ரூபாய் போட்டு விட்டு எழுந்தான்.

''சலோ... இனி எங்கு போகலாம்?''

''போக எங்கும் இல்லை!''



படிப்பகம்

www.padippakam.com

''யா...ஹௌ லாங் யூ ஆர் ஃபீலிங் திஸ்...''

''குறைந்தது பத்து ஆண்டுகளாக...''

''எனக்கு இது தோன்ற ஆரம்பித்து இருபத்தைந்து ஆண்டுகள் ஆகின்றன. எனக்கென்று போக ஓர் இடமில்லை. நான் எங்கும் சேர்ந்தவனாக இல்லை. என்னை யாருக்கும் வேண்டாம்...ம்—யூ நோ மிஸ்டர் பைரிஸ்...த மாஸ்டர் ஸ்டெனோகிராஃபர்... ஹி வில் டீச் மார்க்கெட்டிங் டு த பாஸஸ்... ஹி வில் எஜுகேட் தெம் ஆன் இன்ஜினியரிங்... ஒரு காலத்தில் அவன் புத்தகங்களைச் சுமக்க ஆரம்பித்தான்... ட்வென்டி அட் எ டைம்... தர்ட்டி அட் எ டைம்... ஒய்வு பெறும்போது இரண்டு லெதர் பைகளில் புத்தகங்களைச் சுமந்து திரிந்தான். யா... த மாஸ்டர் ஸ்டெனோகிராஃபர் அலெக்ஸான்டர் பைரிஸ்... யூ வில் கோ வ்ரெக் யார்... யூ வில் கோ வ்ரெக் ...டேக் இட் ஃப்ரம் மி...''

பைரிஸின் உருவம் ஞாபகம் வந்தது. போர்ச்சுக்கீசியக் கலப்பின் சிவப்பு நிறம். வாயில் எப்போதும் எதையாவது மென்று கொண்டு, சஞ்சலப்பட்டுப் பார்த்துக் கொண்டு... சிராகப் பிளேடு படாத இடங்களில் திட்டான நரைமுடிகளுடன், பொருத்தமில்லாதவர்ணங்களில் அளவுகளில் சட்டை பேன்ட்களுடன், வாயில் கடித்த பல் குத்தும் குச்சியுடன்... பேச்சு மிகக் குறைந்து விட்டது. ஆபீஸ் முடிந்து எல்லோரும் இறங்கிய பின் திடீரெனத் திரும்பி வருவார். ஒருவேளை ஏதாவது புத்தகத்தை மறந்து விட்டிருக்கக் கூடும். யாருடனும் உரையாடல் கிடையாது. நிமிர்ந்த பார்வை, நேர்கொண்ட நடை. ஒரு காலத்தில் சிறந்த ப்ரிட்ஜ் விளையாட்டுக்காரர். யாராவது ஏதாவது கேட்டால் ஒரு சிறு முனகல் மட்டும் கேட்கும்.

மெடிகல் ரெப்ரசன்டேடிவ் வைத்திருப்பது போன்ற தோல் பையை அவர் காலி செய்த போது. ஒரு முறை



ச—10

படிப்பகம்

www.padippakam.com

பார்க்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. கிரியோஜெனிக் விஞ்ஞானம் பற்றி ஒரு புத்தகம், பிரஞ்ச் கற்றுக் கொள்ளும் புத்தகம் ஒன்று. 'செக்ஸ் ஃபார் அட்வான்ஸ்ட் லவர்ஸ்' என்று ஒன்று, 'சார்லஸ் சாப்ளின் சுயசரிதை' 'லிங்விஸ்டிக் சர்வே ஆஃப் இன்டியா,' கார்லோஸ் காஸ்ட்நடாவின் 'த செகன்ட் ரிங் ஆஃப் பவர்,' ஆட்டோ மொபைல் மெக்கானிசம் பற்றி ஒன்று...

வெளியே இவற்றை எல்லாம் சுமப்பதே சிரமம். பைரிஸ் உள்ளேயும் நிறையச் சுமந்து கொண்டிருப்பது கனக்கும் முகம்.

ஒரு மனிதன் பைரிஸ் போல் ஆவதற்குக் காரணம் கல்யாணம் ஆகாதது மட்டும்தானா? கல்யாணம் என்பது மனித புத்திக்கு நங்கூரமா? குட்டினோ மிகவும் உணர்ச்சி வசப்பட்டுப் பேசுவதாகப் புலப்பட்டது.

கூடவே கேயார்வி என்ற குன்னக்குடி ராமநாதன் வெங்கடேசன் ஞாபகம் வந்தது. திருமணம் காலா காலத்தில் ஆனவர்தான். போரிவிலியில் இரண்டு பெட் ரூம் ப்ளாட் இருந்தது. ஒரு மகன் பவாய் ஐ.ஐ.டி.யில் மூன்றாம் ஆண்டும் இன்னொரு மகன் பி ஃபார்ம் முதலாண்டும் படித்துக் கொண்டிருந்தனர். பைரிஸுக்கு அடுத்தபடியாகத் திறமையான ஸ்டெனோ. நியாயமாக இன்று அவர்தான் டைப்பிங் பூலுக்குப் பொறுப்பாக இருக்க வேண்டும். ஆனால், அவர் ஜூனியரான மகாதேவன் இருந்தார்.

தொழிற்சாலையில் இருந்து மாற்றலாகி நாராயணன் தலைமை அலுவலகத்துக்கு வந்த சமயம். மூன்றாவது நாள் கேயார்வி வந்தார். ஐந்தடியைத் தொட்ட உயரம். கோட்டென்றும் இல்லாத ஷர்ட் என்றும் இல்லாத சிமென்ட் கலர் உடுப்பு. கழுத்துக்கும் உடுப்பின் காலருக் கும் இடையில் மடித்துச் செலுத்திய கர்ச்சிப். தொண் டைக் குழிவரை போடப்பட்டிருந்த பொத்தான். கிழிந்த



படிப்பகம்

www.padippakam.com

சட்டைப் பாக்கெட்டில் மூன்று செதுக்கிய பென்சில்கள், முகத்தில் ஒரு கண்ணாடி, சட்டைப்பையில் இன்னுமொரு கண்ணாடி, மொட்டைக்கும் சம்மர் கிராப்புக்கும் இடையிலான சிகை அலங்காரம். தினசரி வழித்துச் சொர சொரத்த நரை முகம். நெற்றியில் பட்டும் படாமலும் சந்தனப் பொட்டு. நிரந்தரமாய்த் தொலைத்து விட்டுச் சிரிப்பைப் பற்றிய அக்கறையற்ற முகம்...

நேராக வந்து நின்றார். நேரடியாகக் கேட்டார்.

''சார் தமிளா ?''

''ஆமா.''

''எந்த ஊருன்னு தெரிஞ்சுக்கலாமா ?''

''நாகர்கோயில்.''

''நாடாரா ?''

''ஆமா.''

''சும்மா தான் கேட்டேன்... தப்பா நினைக்காதேங்கோ...''

''ஃபேக்டரியிலே இருந்தேளா ?''

''ம்...''

''எங்க தங்கி இருக்கேள் ?''

''கோலிவாடா... சி.ஜி.எஸ். குவார்ட்டர்ஸ்.''

''வாடகை எவ்வளவு ?''

''நூத்தம்பது...''

''தண்ணீர் தாராளமா வருமோல்லியோ ?''

''ஒ... காலைல நாலரை மணிக்கு வரும்...''

''ஒன் ரூம் கிச்சனா ?''



படிப்பகம்

www.padippakam.com

''ஆமா...''

''எத்தனை பேர் இருக்கேள்? நான் அநாவஸ்யமா தொந்தரவு பண்றேன்...''

''பரவால்ல... மூணு பேர் இருக்கோம்...''

''ஒருத்தர் கூட வச்சுப்பேளா?''

''படுக்க இடம் பத்தாதே!''

''அட்ஜஸ்ட் செய்துக்கலாம்...''

''மத்தவங்கள்ட்டே கேக்கணும்...''

''கேட்டுச் சொல்றேளா? தொந்தரவு ஒண்ணும் இல்லையே!''

''இல்ல இல்ல... கேட்டுச் சொல்லுகேன்... ஆமா, யாருக்காச் சுட்டி ரூம் தேடுகியோ?''

''அப்புறம் சொல்றேன்...''

கேயார்வி திரும்பி நடந்து போகும்போது கவனித்தான். ஒரு காலில் கறுப்பு நிற சாக்ஸ். இன்னொரு காலில் கருஞ்சிவப்பு நிற சாக்ஸ். கிழிந்தவற்றை எறிந்து விட்டு, கிழியாதனவற்றை ஜோடி சேர்த்திருப்பார் போலும்.

மதிய உணவு வேளையில் குட்டினோ வந்தான்.

''நாராயண்... அந்த மனிதனிடம் எச்சரிக்கையாக இரு. ஆங்...''

''ஏன்? எனி ப்ராப்ளம்?''

''யா... அந்த ஆள் தங்க இடம் தேடிக்கிட்டு இருக்கான்!''



படிப்பகம்

www.padippakam.com

நாராயணனுக்குக் கேட்க அதிர்ச்சியாக இருந்தது. பின்னால் தெரிந்தது, கேயார்வி வீடாறு மாதம் காடாறு மாதமாக வாழ்ந்து கொண்டிருந்தார் என்று. சில சமயம் மனைவி அலுவலகத்துக்கே வந்து விடுவாள், சம்பளப் பணம் வாங்க. அன்றைய கணக்கில் அடிப்படைச் சம்பளம் கிராக்கிப் படி எல்லாம் சேர்த்து ஐயாயிரத்து எழுநூறு பக்கம் கேயார்விக்கு வந்து கொண்டிருந்தது. பிடித்தங்கள் போக நாலாயிரத்து நூறாவது கிடைக்கும். சொந்த. வீடு ஆனால் வாழ்க்கை திரிந்து முறுகி இறுக்கம் பெற்றிருந்தது.

பிறகு நிரந்தரமாகவே அறையெடுத்துத் தங்க ஆரம் பித்திருந்தார். காலையில்மாட்டுங்காகன்சர்ன்ஸில் அல்லது சொசைட்டியில் சாப்பாடு. மத்தியானத்துக்கு இரண்டு பச்சைப் பழங்கள் வாங்குவார். சில சமயம் மர்ஸ்பான் பேக்கரி பாவும் வெல்லமும் வைத்துத் தின்று கொண் டிருப்பார். சில சமயம் மோத்திவாலா பால் கடையில் பாவுசேர் பால் வாங்கி மலாய் போடச் சொல்லிக் கேட்டு நின்றிருப்பார்.

யாரிடமும் கடன் கேட்டதாகத் தகவல் இல்லை. வீட்டுச் செலவுக்கும் சொந்தச் செலவுக்கும் போகச்சேர்ந்த பணத்தில் நிறைய ஷேர்கள் வாங்கி வைத்திருப்பதாகச் சொன்னார்கள்.

சசிதர மேனோன் திரும்பத் திரும்ப வற்புறுத்திச் சொன்னதன் பேரில், கையால் கடிதங்கள் டிராஃப்ட் செய்வதை விடுத்து டிக்டேஷன் கொடுக்க ஆரம்பித் தான் நாராயணன்.

சின்னச் சின்னக் கடிதங்கள், முந்திய நாளில் இருந்தே எப்படி டிக்டேஷன் கொடுப்பது என்று யோசித்துத் தயாரித்து—

கேயார்வியை டைப்பிங் பூலில் இருந்து யாரும் டிக் டேஷனுக்குக் கூப்பிடுவதில்லை, விவகாரமான ஆள் என்று.



படிப்பகம்

www.padippakam.com

இன்டர்காமில் மகாதேவனிடம் சொல்லிய இரண்டாவது நிமிடம் கேயார்வி நோட்டு, பென்சில் சகிதமாக வந்தார். நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு உட்கார்ந்தார். நோட்டைப் பிரித்தார். பென்சிலைத் தயாராக வைத்துக் கொண்டார். நாராயணன் முகத்தை, "டிக்டேஷன் கொடுக்கப் போகிறாயா?" என்பது போல ஏறிட்டுப் பார்த்தார். முதலிரவுக்குப் போகும் பெண்ணின் மனசுபோல் அடித்துக் கொள்ள ஆரம்பித்தது. தொண்டையைச் செருமிக் கொண்டு சொல்ல ஆரம்பித்தான்—

''டு மெசர்ஸ் காந்திலால் ஷா அன்ட் கம்பனி...''

''அதெல்லாம் நான் பார்த்துக்கறேன். விஷயத்தை மட்டும் சொல்லுங்கோ...''

சொன்னான். அவர் எதையும் குறித்துக் கொள்வதாகக் காணோம்.

''அவ்வளவுதானே! நான் பார்த்துக்கறேன். அடுத்த லெட்டர் குடுங்கோ...''

இப்படியே மூன்று கடிதங்கள் ஆயின.

''ஷல் வி ஹேவ் ஸம் காஃபி?'' என்றார் கேயார்வி. அவரே மணி அடித்துத் துக்காராமிடம் ''தோ காஃபி,'' என்றார்.

நாராயணனுக்கும் வேண்டும் போலிருந்தது.

மேலும் மூன்று கடிதங்கள் 'டிக்டேஷன் கொடுத்து' முடிந்தபோது காப்பி வந்தது.

கூடத்தில் இருந்த அனைவர் முகத்திலும் குறும்பு சிரித்தது.

"தேங்க் யூ ஃபார் த காஃபி!'' என்று சொல்லிக் கொண்டு, கேயார்வி எழுந்து போனார்.



படிப்பகம்

www.padippakam.com

முதலில் குட்டினோ வந்தான்.

''அரே வ்வா...என்ன தீவிரமா டிக்டேஷன் கொடுத்தாய்?''

மத்தியான்ம் சசிதர மேனோன் சொன்னார்—

''யூ டோன்ட் ஆஃபர் தட் ஃபாக்ஸ் காஃபி அன்ட் ஆல். அந்தக் கிழவன் உன்னை முட்டாளாக்கி விடுவான்...''

யாராவது ஓய்வு பெறும்போது, சத்தியநாராயண் பூஜை நடத்தும்போது, திருமணங்களுக்கு அன்பளிப்பு செய்ய என நன்கொடை வசூலிக்கும்போது, கேயார்வி இரண்டு ரூபாய்க்கு மேல் கொடுத்ததில்லை.

ஒரு முறை சசிதர மேனோன் அறையில் நாராயணன் உட்கார்ந்திருந்தபோது, கேயார்வியை வரச் சொன்னார்.

''கூப்டீங்களா?'' என்று வந்து நின்றார்.

''ஐ டிட் நாட் கால் யூ ஃபார் எ டிஸ்கஷன் மேன்... பிரிங் யுவர் புக்,'' என்றார் கோபத்துடன் மேனோன்.

''சாரி சார்...'' என்று நடந்த கேயார்வியைக் காண இரக்கமாக இருந்தது.

யார் அன்று ஓய்வு பெற்றார் என்று ஞாபகம் இல்லை. ஐந்து மணிக்கு மேல் நான்காவது மாடியின் திறந்த வெளியில் போடப்பட்ட நாற்காலிகளில் எல்லோரும் அமர்ந்திருந்தனர். முன் வரிசையில் வழக்கம் போல் கேயார்வி. யூனியன் செயலாளர் வரவேற்று, சீஃப் எக்ஸிகியூட்டிவ் பேச ஆரம்பித்தபோது, பிஸ்கட், ஸ்வீட், மிக்சர் அடங்கிய பொட்டலம் வந்தது. தொடர்ந்து தேநீரும்.

கேயார்வி பொட்டலத்தைப் பிரிக்கவில்லை தேநீரை வாங்கிச் சூடாகக் குடித்தார். பொட்டலத்தை மறுநாள்



படிப்பகம்

www.padippakam.com

மதிய உணவுக்காகக் கையில் எடுத்துக் கொண்டார். தலைவர், ஓய்வு பெறுபவரின் முப்பதாண்டுச் சேவையைத் தீவிரமாக விவரித்துக் கொண்டிருந்தபோது, கேயார்வி எழுந்து அமைதியாகப் புறப்பட்டு நடந்தார். தலைவர் சற்று நிறுத்தித் தோளைக் குலுக்கிய போது, எல்லோரும் சிரித்தனர்.

பின்பு குட்டினோ சொன்னான்—கேயார்வி முதல் வரிசையில் வழக்கமாக அமர்வதன் காரணம், சாய் முதலில் அங்கு விளம்பப்படும் என்பதால்தான் என்று.

என்ன எங்கு குணங்கிப் போய்விட்டது என்று தெரியவில்லை. ஆனால் லயம் கெட்டு விட்டது. சீர் கெட்ட மனத்தின் மீது மேலும் மேலும் ஆளுக்கு ஒரு செங்கல்லாய் அடுக்கிக் கொண்டிருந்தனர்.

மேலும் ஒரு செங்கல்லை எடுத்து வைக்க நாராயணனுக்கு விருப்பமில்லை. இந்த நகரம் சிலரை மட்டும் வேறு விதங்களில் திரித்து விட்டு விடுகிறது என்று தோன்றியது. வட்டக் கோட்டையின் திருகல் தென்னை மரம் போல. அதற்கு மட்டும் ஏன் அப்படித் திருகத் தோன்றியது என்று தெரியவில்லை. இல்லை, அதன் திருகலுக்கான கட்டளை விதையில் இருந்தே வந்திருக்குமா ?

பைரிஸூக்கும் கேயார்விக்கும் குட்டினோவுக்கும் போலத் தனக்கும் அப்படிக் கட்டளைகள் இருந்திருக்கக் கூடுமா ?

இதை எப்படிச் சரி செய்ய முடியும் ?

மௌனமாக நடந்த கால்கள் பழக்கம் காரணமாய் வி. டி. ஸ்டேஷன் வாயிலை அடைந்திருந்தன. தாணா வண்டியொன்று புறப்படத் தயார் நிலையில் நின்றது. எட்டுப் பத்துக்கான அடுத்த வண்டியில் போகலாம் என்றான் குட்டினோ.



படிப்பகம்

www.padippakam.com

அடுத்த வண்டி ரத்தாகி, குர்லா லோகல் காட்டியது இன்டிகேட்டர். குட்டினோவை விட்டு விட்டுப் போக நாராயணனுக்கு விருப்பமில்லை.

கடைசியாக ஒன்பது பத்துக்கு இருவரும் வண்டி பிடித்தனர்.



படிப்பகம்

www.padippakam.com

# பதினொன்று

ஞர்லா மலையடிவாரத்தில் இருந்த நூற்பாலையின் ஸ்பின்னிங் மாஸ்டரைப் பார்த்து விட்டு அலுவலகம் வந்தபோது மணி பதினொன்றே முக்கால் ஆகியிருந்தது. ஜூலை மாதத்தின் மழைப் புழுக்கம். வியர்வை ஊற்றியது. ப்ரீஃப் கேசைத் திறந்து, துண்டை எடுத்து முகம் துடைத்தான். பக்கவாட்டு மேஜை மீது வைத்திருந்த தண்ணீரை எடுத்து மடமடவெனக் குடித்தான். இனி இந்த மழை இறுக்கம் செப்டம்பர் வரை நெருக்கும். மழை பெய்யும் வேளையில் மட்டும் சற்று ஆசுவாசம் கிடைக்கும்.

மழைக் காலங்களுக்கேயான மற்ற அசௌகரியங்கள் உண்டு. எங்கும் சொதசொதவென்று ஈரம். தாமதமாய் வந்து போகும் மின்சார ரயில்கள். சாலைக் குப்பைகளின் சேற்றுக் கலங்கள். மோசமாகும் ரோடுகளும் போக்குவரத்து நெருக்கடி உச்சங்களும், ஆர். கே. லக்ஷ்மணனின் கார்ட்டூன் ஒன்று ஞாபகம் வந்தது—சாலையின் பள்ளங்களைத் தூர்ப்பதை விடவும் அவற்றின் குறுக்கே பாலங்கள் கட்டி விடுவது எளிது என்று.

நேற்றுக் கொடுத்த கடிதங்கள் சில பார்வைக்கு வந்திருந்தன. அன்றைய தபாலில் வந்த சில ஆர்டர்கள், விசாரணைக் கடிதங்கள், நினைவூட்டல்கள்...



படிப்பகம்

www.padippakam.com

பன்னிரண்டரை ஆகும் போது ராகவேந்திராவின் ஃபோன் வந்தது. கல்கத்தாவில் இருந்தா பம்பாயில் இருந்தா என்று தெரியவில்லை.

"இப்பத்தான்யா காலை வண்டியிலே வந்தேன். குளிச்சு சாப்டுட்டு உனக்கு ஃபோன் பண்றேன். சௌக்கியமா இருக்கியா? சாயங்காலம் ஃப்ரீயா இருப்பியா?"

தமக்கை வீட்டுக்கு வந்திருப்பார். பார்த்து மூன்று ஆண்டுகள் ஆகி விட்டன. குரல் கேட்டபோதே குதூகல மாக இருந்தது. மாலை ஐந்து மணிக்கு அலுவலகம் வருவதாகச் சொன்னார்.

அன்றைய பகல் உற்சாகமாகக் கழிந்தது. ராக வேந்திர ராவைக் கூட்டிக் கொண்டு, கிராஸ் மைதானத் தின் புல்வெளிகளில் அமர்ந்து ரொம்ப நேரம் பேசிக் கொண்டிருக்கலாம், மழை இல்லாவிட்டால்.

ஸ்டெர்லிங் தியேட்டரில் 'காகே முஷா' என்றொரு ஜப்பானியப் படம் போட்டிருந்தார்கள். ராவுக்கு வசதி இருந்தால் இன்றோ நாளையோ பார்த்து விடலாம். வெள்ளிக்கிழமை மாற்று விடுவார்கள்.

பெரும்பாலும் பத்திருபது நாட்கள் ராவ் பம்பாயில் இருப்பார். தேவையானால் இரண்டு நாட்கள் விடுமுறை எடுத்துக் கொண்டு எங்காவது போய் வரலாம் என்று நினைத்தான் நாராயணன். ஒரு சிறிய பசுஞ்சோலை தென்பட்டது போலிருந்தது ராவின் வருகை.

அவரோடு நட்பு ஏற்பட்டுப் பதினேழு ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆரம்பத்தில் தமிழ்ச் சங்க நூலகத்தில் புத்தகங்கள் எடுக்க வருவார். ஞாயிறு மாலைகளில் பெரும்பாலும் ஜானகிராமன் நாவல்களைத் தேடிக் கொண்டு நிற்பதைக் காணலாம். அணுகச் சற்றுத் தயக்க மாக இருந்தது நாராயணனுக்கு. அவனைவிடப் பத்தாண்டு



படிப்பகம்

www.padippakam.com

கள் மூப்பு இருக்கும். அப்போது ராவுக்கு நாற்பது வயதுப் பக்கம் இருக்கும்.

நல்ல சிவப்பு. சற்றுக் குள்ளமான உருவம். மீசை கிடையாது. நெற்றியில் நேராக ஒரு சிவப்புக்கோடு தெரிந்தும் தெரியாமலும் காணக் கிடைக்கும். அது வட கலையா தென்கலையா அல்லது கலையே இல்லாததா என்று அவனுக்குப் பிரித்தறியும் அனுபவம் போதாது அப்போது.

ஞாயிறு மாலைகளில், ராகு காலம் முடிந்தவுடன், தமிழ்ச் சங்கத்தில் சொற்பொழிவு தொடங்குவார்கள். பாரதி கண்ட புதுமைப் பெண், கம்பனின் தம்பியர், கண்ணதாசன் கவிதைகள்—ஒரு மேற்பார்வை என்று யாராவது கற்றுச் சொல்வார்கள். நாராயணனுக்கு அப்போது அந்தச் சொற்பொழிவுகள் கேட்கப் பிடிக்கும். தலைவர் முன்னுரை ஆரம்பிக்கும்போது, சொல்லி வைத்தது போல் ராவ் வெளியேறி விடுவார்.

ஒரு நாள் நாராயணன் நேரமாகி வந்தபோது ராவ் இறங்கிக் கொண்டிருந்தார்.

''என்ன சார்! கூட்டம் ஆரம்பிச்சிட்டாளா?''

''அதனாலதான ஓய் கீழ வாறேன்... என்ன... நீர் இன்னைக்கு லேட்?''

''லேட்டாப் போச்சு...அதென்ன, கூட்டம் ஆரம்பிச்ச உடனே டக்குன்னு கீழ இறங்கிருகியோ?''

''ஆமா...வேற வேலை இல்லை. எப்பப் பாரு, இதான்...பெரட்டிக்கிட்டு வருது...''

''என்ன நாவல் எடுத்திங்க?''

''மோகமுள்... ரொம்ப நானாத் தேடீட்டு இருந்தேன்...''

''இன்னும் படிக்கல்லியா?''



படிப்பகம்

www.padippakam.com

''எப்பவோ படிச்சது. சரி... நீர் போய் உக்காரும்... மொத்தம் பதிமூணு பேர்தான் இருக்கா...நீர் போனா சுந்தரராமனுக்குச் சந்தோஷமா இருக்கும். பதினாலு பேர் ஆயிருமோல்லியோ... பதிமூணு அதிர்ஷ்டம் இல்லாத நம்பர்...''

''வேண்டாம். பதிமூணு பேராவே இருக்கட்டும்... இங்க உட்காரலாமா ?''

ராவுக்கு ஆடையணிகளில் அக்கறை இல்லாமை அருகில் இருந்தபோது புலப்பட்டது. சட்டை முடியும் இடத்தில் சிறிது பநியனும் தெரிந்த பிறகு பேன்ட் தெரிந்தது.

கூட்டம் முடிவது வரைக்கும் பேசிக் கொண்டு இருந்தார்கள். பழகுவதற்கு இனிமையான மனிதராக இருந்தார். எப்படி இந்த ஆறேழு மாதங்கள் அவரிடம் பேச்சுக் கொடுக்காமற் போனோம் என்று தோன்றியது. திராவிடக் கட்சிகள் விஷமாய் ஏற்றியிருந்த பிராம்மணக் காழ்ப்பு ஒரு காரணமாக இருக்கலாம் என்று தோன்றியது.

அதன் பிறகு எல்லா ஞாயிறுகளிலும் மேலே கூட்டம் நடக்கும் போது கீழே உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தனர். நாராயணன் கூட்டங்களைத் தவிர்க்க நேருகிறது என்பதற்காக, சற்று நேரத்தோடு நாலரை மணிக்கெல்லாம் வர ஆரம்பித்தார். சில சமயம் கையில் சின்னப் பொட்டலம் இருக்கும். நான்கு பஜ்ஜி அல்லது இரண்டு வடை என்று சாயங்கால டிபனுக்கு வீட்டில் செய்த பலகாரம்.

ராகவேந்திர ராவுக்குப் போரிவிலியில் ஒரு படுக்கையறை கொண்ட ஃப்ளாட் இருந்தது. அடுத்த கட்டடத்தில் அவர் தமக்கை வீடும். சதா ஞாயிறு தோறும் புறப்பட்டு வந்து விடுகிறாரே, வீட்டில் கோபித்துக்கொள்ள மாட்டார்களா என்று தோன்றும்.



படிப்பகம்

www.padippakam.com

நாராயணனைத் தனியாகக் காணும் மற்றச் சங்க உறுப்பினர்கள், "என்ன ராவைக் காணோம் ?" என்று கேட்க ஆரம்பித்தனர்.

ஒரு நாள் மாலை இரண்டு பேரும் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்த போது வெங்கடாசலம் சிரித்துக் கொண்டு போனான்.

ராவ் சொன்னார்— "இவனைச் சாதாரணமா நெனைச்சுப் போடாதேயும் ஓய்... அன்னைக்குக் கேக்க நான் பாரும்... நாராயணனோடெல்லாம் ஏன் பழகறேர்... அவன் நான்—பிராமினாக்கும்னு. நான் போடான்னுட்டேன்."

அற்பமான மனிதர்கள் எந்தச் சாதியில் இல்லை ?

ஐந்து மணிக்குச் சரியாக, ராவ் மேலே ஏறி வந்தார்.

"வாரும்...அதென்ன கரெக்டா அஞ்சுமணி ?"

"இழே நின்னுக்கிட்டிருந்தேன்யா ? ஆபீஸ் டைம்லே எதுக்குத் தொந்தரவு ? சரி ! கடையைக் கட்டு. போகலாம்..."

எல்லோரும் கலைந்தோடும் அவசரத்தில் இருந்தனர். கேயார்விக்கு ராவ் யார் என்று அறிய வேண்டும்போலும்.

"சார்...உங்களண்டை ஏழாம் தேதி டைம்ஸ் ஆஃப் இன்டியா இருக்குமா ?"

"இருக்கும், பாக்கணும். ஏன் ? வேற ஜாப் ட்ரை பண்றீங்களா ?"

"இல்ல...ஸ்லிப் டிஸ்க் பத்தி ஒரு ஆர்டிகிள் இருக்குதாம்..."

"ஆமா...இருந்தது. நானும் படிச்சேன்."

"நாளைக்குக் கொண்டுட்டு வாறேளா ? இஃப் யூ டோன்ட் மைன்ட்...மறக்காம எடுத்துட்டு வாங்கோ...



படிப்பகம்

www.padippakam.com

சனி ஃபார் த டிஸ்டர்பன்ஸ்...ஆமா! சார் யாரு? பாக்காத மொகமா இருக்கு!''

''எங்க பெரியம்மா மகன். பேரு ராகவேந்திரன். கல்கத்தாவிலே புரூக்பாண்டிலே சேல்ஜ் மேனேஜரா இருக்காரு...ஒம்பதாயிரத்துச் சொச்சம் சம்பளம்...''

''நாமமெல்லாம் போட்டுருக்காரு... நாடார்ஸிலே நாமம் போடுவாளா?''

''விருதுநகர் பக்கம் போடுவர்... அவுரு சொந்த ஊரு சாத்தூரு...''

''தப்பா நெனைச்சுக்காதீங்கோ...சும்மாத்தான் கேட்டேன்...வரட்டுமா? நாளைக்கு மறந்திராதீங்கோ... ரொம்ப ட்ரபில் குடுக்கறேன்...''

கேயார்வி திருப்தியில்லாமல் புறப்படும்போது குட்டினோ வந்தான்.

''எஸ்...மிஸ்டர் கேயார்வி... கோயிங் ஹோம்?''

''சல்த்தா ஹூம் பாய்...சல்த்தா ஹூம்...''

நாராயணன் குட்டினோவை அறிமுகம் செய்து வைத்தான்.

''டீ கே...யூ ஹாவ் காட் கம்பனி டுடே. ஐ வில் மேக் எ மூவ்...'' என்று குட்டினோ கிளம்பினான்.

இருவருமாக இறங்கிக் கீழே வந்தனர். ஆனந்த பவனில் காஃபி குடித்து விட்டு நடந்தனர்.

''ஒரு ஜப்பான் படம் நடக்கு. பாக்கலாமா?''

''இன்னைக்கு வேண்டாம். நாளை பார்ப்போம்...''

ராவின் நடையில் சற்றுத் தொய்வு தெரிந்தது. தலை முடி பெரும்பாலும் நரைத்து விட்டிருந்தது.



படிப்பகம்

www.padippakam.com

இன்னும் மூன்றோ நான்கோ ஆண்டுகள் ஓய்வு பெற, மகன் சி.ஏ. தேறி வேலைக்குப் போக ஆரம்பித்திருந்தான். பிரச்னைகள் இல்லாத வாழ்க்கை என்று தோன்றியது. ஆனால் பிரச்னைகள் இருப்பதையும் இல்லாமல் இருப்பதையும் முகம் காட்டுகிறதா என்ன ?

ராவின் பிரச்னைகள் சற்று நூதனமானவை. பிரச்னையின் வீரியம் வயது காரணமாகக் குறைந்து போயிருந்தாலும் கூட. திகைப்புகளை ஏற்படுத்தும் அனுபவங்கள்.

பதினைந்து ஆண்டுகள் இருக்கும். அவர் மனைவி ஆமதாபாத்தில் இருக்கும் உடன் பிறந்தான் வீட்டுக்குப் போயிருந்த - போது வழக்கமான ஞாயிறு மாலை சங்கக் கட்டடத்தின் மணியரங்கில் 'பதச்சோறு' நிகழ்ச்சி நடந்து கொண்டிருந்தது.

ராவ் சுவாரசியமில்லாமல் கேட்டார்—

''போரிவிலி வாறேரா ?''

''ஏன் ? அங்க என்ன வச்சிருக்கீரு ?''

''வக்யதுக்கு என்ன இருக்கு ? அத்திம்பேர் கோவா போயிட்டு வரச்சே ரெண்டு பாட்டில் விஸ்கி கொணாந்திருக்கார்...ஒண்ணு நம்ம தாக சாந்திக்கு...''

''வாரும் போலாம். ராத்திரி சாப்பாட்டுக்கு என்ன செய்யது ?''

''எல்லாம் பாத்துப்போம்... வா நீ பேசாம ...''

போரிவிலி போய்ச் சேர்ந்தபோது மாலை ஆறே முக்கால் மணி இருக்கும். டி.வி.யின் இந்திப் படம் ஆள் நடமாட்டத்தைக் குறைத்திருந்தது. ஃப்ளாட்டுக்குப் போய், சன்னல்களைச் சாத்திவிட்டு, ஊதுபத்திகளைக் கொளுத்தி வைத்தார்—விஸ்கியின் வாசம் தெரியாமல் இருக்க ...



படிப்பகம்

www.padippakam.com

நாராயணன் கேட்டான்—''அக்கா வீட்ல யாரும் வர மாட்டாளா?''

''பயப்படாதேயும்—லேட்டாத்தான் வருவேன்னு தெரியும்...''

பாட்டிலை எடுத்து வைத்து, கண்ணாடித் தம்ளர் களைக் கழுவி வைத்து விட்டு, அப்பளம் சுடப் போனார். காலிங் பெல் சத்தம் கேட்டது. விறுவிறெனப் பாட்டிலை மறைத்து விட்டுக் கதவைத் திறந்தார். பக்கத்து ஃப்ளாட் சிறுமி, கல்கி கேட்டு.

''ஏன் இந்தப் பயம் பயப்படுகீரு?''

''வீட்டுக்காரிக்கோ சிஸ்டருக்கோ பயமில்லேய்யா... 'பாரவி'யிலே ஒரு கழுகு இருக்கு. ஊருக்குப் போறப்போ அங்க போயி வத்தி வைக்கும்...''

ராவின் குடும்பச் சூழ்நிலை பழமை ரீதியானது என்று நாராயணனுக்குத் தெரியும். கும்பகோணத்தில் இருக்கும் இன்னொரு அக்கா புருஷன் பம்பாய்க்குப் பயணம் ஆனால், போரிவிலிக்கு வந்து குளிக்கும் வரை வழியில் கொலைப் பட்டினியாகக் கிடப்பார் என்று சொல்லக் கேட்டிருக்கிறான்.

விஜ்ஜத் பப்படம் சுட்டுக் கொண்டு வந்தார். கொஞ்சம் ஓமப்பொடி இருந்தது. சாப்பிட்டு முடித்த போது ஒன்பதே முக்கால் ஆகியிருந்தது. ரூம் போய்ச் சேரப் பதினொன்றரை ஆகிவிடும்.

''இங்க படுத்துக்கிட்டு காலம்பற போமேன்யா...''

''இல்ல, போயிருவேன்...''

''அட சும்மா கெடயும்...நான் உன்னை ஒண்ணும் செய்திர மாட்டேன்.''

பப்பாளிப் பழத்தின் குடலை உருவி வெளியே எறிந்தது போலிருந்தது. தனது தயக்கத்துக்குக் காரண





படிப்பகம்

www.padippakam.com

மான அந்தரங்கமான பயம் தனக்கே புலப்பட்டது போல்...

முதல் அறையில் அவனுக்கு ஒரு தலையணை பெட் ஷீட்டும், அவருக்கு ஒரு தலையணை பெட்ஷீட்டும் கொண்டு வந்து போட்டார்.

போதை சற்றுத் தெளிந்தது போல்—

"தப்பா நெனைச்சுக்கிடாதேயும், ராவ்.....இந்த மாதிரி ஒரு பயம் எனக்கு எப்பவும் இருந்துக்கிட்டு இருக்கு...'

கூட்டம் நிறைந்த மின்சார வண்டிகளில், நெருக்கிப் பிடித்து நின்று கொண்டிருக்கையில், தற்செயலாய்படுவது போல் கை வைத்து, சட்டெனக் கவ்விப் பிடிக்கும் விரல் கள் ஏற்படுத்தும் அருவருப்பு, கூச்சம், வெட்கம்...

"எனக்கு இது ஒண்ணும் புதுசில்லை ஓய்...ஒன்னை மாதிரி நெறையப் பேர் என்னைப் பத்தி அப்படித்தான் நெனச்சிடறான்... ஆபீஸ் கொலீக் ஒருத்தன் ரொம்ப நாளா வீட்டுக்குக் கூப்பிட்டுட்டுருந்தான்...யதேச்சையா ஒரு நா அந்தப் பக்கம் போறச்சே எட்டிப் பாத்தேன். வீட்ல எல்லாரும் டி.வி. பாத்துண்டு இருந்தா... பெட் ரூம்ல உக்காந்து பேசிண்டிருந்தோம். கல்யாணம் ஆகி, ரெண்டு பசங்களும் இருக்கு...சட்னு கதவைத் தாப்பா போட்டுட்டான்யா...எனக்கு வேத்துப் போச்சு... ரொம்பக் கஷ்டப்பட்டு தட்டிக்கிட்டு வந்தேன். அவனுக்கு ஒரு மாதிரி ஆகிப் போச்சு...நல்லவன்தான். பொறவு ரொம்ப வருத்தப்பட்டான்..."

"வீட்ல பெண்டாட்டி பிள்ளையோ இருக்கயிலே எப்பிடிய்யா இது மாதிரி?"

"அதான் எனக்கும் வெளங்கல...அதாவது பரவா யில்லய்யா...நான் கும்பகோணத்திலே இருக்கறச்சே தெனமும் ஒருத்தனை பஸ்ஸிலே பார்ப்பேன். பேசீட்டே



படிப்பகம்

www.padippakam.com

போவோம்... அட்ரஸ் எல்லாம் தந்தான்... சுவாமி மலையிலே கோயில் பக்கத்திலே... ஒரு கல்யாணத்துக்குப் போயிட்டு, ஹாலிடேதான், எட்டிப் பார்க்கலாம்னு போனேன்... என்னைப் பாத்துட்டு அவன் முகமெல்லாம் செவந்து போச்சுய்யா... வெடவெடன்னு நடுங்க ஆரம்புச்சுட்டான்...தனியாக் கூட்டீட்டுப் போயி வீட்டுக்கெல்லாம் எதுக்கு வாறேருன்னு சத்தம் போடுகான்யா... பேசாம வந்துட்டேன். எனக்கு நன்னா வேணும்... அடுத்த நா பஸ்ஸிலே பாக்கறச்சே சொல்றான்—'வீட்ல எல்லாம் வசதிப் படாது. வேற எடம் பார்த்துட்டு சொல்றேன்'னு... எனக்குப் பளார்னு அறையலாம்னு தோணிச்சு...''

''பொறவு?''

''பொறவு என்ன பொறவு...அந்தப் பஸ்ஸிலே போறதை விட்டுட்டேன்...''

''நான் அப்படியெல்லாம் நினைக்கலய்யா...தப்பா எடுத்துக்கிடாதேயும்.''

''தப்பென்னய்யா தப்பு? இல்லேன்னா நீ என்னத்துக்கு அவசரப் படணும்? எனக்குப் புரிஞ்சு போச்சு... நீயும் எல்லாரையும் போல நினைச்சுப்போட்டே...''

''அப்படி எல்லாம் இல்ல, ராவ்...''

''சரி, போகட்டும் விடு...அதுல என்ன இப்ப? நூறு பாத்தாச்சு...இதொண்ணும் எனக்குப் புதுசில்லே போ... ஏதோ நம்ம முக விசேஷம். பாக்கறவங்களுக்கு அப்படித் தோணுது. யாராவது ஸ்நேகமாப் பேசினா நானும் சகஜமாப் பழகிடறேன். பெறகு இந்த மாதிரி அவஸ்தை...''

நாராயணனுக்கு மிகவும் சங்கடமாக இருந்தது. அநாவசியமாக ஓர் நட்பைக் காயப்படுத்தி விட்டோம் என்று. நெடு நேரம் தூங்காமல் புரண்டு கொண்டிருந்தான். அதிகாலை இரண்டே கால் மணியின் நிசப்தம்



படிப்பகம்

சூழ்ந்த இரவு. பவழ மல்லிகை மடல் விரிந்து காற்றில் கரைந்து கொண்டிருந்ததை நாசி உணர்ந்தது.

அதிகாலை ஐந்தரை மணிக்கு ராவ் மூக்கை இறுகப் பிடித்தபோது திடுக்கிட்டு விழித்தான். சற்று நேரம் ஒன்றும் புரியவில்லை.

''என்ன திருதிருன்னு முழிக்கறே? எந்திரிச்சு பல்லு தேச்சுக்கிட்டு வா...டிகாக்ஷன் ஆயிரும் இப்ப...''

ஏதோ காரணத்துக்காக அன்று விடுமுறை இருந்தது. குளித்து விட்டு வரும்போது கள்ளத் தொண்டையில் பாடிக்கொண்டு பூஜை முடித்து விட்டு வெளியே வந்தார். ராவுக்கு நன்றாகப் பாட வரும். முறையாகப் பயின்ற சங்கீதம். மேடை யேறிக் கச்சேரி செய்ய வேண்டும் என்பது அவர் நீண்ட நாளைய ஆசை.

துவைத்த பனியன், ஜட்டியைக் காயப் போட்டு விட்டு வந்து உட்கார்ந்தபோது டைம்ஸ் ஆஃப் இந்தியாவைத் தூக்கிப் போட்டார். மணி எட்டரை ஆகியிருந்தது. சற்று உள்வாங்கிய காலனி. ஆகையால் அதிக அரவ மில்லை. 'கேலா வாலா' சத்தம் சற்றுத் தூரத்தில் கேட்டது.

காலிங் பெல் சத்தம். ராவ் துள்ளி எழுந்து போனார். சர்வ இயல்புடன் ஒரு பெண் உள்ளே நுழைந்து வந்தாள். இருபத்து மூன்று இருபத்து நாலு வயதிருக்கும். காலை யில் குளித்த துலக்கமும் திருத்தமும். தோலின் சிவப்பும் முகத்தின் களையும் ராவின் குடும்பத்துக்குக் கடவுள் செய்த நன்றிக் கடன் போலும். இயல்பான கவர்ச்சியின் கூறுகள்...

ராவ் சொன்னார்—''ஃபிரண்டு...நாராயணன்... என்னய்யா அப்படிப் பார்க்கறீர்? என் அக்கா பொண்ணு தாரா...எல்.ஐ.சி.யிலே இருக்கறா...''

உள்ளே போன தாராவின் பின்னாலேயே ராவ் போனார். உள்ளே பேச்சுக் குரல் கேட்டது.

www.padippakam.com

''அப்பா சொன்னா, ராத்திரி ரொம்ப நேரம் விளக்கு எரிஞ்சுக்கிட்டு இருந்ததுன்னு...''

''பேசிக்கிட்டு இருந்தோம். ஒரு வாய் காபி சாப்பிடறயா?''

''நான் கலந்துக்கறேன், மாமா... அம்மா கேக்கச் சொன்னா, காத்தால சாப்பிட வருவியான்னு... அவரையும் அழைச்சுண்டு வா...''

''வேணாம். அவன் சங்கோஜப் படுவான். நானே சமச்சுக்கறேன்...''

''நானே சமச்சு வச்சிரவா... லீவுதானே... அம்மாட்ட சொல்லீட்டு வந்திடறேன்...''

''என்னமோ செய்,'' என்று கூறிக் கொண்டு, ராவ் வெளியில் வந்தார்.

''பயப்படாதே, நாராயணா... தாரா நன்னாச் சமப்பா...''

ஒரு குடும்பத்தினருக்குள் இருந்தநேசமும் நெருக்கமும் சந்தோஷம் தருவதாக இருந்தது. குடும்பத்தின் முறுக்கமான கட்டு இந்த அனுசரணைதான் போலும் ராவின் இன்னொரு அக்காள் மகள் ஒரு கிறிஸ்துவனைப் பதிவுத் திருமணம் செய்து கொண்டதாகச் சொன்னது ஞாபகம் வந்தது. அதனுடனேயே ஒரு அல்பமான எண்ணம் துளிர் விட்டு, கொடி வீசிப் படர்ந்து, மொட்டரும்பி, மலர்ந்து மணம் பரப்பி—

ராவ் துரத்தித் துரத்தி அடிப்பார் என்று நினைக்கையில் சிரிப்பு வந்தது.

புல் வெளியில் அமர்ந்திருந்தபோது, திடீரெனக் கேட்டான், நாராயணன்—

''உங்க மருமக தாரா இப்ப எங்க இருக்கா ?''



படிப்பகம்

www.padippakam.com

''என்னய்யா திடீர்னு தாரா ஞாபகம்? இப்ப பெரிய பூசணிக்காய் மாதிரி பெருத்துப் போயிட்டா... பாத்தா அடையாளம் தெரியாது. யூட்ரஸ் வேற எடுத்தாச்சு... பதினெட்டு வயசிலே அவளுக்கு ஒரு பொண்ணு இருக்கா... பார்க்கத் தாராவை விட லட்சணம் போ... கட்டிக்கிறியா?''

ராவ் நுட்பமான ஒரு நரம்பைச் சுண்டியது போல... அலையலையாகச் சிரிப்பும் தோல்வியும் கலந்து முடைந்து பின்னியது போல ஒரு வெளிப்பாடு... சன்னமான ஒரு வேதனை...

ராவ் மறுநாளும் வந்திருந்தார். சினிமா பார்த்து விட்டுப் போரிவிலிக்குப் புறப்படுகையில் சொன்னார். ''நாளைக்கு வர மாட்டேன்... இனி சனிக் கிழமை பார்ப் போம்...''

சர்ச் கேட் ஸ்டேஷனில் போரிவிலி வண்டி பிடித்து, நாராயணன் மாட்டுங்கா ரோடில் இறங்கிக் கொண் டான். இனி சனிக் கிழமை வரை காத்திருக்க வேண்டும்.

ராவிடம் முதுமை ரேகை போட ஆரம்பித்து விட்டது. எதிலும் ஒரு சுவாரசியமின்மை. ஓய்வு பெற்ற பின் என்ன செய்வதென்ற திகைப்பு தலைகாட்ட ஆரம்பித்திருந்தது. காலையில் எழுந்து, குளித்து, பூஜை செய்து, பேப்பர் படித்து, உண்டு, உறங்கி, கோயிலுக்குப் போய், டி.வி.யில் ஆங்கிலச் செய்தி கேட்டு...

ஓய்வு நாளைத் திட்டமிடாத இந்திய நகர வாழ்க்கை. அறுபது முடிந்த சில மாதங்களில் மடிந்து போவது நல்லது போலும் மீதி வாழும் ஆண்டுகள் சோற்றுக்குச் செலவும் பூமிக்குப் பாரமும்தான்.

ராவின் சோர்வும் தனது சோர்வும் ஒன்றுதான் எனப் பட்டது. இதில் குடும்பம், பிள்ளை குட்டிகள், பொறுப்புக்களின் பங்கு என்ன? நாளடைவில் இது இன்னும் சீரழிந்து போகும். இன்னும் பதினைந்து



படிப்பகம்

www.padippakam.com

ஆண்டுகள் பொறுத்து வரும் தனது வாழ்நாளைப் பற்றி யோசித்துப் பார்த்தான். ஒன்று, அதற்குள்ளாகவே தற்கொலை செய்து முடிந்து போயிருக்கலாம். அல்லது ஏதாவது ஒரு கோயில் திண்ணையில் சிறியதோர் பையைத் தலைக்கு வைத்து உறங்கிக் கொண்டிருக்கலாம். காவியும் தாடியும் ஒரு பாதுகாப்பான, தோட்டா துளைக்காத உள் அங்கி. சக மனிதனின் துன்பத்துக்கெல்லாம் நான் காரணம் இல்லை, எனக்குப் பொறுப்புக் கிடையாது, என் மீது குற்றம் சுமத்துவதோ, தூக்கில் ஏற்றுவதோ நடவாத காரியம்... என்னை விட்டு விடு... சத்து, சித்து, ஆனந்தம்.

சனிக்கிழமை ராவ் கேட்டார்.

''எவ்வளவு ரொக்கம் வச்சிருக்கே?''

திடீரென்று எதற்குக் கேட்கிறார் என்றுபுரியவில்லை.

''எவ்வளவு வேணும்?''

''அட கைமாத்துக் கேக்கல்லய்யா! எவ்வளவு வச்சிருக்கேன்னு சொல்லு...''

''எதுக்கு ? சொல்லும்...''

''சொல்லுய்யான்னா ! ரொம்பப் பிகு பண்றீரே...''

''கேஷா அதிகம் இருக்காது. பிக்ஸட் டெப்பாசிட்லே எம்பதினாயிரம் இருக்கு... ஷேர்லே சுமார் எழுபதினாயிரம் இன்வெஸ்ட்மென்ட் இருக்கும். இப்ப அதுக்கு மார்க்கெட் வேல்யூ ரெண்டரை அல்லது ரெண்டே முக்கால் பக்கம் இருக்கும்...''

''அப்ப மூணுக்குக் குறையாம எடுக்கலாம்இல்லியா?''

''ஆமா...''

''என் போரிவிலி ஃப்ளாட்டை டிஸ்போஸ் பண்ணப் போறேன்...''



படிப்பகம்

www.padippakam.com

''பண்ணீட்டு...''

''கல்கத்தாவிலே செட்டில் ஆகப் போறேன்...''

''ஏன்? இது கெடந்துட்டுப் போகுது !''

''என்ன பிரயோஜனம்? எவ்வளவு நாளா பூட்டிப் போட்டு வைக்கறது? வெளீல விசாரிச்சேன். ஒரு பார்ட்டி மூணுக்குக் கேக்கறா... எனக்கு உன் ஞாபகம் வந்தது...''

''எனக்கு என்னத்துக்கு இப்பப் போயி வீடும் இன்னொண்ணும்...''

''ஏன்? மசானக் குழியிலே போய் உக்கார வயசாயாச்சா?''

''அதுக்கில்ல... சாமியாருக்கு யானை பரிசு கொடுத்தது போல...''

''நடந்து போறதுக்குப் பதில் யானை மேல போறது. என்ன கெட்டுப் போச்சுங்கறேன்...''

''கொஞ்ச நாள்தானே... இப்படியே ஓட்டீர லாம்னு...''

''எப்படி வேணும்னாலும் ஓட்டு. அதுக்குசொந்தமா வீடு இருக்கப்படாதுன்னு இருக்கா... வேணும்னா கூட ரெண்டு பேயிங் கெஸ்ட் வச்சுக்கோ... ஊர்லே யாராம் ஒரு வயசான பொம்பளையைக் கொணாந்து சமச்சுப் போடச் சொல்லு...''

ராவ் இவ்வளவு தீர்மானமாக யோசித்து வைத்திருப் பார் என்று எண்ண ஆச்சரியமாக இருந்தது.

''இந்தா பாரு... கூடுதலா யோசிக்காதே... மூணு லெட்சம் ரெடி பண்ணு...டாக்குமென்டேஷன் கொஞ்சம் செலவாகும். எழுதிப் போட்டுட்டுப் போறேன்.''

''கொஞ்சம் யோசிக்கட்டும்...''



படிப்பகம்

www.padippakam.com

"ஒரு மண்ணாங்கட்டியும் யோசிக்காண்டாம். பணத்தை ரெடி பண்ணு..."

குட்டினோவைக் கேட்டான். அவன் மிகுந்த உற்சாகமாக இருந்தான். பணம் பத்தவில்லை என்றால், தானும் கொஞ்சம் தருவதாகச் சொன்னான். அடுத்த வாரம் மும்முரமாக வேலை நடந்தது.

ராவ் சொன்னார்— "இன்னா பாரும், மொத்தப் பணமும் தயாராகலைன்னா அதுக்காக உசிரை விடணும்னு இல்லே. ரெடியானதைக் குடு. மீதியைப் பொறவு டி டி. வாங்கி அனுப்பு..."

ராகவேந்திர ராவ் பார்த்த நல்ல நாளில் பத்திரம் பதிவாகியது. அன்று நாராயணன் விடுமுறை எடுத்தான். அந்த முறையும் ராவ் கல்கத்தா மெயிலில் ஊருக்குப் புறப்பட்ட போது ஸ்டேஷன் போயிருந்தான். ரயில் கிளம்பிக் கையசைக்கையில் கண்கள் பொங்குவது போலிருந்தது.

அந்த மாத வாடகையைக் கொடுத்து விட்டு, அறையைக் காலி செய்து விட்டு, போரிவிலி ஃப்ளாட்டுக்கு வந்தான். சொந்தச் சாமான்களை இரண்டு நடையாக லோகல் ரயிலிலேயே கொண்டு வந்து சேர்த்தான். வீட்டைத் தூத்து வாரித் துப்புரவு செய்து, துடைத்துக் கழுவ ஒரு நாளாயிற்று. இரண்டு சீலிங் ஃபேன்கள். ட்யூப் லைட்டுகள் எதுவும் வேண்டாம் என்று சொல்லி விட்டார் ராவ். ஐந்நூறு சதுர அடிகள் கொண்ட ஒன் ரூம் கிச்சன் வீடு சாமான்கள் எதுவும் இன்றி 'ஹோ' எனக் கிடந்தது.

நாடக ரிஹர்சல் நடத்தத் தோதான இடம். ஒரு காலத்தில் 'ஆதே அதுரே'யும், ஏவம் இந்திரஜித்தும் 'ஜுலுஸ்'ம் பார்த்த மோகத்தில், தமிழில் நவீன நாடகங்கள் நடத்த அலைந்து திரிந்தது ஞாபகம் வந்தது. திரைக்குப் பின்னாலான வேலைகள் பல நாராயணன் மேற்பார்வையில். ரிஹர்சல் நடத்த இடம்கேட்டு அலைந்ததில் தமிழ்ச் சங்கத்



படிப்பகம்

www.padippakam.com

தலைவர் அனுமதி மறுத்து விட்டார். அவர் எழுதி இயக்கும் 'பாசச் சுவர்' நாடக ரிஹர்சல் அங்கு நடக்கப் போவதாகச் சொன்னார். இரவு ஏழு மணிக்கு மேல் ஆந்திர மகாசபாவில் இடம் தந்தார்கள். ஸ்டேட்பேங்க் ஆபீசர்ஸ் மெஸ்ஸில் கேட்டரிங் ஆபீசராக இருந்த கணேஷ் ஒவ்வொரு நாளும் சிற்றுண்டிக்காக நாற்பது வடை அல்லது போண்டா அல்லது சமோசா மடக்கிக் கொண்டு வருவார். இந்தியன் ஏர்-ஃபோர்சில் கிளார்க்காக இருந்த தானப்பன் ஜெராக்ஸ் வேலை எல்லாம் இலவசமாகச் செய்து கொடுத்தார்.

நட்பு கொடி கட்டிப் பறந்த காலம். நேரம் போனது தெரியாது. இரவு பன்னிரண்டரை மணிக்கு மேல் மாட்டுங்கா போஸ்ட் ஆபீசின் முன்புறம் சாலையோர இட்டலிக் கடையின் முன்னால் பெஞ்சில் அமர்ந்து ஊத்தப்பம் தின்றது. இரண்டாவது ஆட்டம் சினிமா முடிந்து பாவ்பாஜி, வடாபாவ், பாவ் புர்ஜி தின்று தண்ணீர் குடித்து விட்டு மேலும் இரண்டு கிலோ மீட்டர் நடந்த நாட்கள்.

இப்போது யாரை எங்கு போய்த் தேடுவது?

ராவ் நிறையப் புத்திமதிகள் சொல்லிவிட்டுப்போனார்.

"ஒரு கட்டில் வாங்கு... டேபிள், செயர் வாங்கு... கேஸுக்கு அப்ளை செய்... ஒரு குக்கர், சில பாத்திரங்கள் வாங்கு. சாயங்காலம் ஒரு வேளை சமச்சுச் சாப்பிடு... சிஸ்டர் வீட்ல சொல்லீட்டுப் போறேன், ஏதாம் உதவி வேணும்னா சங்கோஜப் படாமக் கேட்டுக்கோ..."

வீட்டுச் சாவி தருகிற அன்று, ராவ், அவர் அக்கா வீட்டுக்குக் கூட்டிப்போய் மேலும் சில பரிந்துரைகள் செய்தார். ஒரு சாவியைக் கழற்றி, ராவின் அக்கா வீட்டில் கொடுத்தான் நாராயணன்.

"இது பேருக்குத்தான் என் வீடு... பசங்களுக்குப் படிக்க படுக்க, எதுக்கானாலும் நீங்க யூஸ் பண்ணிக்கிடுங்கோ...



படிப்பகம்

www.padippakam.com

நான் காலம்பற போனா ராத்திரி படுக்கத்தான் வருவேன்.''

ராவிடம் சொன்னான்—

''இது என்னைக்கு ஆனாலும் உம்ம வீடுதான். எப்பத் திரும்ப வேணும்னாலும் சொல்லுங்கோ...''

''போமய்யா... நீர் பெரிசாத் தத்துவம் பேசாண்டாம்.''

மாட்டுங்காவில் இருந்து வந்தபிறகு, சிறுது சிரமமாக இருந்தது. ஒரு பிரம்மசாரிக்கு மாட்டுங்கா போலத் தோதான இடம் கிடையாது. இது முற்றிலும் தனியான ரெசிடென்ஷியல் காலனி காலையில் சாயா குடிக்க அரை கிலோ மீட்டர் போக வேண்டும். அங்கு போல, நாற்சந்தியில் நின்றுகொண்டே சில மணி நேரம் கொல்ல முடியாது.

இரவு பத்து மணிக்கு மேல், போர்வை ஒன்றை விரித்துப் படுத்த போது, வாழ்க்கை சிமென்ட் தரை போலத் தட்டையாக, கடினமாக, செயற்கைக் குளிர்ச்சியுடன் இருப்பதாகப் பட்டது. ஒரு வேளை ராவின் சில யோசனைகள் நேரம் கொல்ல ஏதுவாக இருக்கக்கூடும்.

ராவின் அக்கா வீட்டில் உபயோகம் அற்றுக் கிடந்த ஸ்டவ் ஒன்று தந்தார்கள். அவர்கள் ரேஷன் கார்டில் மண்ணெண்ணெய் வாங்கிக் கொள்ளச் சொன்னார்கள்.

காலையில் ஆங்கிலத் தினசரியுடன் இப்போது கறுப்புக் காப்பி சுவையாக இருந்தது.

ஊருக்கு எழுத வேண்டும் என்று நினைத்துக் கொண்டான். பம்பாயில் சொந்தமாக வீடு வாங்கி விட்டான் என்று பெரிய மாமா ஒருவேளை பெருமைப் படலாம். கல்யாணி கட்டாயம் சந்தோஷப் படுவாள். பிள்ளைகளுக்கு விடுமுறை விடும்போது பம்பாய்க்கு வரச் சொல்லலாம். தங்குவதற்கு இடமுண்டு என்ற உறுதியுண்டு இப்போது.



படிப்பகம்

www.padippakam.com

கல்யாணி எழுதிய கடிதத்துக்குத் தான் இன்னும் பதில் எழுதவில்லை என்பது ஞாபகம் வந்தது.

என்ன எழுதுவது என்று தெரியவில்லை. என்ன எழுதுவது என்று தெரியவில்லை என்பதன் அர்த்தம் என்ன? வேண்டாம் என்று எழுதத் துணிவில்லை என்பதுதா்ன ! வேண்டாம் என்று எழுதத் துணிவில்லை என்றால், மனம் வேண்டும் என்ற திசையில் யோசிக்கிறது என்பதுதானே ! முடிவெடுக்கத் தைரியம் போதவில்லை, கூச்சம் கொள்கிறது என்பதுதானே!... மனம் சலனம் கொள்கிறது என்பதுதானே! குழப்பம் அதிகரிக்கும் போலத் தோன்றியது நாராயணனுக்கு.



படிப்பகம்

www.padippakam.com

# பன்னிரண்டு

அகமத் நகரில் சின்ன வேலையொன்று இருந்தது. அதை முடித்து விட்டுப் பேலாப்பூர் போனான். அங்கு ஒரு மணி நேர வேலை. மறு நாள் நாராயணனுக்கு ஔரங்காபாத்தில் இருக்க வேண்டும். அது முக்கியமான வேலை. சுமார் நாலு லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள மெஷின் ஆர்டர். கிடைத்தால் மேனேஜனுக்குச் சந்தோஷமாக இருக்கும்.

அக்மத் நகர், பேலாப்பூர் வேலை முடிந்தபின், மாலை ஓட்டல் அறையைக் காலி செய்துவிட்டு, ஐந்து மணி வாக்கில் ஔரங்காபாத் பஸ்ஸில் ஏறினான். இரவுஒன்பதுமணிவாக்கில் ஔரங்காபாத் போய் விடலாம் இதற்கு முன் போயிராத ஊர். பக்கத்திலேயே அஜந்தா குகைகளும் எல்லோரா குகைகளும் இருந்தன. ஒரு நாள் இடைவெளி கிடைத்தால் ஏதேனும் ஒன்றைப் பார்த்து வரலாம்.

பஸ் எதிர்பார்த்த நேரத்தில் போய்ச் சேர்ந்தது. இந்த நேரத்தில் பஸ் நிலையம் தவிர நகரம் தூங்க ஆரம்பித்திருக்கும் என்று எதிர்பார்த்ததற்கு மாறாக எங்கும் வெளிச்சமும் இரைச்சலுமாக இருந்தது.

பஸ் நிலையம் பக்கம் ஓட்டல் ஏதாவது பார்த்துச் சாமான்களைப்போட்டுவிட்டு கைகால் முகம் கழுவிச் சாப்பிடப் போகலாம் என்று நினைத்தான்.



படிப்பகம்

www.padippakam.com

செப்டம்பர் மாத லேசான முன்பனி தூங்கினால் அசதி நீங்கி எழுந்திருக்கலாம் என்று தோன்றியது ப்ரீஃப் கேசையும் தோள் பையையும் தூக்கிக் கொண்டு பக்கத்தில் இருந்த நான்கு லாட்ஜ்களில் கேட்டபோது, எல்லாம் நிறைந்து வழிந்தது. ரயில்வே ஸ்டேஷன் பக்கம் பார்க்கலாம் என்று ஒரு ஆட்டோ வைத்துக் கொண்டு போனான். அங்கும் இதே கதிதான். ஒரு வேளை டூரிஸ்ட் சென்டர் என்பதால், இரவாகி விட்டால் இடம் கிடைக்காது போலும். ஆட்டோக்காரன் மேலும் ஏழெட்டு லாட்ஜ் களுக்கு அங்குமிங்குமாக அலைந்தான்.

சலிப்பாக இருந்தது. இரட்டைக் கட்டில் அறை இல்லா விட்டாலும், மூன்று கட்டில் ரூம் கூட இல்லை. அப்போதுதான் என்ன சங்கதி என்று ரிக்ஷாவாலாவிடம் கேட்கத் தோன்றியது.

மாநில முதலமைச்சர் நகரில் முகாமிட்டிருப்பதாக வும், நாளை இரவுதான் போவார் என்றும், அதுவரை இப்படித்தான் இருக்கும் என்றும் சொன்னான். கையில் கர்ச்சிப்பில் சுற்றிய சோள ரொட்டிகளும் பூண்டு சட்னியு மாக உதிரி உதிரியாக மக்கள் அலைநது கொண்டிருந் தனர்.

பஞ்சாயத்துக் கமிட்டிகள், தாலூகா கமிட்டிகள், மாவட்டக் கமிட்டிகள், கூட்டுறவுப் பால் சொசைட்டி, கரும்பு சொசைட்டி, பஞ்சு சொசைட்டி, நூல் சொசைட்டி, ஆரஞ்சுப் பழ சொசைட்டி, பப்பாளிப் பழ சொசைட்டி...

ஒரு வகையில் வியப்பாக இருந்தது. அடி மட்டத் தலைவர்களும் சாதாரண மக்களும் மாநில முதலமைச்ச ருடன் நேரடியான தொடர்பு வைத்திருந்ததை அறிய. எட்டிப் பார்த்த சில ஓட்டல் அறைகளில் கட்டில்களை ஒதுக்கிப் போட்டு விட்டு, தரையில் சுற்றி உட்கார்ந்து, ரொட்டி அல்லது பொரி சாப்பிட்டுக் கொண்டிருந்தவர் கள், தரையில் தலையணை இல்லாமல் துண்டு விரித்துப் படுத்துக் கொண்டிருந்தவர்கள், கூட்டமாக உட்கார்ந்து



படிப்பகம்

www.padippakam.com

உரையாடிக் கொண்டிருந்தவர்கள், காரிக்கன் துணியில் தைத்த பைஜாமா, நெஞ்சில் பை வைத்துத் தைத்த கையில்லாத சட்டை, ஜிப்பா, தொப்பி, மீசைகளோடும் மீசைகள் அற்றும் முகங்கள்...சுடுசெங்கல்லை உறைத்துப்போட்டது போன்ற காவி நிறத்தில் நெற்றி, கழுத்து, காது நுனிகள் என்று பொட்டு வைத்தவர்கள்...

உழைப்பில் முறுகிய உடல்கள், கிராமத்து மண்ணின், வியர்வையின், அழுக்கின், புகையிலைப் பொடியின் கலவை வாடை...

இரவில் ரயில்வே ஸ்டேஷனில் கண் விழித்துக் காத்திருந்துதான் இரவைக் கழிக்க வேண்டுமோ என்று தோன்ற ஆரம்பித்தது. ஜல்காவ்—ஜாமோட் பாதுகாப்பாக இருந்ததாகத் தோன்றியது. அலுத்துப் போயும் இரக்கப்பட்டும் ரிக்ஷாவாலா கேட்டான்...

''சாப்...கிளப் மாதிரி ஒரு இடம் இருக்கிறது. தங்க சில அறைகள் உண்டு. அவ்வளவு நாகரீகமாக இருக்காது. ஒரு ராத்திரி சமாளித்துக் கொள்ளலாம் என்றால் போவோம்.''

ஒரு மாதிரி அனுமானிக்க முடிந்தது. சற்று நேரம் யோசித்தான். வேறு வழியில்லை. நாளை மாலை வேறு லாட்ஜ் பார்த்துக் கொள்ளலாம். இரவில் இன்று உறங்கவும் காலையில் கடன்கள் செய்யவும் ஒரு இடம் வேண்டும்.

பழங்காலத்து ஹவேலி போல இருந்தது. கிளப் பென்றும் லாட்ஜ் என்றும் சத்திரம் என்றும் எந்தப் பெயரிலும் அழைக்கலாம். குழுக்களாகக் கீழ் உதட்டின் அடியில் 'தம்பாக்கூ' ஒதுக்கிக் கொண்டு, சீட்டாடிக் கொண்டிருந்தனர். கேரம் ஆடிக் கொண்டிருந்தனர். சுண்டல் பொட்டலங்களை முன்னால் வைத்துக் கொண்டு, நாட்டுச் சாராயம் குடித்துக் கொண்டு இருந்தனர். எங்கும் பீடிப் புகை, சிகரெட் புகை, சுருட்டுப் புகை. அந்த நேரத்திலும் புகையிலையைச் சுட்டுக் கருக்கித்



படிப்பகம்

www.padippakam.com

தூளாக்கி ஒருவன் பல் தேய்த்துத் துப்பிக் கொண்டிருந்தான், கறுப்பாக.

பையன் பதினைந்து ரூபாய் வாடகையுள்ள ஒரு அறையைக் காட்டினான். பெட்டியையும் பையையும் போட்டு விட்டு, மூலையில் இருந்த பாத்ரூமில் கைகால் முகம் கழுவப்போனான் சாப்பிட்டு வரலாம் என்று இறங்கினான். இரைச்சலின் ஊடேயே அவன் இருப்பை வித்தியாசமாகப் பார்த்தனர் குதூகலங்களில் இருந்தவர்.

நன்றாகப் பனி பெய்து கொண்டிருந்தது. ஸ்வெட்டர் எடுத்து வரவில்லை. சாப்பாட்டுக்காக நெடுந்தொலைவு தேடி நடப்பது அலுப்பாக இருந்தது. பத்தே கால் மணி ஆகியிருந்தது. சுத்தமான சைவஓட்டல்கள் எல்லாம் பூட்டி இருப்பார்கள். எங்காவது இரண்டு ரொட்டி, ஒரு டால்ஃப்ரை, ஆம்லட் சாப்பிட்டு விட்டுப் படுத்தால் போதும்.

நுழைந்த ஓட்டலில் நறுக்கிய வெங்காயமும் எலுமிச்சம் பழத் துண்டுகளும் சுட்ட பப்படமும் கொண்டைக் கடலைச் சுண்டலும் பிராந்தி பாட்டிலுமாக உட்கார்ந்திருந்தனர். தேங்காய் அரைத்திராத மட்டன் குழம்பு செக்கச் செவேலென எண்ணெய் மிதக்க ரத்தம் போலத் தட்டுகளில் தெரிந்தது.

சர்வர் பையன் தொளதொளத்த காற்சட்டைப் பையில் கைவிட்டுக் கால் குப்பி எடுத்தான்.

வேண்டாம் என்றான், நாராயணன்.

''நாடன் சரக்கு வேணுமா? மொசம்பி நன்றாக இருக்கும்.''

பம்பாயை விட உள்நாட்டுப் பகுதிகளில் நாட்டுச் சாராயம் நன்றாக இருக்கும், மொசம்பி, சந்த்ரி என்று கச்சாப் பொருள் அடிப்படையிலான பெயர்கள். குளிருக்குத் தேவையாக இருந்தது. என்றாலும் மனம் செல்லவில்லை. சாப்பிட்டு விட்டு அறைக்குப் போனான்.



படிப்பகம்

www.padippakam.com

இந்த இரைச்சலில் தூக்கம் எப்படி வரும் என்று யோசித்தான். சுவரெங்கும் கசாப்புக் கடை போன்ற கறைகள். தலையணை தேங்காய்ச் சவுரி அடைத்தது போல் திண்ணென்று இருந்தது. தலையணை உறையும் மெத்தை உறையும் போர்க் களத்தில் கிடந்து பொறுக்கி எடுத்து வந்ததைப் போல. ஒருவேளை பேஷ்வா பிங்களேயின் போர் வீரர்கள் படுத்து உறங்கியும் இருக்கலாம்.

எவனும் எவளுமோ படுத்து உருண்டு,எச்சில் வடித்து, விந்து சிந்தி ... குடிப்பதைத் தவிர்த்தது நன்று. இல்லாவிட்டால் இந்தப் புரட்டலைச் சமாளிப்பது கடினம். சித்தர்களால்தான் இந்தச் சூழலில் நிச் சிந்தையாகத் தூங்க முடியும்.

பையில் இருந்த துவர்த்தை எடுத்துத் தலையணை மீது விரித்தான். போர்த்திக் கொள்ள ஏதுவும் இல்லை. பெட்ஷீட் சுமக்கும் வழக்கமில்லை. குளிர் கொஞ்ச நேரம் போனால் அறைச் சுவர்களைப் பொருட் படுத்தாது. உடைகளைக் கழற்றாமல் வேட்டியைப் போர்த்திக் கொள்ளலாமென விளக்கை அணைக்கப் போனான்.

மெல்லிய கதவு தட்டல். கிளப் பையன் சுவாதீனமாக உள்ளே வந்தான்.

''ஜெவுண் ஜாலா கா சாப்?''

''சாப்டாச்சுப்பா ... ''

''அவுர் குச் பாய் ஜே?''

''நொக்கோ ... தூங்கப்போறேன் ...''

''ஒரு நல்ல சரக்கு இருக்கு, சாப்...வெறும் இருபத்தஞ்சு ருப்யா ... புதுசா வந்திருக்கு ... அனுப்பவா சாப்?''

''நை யார் ... இன்று மூட் இல்லே ...''

''ஒண்ணும் சிக்கல் கிடையாது, சாப் ... எல்லோரும் முக்ய மந்திரிக்கான பந்தோபஸ்த் ஏற்பாடுகளில் ஓய்வின்றி இருக்கிறார்கள் ...''



படிப்பகம்

''ஆஜ் சோடோ யார்...நாளை பார்ப்போம்.''

விளக்கை அணைத்து விட்டுப் படுத்தும் தூக்கம் வரவில்லை. பக்கத்து அறைக்கும் நாராயணன் அறைக்குமான தடுப்புச் சுவர்க் கதவை போல்ட்டிங் செய்திருந்தனர். கதவில் இருந்த விரிசல் வழியாக ஒளிக் கற்றை வாள் போலப் பாய்ந்து கொண்டிருந்தது. விடிவிளக்குத் தேவையில்லை என்று அதையும் அணைத்தான். அவன் அறைதான் அந்த வரிசையில் கடைசி அறை. அடுத்தது குளிமுறி கக்கூஸ்களின் வரிசை. வீர மராத்தியரின் மூத்திர வாடை கதவைத் துளைத்துப் பரவிக் கொண்டிருந்தது.

பக்கத்து அறையில் சோடா பாட்டில் திறக்கும் சத்தமும் மராத்திய வசவுகளும். சமமான சத்தத்தில் பெண் குரல் ஒன்றும் கேட்டது.

எழுந்து கதவின் ஓட்டை வழியாகப் பார்த்தான் நாராயணன். நாற்காலியில் இருந்த ஆடவனின் கால்கள் மட்டும் தெரிந்தன. நேரே தெரிந்த கட்டிலில் 'தாமாஷா'க்காரியின் உடை அலங்காரங்களுடன் ஒரு பெண். கையில் இருந்த கண்ணாடித் தம்ளரின் திரவத்தை மடக்கெனக் கவிழ்த்தாள். அவளருகில் இருந்த இன்னொருவன் முன்னால் கிடந்த டீப்பாயில் இருந்த ரொட்டியைப் பிய்த்து சால்னாவில் தோய்த்துக் கொண்டிருந்தான்.

கட்டிலில் வந்து விழுந்தாலும் கவனம் பக்கத்து அறையின் சப்தங்களில் சென்று நிலை கொண்டவாறு இருந்தது. சற்று நேரத்தில் கதவு திறந்து அடைபடும் ஓசை. மூன்றாவது ஆள் வெளியேறுகிறான் போலும். உரத்த சத்தம் நின்று விட்டது. மறுபடியும் எழுந்து கதவிடுக்கின் வழியாக உற்றுப் பார்த்தான் நாராயணன்.

தனக்கு நாற்பத்தைந்து வயதாகிறது என்பது ஞாபகம் வந்தது. நெருக்கடியான பஸ்களில் விடலைத்தனமாகப் பிருஷ்டம் உராய்வதையும் ஸ்தனம் இடிப்பதையும் விட இது ஒன்றும் கௌரவமான செயலில்லை.



படிப்பகம்

www.padippakam.com

இருபத்தைந்து வயதுக்கு உட்பட்ட வாலிபன் எடுத்துக் கொள்ளும் அற்பத்தனமான சுதந்திரங்களைத் தானும் எடுத்துக் கொள்வது ஈனமானது என்று எண்ணினான். ஆனால் மனித மனம் எந்த வயதிலும் கேவலமானதாக இருக்க முடியும் போலும். போர்த்துக் கொண்டுள்ள கௌரவச் சட்டைகள் ஈனங்களை மறைத்தும் நாற்றங்களை மூடியும் வைத்துவிடும் போலும்.

மதுரையில் தன்னை மிரட்டிய பெண் தரகனை விடத் தான் உயர்ந்தவன்தானா என்ற எண்ணம் பொறி கிளப்பியது.

ஏழெட்டு ஆண்டுகள் ஆகியிருக்கும். ஒரு விடுமுறையில் தழைவாகப் பயணம் செய்த போது, மதுரையில் இரண்டு நாட்கள் தங்கி, மீனாட்சியம்மன் கோயிலைச் சுற்றிப் பார்க்க வேண்டும் என்று இறங்கினான். அதிகாலையில் வந்ததுவண்டி. புதியதாகவும் சுத்தமாகவும் தென்பட்ட லாட்ஜில் பாத்ரூம் இணைத்த ஒற்றைக் கட்டில் அறையெடுத்து, மூன்று மணி நேரம் தூங்கி, அழுக்குகள் துவைத்துக் குளித்து, உடைமாற்றி வெளியே வந்தான். தென்பட்ட ஒட்டலில் சிற்றுண்டி சாப்பிட்டான்.

திருப்பரங்குன்றம் போய் வரலாம் என்று பெரியார் பஸ் நிலையம் நோக்கி நடக்கையில் கிறிஸ்துவின் ஆலயச் சுவரோரம் கைரேகைச் சோதிடர்களின் வரிசையைத் தாண்டி, ஒருவன் எதிர்ப்பட்டான்.

''சார் ... டைம் என்னாச்சு ?''

''பத்தரை ஆகப் போகு...''

''சார் சாரதி லாட்ஜிலேயா தங்கி இருக்கீக ?''

''இல்லே ...''

''ஒரு நல்ல உருப்படி இருக்கு... காலேஜ் ஸ்டுடன்ஸ்... பிராமின்ஸ்...''



படிப்பகம்

www.padippakam.com

''வேண்டாய்யா...''

''ஓட்டலுக் கெல்லாம் வர மாட்டாக... ஹை சொசைட்டி... தனியா பங்களா இருக்கு...''

''வேண்டாம், விடுங்க...''

வேகமாக நடந்தான், நாராயணன். அதென்ன கல்லூரி மாணவி, பிராமின்ஸ் என்பது ? தமிழில் கதை எழுதுகிறவனெல்லாம், அடக்க ஒடுக்கமான, பண்பின் உறைவிடமான, தொட்டால் புலியாய்ச் சீறுகின்ற பெண் களுக்கு ராஜேஸ்வரி என்றும் மகேஸ்வரி என்றும், அவ்வப் போது மரியாதையுடன் சோரம் போகும், வாய்ப்புக் கிடைத்தால் மானேஜர் அல்லது முதலாளி மடியில் உட்காரும் பெண்களுக்கு ஸ்டெல்லா என்றும் நான்சி என்றும் பெயர் வைப்பது போல, அதுவும் ஒரு தாத்பரிய மாக இருக்கும் என்று நினைக்கையில் சிரிப்பு வந்தது.

பங்குனி சித்திரை வெயில் தம்முள் பந்தயம் நடத்திக் கொண்டிருந்தன. மத்தியானம் சாப்பிட்டு வந்து படுத்து, சற்று உறங்கி மீண்டும் குளித்துக் கீழே இறங்கிய போது, மறுபடியும் தரகன் தொந்தரவு. நாராயணன் சட்டை செய்யவில்லை. தெரியாத ஊரில் இது போன்ற வம்புகளில் மாட்டிக் கொள்ளாமல் இருப்பதே நல்லது. மறுநாள் காலை காளையார் கோயில் பார்க்கப் போன போதும் அதே ஆள். அங்குதான் நிரந்தரமாகச் சுற்றிக் கொண்டு கிடப்பான் போலும். வீடென்று ஏதும் இருக்குமா என்று தெரியவில்லை. இருக்கலாம். பெண்டு பிள்ளைகள் இருக்கலாம் மூத்த மகள் பத்தாவது வகுப்பில் படிக்கக் கூடச் செய்யலாம். வேறேதும் தொழில் பழகிக் கொள்ளவில்லை போலும், அல்லது இதுவே சுகமாகவும் சுவாரசியமாகவும் இருந்திருக்க வேண்டும். மூன்றாம் நாள் மாலையில் அவனைக் கண்ட போது, அனுதாபமும் எரிச்சலுமாகக் கலந்து தோன்றியது.

''சார்... பிளீஸ்... வந்து பாத்துக்கிட்டு வேண் டாம்னா விட்ருங்க...''



படிப்பகம்

www.padippakam.com

''வேணாம்பா...என்னை விட்டுரு...''

''ஒண்ணும் விவகாரம் கெடையாது, சார்...''

நாராயணனுக்கு இரக்கமாக இருந்தது, சற்று நின்று பாக்கெட்டில் கைவிட்டு ஐந்து ரூபாய் நோட்டை எடுத்து நீட்டினான்.

''இந்தா...காப்பி சாப்பிட வச்சுக்கோ...என்னைத் தொந்தரவு செய்யாதே—''

ஒரு கணம் அவன் கண்களும் தரகன் கண்களும் சந்தித்துக் கொண்டன. அந்தக் கண்களில் தென்பட்ட குறி நாராயணனை மிரள வைத்தது. நடையை எட்டிப் போட ஆரம்பித்தான்.

''நில்லு சார்...அம்பது ரூவா கீழவச்சிட்டுப் போ...''

''என்ன? நீ என்ன செல்ற?''

''சத்தம் மூச்சுக் காட்டாம ரூவாயைக் குடுத்துட்டுப் போ... காலைலே புக் பண்ணி வச்சுட்டு இப்ப வேணாம்னா என்னய்யா அர்த்தம்?''

''யேய்...அநாவசியம் பேசாத... நான் யாருன்னு உனக்குத் தெரியாது...''

''நீ யாரா இருந்தா எனக்கென்னய்யா? அதுக்கு மட்டும் ஆசை இருக்குல்லா? காத்துக்கிட்டிருக்க உருப்படிக்கு நான் என்னய்யா பதில் சொல்லுவேன்? காசை வச்சிட்டுப் போ...''

மீன் வலை சுருங்குவது போல, தென்பட்ட முகங்கள் நெருங்கிக் கொண்டிருந்தன. இதில் யாரிடம் என்ன நியாயம் பேச முடியும்? எடுபடுமா? தூரத்தில் தென்பட்ட போலீஸ்காரனிடம் சொன்னால் கேட்பானோ அல்லது அவனும் ஒரு கூட்டுக் களவாணிதானோ? நாராயணனுக்கு வியர்த்து ஊற்றியது, பர்சைத் திறந்து ஐம்பது ரூபாய் எடுத்துக் கொடுத்து விட்டு விறுவிறு வென நடந்தான்.



படிப்பகம்

www.padippakam.com

எல்லாம் சப்பென்றிருந்தது. ஒரு சின்ன இரக்கம் காட்டியதற்கு இந்த அவமானம் தேவைதான். பணம் போனது கூடப் பெரிதில்லை. பத்துப் பேர் முன்னிலை யில் இந்தத் தலை குனிவு...

அதற்கு மேல் அங்கு தங்கப் பிடிக்கவில்லை, நாராயண னுக்கு. வேறு முக்கியமான காரியங்களும் இல்லை. அனுபவம் அடிநாக்கில் இன்னும் கசந்தது. அறையைக் காலி செய்து விட்டு நாகர்கோயில் போய் விடலாம், மறுபடியும் தன்னைக் கண்டால் மிரட்டுவானோ என்று அச்சமாக இருந்தது இது என்ன அர்த்தமில்லாத பயம் என்றும் தோன்றியது.

நீண்ட நேரம் படுத்தே கிடந்தான். சாப்பிடக் கூடப் போகவில்லை. அறைக்கே தருவித்து உண்டான். மறு நாள் அதிகாலையில் அறையைக் காலி செய்து விட்டு, பஸ் பிடிக்கப் போகையில் கைரேகை சோதிடர்களின் வரிசை காலியாகக் கிடந்தது சற்று நிம்மதியாக இருந்தது.

புரண்டு புரண்டு படுத்தும் நெடு நேரம் தூக்கம் வர வில்லை. சாதாரணமாக, நேற்றிரவு பஸ் பயணம், பகல் பூரா அலைச்சல், தொடர்ந்த இன்று மாலை பஸ் பயணம், படுத்த உடன் தூக்கம் அள்ளிக் கொண்டு போயிருக்க வேண்டும்.

மனம் கலைந்து கிடந்தது. மணி ஒன்று தாண்டி விட்டது. இன்னும் தீவிரமாகச் சீட்டாடிக் கொண்டிருந் தனர். இரைச்சல் மட்டும் சற்றுத் தணிந்தாற் போல... பக்கத்து அறையில் சத்தமில்லை. உறங்கி இருக்கலாம். அல்லது வேலை முடிந்து விடுபட்டு வீட்டுக்கும் போயிருக் கலாம்.

எப்போது சுருண்டு கொண்டு தூங்கினான் என்று கவனமில்லை. காலையில் எழுந்தபோது பளீரென வெயிலடித்தது. சந்தை முடிந்து போன திடல் போலக் கிடந்தது கிளப்பின் முற்றம் எங்கும் குப்பை கூளங்கள்.



படிப்பகம்

www.padippakam.com

கனமான காரமான சுருட்டு இருந்தாலொழிய, கக்கூசுக்குள் நுழைய முடியாது போல.

கடன் முடித்து வெளியே பாய்ந்தான். அவுரங்காபாத்தில் இன்னும் ஒரு நாள் வேலை இருந்தது. அன்று மாலை வேலை முடிந்த கையோடு ஓரளவு சுத்தமாகத் தென்பட்ட இரண்டு மூன்று விடுதிகளில் கேட்டான். நான்காவது விடுதியில் இரவு ஒன்பது மணிக்குத் தருவதாய்ச் சொன்னார்கள். கூட்டம் வடிய ஆரம்பித்து விட்டது. போலும். எட்டுமணிக் கெல்லாம் கிளப்பைக் காலி செய்தான்.

அறையைச் சுத்தம் செய்து தந்தனர். மறுபடியும் சாமான்களைப் பிரித்து வைத்தான். குளித்தான். மனம் சற்று உல்லாசமாக இருந்தது.

'தமாஷா' நடந்து கொண்டிருந்தது நகரில். அல்லது இரண்டாவது ஆட்டம் சினிமா போகலாம். நேற்றைய உறக்கமின்மை பயம் காட்டியது. மூன்றாண்டு முன்பு வந்த இந்திப் படங்களும் பாம்பும் சிவபெருமானுமாகக் காணப்பட்ட மராத்திப் படமும் தவிர, வேறு ஈர்க்கின்ற விஷயங்கள் இல்லை.

எங்காவது சுக்கா ரொட்டி சூடாகக் கிடைக்கின்ற ஓட்டலாகப் பார்த்துச் சாப்பிட்டுப் படுக்கலாம் என்று தோன்றியது. ஒரு மார்வாடி மெஸ் காட்டினார்கள். குளிருக்கு இதமாக உள்ளே அடுப்பின் கணப்பு இருந்தது பருப்பு, கீரை, உருளைக் கிழங்கு, பச்சை வெங்காயம், எலுமிச்சைச் சாறில் ஊறிய பச்சை மிளகாய்... ரொட்டி தின்னத் தின்ன வந்து கொண்டிருந்தது. எத்தனை ரொட்டி தின்றான் என்று ஞாபகம் இல்லை. தின்று முடித்து ஒரு கிண்ணம் தயிர் வாங்கிச் சீனி போட்டுக் கலக்கிக், கரைத்துக் குடித்து விட்டு அறைக்கு வந்து படுத்தான்.

தூக்கம் இன்னும் வந்து சேரவில்லை. வயிறு கனமாக இருந்தது. கக்கூசுக்குப் போய் வந்தான். நெஞ்சை லேசாக



படிப்பகம்

www.padippakam.com

வலிப்பது போல... மூச்சு விட்டால் அடைப்பது போல... சற்றுக் கலவரம் அடைந்தான். நெஞ்சில் ஒரு படபடப்பு வந்து உட்கார்ந்து கொண்டது.

ஒரு வேளை மாரடைப்பின் ஆரம்ப அறிகுறிகளாக இருக்கலாம். ஆனால் சளசளவென்று வியர்க்குமென்று படித்திருக்கிறான். இனிமேல்தான் வியர்க்க வேண்டும். மூடிய அறையினுள் இப்படிக் கிடந்து ஒரு கனமான அட்டாக் வந்து இறந்து போகலாம். போகக் கூடாது என்று ஒன்றும் இல்லை. முப்பத்தெட்டு வயதில் வரலாம் என்றால், நாற்பத்தைந்து வயதில் வரக் கூடாதா? மூடிக் கிடக்கும் கதவை நாளையோ மறுநாளோ திறக்கும்போது அழுக ஆரம்பித்துக் கிடக்கும் பிணத்தைப் பார்ப்பார்கள். முகவரிதேடிப்பிடித்து அலுவலகத்துக்குத்தகவல்கொடுத்து, போலீசுக்குச் சொல்லி, போஸ்ட்மார்ட்டம் செய்து...

ஊரில் இருந்து எவர் வந்து உடலைப் பெற்றுக் கொள்ள? மேனோன் வரலாம். அல்லது தர்மத் தகனம் நடக்கலாம்.

சுவடற்றுப் போனதொரு வாழ்க்கை.

போன மாதம்—போரிவிலிக்குத் தாமசம் மாற்றிய மூன்றாவது வாரம். காலனி அல்லோல கல்லோலப் பட்டது. நான்கு கட்டடங்கள் தாண்டி, பவிஷ்ய நிதி கணக்காலயத்தில் மேல் நிலை நிர்வாகியாக இருந்த பாலகிருஷ்ணனின் சாவு...ஐம்பத்து நான்கு வயது இருக்கும். மனைவியும் மக்களும் பாலக்காட்டுப் பக்கம் நூரணி கிராமத்துக்குக் கல்யாணத்துக்குப் பேயிருந்த போது...

பாலகிருஷ்ணன் என்று பெயர் வைத்து இருந்தால், சாவு வராது என்பதல்ல. மூடிய ஃப்ளாட்டில் இறந்து கிடந்ததை நாற்றம் வீசத் துவங்கிய போது தெரிந்து கொண்ட நகர வாழ்க்கை.

அக்கம் பக்கத்தாரைக் குறை சொல்லியும் பயனில்லை. மனைவி இல்லாத சுதந்திரத்தை அவர் ராப்பகலாக



படிப்பகம்

www.padippakam.com

அனுபவிப்பதாக எடுத்துக் கொண்டிருக்கலாம். அல்லது பாலையும் பேப்பரையும் தற்காலிகமாக நிறுத்தி வைக்கக் கூட நேரமின்றி அவசரமாக மற்றெங்காவது போயிருக்க லாம்—சொல்லாமல். என்றெல்லாம் நினைக்க வாய்ப் புண்டு.

அன்று ஒரு ஞாயிற்றுக் கிழமையாக வேறு இருந்தது. காலனியில் தங்குபவன் என்பதால் கும்பலோடு போய் நின்றான் நாராயணன். போலீசும் உறவினரும் வந்து கதவை உடைத்ததும், குப்பென்று பரவிய கொடு நெடி. ஊதுபத்திக் கட்டுகள், டெட்டால், பினாயில் பாட்டில் கள், சார்லி, இன்டிமேட், பார்க் அவென்யூ என எதுவும் துர்நாற்றத்தைக் குறைக்க இயல வில்லை.

பெட்டியில் மரத் தூளும் ஐஸ் கட்டிகளும் போட்டு, பிணத்தைப் பரிசோதனைக்கு அப்புறப் படுத்துகையில், தற்செயலாகப் பிணத்தைப் பார்க்க நேரிட்டபோது, புறம் தள்ளிக் கிடந்த அந்தக் கண்கள்...

போஸ்ட் மார்ட்டம் செய்யப் போகும் டாக்டர் ஆக்ஸிஜன் மாஸ்க் அணிந்து கொள்வாரோ என்னவோ?

நாலைந்து நாட்களாக, வழி யெங்கும் எல்லோரும் அதையே முகர்ந்ததாக மூக்குச் சுளித்து...

சுரண்டி எறிந்து விடக் கூடியதா வாசனை ?

பல நாட்களாய் மனம் நிறைந்து கிடந்த நாற்றமும் புறம் போந்த கண்களும் அதன் வெருட்டலும்...

சை... என்ன நாகரிக வாழ்க்கை என்று தோன்றி யது. மனசுக்குள் வசை பெருக்கும் உறவுகள் — நாறப் பிணம்...

இன்னும் நெஞ்சில் பரவிய வலி குறையவில்லை. எதுவானாலும் தன் பிணம் நாற வேண்டாம் என்று தோன்றியது. எழுந்து சென்று அறைக் கதவை அகலத் திறந்து வைத்தான். விளக்கைப் போட்டான். காற் றாடியை மேலும் வேகமாக வைத்தான்.



படிப்பகம்

www.padippakam.com

எப்படிச் செத்துப் போனால் என்ன என்று தோன்றியது. ஆனால் மரணம் கிலி கொள்ளச் செய்தது, தயாராக இல்லாத ஒருவனிடம் சாவு கறட்டு வழக்குப் பிடிப்பது போல...அதற்கென்ன அத்தனை சித்தாங்கம்?

எவர், தயாராக, குழியில் கால் நீட்டிக் கொண்டு, சாவை விரும்பித் தவம் செய்து கொண்டு, போதத்துடன் கிடந்து விட முடியும்? வருகின்ற சாவு எப்போதும் தன்னைத் தாண்டி அடுத்தவனிடம்தான் போகும் என்றொரு நம்பிக்கை.

பன்னிரண்டரை மணிக்குக் கண்விழித்தபோது, நாராயணனுக்கு, சீவன் இன்னும் போயிருக்கவில்லை என்று தெரிந்தது. வேகமாய்ச் சுழன்ற காற்றாடியும், எரியும் குழல் விளக்கும், மல்லாக்கத் திறந்த கதவும்...

சற்று நேரம் பால்கனிச் சுவரோரம் வந்து நின்றான் குளிர் வாட்டியது நெஞ்சு வலியும் அடைப்பும் குறைந்து போயிருந்தது. வாயுவாக இருக்கக் கூடும். சாவு இன்னும் நிச்சயிக்கப்படாத ஒன்றாக இருக்கலாம்.

ஆனால், உண்மையில், சாவென்பது, குளிருக்கு, சுகமான போர்வைக்குள் புகுந்து கொண்டு உறங்குவது போன்றதாக இருக்கலாம். அதற்கென்ன அச்சம் என்று தோன்றியது. அது, தன்னைச் சாவு தாண்டிப் போனதால், ஊறும் தத்துவம் என்று தோன்றியது.



படிப்பகம்

www.padippakam.com

# பதின்மூன்று

அந்த டூர் மிக நீண்டதாக அமைந்து விட்டது.

வழக்கம் போல் ஓரிடத்தில் தங்கி, ஒரு வாரம் சுற்றிலுமுள்ள இடங்களை விசிட் செய்வது போல் அல்லாமல், முதலில் குல்பர்கா. அன்று பிற்பகல் வண்டி பிடித்து பிஜாப்பூர். மீண்டும் மட்டமானதோர் லாட்ஜில் தங்கல். அந்த ஊரில் அது தவிர வேறில்லை. அந்த லாட்ஜுக்குக் குடியும் விபசாரமும் தவிர்த்த வேறு பயன் இருக்க முடியாது என்பதை அறைகள் பறைசாற்றின.

பிஜாப்பூரில் ஒரேயொரு மில்தான். கூடிப் போனால் இரண்டு மணி நேரம். ஒரு கோன் வைண்டிங் மெஷினைச் சுத்திகரித்துச் செப்பனிட எஸ்டிமேட் தீர்மானித்தல். ஒன்றரை லட்ச ரூபாய் பெறுமானமுள்ள ஆர்டர். அன்றுள்ள மீதி நேரங்களில் பார்க்க வேலை ஏதும் இல்லை. மாலை வண்டியில் சோலாப்பூர் திரும்பினால் போதும்.

ஒரு குதிரை வண்டியை இருபத்தைந்து ரூபாய் வாடகைக்குப் பேசிக் கொண்டு, பிஜாப்பூர் சுல்தான் கட்டிய கோட்டை, நீராடும் இடம், பள்ளிவாசல் எல்லாம் பார்த்தான் நாராயணன். மன்னர்களின், அவர்களின் ராணிகளின் சமாதி கள் அழகாக இருந்தன. நீண்ட ஆழமான நிசப்தம் வேரோடும் மாடங்கள். கல்லறை களுக்குள் இருக்கும் சடலங்கள் ஏதோ ஓர் விதத்தில் தன்னுடன் உரையாடுவது போல



படிப்பகம்

www.padippakam.com

ஒரு மாயை. மனம் சட்டென்று சிலிர்த்தது. ஏதோ ஓர் அச்சத்தால் உந்தப்பட்டு அவசரமாக வெளியே வந்தான்.

அது ஒரு வேலை நாள். அவனைத் தவிர அங்கு வேறு யாருமே இல்லை. அடுத்தது ஒரு பிரம்மாண்டமானதோர் மசூதி. ஒவ்வொரு ஆளும் மண்டியிட்டு நெற்றி நிலம் பட்டு வணங்கும் தோதில் சதுரம் சதுரமான பளிங்குக் கற்கள் பாவி இருந்தது.

குதிரை வண்டிக்காரன் தர்கா ஒன்றுக்குக் கூட்டிக் கொண்டு போனான். ஒட்டு மொத்தமாக அத்தனை பேய் பிடித்தவர்களை நாராயணன் பார்த்ததில்லை, அதற்கு முன்னால். சங்கிலியில் பிணைபட்டவர்கள். முடி சடை பிடித்துக் கிடந்தவர்கள். கோரமாகச் சிரித்துக் கொண்டு அழுது கொண்டு தலையை ஆட்டிக் கொண்டு கெட்ட வார்த்தைகள் பேசிக் கொண்டு...

இந்த நாடு முழுதும் உள்ள பேய் பிடித்தவர்களை, பைத்தியம் பிடித்தவர்களைத் திரட்டினால் ஒரு மாகாணம் அமைத்து விடலாம் போல. மொழி வாரியாக இல்லாத, இனவாரியாக இல்லாத, மதவாரியாக இல்லாத, வர்க்க ரீதியாக இல்லாத, சமதர்ம, ஜனநாயக மாகாணம் உலகுக்கு எடுத்துக்காட்டாக அமைக்கலாம்.

அறுபது வயதுப் பெண்ணொருத்தி அவனைப் பார்த்துக் கன்னடத்தில் ஏதோ கேட்டது போலிருந்தது. சரியாக விளங்கவில்லை. அவனை நோக்கி நடந்து வந்தாள். நாராயணன் சற்று விரைவாக நடந்தான். அஞ்சல் ஓட்டமாக ஓடி அவள் வருவது போலிருந்தது.

அவள் தேவை என்ன என்று புரியவில்லை. பேய் பிடித்த கூட்டத்தில் ஒருத்தியா, அல்லது பாதுகாவலுக்கு வந்தவளா? சற்று யோசித்த போது நெருங்கி வந்து வழி மறித்தவள் போல நின்று கொண்டாள் கை நீட்டியதில் இருந்து காசு கேட்கிறாள் போலும் என்று



படிப்பகம்

www.padippakam.com

எண்ணிக் கொண்டான். அவன் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு போனாள்.

மரத்தடியில் ஒரு காலில் சங்கிலியில் பிணைத்து ஒரு பெண் கிடந்தாள். மகளாக இருக்கலாம். மருமகளாக இருக்கலாம். த ங் கை ய ா க இருக்கலாம். தம்பி பெண்டாட்டியாக இருக்கலாம். இருபத்தைந்து வயதுக்கு மேல் இருக்காது. நீண்டு வளர்ந்த செண்பகராமன் புதூர்க் கீரைத் தண்டு இரண்டு நாட்களாய் வெயிலில் வாடியது போல...

முகம் சோபை இழந்து, வெளிறி, சாம்பல் பூத்து...

குளித்து எத்தனை நாள் இருக்குமோ ? பல் தேய்த்து எத்தனை நாள் இருக்குமோ? பசிக்குமோ என்னவோ... அழுக்குப் பூத்த நகக் கண்களில் தெரிந்த ஆங்காரம்...

மனிதனின் துன்பங்கள் கரை கடந்து போய்க் கொண்டே இருப்பது போல்...

இதில் தன்னுடையது பிரச்னையே அல்ல. மகாப் பிரம்மாண்டமாக அதை ஊதிப் பெருக்கி, முலாமிட்டு, சோடனைகள் செய்து, தான் சந்தோஷம் கொள்வதாகத் தோன்றியது.

யாசகத்துக்கென நீண்ட வயதான கைகள். பத்து ருபாய் எடுத்துக் கொடுத்து விட்டு நடந்தான். கேலி செய்வது போல் தூரத்தில் கேட்ட "கெக் கெக்கே..." பெண் குரல்,

எத்தனை ஆண்டுகள் ஆயின என்று நினைவு இல்லை. பத்தாண்டுகள் கூட ஆகி இருக்கலாம். அசெம்பிளி பிரிவில் சூபர்வைசராக இருந்த போது. அன்று ஃபேக்டரி மானேஜர் தலைமை அலுவலகம் போயிருந்தார். ஒரு வெள்ளிக் கிழமை என்பது ஞாபகம் இருந்தது. ஸ்டோர் ஸில் அசோக் நார்வேக்கர் என்று ஒரு மராத்திப் பையன். சற்றுப் பெண் தன்மை கொண்ட வாலிபன். கல்யாணம்



படிப்பகம்

www.padippakam.com

ஆகியிருக்கவில்லை. சுறுசுறுப்பான நேர்மையான பையன். நாராயணனுக்கு அவன் மீது ஒரு பரிவு உண்டு, சந்தர்ப்பம் வாய்க்கும் போது ஸ்டோர்ஸ் கிளார்க் பதவிக்கு சிபாரிசு செய்ய வேண்டும் என்ற எண்ணம் உண்டு.

தொழிற்சாலையின் பின்புறம் முஸ்லிம் கப்ருஸ்தான். பெரிய விஸ்தீரணம் கொண்டது. தொழிற்சாலைக்கும் இடுகாட்டின் உயர்ந்த சுவருக்கும் இடையே மூன்றடி அகலத்தில் ஒரு முடுக்கு. பெயின்டிங் பூத்தின் வழியாக முடுக்குக்குப் போகலாம். தொழிலாளர்கள் பீடி குடிக்க, வேளை கெட்ட வேளையில் ஆம்லெட்—பாவ் தின்ன என்றுள்ள தோதுகளுக்காக இரண்டு மூன்று மரப் பெட்டிகள் போட்டு வைத்திருந்தனர். பெயின்டர் சப்ருதீன், ஒரிசாக்காரன் கூரான கத்தியால், கம்பியால் குத்திக் குத்தி கப்ருஸ்தான் சுவரில் ஒரு செங்கல் அகலத் துக்குத் துவாரம் செய்து வைத்திருந்தான்.

ஓட்டை வழியாகப் பார்க்க, கப்ருஸ்தான் நல்ல தோட்டம் போல இருக்கும். சில மாமரங்கள், சப்போட்டா மரம், ஏராளமான ரோஜாச்செடிகள் ...

சில சமயம் அத்தர் வாசனையும் ஊதுபத்தி நெடியும் மங்கிய பூக்களின் கூட்டு வாசனையுமாகப் புதுப் பிணங் களின் வரவை அறிவிக்கும்.

காசிநாத்துக்கு வயிற்று வலி வரும் போது, சாக்கு விரித்து அந்த முடுக்கில்தான் படுத்துக் கிடப்பான். காசி நாத்துக்கு மாதந் தவறாமல் குறுமவயிற்று வலி வந்து கொண்டிருந்தது. அதற்கென்றே கொஞ்சம் இடம், செடி கொடிகள் வெட்டி, கூழாங்கற்கள் பொறுக்கிச் சுத்தமாக வைத்திருந்தான்.

உணவு இடைவேளையில் காசிநாத்தும் போர்லேக்க ரும் சந்திரகாந்த் டாக்கூருமாக கன்ட்ரி வாங்கி வந்து அந்த முடுக்கில் நின்றவாறு குடித்துக் கொண்டிருந்த போது உள்வாளி ஒருவன் தகவல் செல்லத் திடீரெனப்



படிப்பகம்

www.padippakam.com

போக நேரிட்டது. ஃபேக்டரி மேனேஜருக்குத் தெரிந்தால் உடன் தானே தற்காலிக வேலை நீக்க உத்தரவு டைப் ஆகும். வெறுமனே எச்சரிக்கை செய்ததுடன் நாராயணன் விஷயத்தை அமுக்கி விட்டான். இல்லாவிட்டால் முப்பத்து நான்கு மராட்டியரும் ஒரு ஒரிசா முஸ்லீமும் இரண்டு உ.பி. பையாக்களும் ஒரு மார்வாரியும் வேலை செய்யும் தொழிச்சாலையில் தனியான மதராஸி சூப்பர்வைசிங் செய்து விட முடியாது.

பின்பொரு முறை, நடுமத்தியானம், முடுக்கில் படுத்துக் கிடந்த காசிநாத்திடம் இருந்து நூதனமான பொருளற்ற ஒலிகள் கிளம்பின. சப்தம் கேட்டுச் சிலர் ஓடிப்போய்த் தட்டியெழுப்பியும் காசிநாத் எழுந்து தன் நினைவுக்கு வரச் சில நிமிடங்கள் பிடித்தன.

மூர்ச்சை தெளிந்த பின்பு காசிநாத் சொன்னான்—

''அரே யார்...நான் இறந்து போயிருக்க வேண்டும். பயில்வான் போல ஒரு ஆள் என் மார் மேல் அமர்ந்து கொண்டு, கழுத்தை நெரிக்க ஆரம்பித்து விட்டான். என்னால் கைகளைத் தட்ட முடியவில்லை... ஸாலா சோட்த்தா நை... பச் கயா...''

மூச்சு வாங்கிக் கொண்டு அவன் சொன்னபோது, எல்லோரும் கலாட்டா செய்தனர், குடி போதையில் கனாக் கண்டிருப்பான் என்று. பிறகு அந்த இடத்தில் காசிநாத் படுத்ததே இல்லை.

வேறொரு முறை சத்யநாராயணா பூஜை அன்று இரவு, சில தொழிலாளர்கள் இராத் தங்கி, காசு வைத்து, ரம்மி விளையாடிக் களைத்து உறங்கப் போன போது, பாகோஜி பால்கர் பெயின்டிங் பூத் வாசலில் சாக்கு விரித்துப் படுத்து உறங்கினான். அதிகாலையில் அவன் விழித்தது கைகழுவும் அங்கணத்தை அடுத்து. எழுந்து ஏகமாய்ச் சத்தம் போட்டான், மற்றவர்கள் தன்னிடம் விளையாட்டுக் காட்டினர் என்று. எல்லோரும் தாங்கள்



படிப்பகம்

www.padippakam.com

எதுவுமே செய்யவில்லை ''மாகிகசம்'' என்று தொண்டைக் குழியில் விரல்கள் வைத்துச் சத்தியம் செய்தனர். இதென்ன கூத்து என்று ஆச்சரியமாக இருந்தது.

ஆனால் அதன் பிறகு, கொஞ்ச நாட்கள் பொறுத்து, ஸ்டோர்ஸின் இருளான மூலையில் இருந்து, ஒரு தினுசாக முழித்துக் கொண்டு அசோக் நார்வேக்கர் நின்ற போது, ஒன்றும் புரியவில்லை. கேட்கக் கேட்கப் பதிலேதும் இல்லை. கண்களை வெறித்துப் பார்த்தபடி, வாயை ஒரு விதமாய் முறுக்கியபடி...

அசெம்பிளி ஹாலின் நாற்காலியில் உட்கார்த்தி வைத்தார்கள். சற்று நேரத்தில் முனகவும் சம்பந்தமின்றிச் சிரிக்கவும் ஆரம்பித்தான்.

நாராயணனுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. காசிநாத் சொன்னான், ''மூதியைச் செருப்பெடுத்து அடித்து விரட்டணும்!'' என்று.

அவனை வெறித்துப் பார்த்தபடி, அசோக் சொன்னான்.

''கோன் ரே ஓ...வா உன் கழுத்தை முறித்துப் போடுகிறேன்...''

பற்கள் கறகறவென நெரிபட்டன. குரல் வேறுபட்டிருந்தது. ஆபாசமானதோர் பெண் குரல்—

''ஆவ் ரே ஸாலா...சப்பல் ஸே மார்னே வாலா...'' என்று மீண்டும் ஓர் உறுமல்,

காசிநாத் போன இடம் தெரியவில்லை. என்ன செய்வதென்று தெரியாமல், மேனேஜர் கேபினுக்குள் போய்த் தலைமை அலுவலகத்துக்கு ஃபோன் செய்தான், நாராயணன். ''ஹிஸ்டீரியாவாக இருக்கும். மூக்கின் பக்கம் சீனியை முகரக் காட்டு,'' என்றார். வெளியே வந்தான் நாராயணன்.

''சீனியைக் காட்டினால் நான் போக மாட்டேன்டா, மதராஸி!'' என்றான் அசோக்.



படிப்பகம்

www.padippakam.com

நாராயணனுக்கு வியர்த்து விட்டது.

பக்கத்து வளைவில் இருந்து ஒரு உ.பி. காரப் பையாவை அழைத்து வந்தனர். அரங்கு நிரம்பி வேடிக்கை பார்ப்பவர் கூட்டம். நாராயணன் அவனைப் பார்த்திருக்கிறான். பக்கத்துக் கம்பனியில் வெல்டராக இருப்பவன். வந்தவன் அசோக் நார்வேக் கரைக் கூர்ந்து பார்த்தான், சற்று நேரம். ஒரு தம்ளரில் தண்ணீர் கொண்டு வரச் சொன்னான். அசோக்குக்கு நேராக, பத்தடி தள்ளி, குத்த வைத்து அமர்ந்துகொண்டு, இடது கையால் தண்ணீர் தம்ளரின் வாயை மூடிக் கொண்டு, மந்திர உச்சாடனம் செய்ய ஆரம்பித்தான். உதடுகளின் அசைவன்றி ஒலி வெளியே கேட்கவில்லை.

முதலில் ''ஹஹ்ஹஹ்ஹா...'' என்று வெறி பிடித்தவன் போலச் சிரித்த அசோக், சற்று நேரத்தில் வேகமாகத் தலை சுற்றி ஆட ஆரம்பித்தான்.

பையா கேட்டான், ''கோன் ஹை தும்?''

அசோக் கேட்டான், ''தும் கோன் ஹை ரே?''

''சொல்லு...நீ யாரு?''

''சொல்ல மாட்டேன்டா, மச்சான்''

''நாசகாரியா நீ?''

''நாசகாரி இல்லடா, மச்சான்.''

''இவனை ஏன் தொந்தரவு செய்யே?''

''எனக்குப் போக்கிடம் வேண்டாமா?''

''எப்பம் வந்தே?''

''மூணு நாளாச்சு—''

''இப்பப் போயிரு மரியாதையா.''

''போறதுக்கா வந்திருக்கேன்...ஹஹ்ஹா...''

''போக்காம விட மாட்டேன்...''

www.padippakam.com

''பையா ... உன்னால முடியாது ... பீடந் தெரியாம ஆடாதே ... மரியாதையா மாறிக்கோ ...''

பையா, உடல் வெடவெடவென ஆடியவாறு, மறுபடியும் உச்சாடனம் ஆரம்பித்தான். கூச்சலிட்டுச் சிரித்த அசோக் சற்று நேரத்தில் மயக்கமாய்ச் சாய்ந்தான்.

பையா சொன்னான் ... ''தற்காலிகமா மாறி நிக்கி... இது நம்மால ஆகாத கேஸ் ...இனியொரு நாலஞ்சு மணிக்கூர் தொந்தரவு இருக்காது. வீட்டுக்குக் கொண்டு போயிருங்கோ. மாஹிம்லே, தர்காவுக்குப் பக்கத்துலே ஒரு பாவா இருக்காரு ... அவுரு கிட்டே கூட்டீட்டுப் போகச் சொல்லுங்கோ ...''

பையா போய்விட்டான். துக்காராமுக்கு அசோக்கின் வீடு தெரியும். காசிநாத்தைத் துணைக்குக் கூப்பிட்டதில் முடியாது என்று சொல்லி விட்டான். சப்ருதீன் சம்மதித்தான். வாடகைக் கார் அமர்த்தி, செலவுக்கு நூறு ரூபாய் கொடுத்து அனுப்பி வைத்தபோதுதான் மூச்சு வந்தது.

இடையில் அசோக்கைப் பார்க்கப் போன பாடி பில்டர், அஜித் கார்பாரி சொன்னான்— ''அரே, நான் குறுக்குப் பாதையிலே ரயில்வே பாட்டக் கிராஸ் பண்ணிப் போனேன். போனதும் அசோக் சொல்றான், 'நீ ஓவர் பிரிட்ஜ் ஏறித்தான் வரணும். பாட்டக் கிராஸ் செய்யக் கூடாது!'ன்னு அரே, நான் திகைச்சுப் போயிட்டேன்.''

இரகசியமாகத் துக்காராம் ஒரு நாள் சொன்னான். இரண்டாவது முறை அசோக்கைப் பார்த்து விட்டு வந்தபோது அவன் கேட்டானாம், ''நீ என்னைக் கூட்டிக்கிட்டு வாற செலவிலே கள்ளத்தனம் காணிச்சு,ஏன் கம்பனியிலே வவுச்சர் போட்டே?'' என்று.

சில நாட்கள் பொறுத்து, நல்ல தூக்கத்தில் இருந்த போது, அதிகாலையில் நாராயணனுக்கு ஒரு கனவு வந்தது. கனவில் அசோக், சம்பளமில்லாத லீவாகச்



படிப்பகம்

www.padippakam.com

செய்து விடக் கூடாது, பிரிவிலெஜ் லீவில் அட்ஜஸ்ட் செய்து கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையுடன். தொந்தரவு பட்ட மனத்தின் சிலந்திப் பின்னல்கள் என்று நினைத்துக் கொண்டான்.

மறுநாள் காலையில் சப்ருதீன் சொன்னான்—

''சார், அசோக்கைப் பார்க்கப் போயிருந்தேன். சிக் லீவுன்னா சம்பளம் போயிரும். பிரிவிலெஜ் லீவில் அட்ஜஸ்ட் செய்து கொள்ளச் சொன்னான். சாரிடம் சொல்லு. நான் சொல்லீருக்கேன், தட்ட மாட்டார்னு சொன்னான்.''

ஒன்றும் சொல்லத் தோன்றவில்லை. ஒன்றன் பின் ஒன்றாக இத்தனை தற்செயல்கள் அடுக்கடுக்காய்ச் சாத்தியமா என்றொரு கேள்வி.

இரண்டு மாதங்கள் சென்ற பின், மொட்டை அடிக்கப் பட்ட தலையுடன். கழுத்தில் தாயத்துக் கட்டி, அசோக் வந்தபோது ஆறுதலாக இருந்தது. பழையதை எல்லாம் அவனிடம் கிளறப் பிரியமிருக்கவில்லை.

பிஜாப்பூர் தர்காவை விட்டு வெளியே வந்தபோது, இங்கு வந்திருக்க வேண்டாம் என்று தோன்றியது. உணவு வேளை ஆகிவிட்ட போதும் சாப்பிடப் பிடிக்கவில்லை. நாற்றம் பிடிந்த அந்த லாட்ஜில் போய்ப் படுக்கவும் பிரியமில்லை. அறையைக் காலி செய்து விட்டு, கிடைத்த வண்டியைப் பிடித்து, சோலாப்பூர் நோக்கிப் பயணமாகி விடவேண்டும் எனத் தோன்றியது.

லயம் பிறழ்ந்து கொண்டே இருக்கிறது. பிறழ்ந் தாலும் மறுபடியும் வந்து ஆதார லயத்துடன் கூடிக் கொள்கிறது. சில சமயம் உடனடியாக. சில சமயம் நீண்ட நேரம் பொறுத்து. இந்தப் பிறழ்வு நாட்கணக்கில், மாதக் கணக்கில், ஆண்டுக் கணக்கில் நீண்டு போகலாம். திரும்ப வந்து கூடாமற் போகலாம்—வால் நட்சத்திரங் கள் போல. சில நீள் வட்டத்தில் பயணம் செய்து


படிப்பகம்

www.padippakam.com

ஏழாண்டுக் கொரு முறை, பத்தொன்பது ஆண்டுகளுக்கு ஒரு முறை, முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை ... சில அகன்ற நீள் வட்டத்தின் முடுங்கிய முனை போல வந்து கூடிப் பின்பு திரும்பப் பறந்தே போய்விடலாம் ...

இதில் யாருக்கு என்ன நட்டம்?

தேசியப் பொருளாதாரத்துக்கு வீழ்ச்சியா?

ஈடு செய்ய முடியாத இழப்பா?

யாருக்கு என்ன சேதம்?

ஒரு தனி மனித லயப் பிறழ்வு மட்டும்? யோசித்துப் பார்க்க ஆயாசமாக இருந்தது.

கோலாப்பூரின் பக்கம், சம்பாஜியின் கோட்டை அமைந்திருந்த குன்றில், துரோகிகளைத் தூக்கிலிட்ட பின், பிணத்தைத் தளளிவிடும் தூர் காணக் கிடைக்காத பள்ளம் போல் ...

பிணங்கள் வீழ்ந்து, ஆழத்தில் புதைந்து நாறும் ஆழ்மனம் ...

சில சமயம் எதுக்களித்துக் கொண்டு வரும் துர் நாற்றம்.

நாலு மணி பாசஞ்சரைப் பிடித்து, சோலாப்பூர் நோக்கிப் பயணம் செய்யும் போதும் அதே சிந்தனை.

சோலாப்பூரில் இருந்து கோலாப்பூர். அங்கு ஒரு மூன்று நாட்கள் சுற்றல். சாங்கிலி, மீரஜ், இச்சல் கரஞ்சி...

காந்தி ஜயந்திக்கு இரண்டு நாட்கள் முன்னால் மட்காவ் போய்ச் சேர்ந்தான். பிஜாப்பூரின் பிசுக்குகள் கழுவப்பட்டது போலிருந்தது கோவாவின் குளிரும், வறுத்த மீனும், கடற்கரையும்...

போர்ச்சுக்கீசிய நாகரிகத்தின் எச்ச சொச்சங்கள் எங்கும் இறைந்து கிடந்தன.



படிப்பகம்

www.padippakam.com

கோவா முழுவதுக்குமாக ஒரேயொரு நூல் மில்தான் இருந்தது. பயணமான வழியெங்கும் மீன்பிடி குப்பங்கள் போலக் கிராமங்கள்... எல்லாக் கிராமங்களிலும் சாயாக் கடை போல, அனைத்து மது வகைகள் நிரம்பிய பார்கள். சோம்பலில் குளித்தபடி மக்கள் நடமாட்டம்.

மாதவ் நகர் மில்லில் பர்ச்சேஸ் ஆபீசராக இருந்த வியாஸ், அங்கு மெட்டீரியல் மேனேஜராக இருந்தான். நாராயணனைக் கண்டதும், அவனுக்கு நல்ல உற்சாகம். வேலை முடியும்போது பன்னிரண்டரை மணி ஆயிற்று. வியாஸ் தன்னுடன் சாப்பிட்டு விட்டுப் போனால் போதும் என்று கெஸ்ட் ஹவுஸ் கூட்டிப் போனான்.

அன்று வெள்ளிக் கிழமை. அடுத்த இரண்டு நாட்கள் விடுமுறை. டூரில் இருக்கும்போது அந்தக் கணக்கு வழக்குகள் எல்லாம் பார்க்க முடியாது. ஆனால் அடுத்த மில்லைக் கோவா அரசு இன்னும் கட்ட ஆரம்பித்திருக்க வில்லை.

அந்த நேரத்தில் பஸ் கிடைப்பது அரிது என்பதாலும், மெயின் ரோட்டுக்கு மூன்று கிலோ மீட்டர் நடக்க வேண்டும் என்பதாலும், வியாஸ் மோட்டார் சைக்கிளில் மெயின் ரோட்டில் விட ஏற்பாடு செய்தான்.

பஸ் மட்காவ் நோக்கிப் பயணமாகும் திசையைத் தெரிந்து கொண்டு, நிழல் பார்த்து நிற்கும் போது, தோளில் ஒரு கை தட்டியது. யாராவது வழியில் இருந்து விலகி நிற்கச் சொல்கிறார் போலும் என்றெண்ணி, அலட்சியமாகத் திரும்பிப் பார்த்தான் நாராயணன்.

குட்டினோவை அந்த இடத்தில் எதிர் பார்க்கவில்லை.

"அரே... எவ்வளவு சந்தோஷமா இருக்கு! இங்க என்ன செய்துக்கிட்டிருக்கே?"

"அட் மிஸ்டர் மேனோன்ஸ் சர்வீஸ்... நீ இங்க எப்படி?"



படிப்பகம்

www.padippakam.com

ஓய்வு பெற்ற குட்டினோவைச் சுத்தமாக மறந்து விட்டோம் என்று நினைக்க அவமானமாக இருந்தது. உண்மையில் அவன் இன்னும் தாணாவில் இருப்பதாகவே எண்ணிக் கொண்டிருந்தான்.

மர்மகோவாவில் இறங்கிய போதும், அவன் ஞாபகம் இல்லை. உலகம் விந்தையான நிகழ்வுகளைத் தொடர்ந்து தந்து கொண்டிருக்கிறது என்று தோன்றியது.

அரைமணி நேரத்தில் ஓட்டல் ரூமைக் காலி செய்து, ப்ஃரீப் கேசும் தோள்பையும் தூக்கிக்கொண்டு, குட்டினோவின் கிராமத்தை அடைந்த போது மணி மூன்றரைக்கு மேல் இருக்காது. சற்று நேரம் கடற்கரையில் சுற்றி விட்டு வந்தனர். கடலலைகளைப் பார்த்துக்கொண்டு, எண்ணற்ற கூரை வேய்ந்த பார்கள். குட்டினோ ஒரு மோட்டார் சைக்கிளைச் சம்பாதித்து வந்தது வசதியாக இருந்தது. கிளர்ச்சியூட்டும் அழகுகள். அமைதியான கடற்கரை. அரபிப் பெண்களின் கண்கள் போல, வெளிர் நீலக் கடற்பரப்பு.

வழி நெடுகக் குட்டினோ பேசிக் கொண்டு வந்தான். தென்னந் தோப்புக்கு நடுவே வீடு. இரவு ஏழரை மணிக்கே லேசாகக் குளிர் தெரிந்தது. வெளியே எண்ணற்ற செடி கொடிகள். ஒரு முக்காலியும் இரண்டு நாற்காலிகளும் வெளியே போட்டான். நிறமற்ற கொல்லாம்பழ ஃபென்னி, தட்டு நிறையப் பொரித்த சுர்மாய் மீன் துண்டுகள்.

தென்னங் கீற்றுகளின் இடையே பாய்ந்த நட்சத்திரக் கற்றைகள். அரிக்கேன் விளக்கு வெளிச்சத்தை அடர் இருள் கேலி செய்து கொண்டிருந்தது. காற்று அமானுஷ்யத் தன்மை சுமந்து அலைந்து கொண்டிருப்பதாகத் தோன்றியது. இன்னும் அழகிகளைத் தேடிப் போர்ச்சுக்கீசியரின் ஆவி அலைந்துகொண்டு இருக்கலாம். அல்லது அழிக்கப்பட்ட அழகிகளின் ஆவிகள் போர்ச்சுக் கீசியரைத் தேடியும் அலையலாம்.



படிப்பகம்

www.padippakam.com

இரவு இறங்க இறங்கத் துல்லியமான ஒலிகள் மேலெழுந்து கொண்டிருந்தன. இது மர்மங்கள் புதைந்த நாடெனத் தோன்றியது. வீட்டில் தயாரித்த முந்திரிப் பழ ஃபென்னி உடலில் உஷ்ணம் பரத்திக் கொண்டிருந்தது. பொரித்த மீன் வெளியே கடையில் வாங்கியது போலத் தெரியவில்லை. வீட்டில் குட்டினோ செய்ததைப் பார்க்கவும் இல்லை. எங்கிருந்து ஏற்பாடு செய்தானோ?

சற்று நேரத்தில் கையில் ஒரு கூடையும் மறு கையில் தாங்கிப் பிடித்த பீங்கான் பாத்திரமுமாக ஒரு பெண்மணி தோப்பினுள் நுழைந்தாள். இருட்டில் முகம் தெரியவில்லை. தொய்ந்த நடை. வயதை ரேகை காட்டியது.

நேரே உள்ளே போய்ப் பாத்திரங்களை வைத்து விட்டு வந்தபோது, அரிக்கன் விளக்கு வெளிச்சத்தில் முகம் தெரிந்தது.

குட்டினோ சொன்னான் — "க்ளாரா... க்ளாரா டிகொஸ்டா...மை ஃபிரண்ட்... நாராயண்."

நீட்டிய கையைக் குலுக்கியபோது, மனித நேய வெப்பம் மனத்தில் பாய்ந்தது. க்ளாரா போன பிறகு, நீண்ட நேரம் குட்டினோ மௌனமாக இருந்தான். நாற்பதாண்டுகளாகச் சுமக்கும் காதலின் கனம் தொனித்த நொடிகள்...

காலையில் எழுந்து ஷேவ் செய்து குளித்து, கட்டன் காப்பி குடித்த பின், புறப்பட யத்தனித்தபோது, க்ளாரா வீட்டில் இருந்து காலைச் சிற்றுண்டி வந்தது. நேற்றிரவு சாப்பிட்ட மீன் குழம்பு நன்றாக இருந்ததற்கு நன்றி சொன்னான் நாராயணன்.

குட்டினோ சொன்னான் — நாராயண், அன்ஃபார்ச்சுனேட்லி, யூ டோன்ட் ஈட் போர்க் அன்ட் சாஸேஜஸ்... க்ளாரா பிரிபேர்ஸ் வெரி நைஸ்லி..."

மீண்டும் கடற்கரைகள், மாதா கோயில்கள்' போர்ச்சுக்கீசிய இடிபாடுகள்...



படிப்பகம்

www.padippakam.com

மத்தியானம் சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது குட்டினோ சொன்னான்.

''நாராயண், க்ளாரா பற்றி நீ என்ன நினைக்கிறே?''

''ஏன்... வெரி நைஸ் உமன்... உண்மையில் அது உனக்குப் பெரிய நஷ்டம்தான்...''

''நான் அவளைக் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறேன்...''

''வாட்? வாட் ஆர் யூ டாக்கிங்? இந்த வயசில் போய்?''

''அரே! வயதில் என்ன இருக்கிறது, மேன்? ஆங்... அவள் தனியாகத்தான் இருக்கிறாள்- மிஸ்டர் டிக்கோஸ்டா மாரடைப்பில் போய் விட்டார். அவளுடைய எல்லாப் பிள்ளைகளும் பம்பாயில் இருக்கிறார்கள். வெல் செட்டில்ட்...''

''அவர்களுக்கு ஆட்சேபணை இருக்காதா?''

''எதற்காக? ஒரு வகையில் அவர்களுக்கு இது தெரியும்? அவளைப் பற்றிய சுமையும் பொறுப்பும் இனி அவர்களுக்கு வேண்டாமல்லவா? கொஞ்சம் ஆசுவாசமாகக் கூட இருக்கும் அவர்களுக்கு...''

''ஆனால்... குட்டினோ! நீ உன்னுடைய வயசையும் அவளுடைய வயசையும் எண்ணிப் பார்த்தாயா?''

''ஐ யாம் சாரி... யு ஆர் ராங்' நாராயண்... நீ அவளுடைய உப்பிய முகத்தையும் தளர்ந்த தோள்களையும் மட்டும் பார்க்கிறாய்...பட் வாட் ஐ நீட், வாட் ஷி நீட்ஸ், இஸ் அனதர் ஸோல் மேன்... டு யூ அன்டர்ஸ்டான்ட்?''

குட்டினோ போதையில் பேசவில்லை என்பதை நாராயண் அறிவான்.



படிப்பகம்

www.padippakam.com

மாதா கோயிலின் ஆல்டரின் முன்பு, மண உடையில் குட்டினோவையும் க்ளாராவையும் கற்பனை செய்து பார்த்தான். காட்சி அவ்வளவு திருப்தியாக வரவில்லை. லேசாகச் சிரிப்பு வந்தது.

''என்ன சிரிக்கிறாய்? கிழவன் கிழவியின் கல்யாணம் நினைத்தா? அரே சோடோ யார்...ஆனால் ஒன்று, நாராயண்... கடவுள்தான் உன்னை இங்கு இப்போது அனுப்பியிருக்கிறார். ஒரு நண்பனாக உனக்குக் கடைசியாக நான் புத்திமதி சொல்கிறேன்—யூ கோ அன்ட் மேரி த கர்ல் யூ டாக்ட் எபவுட் லாஸ்ட் டைம்...உனது ஹனிமூனுக்கு இங்கே மறுபடியும் வா...க்ளாரா சந்தோஷப் படுவாள். அன்ட் அனதர் திங்...ஐ யாம் சீரியஸ் எபவுட் இட்...நான் தனியாளாக உன்னை மறுபடியும் காணப் பிரியப்படவில்லை.''

குட்டினோ இரண்டு கைகளாலும் அவன் கைகளைப் பற்றி இறுக்கினான்.

விடை பெற்றுக்கொண்டு புறப்பட்டபோது, க்ளாரா, ''காட் ப்ளஸ் யூ!'' என்று சொல்லி நெற்றியில் முத்த மிட்டாள்.

குட்டினோ கொடுத்த ஒரு குப்பி ஃபென்னி ப்ரீஃப் கேசில் கனத்தது.

மனம் குழம்பிப் போயிருந்தது.

குட்டினோவைச் சந்திக்காமல் இருந்திருந்தால் நன்றாக இருந்திருக்குமோ என்று தோன்றியது.



படிப்பகம்

www.padippakam.com

# பதினான்கு

சசிதர மேனோனுக்கு அலுவலகத்தில் ஓர் அவப் பெயர் இருந்தது. தொழிலில் திறமை யானவர் என்றாலும், நல்ல நிர்வாகி என்றா லும், ஆங்கிலப் புலமை உடையவர் என்றா லும், கீழே பணி புரிபவர்களிடம் இயல்பாகப் பழகுகிறவர் என்றாலும்—

மனைவியும் மக்களும் காட்டாக்கடை அருகில் குற்றிச்சல் என்னும் கிராமத்தில் இருந்த னர். கடவுள் தனியாகச் சலுகை காட்டியது போல், அழகுமண்டிய ஊர்ப்புறம். நெய்யாற்றின் கரையில் இருந்து வடக்கே உட்புறமாக நெடுமங் காடு போய், அங்கிருந்து கிளை பிரியும் சாலை. ஆண்டில் கோடை விடுமுறையில் மட்டும் குடும்ப வாழ்க்கை. பதினோரு மாதங்கள் பிரம்மசர்யம். பட்டப் படிப்பில் ஒரு பையனும் ப்ரி டிகிரியில் ஒரு பெண்ணும் படித்துக் கொண்டிருந்தனர். இயற்கையான காட்டுப் புறங்களை விட்டு, பம்பாயின் காங்க்ரீட் காடுகளில் தனியான வாழ்க்கை நடத்துவது என்பது முன் பிறவியின் சாபம்

கோலிவாடா சி. ஜி. எஸ். குவார்ட்டர்ஸின் ஒன் ரூம் கிச்சனில், ஏர்-இந்தியாவில் செக்யூரிட்டி யில் இருந்த இன்னொரு மலையாளியுடன் வாழ்ந்து கொண்டிருந்தார்.

காலையில் இரண்டுமுட்டைபோட்டு ஆம்லட் அல்லது ஆம்ப் பாயில். மத்தியானம் வெளியே சாப்பிடுவார். சில சமயம்



படிப்பகம்

www.padippakam.com

நாராயணனையும் கூட்டிக்கொண்டு போவார். பெரும் பாலும் தடித்த புழுங்கலரிசிச் சோறும் மீன் குழம்பும். மாலையில் ஒரு வேளை சமையல். முட்டைக்கோசு காரட், பயறு போன்று எளிதான காய்கறிகள். பருப்பு, சோறு, தயிர், ஊறுகாய்.

அறைத் தோழன் எக்ஸ் சர்வீஸ்மேன். எனவே கருஞ் சிவப்பு ரம்முக்கு என்றும் பஞ்சமில்லை. சில சமயம் தேடிப் போனால், முதலில் கண்ணாடித் தம்ளர்களை எடுத்து வைப்பார். தொட்டுக் கொள்ள எதுவுமே இல்லாமல் குடிக்கப் பழகிக் கொண்டது அங்குதான். சுமாராகத்தமிழ் பேசுவார். ஒரு முறை பேச்சு வாக்கில் காமாட்சி ஐயர் சொன்னாள். டிக்டேஷன் எடுக்க மேனோன் கேபினுக்குப் போனால் விழுங்கி விடுவது போலப் பார்க்கிறார் என்றும், நிர்வாணமாக நிற்பது போன்ற கூச்சமும் சங்கடமும் ஏற்படுகிறது என்றும். காமாட்சி ஐயர் கற்பின் கனலி அல்ல என்பதை அலுவலகம் அறியும்.

ஒரு ஞாயிற்றுக்கிழமை மெட்ரோவில் முற்பகல்காட்சி முடிந்து மேனோனும் கல்பனா சிவ்தார்க்கரும் இறங்கி வந்ததை நாராயணன் பார்த்தான். அவன் இதையெல் லாம் பொருட்படுத்துபவன் அல்ல. ஆனால் அலுவலகத் தில் மற்றவர் பேசும்போது ச ற் று வேதனையாக இருக்கும்.

பைரிஸ் ஓய்வு பெற்றுக் காலியான இடத்தில் ராதா கேசவமூர்த்தியை ரியமித்திருந்தனர். பெயர் தமிழ்ப் பெண் என்று சொல்லியது. ஒரு நாள் லிஃப்டில் கூடவே வந்தபோது கேட்டான் எந்த ஊர் என்று. திருக்கணங்குடி என்று கேட்க மனதில் அர்த்தமில்லாத ஒரு சந்தோஷம். சொந்த ஊர் என்றொரு கிளர்ச்சி.

எளிமையான பெண் முப்பத்திரண்டு வயது இருக்கும். அதிக அலங்காரங்கள் இல்லாத மெலிந்த, வெளிறிய, சந்தோஷத்தின் பூரிப்பற்ற தோற்றம். நெற்றியில் சிவப்புப் பேனாவால் புள்ளி வைத்ததைப் போல் ஒரு



படிப்பகம்

www.padippakam.com

சாந்துப் பொட்டும், அதன்மேல் திருநீற்றின் மெல்லிய வரைவும்,

ஜெயராமன் சொன்னான், கல்யாணமான இரண்டு ஆண்டுகளில் விவாக ரத்து வாங்கி விட்டாள் என்றும் நான்கு ஆண்டுகளாக வசாய் ரோட்டில் அண்ணன் குடும்பத்துடன் வாசம் என்றும் குழந்தைகள் இல்லை என்றும்...

ஏன் இந்தப் பெண் இன்னொரு கல்யாணம் செய்து கொண்டு, வாழ்க்கையைப் புதுப்பித்துக் கொள்ளக் கூடாது என்று தோன்றியது.

அன்று ஒரு சனிக் கிழமை. முன்பு தங்கியிருந்த மாட்டுங்கா அறையின் சொந்தக்கார மாமாவையும் மாமியையும் கண்டு பேசி வர வேண்டும் என்று தோன்றியது. பேசி முடித்து விட்டு வெளியே வரும்போது மணி ஏழே கால் ஆகியிருந்தது. கன்சர்ன்ஸில் சாப்பிட்டு விட்டுப் போனால் ஒரு தொந்தரவு ஒதுங்கும். ஏழு ஐம்பத் தெட்டுக்கு மாட்டுங்கா ரோடு ஸ்டேஷனில் நிற்கும் ஒரு விரார் ஃபாஸ்ட்டு உண்டு, சாப்பிட்டு விட்டு ஸ்டேஷனுக்கு வந்தான்,

இன்னும் பத்து நிமிடங்கள் இருந்தன. சனிக்கிழமை ஆதலால் நிறைய அலுவலகங்கள் விடுமுறை. மீதி அலுவலகங்கள் அரை நாள் வேலை. பிளாட்பாரம் காலியாகக் கிடந்தது. பத்திரிகை ஸ்டாலில் மேய்ந்து கொண்டு நின்றான். சலிப்படைந்து திரும்பிய போது தூரத்தில் ராதா வருவது தெரிந்தது.

அலுவலகத்தில் பேசுவதை விடச் சற்றுக் குரல் எழுப்பிச் சொன்னாள், கோயிலுக்குப் போய்விட்டு வருவதாக. ஒரு சக மனித அனுதாபம் சுரந்து நிறைந்தது மனதில், ரயில் வந்ததும் ஒரே பெட்டியில் ஏறிக் கொண்டனர்.

கோவாவில் இருந்து திரும்பிய இரண்டாவது வாரம். வெளியில் சில வேலைகளைப் பார்த்து விட்டு ஆபீசுக்கு



படிப்பகம்

www.padippakam.com

வந்தான், நாராயணன். இருக்கையில் அமர்ந்து இருந்த போது சற்று நேரத்தில் ராதா, மேனோனின் அறைக் கதவைத் திறந்து கொண்டு வெளியே போனது தெரிந்தது. கொஞ்ச நேரத்தில், ராதா இருக்கையில் அமர்ந்து விசும்பிக்கொண்டிருந்ததைத் தாருவாலா சுட்டிக் காட்டினான்.

மேனோன் ஏதும் சில்விஷமம் செய்திருப்பாரா என்று தெரியவில்லை. அவ்வளவு பண்பாட்டுக் குறைவான ஆள் இல்லை. அலுவலகம் முழுவதும் கிசுகிசுவெனப் பரவியதோர் இளக்காரச் சிரிப்பு.

எரிச்சலாக வந்தது, நாராயணனுக்கு.

மூன்று மணி வாக்கில் அக்கேர்க்கர் வந்தான்.

''வாட் இஸ் திஸ் நாராயண்... வி ஆர் கோயிங் ப்ரொட்டஸ்ட்...''

அவன் என்ன சொல்ல வருகிறான் என்பது புரிந்தது. சாதாரணமாகவே தென்னிந்தியர் என்றால் சற்றுக் கடுப்பானவன். பிராந்தியக் கட்சி ஒன்றின் 'நகர் பிரமுக்.' ஒரு நாள் லைசன்ஸ் பெற்ற ரிவால்வரை அலுவலகம் முழுவதும் காட்டிக் கொண்டு திரிந்தான். அலுவலகத்தில் வேலை செய்த கன்னடியர், துளுவர், தெலுங்கர், தமிழர், மலையாளிகள் எல்லோரையும் நக்கலாக 'ஏ மதராஸி' என்று விளிப்பான். அந்த ஆண்டில் அவன்தான் யூனியன் செகரட்டரி. நாராயணன் வேலை பார்த்த டெக்ஸ்டைல் டிவிஷனில் மூன்று ஆபீசர் கிரேட் ஆட்களும் ஃபைலிங் கிளார்க்கும் தென்னிந்தியர்கள். தாருவாலா பார்ஸி. ஷ்ராஃப் குஜராத்தி. ஸ்டெனோக்கள் பூலில் இருந்துவருவதால், அவர்கள் சேர்த்தி இல்லை. எனவே அந்த டிவிஷனுக்கு நான்—மகாராஷ்ட்ரியன் டிவிஷன் என்று பெயர். ஒரு நாள் வேடிக்கையாக நாராயணன், மேனோனிடம் சொன்னான்— ஃபைலிங்கில் இருக்கும் ராமமூர்த்தியை வேறு டிவிஷனுக்கு மாற்றி விட்டு ஒரு மராத்திக்காரனை அதில் போட்டுவிடலாம் என்று. மேனோன், ''டோன்ட் பீ


படிப்பகம்

www.padippakam.com

ஸில்லி!'' என்றார். ஆனால் மேனோனுக்கு மொத்தமாகத் தென்னிந்தியர் என்ற அபிமானம் உண்டு.

அக்கேர்க்கர் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ள விரும்புகிறான் என்று புரிந்தது.

''அக்கேர்க்கர், நீ என்ன சொல்ல வருகிறாய் என்பது புரியவில்லை.''

''அரே, நடிக்காதே யார்...உன்னுடைய பாஸ் ராதா விடம் பண்பாட்டுக் குறைவாக நடந்து கொண்டிருக் கிறார்.''

நாராயணனுக்குச் சற்றுச் சிரமமாக இருந்தது. தாரு வாலா, ஷ்ராஃப் எல்லோரும் அக்கறையுடன் முகத்தை வைத்துக் கொண்டிருந்தனர்.

''என்ன மிஸ்பிஹேவ் செய்தார் ?''

''அரே! ஷி வாஸ் க்ரையிங்... ஆல் த டே...''

''தேட்ஸ் ஓகே... ஷி வாஸ் க்ரையிங்... அதனால மேனோன் தப்பாக நடந்து கொண்டார் என்று சொல் கிறயா?''

''இந்தா பார், நாராயண். யூ நோ மேனோன் வெரி வெல்... இல்லேன்னா அவ எதற்காக அழணும்?''

''லுக்... ஐ நோ மேனோன் வெரி வெல்... எனக்கு இந்த ஆபீசில் நிறையப் பேரைப் பற்றித் தெரியும்...ராதா வந்து, மேனோன் தன்னிடம் தப்பாக நடந்து கொண் டார் என்று புகார் செய்தாளா?''

''யூ மதராஸி வில் சப்போர்ட் யுவர் பாஸ் ஒன்லி.''

''ப்ளீஸ் அக்கேர்க்கர். அந்த மாதிரிப் பேசாதே. நான் மேனோனிடம் கேட்கிறேன். ராதாவிடமும் பேசி விட்டுச் சொல்கிறேன். தேவையானால், வி வில் ப்ரொட்டஸ்ட்... கமான்... டோன்ட் மேக் எ ஸ்கேண்டல்...''

''சோடோ... தும்லோக் சுதரேகா நை...''



படிப்பகம்

www.padippakam.com

''டேகே... சோடோ... சாய் கேணார் கா? சக்காராம், தோ சாய்... அக்கேர்க்கர் ஸாப்புக்குச் சர்க்கரை இல்லாமல்...''

''நாராயண்... நீ என்னைத் தவறாகப் புரிந்து கொள்ளாதே... மேனோன் சிக்கல் உண்டு பண்றாரு... ஸாலா...''

''விடு அதை... போர் மத் கரோ...''

சாய் வந்தது. பாதி சாயை சாசரில் ஊற்றித் தாரு வாலாவிடம் நீட்டினான்.

''எனக்கு வேண்டாம், உன்னுடைய சர்க்கரை இல்லாத சாய்...''

''அரே... வாங்கு... ஸாலா... பொணம்...''

சூழ்நிலை சற்று சுமுகமாகத் திரும்பியது ஆறுதலாக இருந்தது. ராதாவிடம் இது பற்றிப் பேசக் கூச்சமாக இருந்தது. அப்படி ஏதாவது இருந்தால் கூடச் சொல்வாளோ என்னவோ?

மேனோன் மீது ஒரு வெறுப்பு வந்தது. சாயங்காலம் இது பற்றி அவரிடம் கேட்டு விட வேண்டும் என்று நினைத்தான்.

அன்று அவகாசம் கிடைக்கவில்லை. வந்திருந்த யாருடனோ அவர் வெளியே இறங்கிய போது, அவர் முகம் விழுந்து கிடந்ததைப் பார்த்தான்.

மறுநாள் வெளி வேலை எதுவும் வைத்துக் கொள்ள வில்லை அவன். மேனோன் வழக்கமாக ஒன்பது நாற்பதுக்கு எல்லாம் அலுவலகம் வந்து விடுவார். காலை யிலேயே அது பற்றிப் பேசி நாளைக் கெடுக்கப் பிரிய மில்லை. என்ன இருந்தாலும் அவர் மேலதிகாரி. தன்னை விடப் பதின்மூன்று வயது பெரியவர். குட்டினோ இருந்தால் இதற்கெல்லாம் வசதியாக இருந்திருக்கும்.


படிப்பகம்

உணவு இடைவேளையில் மேனோன் ரூமுக்குப் போய், சாப்பிடப் போகலாமா என்றான். லேசாகச் சிரித்தார். கிழட்டுக் குரங்கு என்று மனதினுள் நினைத்துக் கொண்டான்.

கண்ணனூர் காக்கா மெஸ்ஸில் சாப்பிட்டு விட்டு, ஆனந்த பவன் வாசலில் நின்று சிகரெட் பிடித்தபடி கேட்டார்.

''என்ன விஷயம், நாராயணன் ?''

நாராயணனுக்கு எப்படி ஆரம்பிப்பது என்று தயக்கமாக இருந்தது.

''நீ என்ன தெரிந்து கொள்ள விரும்புகிறாய் என்று எனக்குத் தெரியும், நாராயணன். அந்தக் கசவாளியுடன் நேற்று நீ வாதாடியதை நான் அறிந்தேன்.''

''... ... ...''

''நான் அத்தற சீப்பான ஆளாணோ நாராயணன்?''

''அதில்ல, சார்...''

''கமான் ... வா ஆபீசுக்குப் போவோம் ... பொது இடத்திலே அதுபற்றி சம்சாரிக்காண்டாம் ...''

மெதுவாக நடந்து அலுவலகம் அடைந்தனர். உட்காரச் சொன்னார். இன்னொரு சிகரெட் பற்ற வைத்துக் கொண்டார்.

''நாராயணன் ... எனக்குக் கொஞ்சம் லூஸ் மோரல்ஸ் உண்டு என்று எல்லோருக்கும் தெரியும். நான் அவ்வப்போது குடிக்கும்.... ஐ கோ டு கர்ல்ஸ் ஆல்ஸோ ... ஆனால் என்னுடைய ஆபீசிலே, என்னுடைய ரூமிலே, என்னுடைய ஸ்டெனோவிடம் ... அதுவும் ஐம்பத்தெட்டு வயசிலே ... டு யூ நோ மை டாட்டர் இஸ் டர்னிங் நைன்டீன் நௌ ?''

''ஐ ஆம் சாரி சார் ...''

www.padippakam.com

''நோ ... நோ ... நான் நாராயணனைக் குற்றம் பறஞ்ஞில்லா ... அந்தக் கசவாளியை நேற்று நல்ல விதமா சமாளிச்சே ... சேல்ஸிலே இருக்கிறவர்களுக்கு இது ஒரு அனுகூலம். இது போன்ற சூழ்நிலைகளைப் பக்குவமாகக் கையாள வரும்...''

''இப்பம் நாராயணனுக்கு ராதா எந்தினாணு கரஞ்சுது என்னு அறியணும் இல்லே ...''

''ஸீ ... நேற்று அவளிடம் கொஞ்சம் பர்சனலா பேசினேன். இந்த மாதிரி ஜீவிக்கிறதிலே என்ன அர்த்தம்னு கேட்டேன். யாரையாவது கல்யாணம் செஞ்சுக்கிட்டு சந்தோஷமா இருக்கலாம்னு சொன்னேன். அஃப் கோர்ஸ் ...கொஞ்சம் அதிகமாப் போயி, அவளுக்கு விருப்பமானா, நாராயணன் கிட்டே இது பற்றிப் பேசு வேன்னு சொன்னேன்.''

சுற்றி வளைத்துக் கொண்டு விஷயம் தன்னிடம் வருவதை நினைத்து அவனுக்கு வியப்பாக இருந்தது.

''ஐ ஆம் சாரி, நாராயணன். நான் அது மாதிரி சுதந்திரம் எடுத்துக் கொண்டிருக்கக் கூடாது. ஒரு வேளை என் பேச்சு ஒரு தப்பான நரம்பைத் தொட்டு விட்டிருக்கலாம் ... எனி வே ... நீ இது பற்றி ராதாவிடம் பேச வேண்டாம் ... நல்லாருக்காது இப்பம் ... பட் ... ஐ வில் வெயிட் ஃபார் அன் ஆன்சர் ...''

நாராயணனுக்கு அதிர்ச்சியாக இருந்தது. இவரைப் படி, தன்னைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் பேசிக் கொண்டே போகிறார்.

''சார் ... பட் ...''

''லுக் மை பாய் ... நேற்று எனக்கு நேர்ந்தது நாளை உனக்கு நேரலாம். நான் குடும்பத்தை ஊரிலே வச்சுக் கிட்டு இருக்கறதுனாலே, எல்லோரும் என்ன வேணும் னாலும் பேசிக்கிடலாம்னு நெனைக்கிறாங்க ... மக்கள் அதை நம்பவும் தயாரா இருக்கா...''



படிப்பகம்

www.padippakam.com

ஆங்கில நாவல் ஒன்றில் படித்தது ஞாபகம் வந்தது. அமெரிக்க ஜனாதிபதி பதவிக்குத்தற்செயலாக வர நேர்ந்த கறுப்பர், தனது வெள்ளைத் தோல் செகரெட்டரிப் பெண்ணிடம் பேசும் போது, அறைக் கதவைத் திறந்து வைத்துக் கொள்வார் என்று.

''பட் ... இருந்தாலும், சார் ...''

''ஸீ, நாராயணன் ... அந்த ராதாவைத்தான் நீ திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று நான் சொல்ல இல்லை. அப்போது எனக்கு அப்படித் தோன்றி யது. யூ டோன்ட் ஃபஸ் எபவுட் தேட் ... வாழ்க்கை யைப் பாஸிட்டிவா திங்க் பண்ணிப் பார்க்கணும் மேன் ... இதுவரை விரயம் செஞ்சாச்சு. இன்னும் ஒண்ணும் நஷ்ட மாயிட்டில்லா... ஆனால் சீக்கிரம் எல்லாமே தாமதமாகிப் போகும் ... பட் இன் எய்தர் வே யூ வில் ரிமெம்பர் மி ...''

இருக்கையில் வந்து உட்கார்ந்தான்.

ஆனால் அதற்காக ராதா கேசவமூர்த்தி ஏன் கண் சிவக்க விசும்ப வேண்டும் என்று தெரியவில்லை. ஒரு வேளை மேனோன் பழைய புண்ணின் பொருக்கைப் பிய்த்து விட்டார் போலும்.

களைப்பாக இருந்தது. நெடுந்தூரம் ஓடி வந்தது போல், நாய் சந்தைக்குப் போய் வந்ததைப் போன்ற ஓட்டம்.

மாற்றி மாற்றி, கோளாறு இல்லாமல் வெட்டி ஒட்டப்பட்ட ஃபிலிம் சுருள்கள் போல, நினைவு தெரிந்த நாட்களாய்ப் பதிவாகிய காட்சிகள், பளிச் பளிச் என, மன அரங்கில் தோன்றித் தோன்றி மறைந்தன.

குற்றாலம் சொன்னது, கல்யாணி சொன்னது, குட்டினோ சொன்னது, மேனோன் சொல்வது ...

தன்னால் முடிவெடுக்க முடியாதது போல்—

தனக்காக முடிவெடுக்கும் அதிகாரம் மற்றவர்களிடம் வழங்கப்பட்டது போல் ...

இழுப்பறையைத் திறந்து காரியமின்றி மூடினான்.



படிப்பகம்

www.padippakam.com

# பதினைந்து

நகரம் ஒருவிதமான பதற்றத்தில் இருந்தது. இந்திய சரித்திரத்தில் முன்னுதாரணம் இல்லாத ரீதியில் மாநிலக் காவல் துறையினர் இன்னும் இரண்டு நாட்களில் வேலை நிறுத்தம் செய்ய அறிவிப்புச் செய்திருந்தனர். பேச்சு வார்த்தை நடத்துவதை நிறுத்தி விட்டு மராத்திய அரசு வேலை நிறுத்தத்தைத் தடை செய்திருந்தது.

இந்தியாவின் திறமையான போலீஸ் நிர்வாகத்தில் முதலிடத்தில் மாநிலம் இருந்தது. ஆனால் போலீஸ்காரர்கள், ஒரு சாதாரணக் குடிமகன் பார்வையில், எந்த வித ஆடம்பரமும் மிடுக்கும் இன்றித் தோன்றினார்கள். தொப்பியும், மூங்கில் கழியும், கர்ச்சீப்பில் சுற்றிக் கட்டிய சோள ரொட்டியும், பூண்டுச் சட்னியுமாக— ஆர். கே. லக்ஷ்மணனின் கேலிச் சித்திரத்துக்கு என்றே பிறப்பெடுத்தவர்கள் போல.

ஒரு நாள் காலையில் நாக்பூரில் இருந்து ஹிங்கன்காட்டுக்கு அரசுப் பேருந்தில் பயணம் செய்தபோது, பக்கத்து இருக்கையில் ஒரு ஹவில்தார் இருந்தான். அதிகாலை கட்டிய யூனிஃபார்ம். இனி எந்த நேரத்தில் சுழற்று வானோ? மடியில் அரசாங்கக் காகிதக் கட்டு. வழக்கம் போல ரொட்டிப் பொட்டலம் மூடி.

அப்போது போலீஸ்காரர்களைக் கேலி செய்யும் மராத்திய நாடகம் ஒன்று மாநிலம் முழுக்கப் பிரபலமாக இருந்தது. விஜய் டெண்டுல்கரா,



படிப்பகம்

www.padippakam.com

ஜெய்வந்த் தால்வியா அல்லது ஆசார்ய ஆத்ரேயா என்பது ஞாபகம் இல்லை.

அது பற்றிப் பேச்சு வந்தபோது, ஹவில்தார் காட் போலே சொன்னான்—

"கியா போலேங்கா சாப்... ஸப் மஸ்கிரி கர்த்தாத்... சினிமால, டிராமால, நியூஸ் பேப்பர்ல... நாங்களே கொலை செய்யத் துணை செய்யற மாதிரி, களவு செய்யற மாதிரி, கற்பழிக்கிற மாதிரி... நடக்காம இல்லே... ஆனா எல்லாரும் களவாணி இல்லே... சினிமாவைப் பார்த்துக் கிட்டு வீட்ல கூட மரியாதை இல்ல... வயத்து வலி வந்தாக்கூட சொந்தக்காரனுங்க சொல்றானுங்க போலீஸ் காரன் செய்யற அட்டூழியத்துக்கு வராம என்ன செய்யும்னு? அஞ்சு ரூவா ரெண்டு ரூவா அங்க இங்க வாங்காம இல்ல சாப்... எட்டு நூத்தி முப்பது ரூவா சம்பளத்திலே என்ன செய்ய முடியும் சொல்லு? எனக்கும் பாலு எட்டு ரூவா லிட்டர். டூத் பேஸ்டுக்கு நாலும் பத்தொன்பது ரூவா கொடுக்கணும்... போலோ சாப்... எம் பிள்ளையோ படிச்சு ஆளாகாண்டாமா?"

"நீ சொல்லுகது சரிதான், பாய். ஆனா ஈவிரக்கம் இல்லாம மனிசனை அடிச்சு நொறுக்குகது... பாவப்பட்ட வனைக் கொடுமைப் படுத்துகது... உனக்கும் எனக்குமாகக் குரல் கொடுக்கிறவனை லாட்டியால அடிக்கது... இதெல்லாம் நியாயந்தானா?"

"முக்காப் பங்கு நேரம் கிரிமினல்ஸ்ஸோட இருக் கிறோம்... சில சமயம் ரெண்டு மூணு நாளாகுது வீட்டுக்குப் போக... உங்களை மாதிரி ஓவர்டைம் எல்லாம் கெடையாது சார்... இருந்து பாத்தாத்தான் தெரியும்... கடுப்பாயிரும் சார்... நாங்க வெறும் கருவிதான... அடின்னு ஆர்டர் குடுத்தா அண்ணன் தம்பி பாக்க முடியுமா? இங்கிலீஸ்காரன் சர்க்கார்லேயும் அடிச்சோம், காங்கிரஸ்காரன் சர்க்கார்லேயும் அடிச்சோம், ஜனதா சர்க்கார்லேயும் அடிச்சோம்... கம்யூனிஸ்ட் சர்க்கார்லே



படிப்பகம்

www.padippakam.com

யும் பெங்கால்லே அடிக்கத்தானே சாப் செய்யிறான் ... ? ஊழல், லஞ்சம்னு சத்தம் போடுறாங்க... கண்டக்டர் பத்துப் பைசா எடுக்கிறதும் நான் ரெண்டு ரூவா வாங்கறதும்தான் லஞ்சமா சார் ?''

''... ... ...''

''மளிகைக் கடைக்காரன் கிலோவுக்கு எட்டு நூத்தி அம்பது கிராம்தான் நிறுக்கறான். அரசாங்கம் அளந்து போடுகிற ரேஷன் கோதுமையிலே எவ்வளவு குப்பை சாப் ? பிள்ளைக்கு உடம்பு சரியில்லேன்னா போலீஸ் காரன்கிட்டே இருபது ரூவா பீஸ் வாங்கறான் சார். மருந்துக் கம்பனிக்காரன் அறுபது பர்சன்ட் போனசும் டிவிடென்டும் குடுக்கறது நியாயந்தானா சாப் ? சோப்புக் கம்பனிக்காரன் விலையைக் கூட்டீட்டு சைசைக் குறைக்கிறானே சாப் ? இதெல்லாம் கேக்கது யாரு ?''

காட்போலே இரும்புத் தகட்டு டப்பியைத் திறந்து, புகையிலைப் பொடியை எடுத்து, மறுபுறம் இருந்து நகத்தால் சுண்ணாம்பு எடுத்து, இடது உள்ளங்கையில் வைத்துக் கசக்கி, தூளைத் தட்டி விட்டு கீழுதட்டில் அடக்கிக் கொண்டு, சற்று நேரம் சும்மா இருந்தான். புகையிலையின் போதையை ரசித்தபடி எட்டி எச்சிலை உமிழ்ந்தான். தீவிரமாய் மறுபடியும் பேச ஆரம்பித்தான்.

''நாங்க கொல்லணும்னு அடிக்கதில்லே சாப். அடி வசக்கேடா விழுந்தா செத்துப் போயிருகான்... டாக்டர் ஊசி போட்டு சாகதில்லியா ? போபால்லே சாவல்லியா ? என்னமோ மொத்த ஜன சமூகமும் யோக்கியமா இருக்கிறாப்பிலேயும் நாங்க மாத்திரம் கெட்டுப் போயிட்டோம்னும் கூச்சல் போடறாங்க சார். மொத்தமும் அழுகி நாறுகிறபோது நாங்க மட்டும் சுத்தமா வாசமா இருக்க முடியுமா சாப் ? மாட்டிக் கிட்டவனைத்தான் புடிச்சு ஆளாளு தர்ம அடி போட றாங்க... மாட்டிக் கிடாதவன் எவ்வளவு பேரு தாராளமா லாத்திக்கிட்டு இருக்கான் ?''



படிப்பகம்

www.padippakam.com

காட்போலே பேச்சின் நியாயம் புரிந்தது. பெருவிரலுக்கு மாத்திரம் தனியாக வைத்தியம் செய்து பயனில்லைதான்!

முதல் நாள் போலீஸ்காரர் வேலை நிறுத்தத்தில் பெரிய பாதிப்பு எதுவும் தெரியவில்லை. காவல் நிலையங்கள் முன்பு குழுக்களாக, மப்டியில், பீடி குடித்துக் கொண்டும், தம்பாக்கு கசக்கிக் கொண்டும் நின்றனர்.

இரண்டாவது நாள் அங்கொன்றும் இங்கொன்று மாய்க் கல்லெறிகள் நடந்தன. மூன்றாம் நாள் பம்பாய் பற்றி எரிந்தது. பைகுலாவில், லால்பாகில், மாஹிமில் பாந்த்ராவில் பஸ்கள் கொளுத்தப் பட்டன என்றனர். தாதரில் நிறைய ஜவுளிக் கடைகள். ரேடியோ—டிவி கடைகள் சூறையாடப் பட்டன என்றனர். ஜாவேரி பஜாரில் இரண்டு நகைக் கடைகள் கொள்ளை போயின என்றனர்.

லால்பாகிலும் தாம்பா காட்டாவிலும் கர்னாக் பந்தரிலும் ராணுவம் துப்பாக்கிச் சூடு நடத்தியது என்றனர். குர்லாவிலும் ஜோகேஸ்வரியிலும் ரயில் பெட்டிகள் எரிகின்றன என்றனர்.

மூன்றரை மணிக்கு அலுவலகம் மூடினார்கள்.

வெளியே இறங்கி வந்தபோது, ஃப்ளோரா ஃபவுன்டனில் அலுவலகங்கள், வங்கிகள், கடைகள் எல்லாம் அடைக்கப் பட்டிருந்தன. நடைபாதைக் கடைகள் ஒன்று கூடக் காணோம்.

சாலையில் ஒரு பெஸ்ட் பஸ் கூட இல்லை. தனியார் வாகனங்கள் மட்டும் பறந்து கொண்டிருந்தன. சாரி சாரியாக மக்கள் எம் ஜி ரோட்டில் நடந்து கொண் டிருந்தனர். சர்ச்கேட்ஸ்டேஷனில் மக்கள் பெருவெள்ளம். இன்டிகேட்டர்களில் எந்த அறிவிப்பும் இல்லை. எல்லா பிளாட்பாரங்களிலும் லோகல் ட்ரெயின்கள் சாவகாச மாக நின்று கொண்டிருந்தன. ஏறிச் சற்றுநேரம் அமர்ந்தவர்கள் இறங்கினார்கள். விசாரணைக் கவுன்டரை



படிப்பகம்

www.padippakam.com

மொய்த்துக் கிடந்தது சனம். ரயில் போக்குவரத்து துவங்குமா இல்லையா என்பதற்கு அவர்களால் எந்த உறுதியும் தர முடியவில்லை.

சார்னி ரோடு, கிரான்ட் ரோடு, ஒர்லி பகுதிகளில் வாழ்ந்தவர்கள், பிரபாதேவிக்காரர்கள் மெதுவாக நடக்க ஆரம்பித்தனர். தாதர், மாட்டுங்கா, மாகிம் காரர்களும் நடையைத் தொடர்ந்தனர். ஒருவேளை இரவில் ஊரடங்கு உத்தரவு அமல்படுத்தக் கூடும் என்று பேசிக் கொண்டனர்.

போரிவிலி வரை நடந்து போக முடியாது என்று தோன்றியது, நாராயணனுக்கு. முப்பதுக்கு மேற்பட்ட கிலோ மீட்டர்கள் இருக்கும். வேண்டுமானால் சயான் வரை நடந்து வடிவேலு ரூமுக்குப் போகலாம். அதுவும் பன்னிரண்டு கிலோ மீட்டர் தூரம். நடந்து போய்ச் சேர்ந்து விட முடியும்.

அலுவலக முகங்கள் எதுவும் தெரியவில்லை. எவரை யும் எதிர்பார்த்து எவரும் நிற்பதுபோல் எதுவும் தோன்ற வில்லை.

நடந்து வி. டி. ஸ்டேஷன் வந்தபோது, அங்கும் இதே கதைதான்.

லால்பாக், பைகுலா, ஜேகப் சர்கிள், மாகிம் பகுதி களில் இராணுவம் நிறுத்தப் பட்டிருக்கிறது என்றும் நடந்து போகப் பயமில்லை என்றும் பேசிக் கொண்டார்கள்.

மறுபடியும் சாலையில் இறங்கி கிராஃபோர்ட் மார்க்கெட் நோக்கி நடக்க ஆரம்பித்தான். வேகமாக, வியர்க்க நடந்தபோது சற்று முன்னால் ராதா கேசவ மூர்த்தி நடந்து கொண்டிருப்பதைப் பார்த்தான். அவளுடன் ஆபரேட்டர் ஜாய்ஸ் தனது முதுமையைப் பொருட்படுத்தாது நடந்து கொண்டிருந்தாள். ஆடு சதையின் பச்சை நரம்புகள் புடைத்திருந்தன.



படிப்பகம்

www.padippakam.com

''ஆவ் நாராயண். க்யா கரேங்கா... லெட் அஸ் வாக் ஸ்லோலி மேன்...''

நடை மெதுவாகவே இருந்தது. பெண்டிரை விட்டு விட்டுத் தாண்டிச் செல்வது என்பது அழகல்ல.. ஜாய்ஸ் சொன்னாள்—

''அச்சா... தும் ஆயா... நான் எனது சித்தி மகள் வீட்டுக்குப் போவேன். பைகுலாவில்தான் இருக்கிறாள். அதன் பிறகு ராதா தனியாக நடக்க வேண்டியது இருந் திருக்கும்...பட்... நாராயண்...தும் ?''

''யா...போரிவிலி வரை நடக்க முடியுமா? ஜாய்ஸ்? சயானில் ஒரு ஃபிரண்டு இருக்கிறார். அவர் ரூமுக்குப் போவேன்...''

''குட் திங்...யூ நோ ராதா ஸ்டேய்ஸ் இன் வசை ரோடு...மாட்டுங்காவில் சொந்தக்காரர் இருக்காளாம்... அங்கு போகிறாளாம்...''

பைகுலா வரும்வரை ஜாய்ஸ் மூச்சு வாங்கிக் கொண் டும் சளசளத்துக் கொண்டும் வந்தாள். அலுவலகத்தில் இருந்து நான்கு கிலோ மீட்டர் இருக்கும். முப்பது ஆண்டு களுக்கு முன்னால் வாஸ்கோடகாமா கடற்கரையில் இவ்வளவு தூரம் அவள் நடந்திருக்கலாம். கனவுகள் கால் களுக்கு உறுதியையும் வேகத்தையும் அளித்திருக்கலாம்.

விக்டோரியா சர்ச் தாண்டி, பிரசிடென்ட் ஓட்டலின் பின்புறம் அவள் உறவினர் வீடு இருந்தது. பைகுலா ஸ்டேஷனின் முன்னால் ஒரு பஸ் இருக்கைகள் கரிந்த நிலையில் கூடு போல் நின்றது. காய்கறிச் சந்தை, பழச் சந்தைகள் வெறிச்சோடிக் கிடந்தன. குறுக்குத் தெருக் களில் நிறையத் தள்ளு வண்டிகள், பிரதான சாலையில் கூட்டங் கூட்டமாய்ப் பாதசாரிகள். புதன் கிழமை மாலை களில் மாகிம் சர்ச்சுக்குப் போகிறவர்களைப் போல. ஓவர் பிரிட்ஜின் கீழே மிலிட்டரி ட்ரக் ஒன்றும், எல்.எம்.ஜி. ஏந்தியபடி கூர்க்கா ரெஜிமெண்டின் பிரிவு ஒன்றும்.



படிப்பகம்

www.padippakam.com

மணி ஐந்து ஆகியிருந்தது. இந்தக் கதியில் நடந்தால் சயான் சேர இரவு ஏழு மணி ஆகிவிடும். ஆனால் ஜாய்ஸ் நின்று விடுவாள். ஆதலால் சற்று வேகமாக நடக்கலாம். ராதாவுக்கு நடந்து பழக்கம் இருக்குமோ என்னவோ? நல்ல வேளையாகக் கால்களில் குதிகால் செருப்பு இல்லை.

ஜாய்ஸ் சொன்னாள்—''சலோ... ஒரு கப் தேநீர் பருகி விட்டுச் செல்லலாம்''

''நோ ஜாய்ஸ்... தேங்க் யூ... ஏன் அவர்களைத் தொந்தரவு செய்ய வேண்டும்?''

''நோ ட்ரபில் மேன்... வழியில் உனக்கு ஒன்றும் கிடைக்காது... பானி பி நை மிலேங்கா...''

ஜாய்ஸ் சொன்னது சரியென்று பட்டது. தண்ணீர்த் தாகமாகவும் இருந்தது.

தண்ணீர் குடித்து தலைக்கு மூன்று வர்க்கி தின்று, சாயும் பருகினார்கள். ராதா, பிராம்மணரல்லாதார் வீட்டில் தண்ணீர் குடிப்பது, இது முதல் தடவை போலத் தோன்றியது. அதுவும் பசு இறைச்சியும் பன்றியும் தின்னும் கோவா கிறிஸ்துவர்கள் வீட்டில்.

மறுபடியும் நடக்க ஆரம்பித்த போது, ஐந்தரை நெருங்கிக் கொண்டிருந்தது.

ராதா சற்று வேகமாக நடந்தாள்.

ரயில்வே ஆஸ்பத்திரி தாண்டியதும் நாராயணன் கேட்டான்.

''உங்க பிரதர் கவலைப்பட மாட்டாரா?''

''ஃபோன் செய்து சொல்லியாச்சு... அவனும் மாட்டுங்காதான் வருவான்...''

ராதாவின் நடை சற்று மிடுக்குடன் இருந்தது. அலுவலகத்தில் மூடிப் பொதிந்து காட்டும் அடக்கம் போலியா அல்லது இந்த மிடுக்கு போலியா என்று தீர்மானிக்க முடியவில்லை.



படிப்பகம்

www.padippakam.com

மேனோனின் யோசனை மெல்ல அரும்பிச் சட்டெனக் காடடையத் துவங்கியது. ஒருவேளை ராதாவின் மனத்தில் கூட இப்போது அந்த எண்ணம் ஓடிக்கொண்டிருக்கலாம்.

லால்பாக்கில் சரக்கு லாரியொன்று எரிந்து சாம்பற் குவியலாய்க் கிடந்தது. கட்டட மாடியொன்றில் இருந்து இலக்கின்றி எறியப்பட்ட காலி பாட்டில் சிலீர் என்று சாலையில் விழுந்து உடைந்து சிதறியது.

நொடிக்குள் மிலிட்டரி டிரக்கில் இருந்து குதித்த மலபார் ரெஜிமென்ட் மடமட வெனச் சாலையில் பொஸிஷன் எடுத்து நின்றது. கையில் ஏந்திய எல். எம். ஜீ. கள் அபாயகரமாக நீட்டப்பட்டிருந்தன,

சட்டென ராதாவின் கையைப் பற்றி இழுத்து அருகில் இருந்த கடை வாசலில் ஒதுங்கினான், நாராயணன்.

''திடும் திடும்'' என எழுந்தது பூட்ஸ்களின் ஓசையா தனது நெஞ்சின் ஓசையா எனச் சந்தேகமாக இருந்தது.

மாலை இறங்கிக் கொண்டிருந்தது. சற்று நேரத்தில் இருண்டு விடக்கூடும் பேசாமல் அலுவலகத்தில் கிடந் திருக்கலாம்மா எனத் தோன்றியது. அல்லது ஜாய்ஸின் உறவுக்காரர் வீட்டில் ஒதுங்கி இருக்கலாம். தன்னைப் போல நிறையப் பேர் அரண்டு போய் நின்றிருப்பதைக் காணச் சற்றுத் தைரியம் வந்தது.

தனிமைப் பட்டுப் போய் விடவில்லை என்ற ஆசுவா சம். இன்னும் அவன் கைகளுக்குள் வெடவெடத்த ராதா வின் கைகளின் வெப்பம். சற்று முன்னால் தென்பட்ட மிடுக்கு ஒதுங்கி, படபடத்த பெடை என...

கையினால் சற்று விரல்களை அழுத்தினான், நாராயணன். மேலும் சற்றே ஒட்டிச் சாய்ந்து அவள் நின்றதை உணர்ந்தான்.

அச்சப் பட்டது போல் எதுவும் நிகழவில்லை. சற்று நேரத்தில் மக்கள் மறுபடியும் நடக்க ஆரம்பித்த அசைவு கள் சாலை எங்கும்,



படிப்பகம்

www.padippakam.com

நடக்க ஆரம்பித்த பின் கையை விட்டு விட்டாலும், மனம் சற்றுக் கிளர்த்திருந்தது.

பெண் அனுபவம் புதியதில்லை என்பது ஞாபகம் வந்தது. ஆனால் சற்றுப் போதை வயப்பட்டது போல்—

சற்று இறுகி இருந்த இந்த நெருக்கம் தற்காலிகமானதாக இருக்கலாம்.

வீட்டுக்குப் போய் ரசம் சாதம் கரைத்துக் குடித்துப் படுத்த பின் மறைந்து போகலாம்.

இந்தக் கணத்தை விட்டுவிடக் கூடாது என்று தோன்றியது. ஆனால் இந்த நெருக்கடி, இந்தப் பதற்றம்... இந்த வேளையில் போய்ப் பேசிக் குழப்புவது சரியல்ல என்று தோன்றியது

மௌனமாக நடந்ததில் தாதர் சர்கிள் வந்து விட்டிருப்பது தெரிந்தது, அங்கும் எந்தக் கடையும் இல்லை. எந்த வாகனப் போக்குவரத்தும் இல்லை. தாமதமாய் நடந்து கொண்டிருந்தவர்கள் மட்டும்.

மாட்டுங்கா நெருங்குகையில் மக்கள் விரைவாக நடந்து கொண்டிருந்தனர். யாரோ சொல்லிக் கொண்டு போனார்கள். வரதா பாய் லாரிகள் ஏற்பாடு செய்து, செம்பூர், அந்தேரி, போரிவிலி என்று ஆட்களை ஏற்றி அனுப்புகிறார் என்றும் பெண்களை முதலில் ஏற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்றும்—

''போரிவிலி வரை லாரியில் போய் விடலாமா?'' என்று கேட்டான், நாராயணன். அவள் வேண்டாம் என்று மறுத்தது நியாயமானதாகவே பட்டது.

''நீங்க வேணும்னா போங்கோ... இங்கேயிருந்து சொந்தக்காரர் வீடு பக்கந்தான்... நான் போய்க்கிறேன்...''

வீடுவரை வருவதாகச் சொன்ன நாராயணன் கூடவே நடந்தான்: ஏதாவது ஒரு சின்ன உறுதி பெற்றுவிட வேண்டும் என்று மனம் பதைத்தது. நோபல் பரிசைக்



படிப்பகம்

www.padippakam.com

காசோலையாகப் பெற்றவன் இரவுச் சாப்பாட்டுக்குச் சில்லறை கேட்டு நின்றதைப் போல.

போதார் கல்லூரி தாண்டி இருந்த சந்தில் அந்த பில்டிங் இருந்தது.

கட்டட எல்லையில் விடைபெறும் பாவனையில் சற்றுத் தயங்கினாள், ராதா.

"ராதா...உங்களுடன் கொஞ்சம் பேசணும்... வாற திங்கக் கிளமை சாயங்காலம் ஆபீஸ் முடிஞ்சு ஆர்ட் கேலரி கேன்டீனுக்கு வருவேளா?"

புன்னகை லேசாக விரிந்தது. புரிந்து கொண்ட இணக்கமான மெல்லிய தலையசைப்பு.

"வரேன்!" என்று சொல்லி விட்டு நடந்து கட்டட வாசல் நுழைவில் புகுந்து மாடிப்படி ஏறுவது தெரிந்தது.

இன்னும் இருபது கிலோ மீட்டர் நடந்தே போய் விடலாம் என்று தோன்றியது.

திங்கட் கிழமை ராதா அலுவலகம் வந்திருந்தாள். ஆனால் ஆர்ட் கேலரி கேன்டீனுக்கு வரவில்லை.

அநேக காரணங்கள் இருக்கலாம். எதை என்று கேட்பது என்று தோன்றியது, நாராயணனுக்கு.



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com



... அழுவலகம் தின்று துப்பிக்-
கொண்டிருக்கிற நம் ரசனையின்
பசுமையை, நசுக்கூட்டோன்
அறுந்த கொறுவாயுடன்
பச்சையாக நிற்கிற செடி கொடி
மாதிரி, நாம்தான் காப்பாற்றிக்-
கொள்ள வேண்டும்.

நாஞ்சில் நாட்டின்
வாழ்க்கையை உங்களைப்போல
இடையாளும் காட்டியவர்
சமீபத்தில் யாரும் இல்லை
உங்களுடைய மனிதர்கள்
அசலாகத் திரண்டு நடமாடுவது
போல், வேறு யாரும்
தெற்கேயிருந்து நடமாட
இல்லை.

— கல்யாண்ஜி

படிப்பகம்